கோவைத்தமிழ்ச் சங்கம் பிரசுரம் 9

உ

சிவமயம்

# சேக்கிழார்

[படங்களுடன்]

சென்னைச் சர்வ கலாசாலைப் பிரசங்கங்கள்

அனுமதி கொண்டு பிரசுரிக்கப் பெற்றன.

ஆசிரியர் :

கோவை - வழக்கறிஞர்

C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., F.M.U.,

சென்னைச் சர்வ கலாசங்கம்

Senate and Academic Council இவைகளின் அங்கத்தினர்.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1933.

உரிமை பதிவு]

[விலை: ரூபா 1-8-0

**No. A. 14977.**

SENATE HOUSE,
*29th July 1932.*

*From*

THE REGISTRAR,
*University of Madras.*

*To*

M. R. RY.,
C. K. SUBRAMANIA MUDALYAR AVL., B. A.

Sir,

Ref :—*Your letter dated the 3rd July 1932 - publication of your University Lectures "SEKKILAR"*

I have the honour to inform you that the syndicate has resolved that you be permitted to publish the lectures on your own account. You may also state that these lectures were delivered under the auspices of the University.

The manuscripts are returned herewith.

(Sd.) WILLIAM McLEAN,
*Registrar*

# சேக்கிழார் துதிகள்

" தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி."

—உமாபதி சிவாசாரியார்.

" தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி ஞற்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கி யப்பய ஞப்பதி குன்றைவாழ்
சேக்கிழானடி சென்னி யிருத்துவாம்."

—சிவஞான முனிவர்.

# ஆக்கியோன் முன்னுரை

சென்னைச் சர்வகலா சங்கத்தார் (The University of Madras) பண்டைக் காலத் தமிழர்களின் நாகரிக மேம்பாடுகளைப் பற்றிய விரிவுரைகள் நிகழும்படி சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒழுங்கு செய்தனர். அவற்றுள்ளே ஒரு பகுதியாகச் சேக்கிழார் சுவாமிகளையும் அவரது நூலையும்பற்றிய எனது இந்த மூன்றுநாள் பிரசங்கங்களும் நிகழ்த்தப்பெற்றன. இவை அச்சங்கத்தார் ஆதரவில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் 1930-ம் ஆண்டு ஜனவரி 31-பிப்ரவரி 1-3 ஆகிய நாட்களில் நிகழ்த்தப்பெற்றன. இவற்றை நிகழ்த்தும் முன்பே எழுதி ஒப்புவிக்க வேண்டிய நியதியிருந்தும், எனது தாமத குணத்தினாலே அவ்வாறு செய்யாமல், சிற்சில குறிப்புகளைக் குறித்துக்கொண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினேன். அக்குறிப்புகளின் உதவி கொண்டும் என் நினைவின் உதவிகொண்டும் பின்னிட்டு இவற்றை விரிவுரையாக எழுதிச் சர்வகலா சங்கத்தாருக்கு அனுப்பினேன். அதிலும் முதல்நாள் பிரசங்கம் இப்போது பதித்துள்ளதைவிட விரிவாகவும் ஏறக்குறைய அந்நாள் பேசியது போன்றும் எழுதி வைத்திருந்த பகுதியின் தாள்கள், ஓரிடத்து வைத்து மறந்துவிட்டேன். இரண்டாவது மூன்றாவது நாட்களின் பிரசங்கங்களை எழுதினபின் அதனைத் தேடி அகப்படாமையின், மீளவும் ஒருமுறை முதல்நாள் பிரசங்கத்தைச் சுருக்கமாக எழுதி அச்சிற்குக் கொடுத்தேன். இதுவே இப்பிரசங்கங்களின் அளவிற் காணும் ஏற்றத் தாழ்ச்சிக்குக் காரணம். புத்தகம் பெரும்பாகம் அச்சிட்டு முடிந்தபின் முதலில் எழுதிவைத்த அப்பகுதித்

தாள்கள் கிடைத்தன. ஆதலின் இதுவும் திருவருட் சம்மத மென்றெண்ணி, இனி ஒருகால் இரண்டாம் பதிப்பு வெளியிட நேர்ந்தால் பயன்படுத்திக் கொள்ளலாமென்று அதனைச் சேமித்து வைத்துள்ளேன். விரிவுரை நிகழ்ந்தபின்பு மூன்றாண்டுகள் சென்று இப்புத்தகம் வெளியாவதே எனது தாமத குணத்தை வெளியாக்கும். அன்றியும், மேலே குறித்தவைகளும் எனது குறைபாடுகளுக்கேற்ற சான்றுகளாம்.

ஆதலின், முற்றறிவினராய் ஸ்ரீ நடேசப் பெருமான் திருவருளிலே திளைத்து அருண்மொழி முதல் பெற்றுத் திருவருள் வசமாய் நின்றே ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய அருட்பெரு நூலாகிய பெரியபுராணத்தையும், அந்நூலாசிரியராகிய அருட்பெருஞ் செல்வரைப் பற்றியும் பேசவும் எழுதவும் எனக்கு எட்டுணையும் தகுதியில்லை என்பது வெளிப்படை. அதனை நானும் அறிவேன். ஆயினும் எனது மூதாதைகள் செய்த சிவபுண்ணியங்கள் காரணமாக எனக்கு வாய்த்த நற்றமிழாசிரியராகிய திரு. பண்டித. ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் காற்கீழிருந்து இலக்கண இலக்கியங்கள் கற்கப்புகுந்த இளம் பிராயத்திற்றானே, அவரது பேருபகாரத்தின் பயனாகப் பெரியபுராணத்திலே என்னை அறியாமலே எனக்கு ஓர் ஆசையும் அன்பும் அற்புதமும் தோன்றி மேன்மேல் வளர்ந்து வருவதாயிற்று. என்னை அறியாமலே பெரியபுராணத்தினிடத்திலும் சேக்கிழார் திருப்பாதங்களினிடத்திலும் பத்தி செய்து பயில்வதாயினேன். பெரியபுராணப் பித்துப் பிடித்தவன் என்று என்னை அறிந்தோர் சொல்லிப் பரிகாசமுஞ் செய்வர். எப்படியாயினும் சென்ற 30 ஆண்டுகளாக அதிற் பயின்ற ஆசையினாலேதான் சென்னைச் சர்வகலா சங்கத்தார் பிரசங்கங்கள் செய்ய என்னை விரும்பினபோது, நான் அவர்களுக்கு இவ்விஷயத்தையே குறித்துக் கொடுத்தேன்; அவர்களும் ஒப்பினர். இவற்றை அச்சிட்டு வெளியிடுமாறு எனக்கு அன்புடன் அனுமதியும் தந்தனர். அதன்படியே அச

சிட்டு இதனைத் தமிழன்பர்களின் முன்னிலையில் வெளியிட்டுள்ளேன்.

இதிற் பற்பல குற்றங்குறைகள் இருத்தல் இயல்பே. பற்பல இடங்களில் கருத்து வேற்றுமைகளுக்கும் இது இடங்கொடுக்கலாம். ஆயினும், சேக்கிழார் சுவாமிகளின் சேவடிகளில் செய்யும் பணிவிடையாகவும், என்னிலும் தாழ்ந்த மக்களுக்குப் பெரிய புராணத்தின்மாட்டும் சேக்கிழார் மாட்டும் அன்பு வளர்வதற்கு ஒரு கருவியாகவும், இருத்தற் பொருட்டே இக்காரியத்திலேபுக நான் துணிந்தேன். பிழையுள்ளன பெரியோர் பொருத்தருளி என்னை இகழாது என்றுகொள்வர் என்பது என் துணிபு.

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார் ;—எம்மை
உணரார் உணரார் ; உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

என்ற எமது ஸ்ரீ மெய்கண்ட சிவத்தின் அற்புதத் திருவாக்கு எப்போதும் என் உள்ளத்தில் நின்ற ஊக்கமே பாசத்தின் கோட்பட்டு அலையும் நாயினும் கடைப்பட்ட என்னையும் இது போன்ற அரிய சிவபுண்ணியங்களிலே புகுத்தி வைக்கின்றது. படங்களால் விளக்கப் பெறுவது புத்தகத்திற்கு ஓர் அணிகலமாம் என்ற கொள்கைபற்றிச் சுவாமிகள் அவதரித்து வசித்த குன்றத்தூரிலேயும், அவர் புராணம் பாடி அரங்கேற்றிச் சிறப்பமடைந்த சிதம்பரத்திலேயும், அவர் மந்திரியாய்ப் பல நாள் வசித்துப் பல திருப்பணி செய்து ஆன்மார்த்தத் தலமாய் வழிபட்ட சோழநாட்டுத் திருநாகேச்சுரத்திலேயும், அதன் நினைவுக்காக அவர் அமைத்த தொண்டை நன்னாட்டுத் திருநாகேச்சுரத்திலேயும் கிடைக்கக் கூடிய அவரது ஞாபகச் சின்னங்களை எல்லாம் இயன்றவரை படம்பிடித்து இதிற் சேர்த்துள்ளேன்.

விரைவில் புத்தகத்தை அழகாக அச்சிட்டுக் கொடுத்த அன்பர்களான சாது அச்சுக்கூடத் தலைவர்க்கும், படங்கள்

எடுத்தும் மற்றும் பல வகைகளிலும் உதவி புரிந்த அன்பர்களான சென்னைத் திரு ஆர். சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள், கும்பகோணம் திரு. டி. எ. இராஜண்ண அவர்கள், சிதம்பரம் வித்வான் ஸ்ரீ ந. சிவப்பிரகாசக் குருக்கள் ஐயா அவர்கள், சிதம்பரம் சைவமறைத் திரு. இராமலிங்க ஓதுவார்மூர்த்தி அவர்கள் பண்டிதர் - பவானி - திரு. கு. குமாரசாமி பிள்ளை அவர்கள், முதலிய எல்லா அன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி உரியது. முதற்கண் இப்பிரசங்கங்களை நிகழ்த்தி வைத்தும், பின்னர் அச்சிட்டு வெளியிட அன்புடன் அனுமதி தந்தும், உதவிய சென்னைச் சர்வகலா சங்கத்தார்க்கும் நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். என் சிறு முயற்சியையும் மதித்து மதிப்புரை தந்த எல்லாப் பெரியார்க்கும் நன்றி செலுத்துகின்றேன். புருப் பார்த்தும் அச்சுப் பிழை திருத்தியும் அட்டவணை தொகுத்தும் உதவிய திரு. M. பொன்னையா முதலியார் - தேவாரம். திரு. இரத்தினம் பிள்ளை முதலியவர்களுக்கு எனது நன்றியையும் ஆசியையும் உரித்தாக்குகின்றேன்.

சேக்கிழார் திருவடிப் பத்தியுள்ளவன் என்று சற்பாவனை செய்து பல நல் அன்பர்களும், பெரியோர்களும், சங்கங்களும், பிறரும் தந்த ஆதரவின் பயனாகவே இம்முயற்சி இறைவனருளால் எனக்குக் கைகூடிற்று. இதனைத் தொடர்ந்து பெரியபுராணத்தைக் குறிப்புரை விசேட வுரைகளுடன் பற்பல ஏட்டுப் பிரதிகளையும் பார்த்துப் பரிசோதித்து ஒரு நல்ல பதிப்பாய் வெளியிடுமாறு பல அன்பர்களும் எனக்கு ஆணை தந்து, பல இடங்களிலிருந்தும் பற்பல பழைய ஏட்டுப் பிரதிகளையும் உதவியுள்ளார்கள். அவ்வாணையின் வழியே நின்று திருவருளை நாடி அவ்வூழியத்தையும் நடத்தி வருகின்றேன். அதற்கும் திருவருளும் தெய்வச் சைவத் தமிழ் உலகமும் துணை புரிக.

சேக்கிழார் நிலையம்;
கோவை.
9—4—1933.
ஆங்கிரச பங்குனி
உத்திரத் திருநாள்.

அடியவர்க்கடியேன்,
C. K. சுப்பிரமணிய முதலியார்.

# பொருளடக்கம்

முதல் நாட் பிரசங்கம் :— பக்கங்கள்

பேரிய புராண ஆசிரியரும் அவர் காலமும் ... 1— 36

உட்பிரிவுகள் :

சேக்கிழார் சுவாமிகளின் சரிதச் சுருக்கம் ... 1— 6
சரித ஆராய்ச்சியும் சான்றுகளும் ... 7— 11
அநபாயர் காலமும் அந்நாள் வரலாறுகளும் 12— 23
நாட்டு நடப்பும் பிறவும் ... 23— 28
சிந்தாமணிக்கு மாறாகப் புராணம் செய்தமை 29— 30
அநபாயர் பெருமை ... 31
சைவ மக்கள் கடமை ... 32
பெரிய புராணத்தின் அமைப்பும் காவிய நிலையும் ... 33— 36

இரண்டாம் நாட் பிரசங்கம் :—

பேரிய புராணமும் அதன் கலைஞானங்களும்... 37—119

உட்பிரிவுகள் :

கலைஞானங்கள் யாவை? ... 38— 40
அரசியலும் அமைச்சும் குடிமையும் ... 41
அரச மரபுகளின் சில வழக்கங்கள் ... 43
தமிழ் அரசர்களின் முடி சூட்டு ... 45
அரச அங்கங்கள் : அமைச்சு ... 46
அமைச்சர் பண்பு ... 46
பண்டைத் தமிழர் நீதி முறை ... 47
அரச் அடையாளம் ... 49
அரசாங்கக் காவல் முறை ... 50

உட்பிரிவுகள் : பக்கங்கள்

ஆயுதச் சட்டம் ... 50
அமைச்சர் கடமைகள் :
,, சிற்றரசர்களை அடக்குதல் ... 51
,, குடிகட்குத் தீங்கு வாராமற் காத்தல், தீங்கு செய்தாரைத் தண்டித்தல் ... 52
,, சிறை செய்து விசாரணைக்குக் கொண்டு வருதல்
,, சமயப் பாதுகாப்பு முறை ... 52
உண்ணாவிரதம் ... 54
குடிகளின் தீங்குக்கு அரசாட்சியே பொறுப்பு 54
எல்லா உயிர்களுக்கும் காவலன் அரசன் ... 55
பிற பிராணிகளின் பேச்சை யறியும் கலை ஞானம். ... 55— 57
போர் முறை ... 57— 60
வேளாளரும் போர்த் தொழிலும் ... 60— 64
தமிழர் நீதிமுறை ... 64
ஆராய்ச்சி மணி ... 65
வாய்மொழிப் பிராது ... 65
மூவகைச் சாட்சியம் ... 66
வழக்குகளின் வகையும் தீர்ப்பு முறையும் ... 67— 70
ஊர் நீதிமன்றங்கள் ... 70
வாக்கு மூலமும் விசாரிக்கு மிடமும் ... 71
ஒப்புதலின் பேரில் தீர்ப்பும் - பிரமாணம் செய்யச் செய்தலும் ... 72
சிறுவர் செய்யும் குற்றத் தீர்வு 72
இல்வாழ்க்கையும் இல்லறநிலையும் :
பெண் பேசுதல் ... 73
குலம் குணம் பேசுதல் ... 74
விவாக வயது ... 75

உட்பிரிவுகள் : பக்கங்கள்

மணமாலை கொண்டு செல்லுதல் : மண நாள் வகுத்தல் ... 76
மணச் சடங்குகள் : முளை சாத்துதல் : மண எழுச்சி ... 76
மணப் பந்தர் : நீர் வார்த்துக் கொடுத்தல் 78
மன இசைவும் சடங்குகளும் ... 79
உடன்கட்டையேறுதலும் கைமை நோன்பும் ... 80
மணமகனையே மகனாகக் கொள்ளுதல் ... 80
இல்வாழ்க்கையிற் பெண்களின் உரிமை... 81
,, இளையான் குடிமாற நாயனார் மனைவியார் ... 81
,, குங்கிலியக்கலய நாயனார் மனைவியார் 82
,, திருவெண்காட்டு நங்கையார் ... 83
,, கணவன் வழி நிற்றல் கற்பின்திறம் ... 85
பிள்ளைகளுக்கு வழிபடு கடவுளின் பெயரிடல் ... 86
விருந்தினரையும் அடியாரையும் உபசரித்தல் மனைவியர் கடமை ... 87
சமூகநிலை : மேற்குலத்தார் கீழ்க்குலத்தில் பெண் கொள்ளல் ... 87
,, சாதியும் உடனுண்ணலும் ... 88
,, தீண்டாமை ... 91— 94
பொழுது போக்கு : ஆண்மக்களின் விளையாட்டுகள் ... 94
,, மகளிர் விளையாட்டு ... 96
கீதம் - யாழும் குழலும் ... 97
[illegible]த்து ... 99
மருந்து முதலியன ... 100—104

உட்பிரிவுகள் : பக்கங்கள்

| | |
|---|---|
| அகப் பொருள் : காட்சி முதலியன | ... 104—106 |
| உண்மைச் சரித இயல் : | ... 106 |
| ,, குணபரன் - குணபர வீச்சரம் | ... 107 |
| ,, கரிகாற் சோழன் | ... 107 |
| ,, அதிகன் | ... 111 |
| ,, மலாடர் கோமான் | ... 113 |
| ,, தேவாரம் முதலியவற்றிற் பெற்ற சரித ஆதரவு | ... 114—118 |
| நாட்டின் அமைப்புகள் | 119 |

மூன்றும் நாட் பிரசங்கம் :—

| | |
|---|---|
| பெரிய புராணம் - கவிச் சிறப்பும் பயனும் | ... 120—234 |

உட்பிரிவுகள் (1) கவிச் சிறப்பு

| | |
|---|---|
| அணிகள் | ... 121 |
| சொல் அணி - பொருள் அணி | ... 123—124 |
| உவமம் ஒன்றே தமிழர் அணி | ... 125 |
| தன்மையணி—வேடர் சேரி | ... 127—129 |
| ,, புலைப்பாடி | ... 129—130 |
| ,, வலைஞர் சேரி | ... 131—135 |
| உவமை | ... 135 |
| உருவகம்—சிலேடை | ... 139 |
| பத்திச் சுவை | ... 142 |
| நாடக இயல் | ... 142 |
| நடைச் சிறப்பு | ... 143 |
| செய்யுள்நடை உரைநடையே | ... 144—146 |
| படிப்போரை உயர்ந்த நோக்கத்திற் செலுத்துதல். | ... 146 |
| சொல்லும் பொருளும் ஒத்தியலுதல் | ... 147—151 |
| ,, வேட்டை | ... 149 |

உட்பிரிவுகள் : பக்கங்கள்

,, போர் ... 149
பெருங் காவியம் ... 151
காவிய இலக்கணம் : வாழ்த்து : வணக்கம் :
வருபொரு ளுரைத்தல் ... 153—156
,, முதல் - வழி - சார்பு: தொகை - வகை -
விரி : ... 157
,, நூற்பயன் : அறம் - பொருள் - இன்பம் -
வீடு. ... 159—162
,, தலைவன் தலைவியர் ... 162
,, குறிஞ்சி - மருதம் - முல்லை - நெய்தல் - 162—165
,, பெரும்பொழுது : வேனில் : முன்பனி 165—166
,, சிறுபொழுது : எற்பாடு, மாலை=இரவு,
வைகறை, காலை, நண்பகல் ... 166—170
,, பிற அமைப்புகள் ... 171
தமிழ் மொழிப் பற்று ... 172—174
தமது நாட்டினைப் பாராட்டுதல் ... 174—178
தாய் நாட்டின் சேவை ... 178
அரசனைப் பாராட்டல்=இராச விசுவாசம் ... 180—184
முன்னோர் மொழி பேணல் ... 184
,, திருக்குறள் ... 185—193
,, திருவாசகம் ... 193—196
,, தேவாரம் ... 196—199
பின்வந்த தமிழ்வாணர் பாராட்டிய முறை ... 199
,, உமாபதியார் ... 199—201
,, கம்பர் ... 201—204
,, சபாபதி நாவலர் ... 204
,, சிவஞான முனிவர் ... 205
,, மீனாட்சி சுந்தரம் பிள்ளை ... 206

உட்பிரிவுகள் : பக்கங்கள்

இடைச் செருகல்கள் ... 206—224

உட்பிரிவு (2) பயன் ... 224—233

அறிவின் முடிவுகள்=சித்தாந்தம்

சித்தாந்த சாத்திரங்கள் ... 228—227

சித்தாந்தங்களின் இலக்கியம் பெரிய புராணம் ... 228—229

தீமையும் நன்மையும் யாவை யாவை - ... 230

சைவ உண்மைகளின் விளக்கமும் - புறமத கண்டனமும் ... 230—231

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்= அரன்பூசையும் அடியார் பத்தியுமே- ... 231

உலக மேனிலைக்கும் அன்பே காரணம் ... 232

அன்பே சிவம் ... 233

சிவத்தன்மை அளிப்பது பெரிய புராணம் ... 233

வந்தனமும் - முடிபும் ... 234

# மதிப்புரைகள்

கோவை வழக்கறிஞரும், ஜில்லாக் கல்விச் சங்கத் தலைவரும்,
கோவைத்தமிழ்ச் சங்க அமைச்சரும் ஆகிய
திருவாளர் இராவ் சாகிபு,

## C. M. இராமசந்திர செட்டியார், B. A., B. L.

அவர்கள் எழுதியது

ஒரு நாட்டின் உண்மை வரலாற்றை அறிய விரும்பின் அந்நாட்டின் அரசர் பரம்பரையையும், அவர்கள் இயற்றிய போர்ச் செயல்களையும், அவர்கள் நிலை நிறுத்தின அரசியல் முறைகளையும் அறிந்ததினால் மாத்திரத்தில் அவ்வரலாறு முழுதும் அறிந்துவிட்டோம் எனக் கொள்ளல் முடியாது. அந்நாட்டு அறிஞர்கள் எண்ணித் தொகுத்துப் போந்த எண்ணங்களை ஆராய்ந்து அவ்வெண்ணங்கள் எந்த முறையிற் பெருகி வளர்ந்திருக்கின்றன என்பதை அறிவதினாலேயே அந்நாட்டு உண்மை வரலாற்றை அறியமுடியும். ஏனெனில் அவ்வப்பொழுதில் அவ்வந்நாட்டில் பிறந்து விளங்கிய அறிஞர்களின் எண்ணப் போக்கை அனுசரித்தே அவ்வந்நாட்டு வரலாறும் மாறுபட்டோ அல்லது பெருகியோ வளர்ந்து வந்தது எனலாம். ஆகவே, அறிஞர்களின் வரலாற்றைக் கொண்டுதான் நாட்டின் வரலாறும் கணிக்கப்படவேண்டும். இம்முறை தழுவித் தான் மேற்கு நாடுகளில் நாட்டு வரலாறுகள் ஆராயப்படுகின்றன. பிரான்சியர் அரசியல் கலவரம் (French Revolution) அறிய ரூசோ (Rousseau) வரலாறும், ஆங்கிலர் ஜன ஆட்சிமுறை (Commonwealth) அறிய மில்டன், கிராம்வெல் முதலிய அறிஞரின் வரலாறுகளும் முதற் படிகளாக விளங்குகின்றன

அல்லவா? ஆகவே, அறிஞர்களின் வரலாறுகள் எத்துணைச் சிறப்பு வாய்ந்தன! இம்முறையினை அறிந்தே மேற்கு நாடுகளில் அறிஞர்களின் வரலாறுகளை மிகுந்த நுட்பத்துடன் ஆராய்ந்து வெளியிட்டு வருகின்றனர். மாணக்கர்களும் அவ் வரலாறுகளைக் கட்டாயமாக ஓதவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

ஆனால் நம் தமிழ் மொழியிலோ, அறிஞர் வரலாறுகளைத் தகுந்த முறையில் ஆராய்வார் இதுவரை இல்லை. மேலும் அறிஞர் வரலாறுகளுக்கும் நாட்டுச் சரித்திரத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக எவரும் தெரிந்துகொள்ளவில்லை. சரித்திர ஆராய்ச்சியாளர்கள் நாட்டு மொழியையாவது, அம்மொழியில் எண்ணி எழுதின கவிகளைப் பற்றியாவது நினைக்கவும் இல்லை. ஆகவே, தற்போது வெளியிடப்படும் நாட்டுச் சரிதம் பெருங் குறையினைக் கொண்டதாகக் கிடக்கின்றது. புலவர் சரிதங்களை எழுதப் புகுந்தவர்களோ நாட்டு வரலாற்றினை அறியாமலும் அத்துடன் பிணைத்துப் பார்க்காமலும் படிப்பவர்களுக்குச் சுவை உண்டாக்கும் ஒரே எண்ணத்துடன் வெறும் 'பாட்டி' கதைகளையும் கோர்த்துவிட்டார்கள். புலவர்கள் எழுதிவைத்த நூல்களை ஆராய்ந்து அவைகளினால் அப்புலவர்களின் எண்ணங்கள் எவ்வாறு உதித்துப் பெருகி வளர்ந்தன என்பதை ஒருவரும் கவனித்தார்களில்லை. ஆனால் சமீபகாலத்தில் இவ்வித ஆராய்ச்சி முறையில் நமது தமிழ் அறிஞர்கள் புகுவதைக் கண்ட நாம் மகிழ்ச்சி அடையச் சமயம் வாய்த்திருக்கின்றது எனலாம்.

இவ்விதமான தேர்ந்த எண்ணத்தை நமது சென்னைப் பல்கலைக்கழகத்தாரும் கொண்டு, சேக்கிழார் சரித்திரத்தை ஆராய்ந்து வெளியிடும்படி அப்பெருமான் மரபிலேயே உதித்து விளங்கும் கோவை அறிஞர் C. K. சுப்பிரமணிய முதலியாரைக் கேட்டுக் கொண்டது, அவர்கள் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. திரு. முதலியார் அவர்களும் பாரம்பரைக் கல்வி கேள்

விச் செல்வம் படைத்தவர்கள் ஆனதினுலும், சைவத் திரு. கயப் பாக்கம், சிதாசிவ செட்டியார், பி. ஏ. அவர்கள் கோவையில் பெரிய புராண படனம் செய்தபோது உடனிருந்து முறை யாகப் புராணம் கேட்டவர்கள் ஆனதினுலும் இத்தகைய பெரும் செய்கைக்கு உரித்தானவர்கள் ஆயினர்கள். ஆங்கிலம் தென்மொழி இரண்டிலும் உள்ளனவாம் தர்க்க நூல்களை ஆராய்ந்ததின் பயனுகச் சேக்கிழாரின் பாடல்களை நன்ருகத் துருவித்துருவி ஆராய்ந்து அவரது எண்ணங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்; சேக்கிழார் பெருமானின் எண் ணப் போக்கினுல் அவர் காலத்து அரசாட்சி, மக்களின் பழக்க வழக்கங்கள், நீதி முறைகள் முதலியன எவ்வாறு ஒழுங்குபட் டன என்பதையும் விளக்கி இருக்கிருர்கள். நமது நாட்டு மாண வர்களுக்கு இக்காலத்தில் இத்தகைய நூல்களே அவசியம் வேண்டற்பாலன. தாம் சொற்பொழிவுக்காக வெளியிட்ட உரை களை இப்போது நூல் முறையாக வெளியிட்டது, திரு. முதலி யார் அவர்கள் பெருந்தன்மையையும், உலகிற்கு உதவிசெய்ய வேண்டுமென்ற நன்னேக்கத்தையும் காட்டுகின்றது. இது போலவே இதற்குமுன் "நீத்தார்பெருமை அல்லது ஸ்ரீ மாணிக்க வாசகர்" "கருவூர்த் தேவர்" என்ற இரண்டு ஆராய்ச்சி உரை நூல்களை அவர்கள் இயற்றியுள்ளார்கள். இனியும் ஏனைய புலவர் பெருமக்களுடைய வரலாறுகளையும் இம்முறையில் நமது முதலி யார் அவர்கள் ஆராய்ந்து வெளியிடுவார்களாக. அதற்குத் தமிழ் மக்களும் தம் பாராட்டுதலை எடுத்தாட்டுவதோடு இறைவ னும் அருள் சுரப்பானுக.

15—3—33 ம. ரா.

---

திரிசிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்

## திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

எழுதியது

கோவையம்பதியில் வழக்கறிஞராகவும் தமிழ்ப்புலமை சான்றவராகவும் உள்ள திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், B. A. எழுதிய "சேக்கிழார்" என்னும் உரை நூல், புதிய ஆராய்ச்சி முறை கொண்டு, பெரிய புராணக் கருவூலத்தினுள் மிளிரும் பல்வகை அறிவுப் பொருளேயும், அதன் ஆசிரியர் பெருமையையும் இனிது விளக்கி, அந்நூற்கு ஓர் சிறப்புப் பாயிரம்போல் விளங்குகிறது. "அநபாயர் காலமும் அந்நாள் வரலாறுகளும்," "நாட்டு நடப்பும் பிறவும்" என்னும் பகுதிகள் சிறந்த சரிதவுண்மைகளே வெளிப்படுத்துவன வாகவுள்ளன.

தமிழ்நாட்டுக் கலைக்கழகங்களும், தமிழறிஞர்களும் இந்நூலை ஏற்ற முறையில் ஆதரித்தல் கடன்.

ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

---

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரி, தலைமைத் தமிழாசிரியர்

## வித்வான் திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்

எழுதியது

உலகெலாம் உய்ய அவதரித்தருளித் தெய்வச் செந்தமிழ் மொழியாற் சைவம் புரந்து வளர்த்து அரண் கோலியருளிய பெருங்கருணைக் கடலாம் அடிகளார் நமது **சேக்கிழார் பெருமான்.** அவர்தம் அருண்மொழியாய் உதித்த நூல் **திருத்தொண்டர் புராணம்.** அஃது, இனி எக்காலத்தும், எவ்வுலகத்தும் தன்னோடு ஒப்பதும் மிக்கதும் இலதாம்படி இறைவர் தம் திருவருட் சத்தியால், பசு கரணங் கெட்டுப் பதிகரணமாய நிலையில் அருண்மயமாய் எழுந்த தனித்தமிழ் முதனூற் காப்பியமாகும்

அக்காப்பியமாம் பாற்கடலைக் கடைந்து திரட்டிய அமுதமே "சேக்கிழார்" என்னும் இவ்வுரைநடைப் பனுவல்.

தமிழில், அறிஞர் கற்று மகிழ்ந்து பயனடையக் கூடிய உரைநடை நூல்கள் யாவேனும் உண்டோ? என ஓர்கால் என்னை வினவிய ஓர் பேரறிவாளர்க்குத் தற்காலத் தெழுந்த சில உரைநடைத் தொகைகளைக் காட்டினேனாக, அதற்கவர் யான் காட்டிய ஒவ்வோர் நூலையும் குறித்து, இது - போலி யாராய்ச்சி செய்தது; இது - மாறுபாட்டுரை கொண்டது; இது - ஒருசார்பற்றி யெழுந்தது. என்றிவ்வாறே, பிடித்தது சாதிப்பது, உறுபயன் தராதது, தம் கல்விப் பெருமை காட்ட வந்தது, கலைவாசனை யற்றோ ரெழுதியது என்று ஒவ்வோர் நூற்கும் உளதாம் ஓரோர் குறைபாட்டைக் காட்டி யொதுக்கினர். யானும் அவ்வினா "அறிவன் வினா" வென்றே யுணர்ந்து நின்றேன்.

அன்னார், இற்றைஞான்று இவ்வரும் பெரும் உரைநடைப் பனுவலைக் காண்பரேல் தலையாரக் கும்பிட்டு மகிழ் தூங்கி எற்றுக்கொள்பவ ராவர். மேற்கூறிய குற்றம் யாதுமின் றிச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழி புணர்த்தல் ஆதிய பத்தழகுங் கொண்டு நிலவுவதாகும் இந்நூல். இஃது, முன்னோர் நூலொடு முரண்படாத பொருட் பொலிவும், கற்றோரும் மற்றோரும் அறிந்து இம்மை மறுமைப் பயனடையலாம் வண்ணம் இயற்சொல்லா லியன்ற சொற்பொலிவும் உடையது.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை யூட்டி உயிர்த்தொகுதிகளை யிறைவனடிக் காட்படுத்தும் செயலால் இஃதோர் ஒப்புயர்வற்ற சைவ நூலாகும்; இன்னும், நால்வர் தீந்தமிழ் கலமெலாந் துளும்பத் தண்டமி ழியலனைத்தும் தன்னுளடக்கிக் காட்டலால் புத்தமிழ்தனைய முத்தமிழ் நூலும் ஆகும்; மற்றும், தற்காலத்தெழுந்த புதுப்புதுக் கருத்துகளையும், இனியெதிர் காலத்திற்றோன்றும் கருத்துக்களுளவேல்

அவற்றையும் தன்னகத்தே காட்டவல்லதாய்க், கருத்து வேறு பாடுபற்றி, உலகினர், கலாயத்துத் தம்மனம்போன போக்கிற் கெல்லாம் ஒரு காட்டாக முதனூலைக் காட்டிக் கேடுற்று அழிந் தொழியா வண்ணம், செம்மை நெறியாம் அன்பு நெறியிது வெனக்காட்டி யுண்மை நெறியிற் பிணித்துத் தெருட்டிச் சீர் திருத்தும் தன்மையினால், இக்காலத்துக்கு இன்றியமையாத ஓர் ஒழுக்கநூலும் இதுவேயாயிற்று ; பின்னும், பல்வகைக் கலை நூலும் இது என்பதனை ஆங்காங்குள்ள பகுதிகளால் அறிஞர் உணர்க.

தம் ஆராய்ச்சி நூலாகிய இவ்வொப்பரும் பனுவலைத் தண்ணென்ற இன்றமிழ் உரைநடைத் தொடைகொண்டு, யாவர் மாட்டும் வைத்த பெருங்கருணைத்திறனால் வெளி யிட்டார், எமது அரும்பெறற் **கண்மணி** யனைய திருவாளர்- C. K. சுப்பிரமணியத் திருப்பெயர் பெற்ற **சைவசிகாமணி** யாராவர். இப் பெருந்தகையாரைத்

"தென்மொழிக் கோமேல்லை ;
சித்தாந்த சாகரத் தெள்ளமுதம் ;
இன்மொழி மாமழை ; மெய்ச்சைவம்
நாட்டும் இசைக்குரிசில் ;
முன்மொழி பேரைப்பட்
டசர்க்கும் முழுமனத்தோன்
பன்மொழியென் ? "தந்தையென்
றேற்றன" னெனும் பண்பினனே "*

என்பேன். இவர்தம் அன்புகனிந்து ததும்பி வெளிவந்த இந் நூலினைப் பாவலர் விருந்தென்கோ? பண்ணவர் மருந் தென்கோ? கோமளர் நுதலுடையார் குழைகழ லணியென்கோ? யாதென்றுரைப்பேன் ? சிவாநுபூதிச் செல்வராகிய இப்பெரி யார், சேக்கிழார் திருமரபு வந்தார் ; சேக்கிழார் நூல்முற்றும்

* அவிநாசிப் பிள்ளைத் தமிழ்ச் சாத்துகவி.

பன்முறை பயின்ருர் ; தம்முறையுளும் சேக்கிழார் நிலையமே யாகப்பெற்ருர். ஆதலின், சேக்கிழார் நூலெனும் இந்நூலை யெழுத இவரே தக்க ஆசிரிய ராயினர்.

இந்நூலினைப் புலகாற் பயின்று, தம் மனக் கோட்டம் தீர்ந்து, நன்னெறி யுணர்ந் தொழுகி உலகினர் பயனடைவார்களாக. தன்னலங் கருதாத இந்நூலாசிரியர், முன்டி மாணிக்க வாசகர், அவிநாசிப் பெருங்கணையம்மை பிள்ளைத் தமிழ், கருவூர்த்தேவர், மாதிருக்கும் பாதியன் ஆதிய சீரிய நூல்களை உதவியாங்கே, இன்னும் பலப்பல அரும்பெறற் பனுவல்களை இயற்றி உலகினர்க்கு உதவும் வண்ணம், இத்தகையார்க்கு, நோயற்ற நல்லுடலும், நீடிய வாழ்நாளும், திருந்திய வாழ்க்கை நலனும், பிற நலன்களனைத்தும் இனிதி னருள்கவென, இந் நூலினுடைய முதனூற்குப் பாட்டுடைத் தலைவராகிய, அரசம்பலத்துள் ஆடலுடைய பெருமானுரது பொன்மல ரடிகளைப் போற்றுகின்றனன்.

அரசினர் கல்லூரி
குடந்தை
25—3—33

இங்ஙனம் :
**அ. கந்தசாமிப் பிள்ளை,**
தமிழ்ப் பண்டிதர்.

---

யாழ்ப்பாணம் - விக்ற்ரோரியா கல்லூரித் தலைமையாசிரியரும்
சைவபோதம் - திருவருட் பயனுரை - கந்தபுராண விளக்கம்
முதலிய நூற்களினுசிரியரும் ஆகிய

## திரு. சு. சிவபாத சுந்தரம், B. A., அவர்கள்

எழுதியது

முள்ளிச் செடிக்கு முத்திகொடுத்த சிவஞானபானுவாகிய உமாபதி சிவாசாரியார் புராணஞ் செய்து பாராட்டித் துதித் தலைச் சேக்கிழார் நாயனரது ஒப்புயர்வின்மையை விளக்கும். அந்நாயனரா லியற்றப்பட்டமையால் திருத்தொண்டர் புரா

ணம் ஏனைய புராணங்களினுஞ் சிறந்து பெரியபுராண மெனப்பட்டது.

ஆதலால் நாயனாரது சீரையும் பெரியபுராணத்தின் சீரையுஞ் சொல்வதுங் கேட்பதும் பாக்கியங்களுட் பாக்கியமாம். அதைச் சொல்லும் பாக்கியம் சைவத்துக்குந் தமிழுக்குந் தொண்டு பூண்ட பெருந்தகையராகிய ஸ்ரீமத் C. K. சுப்பிரமணிய முதலியா ரவர்களுக்கு வாய்த்தது. இவர்கள் சென்னைச் சர்வகலாசாலையிற் செய்த மூன்று பிரசங்கங்களும் முச்சுடர்களைப்போன்று பெரியபுராணத்தை விளக்குகின்றன.

தெருவிளக்கை அணைக்கச் செல்வோன் பரிதியினொளியை அணைக்க முயன்றாற்போலப் புல்லிய இலக்கிய நூல்களிற் பயின்றோர் பெரிய புராணத்தின் பெருமையை ஒழிக்க முயன்றமையைஆசிரியர் மென்சொற்கள்கொண்டுகண்டித்தமை அவருடைய பெருந்தகைமைக்குச் சான்றாகும். இப்புராணத்திலுள்ள நாலாயிரத்துக்கு மேற்பட்ட கவிகளை யாராய்ந்து அவற்றுட் சொருகற் பாக்களைக் சுட்டிய பயிற்சித்திறனும், நுண்ணிய அறிவும், பிழைக்கஞ்சும் நேர்மையும், எண்ணுகிய அகக்கண் கெட்டு, நெறிதவறித் தமது கொள்கைகளைத் தகர்க்கும் பாக்கள் யாவும் சொருகுதலெனக் கொள்வோர்க் கெச்சரிக்கையாகின்றன.

அகத்திய முனிவர் திருக் கோவையாரிற் கண்ட சிறப்பை ஆசிரியர் பெரிய புராணத்திற் கண்டு அதை விரித்துத் தெருட்டுதலையே இந்நூலின் முக்கிய நோக்கமாகக் கொண்டனர். அரசியலில் ஈடுபட்டோர்க்கு அதன் அங்கங்களும், சுவராச்சிய வர்ண சமத்துவங்களை நேடுவோர்க்கு அவற்றின் மார்க்கமும், இலக்கிய இலக்கணச் சுவையுடையோர்க்கு அவற்றின் அமைவுகளும், ஏனைய புராணங்களைப் போலாது இப்புராணம் இதிகாசமாதலால், இதிகாச வல்லுனர் வேண்டுஞ் சரிதச் சான்றுகளும், ஆச்சிரம தர்மங்களில் மனஞ்சென்றோர்க் கவற்றின் இலக்கண இலக்கியங்களும் இன்ன பிறவும் இப்புராணத்தி

லிருந்து வலிந்துகோடா தினிது காட்டப்பட்டன. இவற்றி னும் பன்முறை பயனுடையதும் இப்புராணத்துக் குயிரானது மாகிய பத்திநெறி அகலமாக எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆசிரியர் பெரியபுராணத்தைத் திரட்டியது அதனை எளிதி லுணர்தற்கும் அதைக் கற்குமா றேவுதற்கும் சாதனமாதலால் இந்நூல் தமிழினும் சைவத்திலும் பற்றுடைய யாவராலும் சிர மேற் கொள்ளப்படும்.

ஆங்கீரசஞூ
பங்குனிமீ கடுவ
சு. சிவபாத சுந்தரம்.

---

திருநெல்வேலிப் பாளையங்கோட்டை செயின்ட்சேவியர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும் - மதுரைத் தமிழ்ச் சங்கம் - தென்னிந்திய தமிழ்ச் சங்கம் - முதலியவற்றின் அங்கத்தினரும், "தொல்காப்பிய மூலம்" "பாண்டி நேசன்" பதிப்பாசிரியரும் ஆகிய

## வித்வான் - திரு. P. C. புன்னைவனநாத முதலியார் அவர்கள்

எழுதியது.

செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் முந்துரை யாணியாய்த் திகழ்பவரும், திருவுந் தெளிவுமா மிருபெருஞ் செல்வரும், தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான் பாலறுவாயர் போலத் தங்குலம் விளக்கும் தண்ணளியாளரும், இருவகை வழக்கும் எளிதின் உணர்ந் திசைபெரு வளம் மிகநிறை பெரும் புலவாணரும், தென்னிந்தியத் தமிழ்ச் சங்கப் புலவர் குழு உறுப்பினரும், வழக்கறிஞருமாகிய சைவத் திருவாளர் - C. K. சுப்பிரமணிய முதலியா ரவர்கள், B. A., அன்பு கூர்ந் தனுப்பிவைத்த "சேக்கிழார்" என்னும் பொருணூலைப் பார்வையிட்ட வகையில் என்னுள்ளத்தி னிறைந்து வெளி

வரும் கருத்துக்களை நல்லார் பலரும் நன்கு மதிப்பான் அடியிற் குறிக்க முற்படலானேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் திருவுடைப் பெரியார் விருப்பிற் கிசைந்து, அவர்தம் பேரவையில் மூந்நாள் உவந்து வழங்கிய "சேக்கிழார்" என்னும் பெருஞ் சொல்லமுதம் தமிழகச் செல்வர் யாவரும் பெற்று மகிழ்ந்து செந்நெறி யொழுகி முற்று மன்றுளாரடியாராய் மன்னி இன்புற நூற்பொற் கலத்தமைத் தளிக்க முன்வந்தமைக்குத் தமிழகம் பெரிதும் நன்றி செலுத்துங் கட்டப்பாடுடையது. இப்பெரியார், "தூக்குசீர் திருத்தொண்டத் தொகைவிரி வாக்கினுற் சொல்ல வல்லபிரா"ஞகிய சேக்கிழார்சுவாமிகளின் அருள்ஞான அடையாளமாகிய பெரிய புராணத்திளிடத்து எவ்வளவு ஈடுபாடும் உள்ளன்பு முள்ளவர்களென்பது அவர்களோ டுண்மையாகப் பழகிய நண்பர்கட்கும் அவர்கள் மெய்யுரையைக் கேட்டின்புறும் அன்பர்கட்கும் நன்கு விளங்குவதாகும். இந்நூலகத்து விளங்கும் பல நலமணிகளையும் தனித்துக் கோத்துக் கோவையாக்கு மார்வ மிக்குடையேனேனும் ஆற்றலுங் காலமும் அமையாமை கருதி அவர்கள் சொற்பொருள் மணிகள் சிலவற்றைத் திரட்டிக் கொடுக்க முற்படுவல்.

முதல்நாட் சொற்பொழிவில் பெரியபுராண ஆசிரியர் வரலாறும், இவ்வரலாறு சித்தாந்த சாத்திர மெட்டியற்றிய உமாபதிசிவத்தா லியற்றப்பெற்ற சிறப்பிற் றென்பதும், இப்பெரியபுராணம் பாடுவித்தவராகிய அநபாயர் (கி. பி. 1123-1148) இரண்டாங் குலோத்துங்கரே என்பதும், இவரே பேரம்பலத்தைப் பொன் வேய்ந்தவர் என்பதும், 10, 11, 12-ம் நூற்றாண்டுகளில் தமிழ்நாடு இலக்கிய இலக்கண சமய நிலைகளிலே மிக்க சிறப்பெய்தி நின்றதென்பதும், 12-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அநபாயர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு, கன்னடநாடு, வடநாடு முதலிய எந்நாட்டிலுமே சமணர்களின் பரப்பு, சமணர் மேனிலை, சமணசமயப் பரப்பு தலைசிறந்து

நின்றன வென்பதும், சமண காவியமாகிய சிந்தாமணியில் மகிழ்ந்து கிடந்த அநபாய மன்னரை 'இது இருமைக்கும் ஆகா தென்று' தெருட்டி நல்வழிப்படுத்த முற்பட்ட அமைச்சர் சேக்கிழார் செயலே பெரியபுராணமாகிய செந்தமிழ்க் கருவூலத்தை நாம் பெறுதற்குக் காரணமான தென்பதும், இந்நூலைப் பயில்வதும், பயில்விப்பதும், தூர்த்த மாக்களின் கவர்ச்சியிலிருந்து தடுத்துப் பாலிப்பதும், சிறந்த தமிழ்த் தொண்டும் சிவபுண்ணியமுமா மென்பதும், பெரியபுராணமானது திருக்கயிலையிலிருந்து பூவுலகிற் போந்து சுந்தரமூர்த்திகள் சரிதம் திருமலைச் சருக்கத்திலே தொடங்கப்பெற்று வெள்ளை யானைச் சருக்கத்திலே மீண்டும் அவர் கயிலைக்கு வெள்ளை யானையின் மீது எழுந்தருளும் வரலாற்ரோடு நிறைவேறுகின்ற தொடர் நிலைச் செய்யுளாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாயுள்ள ஒரு பெருங் காப்பிய மென்பதும் விரிவாகச் சொல்லப்பட்டன.

இரண்டாம்நாள், "பெரியபுராணமும் அதன் கலைஞானங்களும்" என்ற பொருள் பற்றிப் பேசப்பட்டது. இதில் உலகம் நடைபெறுதற்குக் காரணமான கலைஞானங்கள் இவை என்பதும், அரச மரபுகளின் சில வழக்கங்கள், அமைச்சர் பண்பு, பண்டைத் தமிழர் நீதிமுறை இவை என்பதும், இராசத் துரோகமான தீய எண்ணம் அந்நாளில் மக்கள் மனத்தே யுண்டாகக் காரணமில்லாமலே இருந்த தென்பதும், பண்டை நாளிலும் ஆளைப்பற்றிய குற்றம், சொத்துக்களைப் பற்றிய குற்றம் என இருபெரும் பிரிவு ஆகக் குற்றங்களை வகுத்து முறை செய்திருக்கிறார்க ளென்பதும், சமயப் பாதுகாவல் அரசர் கடமைகளி லொன்றென்பதும், உண்ணு விரதங் கிடந்தமை அப்பூர் சுவாமிகள் சரிதத்தில் விளங்குகின்ற தென்பதும், கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனருக்கு பைபீல வாத கலைஞானம் கைவந் திருந்த தென்பதும், வேளாளர்க்கு உழுதொழிலன்றி மந்திரித் தொழிலும் சேனைத் தலைமையும்

போர் செய்தலும் உரிமைத் தொழிலே யென்பதும், 'வட புலத்து வாதாவித தொன்னகரந் துகள்' றுத்த சிறுத்தொண்டர் சரித ஆராய்ச்சி திருஞான சம்பந்தர் காலத்தை வறையறுக்கப் பெருந்துணை யாயிற் றென்பதும், பெரியபுராணத்திற் போந்த மெய்யடியார்களுட் பலர் சிறந்த போர் வீரர்களாகவும் போர்த் தலைவர்களாகவும் விளங்கினர்க ளென்பதும், வழக்குகள் மூவகைச் சாட்சியம் முதலியவற்றுடன் விசாரித்து முடிவு செய்யப்பட்டன வென்பதும், சிறியோர் செய்த பிழைக்குப் பெற்றோரை விசாரித்துப் பொறுப்பாளியாக்குதல் அந்நாளில் வழக்கமாயிருந்த தென்பதும் பேசப்பட்டன. மேலும் இல் வாழ்க்கையும் இல்லற நிலையும் என்ற பகுதியில் விவாக வயது, மணச் சடங்குகள், பெற்றோர் தம்பெண்ணை ஒருவர்க்கு மண மிசைந்துவிட்டால் அதுவே மணத்தின் உள்ளுறையாகிய உயிர்ப் பொருத்தம் நிகழ்ந்துவிட்டமைக்கு அறிகுறியாமெனல், பெண்கள் உடல் நலங்களைத் தங்கணவர்க்காகவே தாங்கி நிற்பா ரெனல், பெண்மக்கள் உரிமை, அடியவரை யுபசரித்தல், விருந்தோம்புதலுடன் குடும்பப் பாதுகாவலுக்கும் மனைவியே பொறுப்பாளியா யிருத்தல், கணவன் வழி நிற்றலே கற்பின் திறம், உடன்கட்டை ஏறல் முதலியவை அழகாகவும் இனிமை யாகவும் எடுத்துச் சொல்லப்பட் டிருத்தல் கவனிக்கத் தக்கது.

குலமணஞ் செய்கின்ற ஒத்த மரபுடனே யன்றியும், மேற்குலத்தார் கீழ்க்குலத் தாரிடம் பெண் கொண்டு மணஞ்செய்து வந்துளார் என்பதும், அந்நாள் சாதிகள் வாக விளங்கியமைக்கேற்ப உணவு முதலிய ஒழுக்கமும் வெவ் வேறாயிருந்தாலும், அன்பு நெறியில் இவை குறுக்கிடவில்லை யென்பதும், அன்புடைத் திருக்கூட்டத்தில் தீண்டாமை என் பது இருக்கவில்லை யென்பதும், சாதி சமூக அமைப்புகளைத் தலைதடுமாறச் செய்தொழிக்க முயல்வது விபரீத வுணர்ச்சியே யாமென்பதும், சிற்பசித்திரகீத நாட்டியங்கள் என்னும் அழகுக் கலைகள் அந்நாளில் மிக மேலான நிலையில் விளங்கினவென்ப

தும், மருந்து முதலிய ஆயுட்கலைஞானங்களும் விளங்கின வென்பதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேற்குறித்த பகுதியால் அறநிலைப் பகுதியும் பொருணிலைப் பகுதியும், போர் முறை வகையால் புறப்பொருணிலையும், சுந்தரமூர்த்திகளும் பரவையாரும் கண்டும் பிரிந்துமுள்ள பகுதியில் காட்சி ஐயம் முதலிய பல துறைகளமைப்பால் அகப்பொருளாகிய இன்ப நிலையும் நன்கு விளக்கப்பட்டிருத்தல் காணலாம். இவ்விரண்டாநாட் பிரசங்கம் உலகிய லறிவுமிக்கார் எவருங் கண்டு கேட்டின்புறப் பலவகை நலங்களும் செறிந்து ததும்புகின்றமை பெரிதும் வியந்தேத்தற் தக்கதே.

பெரிய புராணமானது உயிர்த் தன்மையில் வைத்து மேலுலக நிலையிலேயும் பயன் செய்யுந் தன்மையைப் **பெரிய புராணக் கவிச்சிறப்பும் பயனும்** என்னும் தலைப்புடன் விளக்குவதாக மூன்றுநாட் சொற்பெருக்கு நிகழ்வதாயிற்று. இதில், கவியின் தன்மை, பொருளணி சொல்லணி யுபயோகமான முறைமை, சேக்கிழார் சொல்லணியை அருகியே வழங்கினரெனல் என்பதும், சேக்கிழாரின் தன்மை நவிற்சியின் வளத்தை வேடர்சேரி பறையர்சேரி நுளையர்சேரிகளில் வைத்துள்ளவற்றால் காணலாமென்பதும், உவமையணிப் பகுதியைக் கவனிக்கின், சேக்கிழார் சுவாமிகளின் உவமானத்திற் பட்டமாத்திரத்திலே வெறும் மணற்காடான பாலியாறு நீர் செழித்தோடும் பொருநை காவிரி முதலிய ஆறுகளை விடச் சிறந்து விளங்குவதென்பது கவனிக்கத் தக்கதென்பதும், கவிகளிற் பொருளுக்கேற்பச் சொற்களும் சீர்களும் மருவுதல் இயல் பென்பதும், சேக்கிழார் தமிழ் மொழியில் ஆற்றலும் பற்றும் அதிக முற்றவரென்பதும், தந் தாய்நாட்டைப் பாராட்டிய வழி ஏனைப் புலவர் பெருமக்களுக்கு நல்ல முன்வழிகாட்டியாயிற்றென்பதும், சேக்கிழார் தேவாரக் கடலினுட் கிடைத்த உட்சான்றுகளாகிய ஆதரவுகளையே பெரிய புராணத்தின் அடிநிலையாகும்படி அமைத்துள்ளா ரென்பதும், முன்னோர் மொழி

பேணல் என்னு முறையில் சேக்கிழார் திருவள்ளுவர் ஆளுடை யடிகள்வாக்குகளைத் தங்காப்பியத் தமைத்திருக்கிறாரென்பதும், சேக்கிழார்க்குப் பின் 40 அல்லது 50 ஆண்டுகளில் வாழ்ந்திருக் கக்கூடிய கம்பர் பெரிய புராணக் கருத்துக்களையும் சொற் றொடர்களையும் தம் இராமாயணத்தில் அங்கங்கே எடுத்தமைத் துப் பொன்னே போற் போற்றியுள்ளாரென்பதும், இப்பெரிய புராணச் செய்யுள்கள் 4286 காணப்படுவதில் 33 பாடல்கள் இடைச்செருகல் என்பதும் இவற்றிலும் 9 பாடல்கள் உறுதி யாக இடைச்செருகல் என்று முடிவு கட்டப்பட்டுள்ளவென் பதும், சித்தாந்த சாத்திர உண்மைகளைக் கொண்டு உலகில் வாழ்ந்து வழி காட்டிய பெரியோர்களது வாழ்க்கையை எடுத் துக் கூறுவதே பெரியபுராணமாதலின் இதுவே மனித வாழ்க் கைக்குரிய உயரிய இலக்கியமாகும் என்பதும், செய்தவர் யாவ ராயினும் கருமம் அனுபவித்தன்றிக் கழியாதென்பதும், குலமும் உயர்வும் தாழ்வும் பிறப்பும் முதலிய உலக வேற்றுமைகள் யாவும் அன்பு நிலையின்முன் ஒடுங்கி யொழிந்து போகின்றன வென்பதும், இத்தகைய அன்புநிலை யுண்டாகி வளர்ந்து பயன் தருவதற்கு இப் பெரியபுராணம் ஒன்றே ஏற்ற சாதனமாக உதவுகின்றதென்பதும், அழிந்து போகும் இந்நிலவுலக சுய ராச்சியமட்டுமல்ல, அழியாத அவ்வுலக சுயராச்சியத்தையும் கைக்கொண்டு ஆண்டு, என்றைக்கும் சுகத்திலிருக்க வைப்பதும் இப்புராணத்தின் பயனாகும் என்பதும், அன்பு நிறைந்த பெரி யோர்களிடத்துக் கடவுளும் நிறைந்திருக்கின்றாராதலின் எதையும் கடவுள் செயலாகவே செய்து செயற்கரிய செய்யும் பெரியார்களாயினார்களென்பதும், மிக இனிமையாகவும் அழ காகவும் எளிதாகவும் தக்க மேற்கோள் ஆதாரங்களுடன் பேசப் பட்டன.

இம்மூன்நாட் பொருளுரையும் படித்துணரும் பான்மை யர் யாவரும் இருமை யுலகியலும் தெளிந்து எளிதிலின்பநிலை யெய்தல்கூடும். இக்கட்டுரை, காலத்துக் கேற்ற ஆராய்ச்சி

முறையில் எளிய இனிய செஞ்சொற்றொடரில் அமைந்து அழகிய திருவுருப்படங்களுடன் அழகு பெற்று வெளிவரச் செய்த முதலியாரவர்கள் பெருந்தன்மை போற்றத்தக்கது. இது கல்லூரி வகுப்பு மாணவர்க்குப் பட்டப் பரீட்சா பாடப் புத்தகமாக அமைக்கத்தக்கது. தமிழன்பர்கள் யாவரும் வாங்கிப் படித் தின்புறுவாராக.

P. C. புன்னைவனநாத முதலியார்.

---

தாக்ஷிணாத்யகலாநிதி மஹா மஹோபாத்யாய
டாக்டர் - பிரமஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்
எழுதியது
(தியாகராச விலாசம் - திருவேட்டீசுவரன் பேட்டை)

கோயம்புத்தூர் வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ வி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள 'சேக்கிழார்' என்னும் வசனநூற் பிரதி யொன்றைச் சில வாரங்களுக்கு முன் அவர்களிடமிருந்துவரப் பெற்று அதனைப் படித்துப் பார்த்தேன்.

சேக்கிழாருடைய கால ஆராய்ச்சியும், பெரிய புராணத்தி லிருந்து அறிந்துகொள்ளக் கூடிய கலைவகைகளும், போர் முறையும், வழக்கிடு முறைகளும், காலப் போக்கு வகைகளும், வழிபாட்டின் பெருமையும், அணி விசேடங்களும், இன்னன பிறவும் இதில் முறையாக ஆராய்ந்து கூறப்பெற்றுள்ளன.

திருக்குறள், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களி லிருந்து சேக்கிழார் எடுத்தாண்ட சொற்களையும் பொருள் வகைகளையும் எடுத்துக் காட்டியிருப்பது முதலியாரவர்க ளுடைய தமிழாராய்ச்சித்திறனை நன்கு புலப்படுத்தும்.

பெரிய புராணத்தைப் படித்து ஆராய்ச்சி செய்பவர் களுக்கு இந்நூல் பேருதவியாக இருக்குமென்று எண்ணு கிறேன்.

வே. சாமிநாத ஐயர்.

சித்தூர் அரசாங்க

போதனுமுறைக் கல்லூரித் தலைமை ஆசிரியர்

**திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள்**

**பி. ஏ., எல். டி.**

எழுதியது.

உலகெலா முணர்ந் தோதற்கரிய ஒருவனுக் காட்பட்ட உத்தமர்களின் பெருமைகளை, அவர்களிற் சிறந்த சிலர்தம் சரித வாயிலாய்ப் புலப்படுத்துவது திருத்தொண்டர் புராணம். தனிப்பெரு மாண்புட னிலகும் இப் 'பெரியர்புராண'த்தைத் தண்டமிழிற் றந்து தொண்டர் சீர் பரவினவர், அநபாய சோழ சக்கரவர்த்தியின் அரும்பெறல் அமைச்சரும், அருண்மொழிப் புலவரும், அன்பரகம் அளந்தறிய வல்லாருமாகிய சேக்கிழார் பெருமான். இவ்வாற்றால், பெரிய புராணமானது நூலின் பொருளாலும், நுவன்றோன் சிறப்பாலும் மேம்பட்டு விளங்குவ தொன்று. ஆகவே, இந்நூலின் அருமை பெருமைகளையும் இதன் ஆசிரியர் திறத்தையும் தமிழ் நன்மக்கள் அறிந்து பாராட்டிப் பயனடைதல் அவர்கள் கடமையும் உரிமையு மாகும். இதற்குத் துணை புரியும் வகையில், சென்னைப் பல்கலைக் கழகத்தார், தம்மில் ஒருவரும், கோவன்புத்தூர்த் தமிழறிஞரும், வழக்கறிஞருமாகிய சைவப் பெருந் திருவாளர், C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்களைக்கொண்டு "சேக்கிழார்" என்னும் செம்பொருள் பற்றி, மூன்று சொற்பொழிவுகள் செய்வித்தது சாலவும் போற்றத் தக்கதே. இச் சொற்பொழிவுகள் இப்போது இந்நூல் வடிவிற் போந்திருப்பது தமிழன்பர்க்கெல்லாம் பெருமகிழ்ச்சி தரும்.

இந்நூலில், பெரியபுராண ஆசிரியர் சரித ஆராய்ச்சியும், அப்புராணத்திற் காணும் கலைஞானங்களின் கவின்மிகு பரப்பும், பற்பல சரிதக் குறிப்பும், தெய்வச் சேக்கிழார் திருவாக்கின் சிறப்பும் பயனும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பெரியபுராணத்தை நன்கறியாதோரும், இந்நூல் தரும் விளக்கங்கொண்டு காண்பாராயின், அது இக்காலத்துக்கும் உறுதி பயக்கத் தக்கதோர் ஒளிநூல் என்றுணர்வர். முதலியாரவர்கள் தமதாராய்ச்சியில் சாதிசமய சம்பந்தத்தைப் பற்றியும், தீண்டாமை ஒழிபைப் பற்றியும் காட்டியுள்ளவை போன்ற திருந்திய கருத்துக்கள் இக்காளிற் பெரிதும் கவனிக்கத் தக்கவை.

இனி, தமிழிலக்கியப் பயிற்சியுடையார்க் கெல்லாம் பெருவிருந்தெனச் சுவைமிக வளிக்கும் பகுதிகள் இந்நூலின் பிற்பாகத்தில் மலிந்துள்ளன. சிற்சில திருப்பாட்டுகளில் முதலியாரவர்கள் காட்டும் பொருள் நயமும், புராணத்திற் புகுந்துள்ள இடைச்செருகல்களைப்பற்றி அவர்கள் உண்மை தெரிவிக்கும் நுட்பமும் நயப்பாடும், சிறப்பு வகையில் அறிஞர் உள்ளத்தைக் கவருந் தகையன. சொற்பொழிவாளர் அருண்மொழித் தேவரைப்பற்றிப் பேசுமோரிடத்தில், "தேவாரங்கள் என்ற பெருங் கடலினுள்ளே குளித்துத் திளைத்து அத்னுட் பெறுபயன் யாவும் தேர்ந்து எடுத்துக் கொடுத்துள்ளார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்" என்கின்றார். இவ்வாசகத்தில், "தேவாரங்கள்" என்பதற்குப் பதிலாய்ப் "பெரியபுராணம்" என்றும், "சேக்கிழார் சுவாமிகள்" என்பதற்குப் பதிலாய் "சுப்பிரமணிய முதலியார்" என்றும் சொல்லமைத்துப் படிக்க என்னுள்ளம் விழைகின்றது.

இந்நூலின் ஆசிரியர் மணிவாசகரையும் கருவூர்த் தேவரையும் பொருளாக்கொண்டு, தற்கால இலக்கிய ஆராய்ச்சி முறையில், முன்னமே நறுநூலிரண்டியற்றித் தமிழன்னைக்குத் தகுபணி செய்துள்ளார். இன்று, அவர் அம்முறையே சேக்கிழாரை முன்னிட்டு மற்றுமோ ரரும்பணி புரிந்து, அவள் சிந்தை மகிழ்வித்துள்ளார். அழகினுக் கழகு செய்வனவாய் இதில் பல அருமையான படங்களும் அமைந்து கண்ணையும் கருத்தையும் தம்வயப் படுத்துகின்றன.

பெரிய புராணம் என்னும் தனிப்பெருங் காவியத்தைச் சைவ வொழுக்கத்தில் நிற்கும் முதலியாரவர்கள் பன்முறை

பயின் ஞூராய்ந்து, எளிய தீந்தமிழ நடையில் எழுதியுள்ள இந்நூலைப் படிப்போர், அப்பெரு நூலைச் சமயக்கண்ணும் தமிழுணர்வும் கொண்டு காணும் ஆற்றலைப் பெறுவர். அன்றியும் இது உயர்தரக் கலாசாலைகளில் தமிழ் கற்கும் மாணவர்கட்கும் விழுமிய நன்மை விளைக்க வல்லது என்று நம்புகின்றேன்.

ச. சச்சிதானந்தன்.

---

MY DEAR SIR,

I received your SEKKILAR sometime ago. * * * * * I found time to read through your book which, I suppose, is a reproduction of the University special lectures you delivered on the subject. You have gone into the subject of your lectures thoroughly. I am glad to hear that you propose to bring out a good annotated edition of Sekkilar's PERIYAPURANAM. I do not think that any one else is better fitted to undertake the work. In the present book you have given the readers a foretaste of what they are likely to expect in the proposed elaborate work, and I feel sure they will be eagerly awaiting its publication.

Teyagarayanagar,
Teynampet,
Madras,

Yours Sincerely,
S. ANAVARATHAVINAYAKAM PILLAI,
M. A., L. T.,
*Reader in Tamil, University of Madras.*

---

## குன்றத்தூர்க் கல்வெட்டுகளிற் கண்ட சில குறிப்புகள்

1930ஆம் மார்ச்சு மீ 31உடன் முடிகிற ஒரு ஆண்டின் தென்னிந்திய சாசன ஆராய்ச்சிச் சாலையாரின் அறிக்கையிற் கண்டபடி சேக்கிழார் சுவாமிகள் சரித ஆதாரவுகளான சில செய்திகள் இங்கே குறிக்கப்பெறுகின்றன. இவை, உமாபதி சிவாசாரியார் செய்த திருத்தொண்டர் புராண வரலாற்றின் அவ்வப் பகுதிகளை உறுதிப்படுத்துவன காண்க.

### குன்றத்தூர்க் கல்வெட்டுகள் :-

(1) 187 நெ : திருநாகேசுரம் கோயில் வடபுறம் சுவரில் செயங்கொண்ட சோழ மண்டலத்துக் குலோத்துங்க வளநாட்டுப் **"புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்"**-Ref. புராண வரலாறு பாட்டு (11).

(2) 214 நெ : **"நாற்பத்தெண்ணாயிர மாணிக்கம்"**—Ref. புராண வரலாறு (12).

(3) 188 நெ : **"புரிசை கிழான்"**

(4) 206 நெ : "வெண் குளப்பாக்கம்" என்ற ஊரின் பெயர் தெரிகிறது. Ref. புராண வரலாறு (12).

(5) 227 நெ : "செல்வன் **உத்தமசோழப் பல்லவராயன்**" திருநாகேசுர முடையார்க்குக் கட்டளைக்கு நிலம் வாங்கினதைக் குறிக்கிறது. Ref....(18)

(6) 212 நெ : திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர் காலத்தில் ஒருவர் திருநாகேசுரம் கோயிலில் எழுந்தருளியுள்ள ஆலால சுந்தரருக்குத் திருவிளக்குக் கட்டளை ஏற்படுத்தியது தெரிகின்றது.

(7) 218 செ: சேக்கிழான் வரந்தரு பெருமாள் திருவூரகப் பெருமாள் என்பார் இக்கோயிலுக்கு விளக்கிடப் பொருள் தந்தமை குறிக்கின்றது.

(8) 208 செ: சேக்கிழான் ஆடவல்லான் என்பவர் இக்கோயிற் கட்டளைக்கு நிலம் விற்றமை குறிக்கின்றது.

இவ் வரலாறுகள் கும்பகோணம் - அரசாங்கக் கல்லூரித் தமிழாசிரியர், திரு - அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் முயற்சியிற் கிடைத்தன. இங்கு நன்றியறிதலுடன் குறிக்கப்பெற்றன.

## பிழைதிருத்தம்

(புத்தகத்து இறுதியில் உள்ளவற்றோடு இவற்றையும் சேர்த்துக் கொள்க)

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 16 | அவைகள்தான் | அவைகள்தாம் |
| 119 | 22 | ஒத்தியின்று | ஒத்தியன்று. |

# இந்நூலிற்காணும் படங்களின் அட்டவணை

இலக்கம் பக்கம்


**குன்றத்தூர் :**

1. சேக்கிழார் திருவுருவம், (குன்றத்தூர் மூலத்தானம்) புத்தகமுகப்பு
2. குன்றத்தூர்க் குன்றமும், மலைமேல் முருகன் கோயிலும் ... 7
3. பாலறாவாயர் குளம் ... 7
4. குளத்தை அடுத்த பழய சிவாலயத்தின் மதிற் புறத்துள்ள இரண்டு உருவங்கள் ... 7
5. சேக்கிழார் சுவாமிகள் கோயில் ... 8
6. திருநாகேச்சுரம் (தொண்டை நாடு) கோயில் வெளிப்புறம் பார்வை ... 11
7. „ உட்புறம் பார்வை ... 11

**சிதம்பரம் :**

8. மேற்கு வடக்குக் கோபுரங்களும், அவ்வகையே காணும் திருக்கோயில் முழுக் காட்சியும், செம்பொன் அம்பலம் முதலியனவும் ... 4-5
9. கிழக்குத் தெற்குக் கோபுரங்களும், அவ்வகையே திருக்கோயில் முழுக் காட்சியும், செம்பொன் அம்பலம் முதலியனவும் ... 4-5
10. சிற்சபை - கனகசபை முதலியன ... 4
11. ஆயிரக்கால் மண்டபம் முன்புறக் காட்சி ... 5
12. „ உட்புறக் காட்சி ... 5
13. சேக்கிழார் சுவாமிகள் சிதம்பரத்தில் வதிந்தபோது அமர்ந்தருளியதாகச் சொல்லப்படும் ஆகம சிவப் பிரகாசர் மடத்தின் முன் பார்வை ...

**சோழநாட்டுத் திருநாகேச்சுரம் :**

14. „ உட்புறம் கோபுரத்துடன் திருக்கோயிற் காட்சி ... 9
15. இத் திருநாகேச்சுரத் திருக்கோயிலில் உள்ளபடி **சேக்கிழார் சுவாமிகள் திருவுருவம்** ... 9
16. „ சேக்கிழார் தம்பியார் பாலறாவாயர் திருவுருவம் 9
17. „ சேக்கிழார் தாயார் திருவுருவம் ... 9

"எள்ளுந் திறத்துப் பரசமையர்
எறுவருக தேறுதலில்
எங்கள் உணர்வின் கணுமதுரித்
தினிக்கு மிருங்கோற் றேன்வருக
தெள்ளும் புலத்தர் பெறுகாம
தேனுவருக வருகந்தர்
சிந்தா மணியைப் பொருட்படுத்தாச்
செல்வச் சிந்தா மணிவருக
உள்ளு மவருக் கெய்ப்பிடைவைப்
பொத்துள் எழும்ஒள் ஒளிவருக
ஒழியாப் பத்திக் கடல்வருக
உலவா தமைந்த சிவபோகங்
கொள்ளுஞ் சைவப் பயிர்வளர்க்குங்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைச்
கோமான் வருக வருகவே."

—சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள்.

(குன்றத்தூர்ச் கோயில் மூலத்தானத்தில் உள்ள திருவுருவம்.)

உ

சிவமயம்

# சேக்கிழார்

## I

## முதல்நாட் பிரசங்கம்

## பெரிய புராண ஆசிரியரும் அவர் காலமும்

பெரிய புராணத்தைத் தமிழரும் சைவரும் பிற நாட்டவர்களும் பற்பல வாறு உணர்ந்து அனுபவிக்கின்ருர்கள். அதைப் பற்றிப் பற்பல மாறுபட்ட அபிப்பிராயங்களும் பொருள்களும் வெளியிடப்படும் இக்காலத்தில் அதனை ஆராய்ச்சி செய்யவேண்டுவது கடமையே. அருண் மொழித்தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் ஆசிரியராவர். அவர் சரிதத்தைப்பற்றி அறிவதற்கு உமாபதி சிவாசாரியர் செய்தருளிய திருத்தொண்டர் புராண வரலாறு மிக உதவி புரிகின்றது.

**சேக்கிழார் சுவாமிகள் சரிதச் சுருக்கம்**

அப்புராணத்தில் அறிந்த வகையில் சேக்கிழார் சுவாமிகள் சரிதச் சுருக்கமாவது:—சான்ருேருடைத் தென விதந்து ஓதப்பெற்ற தொண்டை நன்னுட்டிலே உள்ள இருபத்துநான்கு கோட்டங்களில் ஒன்ருகிய புலியூர்க் கோட்டத்திலே - குன்றத்தூர் நாட்டிலே-குன்றத்தூரிலே-வேளாளர் மரபிலே-சேக்கிழார்

என்ற குடி,சிறப்பாய் விளங்கியது. அந்தக் குடியின் குல தீபம்போல அருண்மொழித் தேவர் என்ற பெரியார் அவதரித்தார். இவர் இளமையிலேயே பல கலைகளிலும் வல்லவராய், அறிவின் முதியவராய் விளங்கிய செய்தி கேட்டு அந்நாள் நாடாண்ட அநபாயச் சோழச் சக்கரவர்த்தி இவரை வரவழைத்து இவரது மேம்பாட்டைக் கண்டு இவர்க்கு "உத்தமச் சோழப்பல்லவர்" என்ற பட்டங்கொடுத்துத் தம்மிடத்தே முதன் மந்திரியாராய் அமர்த்திக் கொண்டார்.

"உத்தமச் சோழப்பல்லவ"ரென்பது பல்லவர்களை வென்ற சோழ அரசரால் "உத்தமர்" என்று தெரிந்து கொடுத்த பட்டம் எனப் பொருள் தர நிற்கின்றது. இதுபோலவே மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பாண்டியர் தந்த "தென்னவன் பிரமராயன்" (பாண்டியன் தந்த அறிவுக்கரசன்) என்ற அமைச்சர் பட்டத்தின் பொருளையும் ஆராய்ந்தால் இது அக்கால வழக்கென்று விளங்குகிறது.

சேக்கிழார் சுவாமிகள் சோழ நாட்டிலே உள்ள "திருநாகேச்சுரம்" என்ற தலத்திலே மிகுந்த பத்தியுடையவராய் அதனைத் தமது ஆன்மார்த்த தலமாகக் கொண்டு வழிபட்டுவந்தார். அந்தஅன்புமேலீட்டினாலே அதற்கு அறிகுறியாகத் தமது குன்றத்தூரிலே ஒரு கோயிலும் அதைச் சுற்றித் திருமடவளாகமும் அமைத்து அதற்குத் "திருநாகேச்சுரம்" என்று பேரிட்டார். அமைச்சராய் அரசாங்கம் நடத்தி வருநாளில் அரசர் தமது சமுகத்தில் சிற்றின்பப் பகுதி நிறைந்ததாகிய "சீவகசிந்தாமணி" என்ற சமண நூலைப் பாராட்டிப்

படித்து மகிழ்ந்து வந்ததைக் கண்டார். அதுபோலவே அந்நாளில் "சீவகசிந்தாமணி"யும் சமணர்களின் பிற நூல்களும் நாட்டில்பரந்து நாட்டவர்களது மனதை உத்தமமாகிய சைவ நெறியிலிருந்து பிறழவைத்து வந்த நிலையையுங் கண்டார். அரசரை நோக்கி "நீர் விரும்பிப் பாராட்டிவரும் இது சமண நூல். இது இம்மைக்குமாகாது; மறுமைக்குமாகாது. இதைவிட்டு உத்தமமாகிய சிவகதைகளைப் பயின்றால் இம்மை மறுமை வீடு என்ற மூன்று பலனும் கிடைக்கும். அப்படிச் செய்யாமல் இப் பொய்நூல் கற்றுப் பொழுது போக்குதலானது கரும்பிருக்க இரும்பு கடித்தலும், விளக்கிருக்க மின்மினித்தீக் காய்தலும்போல உள்ளதேயாகும்" என்று அறிவுறுத்தினர். அரசர் இதுகேட்டு வியந்து 'அப்படியாயின் அந்தச் சிவகதைகள் யாவை? அவற்றைச் சொல்லுங்கள் கேட்போம்' என்று கேட்டார். அருண்மொழித் தேவர், "அவைகள் தான் சிவனடியார்களின் சரிதைகளாகும். அவ்வடியவர்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையிலே தொகுத்துத் துதித்தருளினர். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் தமது கலித்துறைத் திருத்தொண்டர் திருவந்தாதியிலே வகைப்படுத்தி விரித்தருளினர்" என்று கூறி அச்சரித்திரங்களைச் சொன்னர்.

அது கேட்ட அரசர் வியந்து உவந்து அற்புதமெய்தி உள்ளமுருகி இச்சரிதங்களை ஒரு காப்பியமாகச் செய்து தருதல் வேண்டுமென்று வேண்டினர். அருண்மொழியார் அதற் கிசைந்து "இங்கிருந்து அக்காரியம்

செய்தலியலாது; அதன் பொருட்டுத் திருத்தில்லைக்குச் சென்று தங்குதல் வேண்டு''மென்று அரசரிடம் விடை பெற்றுச் சென்றார். அரசர் அவருக்கு வேண்டிய பரிசனங்கள் முதலிய வசதிகள் எல்லாம் செய்து தந்தார். அருண்மொழித் தேவர் திருத்தில்லையிலே சென்று ஸ்ரீ நடராசப் பெருமானை வணங்கி, "என்னுயிர்த்தலைவரே! தேவரீரது அடியார் பெருமை அறிதற் கரியது. அதனை எடுத்துச் சொல்ல அடியேனுக்குத் துணை செய்து அருள் புரிதல்வேண்டும்'' என்று பிரார்த்தித்து நின்றார். அப்போது "உலகேலாம்'' என்ற திருவாக்கு அனைவரும் கேட்க ஆகாயத்திலே எழுந்தது. அவ்வாறு இறைவன் எடுத்து அருளிய முதலை முதலாக வைத்துக்கொண்டு அருண்மொழித் தேவர் தில்லையிலிருந்து சில காலத்தில் இப்புராணத்தை இயற்றி முடித்தார். புராணம், இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுக்கப் பெற்று 4253 செய்யுள்களில் முடிந்தது. புராணம் எப்போதுமுடியுமென்றுஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசர் அது நிறைவெய்தியது கேட்டதும் உள மிக மகிழ்ந்து தமது சேனை முதலிய பரிசனங்களுடன் சிதம்பரத்துக்குவந்து சிவவேடப் பொலிவுடன் விளங்கிய அருண்மொழித் தேவரைக் கண்டு வணங்கினார். தம்மை எதிர் கொண்ட தில்லைவாழந்தணர்கள் மடபதிகள் முதலிய அனைவர்களுடன் அரசர் ஸ்ரீ நடராசரைத் தரிசித்தார். அப்போது "அரசனே! 'உலகெலாம்' என்று நாம் அடி யெடுத்துக் கொடுக்க நமது அன்பன் சேக்கிழான் நமது திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்திருக்கின்றான்.



சிதம்பரம் : சிற்றம்பலம் -
கனகசபை - கிழக்கு மண்டபம் -
சண்டீசர் கோயில் - இவற்றின் (விமானங்கள்).
சேக்கிழார் நாயனருக்கு
"உலகெலாம்" என்று முதல் எடுத்துக் கொடுத்த இடம்.

---

" அருமறை முதலின் நடுவினிற் கடையில் அன்பர்தஞ்
சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம்பலம்......"

—தடுத்தாட்கோண்ட புராணம் - 104.

" அண்ணலார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யான அம்பலம் "

—திருஞானசம்பந்த நாயனர் புராணம் - 160.

" களனிற் பொலிவிடம் உடையார் நடநவில் கனகப்போது "

—திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 165.



சிதம்பரம் : ஆயிரக்கால் மண்டபம் - வெளிப்பார்வை.



சிதம்பரம் : ஆயிரக்கால் மண்டபம் உட்பார்வை - சேக்கிழார் பெரியபுராணம் பாடி அரங்கேற்றிய இடம்.

நீ அதை விரைவில் விரும்பிக் கேட்பாயாக!" என்று அம்பலக் கூத்தர் அருள் வாக்கு ஆகாயத்திலே அனை வருங் கேட்க எழுந்தது. இறைவன் திருப்பாதத் தணிந்த திருச்சிலம் பொலியும் உடனே கேட்டது. அரசரும் தில்லைவா ழந்தணர்களும் மகிழ்ந்து அந்தப் புராணத்தை வாசித்துப் பொருள் செய்யுமாறு சேக் கிழாரை வேண்டினார்கள்.

அரசர் பல ஊர்களுக்கும் ஓலை போக்கிப் பல சிற் றரசர்களையும் ஏனைய அன்பர்களையும் இது கேட்க வர வழைத்து அனைவருக்கும் உண்டி உறையுள் முதலான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். தில்லைவாழந் தணர்களுக்கும் மடபதிகளுக்கும் தினமும் படியமுது ஏற்படுத்தினர். ஸ்ரீ நடராசருக்குத் தினந்தோறும் விசேடபூசை நியமித்தார். ஆயிரக்கால் மண்டபத்திலே யிருந்து சேக்கிழார் சித்திரை மாதத்துத் திருவாதிரை யிலே புராணம் வாசித்துப் பொருள் சொல்லத் தொட ங்கி அடுத்த சித்திரைத்திருவாதிரையிலே நிறைவேற்றி முடித்தார். அரசர் தம்முடைய சபையினரோடு இருந்து கேட்டனர். நிறைவேறினவுடன் நடராசர் சந்நிதியில் அறுகாற் பீடமிட்டு அதன்மேல் பசும்பட்டு வெண் பட்டிட்டு அதன்மேல் அந்தப் புராணத்தை வைத்துத் தில்லைவாழந்தணர்கள் சிவமூல மந்திரத்தாலே பூசித் தார்கள். அதன்பின் பொற் றும்பாளத்தில் அதை வைத்து யானை சிரத்திலே எழுந்தருளுவித்துச் சேக் கிழாரையும் ஏற்றி அரசர் தாமும் ஏறிப் பின்பாக இருந்துகொண்டு தமது இரண்டு கைகளாலும் சாமரை வீசிக்கொண்டு நகர்வலம் செய்வித்து "இதுவன்றோ

நான் செய்த தவப்பயன்'' என்று மகிழ்ந்தார். நகர் வலத்தின் பிறகு நடராசர் சந்நிதியில் வைத்து இதற்கு முன் இராசராச சோழ தேவர் காலத்திலே நம்பியாண்டார் நம்பிகளால் வகுக்கப் பெற்றிருந்த பதினொரு திருமுறைகளுடன் இதனைப் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடுசெய்து "சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும்'' என்று கோவை செய்து சேக்கிழார் பெருமானுக்குத் "தொண்டர் சீர் பரவுவார்'' என்ற பெயரும் ஞானமுடியும் சூட்டி அரசர் வணங்கினார். சேக்கிழார் அதன்பின் திருத்தில்லையிலேயே தங்கிப் பெரிய புராணத்திலே உள்ள அடியவர் கதைகளைச் சிந்தித்து உணர்ந்து கொண்டு சிவனடியார்களுடன் கூடித் தவஞ்செய்து கொண்டு இருந்து நிட்டைகூடி இறைவன் திருப்பாத நீழலடைந்தனர். அரசர் இவரது தம்பியாராகிய பாலறுவாயரைவிசாரித்து அவர் தமது பெயராலே குன்றத்தூரிலே "பாலறுவாயர் குளம்'' என்ற குளம் உண்டாக்கித் திருநாகேச்சுரத்திலே திருப்பணிசெய்து கொண்டிருந்தது கேள்வியுற்று வரவழைத்து அவரைத் தமது மந்திரியாராக அமர்த்திக் கொண்டார். அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டமும் கொடுத்தார். அவர் தமது ஊரிலே இருந்தபடியே அரசு செய்தமையாலே 'தொண்டைமண்டலம் நின்று காத்த பெருமான்' என்று எங்கும் பெயர் வழங்கிற்று. இதுவே உமாபதி சிவாசாரியார் செய்து தந்தபடி அறியப் பெறும் சேக்கிழார் வரலாறாகும்.

சேக்கிழார் சுவாமிகள் காலத்திற்கு இருநூறு ஆண்டுகளின் பின் வாழ்ந்த சைவ சமய சந்தான குர

வர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியரால் இவ்

**சரித ஆராய்ச்சி**

வரலாறு நமக்குக் கிடைத்தது, தமிழும் சைவமும் செய்த பெரும்பாக்கியமே. சைவ சமய ஆசாரியர் மூவர் முதலிகளுக்குப் பின், தமிழ்க் கவிவாணர்களிலே தமது சரிதம் நம்பும் வகையில் எழுதப் பெற்ருேர் நமது சேக்கிழார் சுவாமிகள் ஒருவரே யென்று சொல்லலாம். இச்சரிதம், ஏறக்குறைய முழுதும் நமக்குக் கிடைக்கும் பிற சாதனங்களாலே உறுதி பெறுகின்றது. புலியூர்க் கோட்டமும் குன்றத்தூரும் இன்றைக்கும் அப்பெயராலேயே நிலவுகின்றன. குன்றத்தூருக்கு அப்பெயர் வந்ததற்குக் காரணமாகிய குன்றமும் அதில் விளங்கும் முருகன் ஆலயமும் இன்றும் நாம் சென்று கண்ணுக்கினிய காட்சியாகக் காணப் பொலிகின்றன. குன்றத்தூரிலும் பிற ஊர்களிலும் வேளாளர் மரபில் சேக்கிழார் குடியும் இப்போதும் இருக்கிறது. பாலருவாயர் குளமும் இன்றைக்கும் இருக்கக்காண்கிருேம். ஆனல் அதைச் சனங்கள் "பல்லவராயர் கேணி" என மருவி வழங்குகிருர்கள். சேக்கிழார் தமது ஆன்மார்த்தமாய் அமைத்த திருநாகேச்சுவரக் கோயிலும் இன்றைக்கும் நாம் கும்பிடக் கூடியதாய் விளங்குகிறது. இவ்வூரிலே சேக்கிழார்சுவாமிகளுக்கு ஒரு சிறு கோயிலும் இருக்கிறது. அநபாயன் அரசசபையார் அது இப்புராணத்து உரையினைக்கொண்டு விரும்பும் என்று சேக்கிழார் சுவாமிகளே புராணத்திலே பாயிரத்துள்,

> "மேய இவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
> சேய வன்திருப் பேரம்ப லஞ்செய்ய

தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆய சீர்அந பாயன் அரசவை'

எனப் பாடியிருக்கின்றமையால் அநபாயர் கேட்க இவர் இதைப் பாடினார் என்பது தேற்றமாம். அநபாயர் காலத்திலே அவர் ஆதரவில் இஃது இயற்றப்பெற்ற தென்பதற்கு மேலே குறித்த பாயிரச் செய்யுள் அல்லாமல் இனியும் பற்பல இடங்களில் சுவாமிகள் அநபாயரைச் சுட்டிக் குறித்திருப்பது சான்றாகும். "கொற்றவன் அநபாயன்பொற்குடை நிழற்குளிர்வது" சோழ நாடு என்று நாட்டுப் படலத்தில் 95-வது செய்யுளிலே நிகழ் காலத்திலே குறிப்பதால் இப்புராணம் பாடப் பெற்ற நாளில் சோழநாடு அநபாயர் செங்கோலின் கீழ் வாழ்கின்றதென்பது துணிபாம். பெரிய புராணத்திற் பேசப்பெற்ற அடியார் சரிதங்கள் அக்காலத்திலே வழங்கி வந்தன என்றும் அவை தமிழ் மக்களாற் பாராட்டப்பெற்றன என்றும் தமது தக்க யாகப் பரணியிலே சைவப் புலவரான ஒட்டக்கூத்தர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரது சரிதம் கூறும் வகையிலிருந்து தெரிகின்றோம். திருத் தில்லையிலே இப்புராணம் இயற்றினர் என்பதற்கு வேறு புறச்சான்றுகள் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் புராணத்தினுள்ளே எங்கெங்கே தில்லையைப்பற்றிப் பேச நேரிடுகிறதோ அங்கங்கெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் மிகச் சிறப்பித்து வர்ணித்து விரிவாகப் பேசியுள்ளதால் அங்கே தங்கி நடராசர் தமக்குச் செய்த பேரருளினாலே புராணமியற்றினர் என்று உறுதியாய் ஊகிக்கலாம். தில்லையைப் பற்றி வரும் நூற்றுக்கணக்கான இடங்களிலெல்லாம்

சிறப்பு மொழிகளாகிய அடைமொழிகளும் சொற்றொடர்களும் தராமல் தனியாகத் தில்லையென்று சேக்கிழார் கூறக் காணவில்லை. "ஆனத சீர்த்தில்லை", "வீடருள் தில்லை மல்லலம் பதி", "தேனூறு மலர்ச்சோலைத் திருத்தில்லை" யென்றெல்லாம் காண்போம். சேக்கிழார் சுவாமிகள் சோழநாட்டுத் திருநாகேச்சுரம் என்ற தலத்தைத் தமது அபிமானத் தலமாகவும், ஆன்மார்த்தத் தலமாகவும் கொண்டார் என்பதும் விளங்குகிறது. அத்தலத்தே அவர் பலகாலம் தங்கினாரென்றும், அத்திருக்கோயிலிலே திருப்பணிகள் செய்தார் என்றும், தமது மந்திரித் தொழிலுக்கு ஏற்ற உறைவிடமாக அதனை வைத்துக்கொண்டு அதில் பல காலம் வசித்தார் என்றும் சொல்லுகிறார்கள். இத்திருத் தலத்திலே அவரும், அவர் தம்பியாராகிய பாலறுவாயரும், இவர்களது தாயாராகிய அம்மையாரும் பெரிய திருவுருவங்களாற் பிரதிட்டை செய்யப்பெற்று இன்றைக்கும் அக்கோயில் உட்பிரகாரத்தில் தென்புறம் வைத்து வழிபடப் பெறுகின்றார்கள். அன்றியும் திருநாகேச்சுவரத்திலே வழிபட்டு சுவாமிகளின் தாயார் இக்குழந்தைகளைப் பெற்றனர் எனவும் ஊகிக்க இடமிருக்கின்றது.

> "மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
> நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கு நலம்போற்றி"
>
> —(திருஞான - 412.)

என்ற சேக்கிழார் திருப்பாட்டிலே திருஞானசம்பந்தமூர்த்திகளின் திருப்பதிகங்களின் உட்குறிப்பும் சுவாமிகளின் சரிதக் குறிப்பும் ஊகித்துச் சிந்திக்கத்தக்கனவாம்.

உமாபதியார் சொல்லியனவற்றைத் தவிரச் சேக்கிழார் சுவாமிகள் சரிதத்தைப்பற்றிய வேறு குறிப்புகள் அநேகமாக ஒன்றும் கிடைக்கவில்லை. இவர் இளமையிலேயே கல்வியில் மேம்பட்டு விளங்கினர் என்பதற்கு அத்தாட்சியாக ஒரு சிறு சம்பவம் சொல்லப் பெறுகிறது. அதாவது இவர் தந்தையார் அரச சபையில் ஓர் உத்தியோகத்திலே அமர்ந்திருந்தார். ஒரு நாள் அரசன் அவரையும் ஏனையோரையும் பார்த்து 'மலையிற் பெரிது ; பூமியிற் பெரிது ; கடலிற் பெரிது;' எதெது என்று கேட்டு அதற்கு அடுத்த நாள் விடை சொல்ல வேண்டுமென்று விடுத்தான். அவர் வீட்டுக்கு வந்து அந்தச் சிந்தனையிலே கவலைப்பட்டு ஆழ்ந்திருந்தபோது அதை யறிந்த இளஞ் சேக்கிழார் மிக இலேசாக அதற்குத் திருக்குறளிலிருந்து மூன்று குறட்பாக்களால் விடை சொல்லித் தந்தையாரைத் தேற்றினர். அக்குறட் பாக்களாவன :

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

"பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கின்
னன்மை கடலிற் பெரிது."

என்பனவாம். இவ்வாறு கர்ண பரம்பரையாகக் கேட்கப்படுவதன்றி வேறு ஆதரவுகள் கிடையா. சேக்கிழார் சுவாமிகளது வீடு இருந்த இடத்திலேயே இப்போது அவரது ஆலயமும் அதைச் சுற்றிய தோட்டக் கொல்லை இடமும் அமைந்துள்ளன என்

கிறார்கள். அன்றியும் அவர் அந்தக் கிராமத்தில் தமக்குள்ள மனைப் பங்கு இடத்திலே தான் திரு நாகேச்சுரம் என்ற தமது ஆன்மார்த்த ஞாபகக் கோயிலை அமைத்தார் என்றும் கூறுவர். அன்றியும் தமது சொந்த விளைநிலங்கள் முழுமையும் அந்த ஆலய பூசைகட்கு நிபந்தமாக வைத்தனர் என்றும் சொல்கின்றார்கள். ஆனால் அவற்றின் பிற விவரம் ஒன்றும் புலப்படவில்லை. குன்றத்தூர்க் குன்றின் அடிவாரத்தில் பாலருவாயர் குளக்கரையில் பூர்வீகமான ஒரு பழைய சிவாலயம் உள்ளது. அந்த ஆலயச் சுவரிலே அரச கோலத்துடன், ஒருருவம் தலைப்பாகை, உடைவாள் முதலியவற்றோடும் பத்தினியுடனும் நிற்கிறது. இதனைச் சுவாமிகள் பத்தினியாருடன் நிற்கும் மந்திரிக் கோலம் என்று சிலர் கருதுவதாய் எனது நண்பர் பண்டிதர் திரு. கா. நமசிவாய முதலியாரவர்கள் சொல்லத் தெரிந்தேன். ஆனால் அதைப்பற்றி விசாரித்ததில் அது அந்தக் கோயிலுக்குச் சில உபயங்கள் செய்து விளைநிலங்கள் விடுத்த சந்திரகிரி அரசர் கிருஷ்ணராயருடைய உருவம் என்று அவ்வூரார் சொல்கிறார்கள். அதற்குச் சமீபத்தில் சுற்றிலும் எழுத்துக்கள் வெட்டப்பட்ட ஒரு கல் தூண் நிற்கிறது. அதனைப் படித்துப் பார்க்க இயலாதபடி கீழே மண்ணில் சில பாகம் மறைந்து உள்ளது. அதை வாசித்த வரையில் அது அந்த ஊரார் சொல்லும் செய்தியை உறுதிப்படுத்தக் கூடியதாய்த்தான் தோன்றுகிறது.

அநபாயச் சோழரே பெரிய புராணம் பாடுவித்தவர் என்பது உமாபதியார் கூற்றினாலும் புராணத்தின் உள்ளுறை சான்றுகளாலும் தெரிகிறதென்று மேலே

கூறினும். அந்த அநபாயர் யார்? அவர் காலம் யாது? அக்காலத்தில் நாடு இருந்த நிலை யாது? வேறு புலவர்கள் யாவர்? என்பன வாதி பிற வரலாறுகளைப் பற்றியும் சிறிது விசாரிப்போம்.

அநபாயர் காலமும் அந் நாள் வரலாறு களும்

சேக்கிழார் சுவாமிகள் அந்த அநபாயச் சோழருக்கு அபயன், குலோத்துங்கன் என்ற பெயர்கள் இருந்ததாகத் தமது புராணத்திலே குறிக்கின்றார்.

"சென்னி யபயன் குலோத்துங்கச்
சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர்
போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன்"
—சண்டேசுர நாயனர் புராணம் - 8.

ஆனால் அவர் வழங்குகிற இடங்களிலெல்லாம் அநபாயன் என்ற பெயரை மட்டில் விடாது சொல்லியும், ஏனைப் பெயர்களை ஏகதேசத்தில் ஒவ்வோரிடத்தில் மட்டும் குறித்தும் வைத்திருப்பதனால் அவ்வரசருக்கு அநபாயன் என்ற பெயர் விசேடித்ததாக இருந்திருக்க வேண்டும்.

பத்துப் பதினொன்று பன்னிரண்டாவது நூற்றாண்டுகளின் தமிழ்நாட்டுச் சரிதத்தை ஒருவாறு கவனித்தால் இந்த அநபாயச் சோழர் யாரென்று நிச்சயிக்க வசதியாயிருக்கும். இந்த மூன்னூறு ஆண்டுகள் தமிழ்நாட்டில் சோழர் அரசாட்சிக்கு உச்சநிலையென்றே சொல்லலாம்.

சூரிய மரபின் சோழர் வம்சத்தில் திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்தர் 953-ம் ஆண்டில் விளங்கினர். அவர் தம்பியின் பேரனர்தான் தஞ்சைப் பெரிய

கோயில் கட்டிய பெரிய இராஜராஜ சோழ தேவர் I (985—1030). இவர் புதல்வர் சயங்கொண்ட சோழர் என்ற காரணப்பட்டப் பெயர்புனைந்த கங்கை கொண்ட சோழர் என்னும் இராசேந்திரசோழர் I (1030—1045). அவருக்குப் புதல்வர்கள் பலர். அவர்களில் இராசேந்திர தேவர் என்பவர் ஆண்டு அதன்பின் ஆட்சிக்கு வந்த அவர் மகன் இராச மகேந்திர சோழர் இளமையில் இறந்து விட்டார். எனவே, சூரிய வம்ச சோழர்களின் நேர் பரம்பரையானது அதனோடு அற்று விட்டது. இனிச் சந்திர வம்ச சோழர்கள் என்று சொல்லப் படும் கீழைச் சாளுக்கிய சோழர் பரம்பரையைப்பற்றிப் பார்ப்போம். இவ்விரண்டு மரபுகளும் விவாக சம்பந் தத்தாலே நெருங்கியன. திருவிசைப்பாவிற் சொல்லிய படி "மணஞ் செய் குடிப்பிறந்த பழ வடியார்கள்" என் றுல் இவ்விரு மரபுகளுக்கும்பொருந்தும்.மேற்சொன்ன சயங்கொண்ட சோழரின் சகோதரியும் பெரிய இராச ராசர் மகளுமான குந்தவ்வை தேவியைக் கீழைச் சாளுக்கிய மரபினைச் சேர்ந்த விமலாதித்தர் மணந்தார். அவர் மகனுர் வேங்கை மன்னன் இராசராசர் என்பவர், அந்தக் கங்கைகொண்ட சோழரின் மகள் அம்மங்கா தேவியை மணந்து கொண்டார். அவர் மகனுராகிய வேங்கை மன்னன் இராஜேந்திரர் II அல்லது குலோத் துங்கர் (1073—1118) என்பவரின் பல மனைவியர் களில் அவருடைய தாய் மாமன் இராஜேந்திர தேவரின் மகள் மதுராந்தகி தேவியும் ஒருத்தியாவள். இந்தக் குலோத்துங்கன் தான் சூரிய வமிசத்து இராச மகேந் திரர் இளமையில் இறந்தபின் அந்தக் குலமும் விளங் கும்படி அந்த அரசாட்சியையும் வகித்து இரு மரபுக் கும் ஓர் அரசராய் மிக்க புகழுடன் விளங்கினவர்.

இவர் பல போரில் வெற்றி பெற்று நாடு பெருக்கி ஆண்டனர். அதனால் இவருக்கு "விஜயதரன்" என்ற நாமமும் வந்தது. இவரே கலிங்கத்துப் பரணியின் நாயகர். இவர் மகன் விக்கிரம சோழரும் (1118—1135) அவர்மகன் குலோத்துங்க சோழரும் II (1123—1148) அவர் மகன் இராஜராஜரும் (1148—1171) அவர் மகன் இரண்டாவது இராஜாதி ராஜரும் (1171—1178) ஆவர். அவர் மகனார் மூன்றாவது குலோத்துங்கரு மாவர் (1178—1216). இவர் காலத்திலேதான் கம்பர் விளங்கினார். மூவ ருலாப் பாடிய ஒட்டக்கூத்தர் நீண்ட ஆயுள் படைத்து, விக்கிரம சோழர் I குலோத்துங்க சோழர் II இராஜராஜசோழர் II என்ற மூன்று மன்னர்கள் காலத்திலும் வாழ்ந்தனர். இம்மூவரில் இரண்டாவது குலோத்துங்கச்சோழர் காலத்திலே புகழேந்திப்புலவர் விளங்கினார்.

சேக்கிழார் சுவாமிகள் முதலாவது குலோத்துங்கர் (1073—1118) காலத்து வாழ்ந்தவர் என்ற கொள்கை இதுவரை வலியுற்றிருந்தது. ஆயினும் சாசன ஆராய்ச்சிச்சாலை அதிபர்கள் தற்காலம், சுவாமிகள் அவர் பேரனாகிய இரண்டாம் குலோத்துங்க சோழர் (1123—1148) காலத்தவர் என்றும், அவரே அநபாயர் என்ற பேருடன் விளங்கியவர் என்றும் தலைக்கட்டி மொழிகின்றார்கள். சாசன ஆராய்ச்சி வல்லுநராகிய திரு. சோமசுந்தர தேசிகரவர்கள் "இவ்விரு கொள்கையும் தவறு. கங்கை கொண்ட சோழர் என்ற முதலாவது இராசேந்திர சோழரே இந்த அநபாய ராவர். அவர் காலத்திலே சேக்கிழார் வாழ்ந்தனர்" என்று கருதித் தமது "சைவசிகாமணிகள் இருவர்" என்ற நூலில் வெளியிட்டிருக்கின்றனர். இவைபற்றி மேலே ஆராய்வோம்.

## சூரிய சந்திர வமிசச் சோழர் குடிவழி



கண்டராதித்தர் 953 — (.................)

(.................)

பெரிய இராஜராஜர் (சூ-வ)
(தஞ்சைப் பெரிய கோயில்)
(985—1030)

குந்தவ்வை தேவி (சூ - வ)
=கீழைச் சாளுக்கிய
விமலாதித்தர் (ச - வ)

சயங்கொண்டசோழர்
அல்லது இராசேந்திர
சோழர் I (சூ - வ)
(கங்கைகொண்ட சோளேச்சரம்)
(1030—1045)

வேங்கை மன்னன்
இராச ராசர்
(ச - வ) =அம்மங்காதேவி (சூ - வ)

(ஆண்மக்கள் பலர்)
இராஜேந்திரதேவர்
(சூ - வ)

=மதுராந்தகி (சூ-வ) — இராஜேந்திர சோழர் (சூ - வ)

கலிங்கத்துப் பரணிபாடிய சயங்கொண்டார் இவர் காலத்தவர் } வேங்கை இராஜேந்திரர் II
அல்லது குலோத்துங்கர் I (சூ-வ)
(1073—1118) (ச - வ)
இவரே விஜயதரன்.

ஒட்டக்கூத்தர் இம்மூவர் காலத்திலு மிருந்தவர். (1110) {
விக்கிரமசோழர்
(1118—1136)

குலோத்துங்கர் II
(1123—1148)

இராஜராஜர் II
(1148—1171)
}

{ சேக்கிழார் காலம்
புகழேந்திப்புலவர் இவர் காலத்தி லிருந்தவர் (1130)

கம்பர் இவர் காலத்தவர். — இராஜாதிராஜர்
(1171—1178)

(1150–1185). { குலோத்துங்கர் III
(1178—1216)

இதில், சூ. வ. சூரியவமிசத்தையும், ச. வ. சந்திர வமிசத்தையும் குறிக்கும்.

இந்தக் குடிவழிப் பட்டியிலிருந்து மேலே கூறிய படி 10,11,12-ம் நூற்றாண்டுகளில் சூரிய சந்திர வம்சச் சோழர் குடிமரபின் வரலாறு விளங்கும். இந்த முன்னூறு ஆண்டுகளின் நாட்டுச் சரிதம் அறிந்தால், நமது சேக்கிழார் காலமும், அக்காலத்து நாட்டு நடப்பும், சேக்கிழார் சரித நிகழ்ச்சிகளும், அந்நாட் புலவர் வரலாறும், பிறவும் அறியலாகும். மேலே காட்டியவாறு சோழ அரசாட்சிக்கே யன்றிச் சைவத்திற்கும் தமிழுக்கும் தமிழர் ஆட்சிக்கும் உயர்வு நிலை உள்ள காலம் இதுவே. இராச ராசர் மிகப் புகழ் பெற்றுப் பரக்க நாடாண்டு தஞ்சைப் பெரிய கோயில் கட்டினர். அவர் மகனர் கங்கை கொண்ட சோழர் தமது தந்தையாரைவிடப் பன்மடங் கதிகமாகவே புகழ் பெற்று நாடு பெருக்கிக் கடல் கடந்தும் நாடு வென்றும் அரசாண்டனர். கங்கை பாயும் வங்காள நாட்டையும் வென்று அடிப்படுத்தி ஆண்டமையினல் இவர்க்குக் கங்கை கொண்ட சோழன் என்பது காரணப் பெய ராயிற்று. தந்தையாரைப் போலவே தமது பெயராற் "கங்கை கொண்ட சோளேச்சரம்" என்ற பெருங் கோயில் கட்டினர். இவ்விரண்டு கோயில்களும் கருவூர்த் தேவரால் திருவிசைப்பா பாடப்பெற்றுள்ளன. பெரிய இராசராசதேவரின் சிறிய பாட்டனர் கண்டராதித்தர் திருவிசைப்பாப் பாடியருளிய நாயன்மார்கள் ஒன்பதின்மரில் ஒருவராய் விளங்குகின்ருர். எனவே, இக் குடிதான் மழவிடையார்க்கு வழி வழி யாளாய் வந்த பழஞ் சைவக் குடியாகிய அரச

மரபு என்பது துணிபாம். இந்த மரபுடன் மணஞ் செய் குடியாகிச் சந்திர வமிசமாகிய கீழைச் சாளுக்கிய சோழர் மரபு விளங்கியது. அந்தச் சோழர்கள் தெலுங்க நாட்டிலுள்ள வேங்கையை வென்று அதில் ஆட்சி செலுத்தினுர்கள். இந்த மரபிலே இராஜ ராஜரின் மகளாகிய குந்தவ்வை தேவியையும், கங்கை கொண்ட சோழர் மகள் அம்மங்காதேவியையும், கங்கை கொண்ட சோழர் பேத்தியாகிய (மகன் மகள்) மதுராந்தகி தேவியையும் வழி வழியாக மணஞ்செய்து கொண்டமை தெரிகின்றோம். சூரிய மரபின் நேர் வழியானது கங்கை கொண்ட சோழர் மக்களுடன் மலின மடைந்து போய் விட்டமையால் முதலாவது குலோத்துங்கர் அந்த மரபிற்கும் தாமே முதல்வராய் அந்த அரசாட்சியையுங் கைக்கொண்டு நாடாண்டார். இவர் அவதரித்தவுடன் கங்கை கொண்ட சோழன் தேவி தமது மகள் மகனுகிய இவரைத் தமது கையால் எடுத்துக்கொண்டு தமது சூரிய வமிசத்துக்கும் இவரே புத்திராகவுள்ளவர் என்ற அவயவ அடையாளங் கண்டு அவ்வாறே சூரிய மரபின் மகனுக எடுத்துக் கொண்டார் என்று கலிங்கத்துப்பரணி கூறும். இது காரணம் பற்றியே இவருக்குக் குலோத்துங்கன் என்றும், உபய குலோத்தமன் என்றும், இரவி குலோத்தமன் என்றும், இரு குலத்தோர் மகன் என்றும் பெயர்கள் காணப்பெறுகின்றன. இக்காலத்து வாழ்ந்த பெருந் தமிழ் வாணர்களைப்பற்றி மேலே கூறியுள்ளேன். இந்த அரசர்களிலே விசயதரன் என்ற முதல் குலோத்துங்கர் காலத்திலே சேக்கி

ழார் வாழ்ந்தனரென்பது இதுவரை நிலவிய கொள்கை யாயிருந்தது என்றும் மேலேயே கூறினேன். திரு. செல்வகேசவராய முதலியார் முதலிய பல புலவர் களும் இவ்வாறே கொண்டனர். குலோத்துங்கர் என்ற பேருள்ள சோழர்களிலே மிகக் கீர்த்தி வாய்ந்து விளங் கியவர் இந்த முதல் குலோத்துங்கரே யாதலாலும் பிறவற்ருலும் அவ்வாறு துணிந்தார்கள். ஆனல் இந் நாள் அரசாங்கக் கல்வெட்டுத்துறை ஆராய்ச்சியாளர் களில் திரு. அரங்காச்சாரியர், கிருஷ்ண சாஸ்திரியார் முதலியவர்கள் அவ்வாறன்றிப் பல கல்வெட்டுகளின் உதவிகொண்டு இரண்டாவது குலோத்துங்கரே(1123—1148) அநபாயர் என்று சேக்கிழார் சுவாமிகள் குறிக் கும் அரச ராவார் என்று தலைக் கட்டுகின்றனர். இக் கொள்கை பலவாற்ருலும் பொருந்தியதாகவே காண் கின்றது. பரணியிலே வருகின்ற அவ்வரசர் பெயர்கள் பல்வாயிருக்கவும், அவற்றுள் அநபாயர் என்ற பெயர் வருகின்றதில்லை. ஆனல் அநபாயர் என்பது சேக்கிழார் சுவாமிகள் காலத்தரசருக்கு மிகச் சிறந்த தேற்றப் பெயரா யிருந்ததாகும். அதனல்தான் சேக்கிழார் அவ ரைப்பற்றிச் சொல்லுகின்ற இடங்களிலெல்லாம் பிற பெயர்களைப் போக்கிலே காட்டி அநபாயர் என்ற அப் பெயர் கொண்டே சிறப்பாகச் சுட்டுகின்றனர். ஆதலின் பரணியிற் கூறப்பட்டவராகிய முதல் குலோத்துங்கர் வேறு, சேக்கிழார் கூறுகின்ற அநபாயர் வேறு என்று துணியலாம். இரண்டாவது குலோத்துங்கருக்குத்தான் அநபாயர் என்ற பேர் பெரும்பான்மையாய் வழங்கிய தாகக் காண்கிருேம். முதற் குலோத்துங்கருக்கு அந

பாயர் என்ற பேர் வழங்கியதாகத் தெரியவில்லை. கல்வெட்டுகளில் கிடைக்கும் சில பொருள்களை இனி இங்கே கவனிப்போம்.

மூன்றுவது குலோத்துங்கர் ஆட்சி, 4-வது ஆண்டிலே (1178) குலோத்துங்க சோழ வளநாட்டிலே, குன்றத்தூர் நாடு சேக்கிழார் பாலறுவாயர் களப்பாளர் ஒரு நந்தா விளக்குத் தானம் செய்தமை தெரிகின்றும். (தஞ்சை - 4082 - 4045 - 1912 கோட்டூர்ச் சாசனம்) இந்தப் பாலறுவாயர் சேக்கிழார் சுவாமிகளது தம்பியார் என்று தெரிகின்றது. இந்த சாசனத்தில் வரும் சேக்கிழார் என்பது குடிப்பெயர். பெரியபுராணம் பாடியபின் சேக்கிழார் சுவாமிகள் துறவு பூண்டனர் என்றும், அவருக்குப்பின் அவர் தம்பியார் பாலறுவாயரை அவரது உத்தியோகத்தில் அரசர் அமர்த்திக் கொண்டார் என்றும் அறிந்தோம். அவர் மூன்றுவது குலோத்துங்கர் காலத்தில் வயோதிகராய் வாழ்ந்து இந்தச் சாசனத்திற் கண்ட தானம் செய்தாராதல் வேண்டும். எனவே, இவ்விரு சகோதரர்களும் இரண்டாவது குலோத்துங்கர் காலத்தில் வாழ்ந்தாரென்று கூறுதல் பொருத்தமுடைத்தாம். இக்காரணம் பற்றியே முதல் குலோத்துங்கர் காலத்தில் இவர்கள் வாழ்ந்திருத்தல் கூடாதாகும். தொண்டை நாட்டுக் களத்தூர் திருவானைக் கோயிலில் கண்ட மூன்று சாசனங்களால் மிக முக்கியமான சில பொருள்கள் கிடைக்கின்றன.* இவற்றின்படி சிற்சில நிலங்களை அந்த அரசர் வெவ்வேறுகத் தொகுத்

* இரண்டாவது குலோத்துங்கர் ஆட்சி 12-ம் ஆண்டு 293 நாட் பொறிக்கப் பெற்ற உத்தரவுகள்.

துக் குலோத்துங்கச் சோழன் திருநீற்றுச் சோழனல்லூர் - குலோத்துங்கச் சோழன் திருத்தொண்டத் தொகை நல்லூர் - அநபாய நல்லூர் என்று பேரிட்டுத் தானம் செய்தமை தெரிகின்றோம். இந்த உத்தரவுகளைத் திருமந்திரவோலை (அரசர் காரியதரிசி) உத்தியோகம் பூண்ட அநபாய மூவேந்த வேளான் என்பார் அந்நாட்டுத் தலைவராகிய தொண்டைமான் என்பாருக்குத் தெரிவித்திருக்கின்றார். இவற்றிலிருந்து அநபாயர் என்பது அந்த அரசர் விரும்பி மேற்கொண்ட பெயரென்றும், சேக்கிழார் சரிதப்படி தொண்டைமான் என்று பட்டம் பெற்ற அந்நாட்டுத் தலைவராகிய பாலறுவாயருக்கு இவை உத்திரவிடப்பெற்றனஎன்றும் விளங்குகின்றது. இவ்வரசர் திருத்தொண்டத் தொகையிலேயும் திருநீற்றிலேயும் ஆழ்ந்த பத்தி செய்தார் என்பது அவர் மேற்கொண்ட அப்பெயர்களாலே விளங்கும். இம்முடிபுகள் சேக்கிழார் சரிதத்தாலும் உறுதி பெறுகின்றன. திருவாரூரிலே (269) கல்வெட்டிற் பொறித்த "பூமன்னு பதுமம்"....—என்று தொடங்கும் சாசனம் ஒன்றினால் இரண்டாவது குலோத்துங்கர் சிதம்பரத்தலத்திலே மிகப் பத்தி செய்யும் அநபாயர் என்ற பேருடையார் என்றும், இவர் ஆளுடைய நம்பிகள், பரவையார் நாச்சியார், ஆளுடைய பிள்ளையார், வாகீசர், இசை ஞானியார் இவர்களுக்குத் திருவுருவம் அமைத்துத் தானங்கள் செய்தமையும் தெரிகின்றோம். இசைஞானியார் கமலாபுரத்திலே சிவகோதம கோத்திரத்திலே ஞான சிவாசாரியார் வம்சத்திலே அவதரித்தவர் என்றும் தெரிகின்றோம். அக்காலத்தில் ஒவ்வோர் அரசரும்

தம் காலத்துச் சாசனங்களை வெவ்வேறாக ஒவ்வொரு சொற்றொடர் கொண்ட தொடக்கத்துடன் ஆரம்பித்து எழுதினார்கள். அந்த வகையினைக் கொண்டு "பூமன்னு பதுமம்", "பூமேவிவளர்", "பூமன்னு பாவை" என்ற தொடக்கமுள்ள சாசனங்கள் இரண்டாவது குலோத் துங்கரது காலத்தன என்பது சாசன ஆராய்ச்சி யாளர் களது முடிபு. திருப் புறம்பயம் (1927-350) கல்வெட்டி னாலே விக்கிரம சோழவள நாட்டின் அரசரான குலோத்துங்கர் சிதம்பரம் பேரம்பலம் பொன் வேய்ந்தமை தெரிகின்றது. இந்நாட்டின் பெயர் விக் கிரம சோழ வளநாடு எனப் பெற்றிருப்பதனால் இவ் வரசர் அவர் மகனாகிய இரண்டாவது குலோத்துங்கரே ஆதல் வேண்டும். சிதம்பரம் பொன்வேய்ந்தார் என்று முதல் குலோத்துங்கரும் முதல் விக்கிரமரும் ஆகிய இருவரிடமும் அத்திருப்பணியை ஏன்றேற்றிச் சொல் லக் காண்கின்றோம். முதல் குலோத்துங்கர் சிற்றம் பலம் பொன் வேய்ந்தார். இரண்டாவது குலோத்துங் கரே அதற்கு வேறாகிய பேரம்பலத்தையே பொன் வேய்ந்தார் என்பது மேலே கண்ட கல்வெட்டினா லன் றிப் பெரிய புராணம் "சேயவன் திருப்பேரம்பலம் செய்ய தூய பொன்னணி சோழன், நீடுழிபார் ஆயசீர் அநபா யன்" என்று வரும் செய்யுளாலும் அறிகின்றோம். தமது முன்னோர்கள் உள்ளிடத்தைப் பொன்னாக்கினர். அன்பு மிகுதியால் இவர் வெளியிடத்தைப் பொன்னாக் கியதுடன் திருவீதிகளிலேயும் திருவெல்லையிலேயும் பொன்னாலாகிய திருப்பணிகள் செய்தனர்.

"தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக கியவளவர் போரேறு"
சண்டேசுர நாயனர் புராணம் - 8.

"மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதிப் பணிவிக்கும்
சென்னிநீ டநபாயன்"

என வரும் பெரிய புராணத் திருப்பாட்டுகளும் இங்கே குறிக்கத்தக்கன. இவ்வாறு சாசன ஆராய்ச்சிச் சாலைக்காரர்கள் பல ஆதரவுகளால் இரண்டாவது குலோத்துங்கரே அநபாயர் என்ற பேருடையார் என்றும், பெரிய புராணத்துள் வைக்கப் பெற்றவர் என்றும், அவரது காலமே சேக்கிழார் காலம் என்றும் துணிகின்றார்கள். இனி, மேலே கூறிய இரண்டு கால முடிபுகட்கும் வேருய்ச் சேக்கிழார் கங்கைகொண்ட சோழர் காலத்தவராவர் என்று சாசன ஆராய்ச்சி வல்லுநரான திரு. சோமசுந்தர தேசிகர் "சைவசிகாமணிகள் இருவர்" என்ற நூலில் முடிவு கட்டுகின்றார்கள். இம்முடிபுகள் இனியும் ஆராய்ந்து உறுதிபெற நிற்கின்றன. கங்கைகொண்ட சோழர்கட்டிய கங்கைகொண்ட சோளேச்சரம் கருவூர்த்தேவர் திருவிசைப்பாப்பெற்றது. அதனை உள்ளிட்ட திருவிசைப்பாக்கள் ஒன்பதாவது திருமுறையாக நம்பியாண்டார் நம்பிகள் இராசராசர் காலத்தே வகுத்துப் பதினெரு திருமுறைகள் கண்டனர். அதன் பின்னிட்டு 12-வது திருமுறையாகிய பெரிய புராணம் பாடப்பெற்றுத் திருமுறை பன்னிரண்டு என்று செப்பேடு செய்யப்பெற்றது என்ற வரலாறுகள் நம்பத்தக்கவைகளாயின் கங்கை கொண்ட சோழர் காலத்திலேயே சேக்கிழாரும் வாழ்ந்திருத்தல் கூடுமோ என்பது ஐயம்.

ஆகவே சேக்கிழார் சுவாமிகளை ஆராய்ச்சியாளர்கள் 11,12 நூற்றுண்டுகளில் முறையே நான்கு சோழர்களின் தலை முறையில் வைத்துக் கணிக்கின்றார்கள். இதனுள் நிரைத்தனக் கல்வெட்டுத்துறை ஆசிரியர்கள் கண்ட முடிபுகளே இதுவரை கிடைத்துள்ள ஆதரவுகளின்படி கொள்ளத்தக்கன என்பது அடியேனது துணிபு. இந்தக் கால ஆராய்ச்சியானது அத்துணை முக்கியமன்று என்பதும் என் கருத்து. அதை விடக் காவிய ஆராய்ச்சியே சிறந்ததாகும். ஆதலின் அதனை இம்மட்டோடு நிறுத்தி மேற் செல்வேன்.*

மேலே காட்டிய வகைகளாலே 10,11,12 நூற்றுண்டுகளாகிய 300 ஆண்டுகள் தமிழ் நாட்டு இலக்கிய இலக்கண சமய நிலைகளிலே மிகச் சிறப்பாய் நாம் அறியக்கூடிய காலமாம்.

**நாட்டு நடப்பும் பிறவும்**

சைவப் பேராசிரியர்களாகிய கண்டாதித்தர், கருவூர்த் தேவர், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் சுவாமிகள் என்ற இவர்களும் பிறரும் இக் காலத்தில் வாழ்ந்தனர். வைணவப் பெரியார்களாகிய இராமானுஜரும்(1017—1117)பராசரபட்டரும் (1061) இக்காலத்தவர்களாவர். மத்துவமத ஆசாரியாராகிய மத்துவாசாரியார் (1110) இக்காலத்தேதான் வாழ்ந்தனர். சமண ஆசிரியர்களிலே அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியரும் (1113) நன்னூ லியற்றிய பவணந்தி முனிவரும் (12?7) குணவீர பண்டிதர், குணசாகரர்,

---

* இதுபற்றி இன்னும் விரிவாகத் தெரியவேண்டின் 'செந்தமிழ்ச்செல்வி' சிலம்பு 9 பரல் 6, ப. 295; சிலம்பு 10 பரல் 3, ப. 132; பரல் 6, ப. 266 பார்க்க.

அமிர்த சாகரர் முதலியோரும் இக்காலத்தே வாழ்ந்தவ ராவர்.

சமணசமயம் இக்காலத்தும் இதற்கடுத்து முன் ஏறக்குறைய 500 ஆண்டுகளிலும் தென்னாடாகிய தமிழ் நாட்டில் வலிமை பெற்றிருந்தது. நீண்ட காலத்துக்கு முன் விளங்கிய சங்க நூல்களையும் சங்கப் புலவர்களாக விளங்கிய சமண ஆசிரியர்களையும் விடுத்து 6,7-ம் நூற் றாண்டுகளிலேயே பார்த்தால் சமணசமய ஆதிக்கம் மிகுந்து மக்களிடையே பரவியிருந்தது. நடுநாட்டை அரசாண்ட குணபரன் என்ற பல்லவ அரசன் சமண சமயத்தைத் தழுவியிருந்து பின் சைவனானது அப்பர் சுவாமிகள் சரிதத்திலே கேட்கிறோம். இச்சரிதம் திருச் சிராப்பள்ளிக் கல்வெட்டினால் உறுதி பெறுகின்றது. சோழநாட்டிலே சமணசமயம் பரவிச் சைவர்களுடன் போராடி நின்றதைத் தண்டியடிகள் நாயனார் புராணத் திலே காண்கிறோம். பாண்டிநாட்டிலே கூன்பாண்டியர் சமணராயிருந்து பின்னர்ச் சைவராகி நின்றசீர் நெடு மாற நாயனாராயினமை சம்பந்த சுவாமிகள் சரிதத்தால் அறிகின்றோம். இதன் பின்னும் 8,9 நூற்றாண்டுகளிலே சமணஆசிரியர்கள் முயற்சிகள் பெரிதும் காண்கின்றோம். இக்காலத்தேதான் "கொங்குவேள் மாக்கதை"— சூளாமணி—நீலகேசி, யசோதர காவியம்—சிந்தாமணி முதலிய காவியங்களும், அறநெறிச் சாரம் முதலிய நீதி நூல்களும் இயற்றப்பெற்றன என்று தெரிகின்றது. மேலே நாம் குறித்துக்கொண்ட 10, 11, 12. நூற் றாண்டுகளாகிய காலத்திலோ வென்றால், வீரசோழியம், நேமிநாதம், வச்சணந்திமாலை, யாப்பருங்கலக் காரிகை,

திவாகரம், பிங்கலந்தை முதலியன இயற்றப் பெற்றன. அடியார்க்கு நல்லாரது அரிய உரைகளும் இக்காலத்தே இயற்றப் பெற்றமை மேலே குறித்தோம். ஆனால் இதனோடு சமணர்களது மேனிலை நின்று விடுகின்றதில்லை. இதனடுத்த 2-3 நூற்றுண்டுகளிலேயும் அவர்கள் விளங்கி நன்னூல், நம்பியகப் பொருள், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களை இயற்றினார்கள். மயிலை நாதர் காலமும் இதுவே.

எனவே, சமணர்களது இலக்கிய முதலிய கலைஞான மேம்பாடானது தமிழ் நாட்டில் விளங்கி நின்றகாலம் நாம் மேலே காட்டிய மூன்று நூற்றுண்டுகளாகும். ஒன்பதாவது நூற்றுண்டிலே எழுதப் பெற்றிருந்தபோதிலும் இந்நாளிலுங் கூடப் பெரும்பஞ்ச காவியங்களிலே முதன்மையாய் வைத்து எண்ணிப் பாராட்டப் படுவதாய்ச் சீவகசிந்தாமணி விளங்குமானால் அஃதியற்றப் பெற்ற காலத்திற்கு அடுத்த இரு நூறு ஆண்டுகளில் அது தமிழ் மக்களின் மனதை மிகக் கவர்ந்திருந்தது என்பது வெளிப்படை. தமிழ் நாடு மட்டுமல்ல. அதனைச் சுற்றியிருந்த கன்னடம் தெலுங்கு நாடுகளிலும் இதுவே நிலைமையா யிருந்தது.

தெலுங்கு நாட்டிற் படையெடுத்து இராசேந்திரர் என்ற சயங்கொண்டசோழர் (1030)வேங்கை நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதற்கு முன்னெல்லாம் தெலுங்கு நாட்டரசர்கள் அனைவரும் சமணர்களேயாம். இராசேந்திரர் வேங்கையைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரியத் தொடங்கியபின் அரசாங்க உதவிகளை இழந்து விட்டமையாலே சமணர்கள் அடுத்துள்ள கன்னட நாட்டிலே

குடியேறி அந்நாட்டு மொழி பயின்று அம்மொழியிலே தங்கள் நூல்களை எழுதிவந்தார்கள்.

இராசேந்திரர் ஆதரவில் இராமாயணத்தைத் தெலுங்கு மொழியில் ஒரு பிராமணர் இயற்றினார். அதே காலத்தில் இராமாயணத்தைக் கன்னடத்தில் ஒரு சைனப்புலவர் எழுதியதையும் காண்கிறோம். பதினோராவது நூற்றாண்டிலே சோழர் வெற்றியின்பின் தெலுங்க நாட்டிலே குறைந்துபோன சைன ஆதிக்கமானது கன்னட தேசத்தில் அதன் பின்னரும் ஒரு நூறு ஆண்டுகள் வரை உயிருடனிருந்துகொண்டு வந்தது. ஆனால் தமிழ் நாட்டிலோ வென்றால் அரசாங்க உதவியில்லாமலேயே அதற்கு மேலும் 300-400 ஆண்டுகள் அதாவது 1500-1600வது ஆண்டு வரை சமணர் தொடர்பு நிலவுவதாயிற்று. இதனாலே தமிழ் மக்களின் உதார குணத்தின் மேன்மையே விளங்குவதென்போம்.

கன்னட நாட்டிலேயும் பார்த்தால் 12-வது நூற்றாண்டுக்கு முற்பட்ட புலவர்கள் யாவரும் சைனர்களே. 10-வது நூற்றாண்டிற்கு முன்னே தலைக்காட்டிலே வாழ்ந்த கங்கர்களும் மராட்டிரத்தின் வடக்கிலே நின்ற இராட்டிர கூடர்கள், கால சூரியர்கள், மராட்டியர்களிலே முன்பகுதி யாதவர்கள், துவார சமுத்திரத்திலே வாழ்ந்த ஆய்சல்லியர்கள் ஆகிய இவர்களெல்லாம் சைன வமிசத்தவர்களே யாவர். சைனக் கவிவாணர்கள் கன்னட அரசர்களின் ஆதரவைப் பெரிதும் பெற்றிருந்தார்கள். பதினோராவது நூற்றாண்டு முதல் கன்னடத்திலே சமணத்தின் மேல் நிலை குறையத் ஆரம்பித்தது. முழுதும் தீர்வதற்கு 200 ஆண்டுகள் சென்றன.

இவ்வாறு தமிழ் நாட்டிலே சமண ஆதிக்கம் குறைவதற்குச் சைவ வைணவ சமயாசாரியர்கள் காரணர்களாயிருந்தது போலத் தெலுங்கு கன்னட நாடுகளிலே அது குறையக் காரணமாயிருந்தது சங்கராசாரியாரின் (750) வருகையும், சோழர் (1100) வெற்றியும், வீர சைவ வசவேசரது (1150) இலிங்கமதம் பரவுதலும், இராமாநுசர் மேல்கோட்டைக்குச் சென்றமையும், மத்துவாசாரியர் (1110) வருகையுமேயாம். வடநாட்டின் நிலையும் இதுவே. வடக்கிலிருந்து வீர சைவ சமயம் பரவித் தென்னாட்டிற்கு வந்தது.

சைனப் புலவர்கள் கலைஞானங்களிலே மிக வல்லவர்கள்; பெரும் புலமையும் அறிவாற்றல்களும் வாய்ந்தவர்கள். இவற்றோடு தங்கள் சமயப் பற்று மிகவும் வாய்ந்து அதனைப் பரப்புவதிலேயே மிக ஊக்கம் வைத்துக் கண்ணுங் கருத்துமாய்ப் பிடிவாதமாய் உழைத்தவர்கள்.

"புல்லறிவோ ராஞ்சிறிய புட்குலத்தை யுட்படுத்த
மெல்லியராங் கண்ணிபல மேவுவித்தும்—வல்லகல்விச்
சாலையென்று சொல்பஞ் சரமமைத்துங் கைக்கூலி
வேலையென்று சொல்லும்வலை மேல்விரித்தும்—மூலைதொறும்
பண்ணுமுப தேசப் பயில்குரலிற் கூவுவித்தும்
உண்ணுபல பண்டமெனும் ஒட்டுவைத்தும்—மண்ணவரைச்
சேர்த்துத் திரட்டவல்ல செய்கையெலாஞ் செய்தக்காற்
போர்த்துமந்தக் கூட்டம் பெருகாதோ........."

—திருப்பேரூர்க் கிள்ளைவிடு தூது (423-426) கண்ணிகள்.

என்றபடி தற்காலமுள்ள கிறித்தவப் பாதிரிமார்கள் முக்கியமாய்க் கல்வியை பரப்புவதன்மூலம் சமய நோக்கத்தை உள்ளீடாக வைத்து எவ்வாறு தங்கள் சமயத்

த்தை விடாப்பிடியாய்ப் பல வழிகளிலும் பரவச்செய்து வரக்காண்கின்றோமோ*, அதுபோலவே ஜைன ஆசிரியர்களும் தாங்கள் இயற்றிய இலக்கண இலக்கிய நீதி நூல்களின் மூலம் தம் சமயத்தைப் பரவச் செய்து வந்தார்கள்.

ஆகவே, பன்னிரண்டாவது நூற்றாண்டின் தொடக்கத்திலே வாழ்ந்த நமது அநபாயர் ஆட்சிக் காலத்திலே சுற்றுமுற்றும் எங்கே பார்த்தாலும் தமிழ்நாட்டிலும் சரி, கன்னட தெலுங்க நாடுகளிலும் சரி, வடநாட்டிலும் சரி, எங்கும் சமணர் மேனிலை; எங்கும் சமணர்களின் பரப்பு; எங்கும் சமண நூல்கள்; அவற்றின் மூலம் எங்கும் சமண சமயப் பரப்பு என்றிருந்தன. அதனாலே அநபாயர் அரசு சமூகமும் சீவக சிந்தாமணியைப் பாராட்டிற்று; அதிலே மகிழ் சிறந்தது; என்ற சரிதம்

* "கிறிஸ்துவ குருமார் இதுவே சமயமென்று நினைந்து அனேகரைக் கிறிஸ்தவராக்கத் தொடங்கினார்கள். பள்ளிக்கூடங்களை வைத்துப் பிழைப்புக்கேற்ற இங்கிலிசுப் பாஷையை உத்தியோகம் வாங்கித் தருவோம் என்று சொல்லிப் படிப்பித்துப் பலரைக் கிறிஸ்தவராக்கினார்கள்; சிலரைச் சோறு சீலை கொடுத்துக் கிறிஸ்தவராக்கினார்கள்; சிலரைக் கலியாணச் செலவு கொடுத்துக் கிறிஸ்தவராக்கினார்கள்; கீழ்ச்சாதியாயுள்ளவர்கள் சிலரை மேற் சாதியாரோடு சமமாயிருக்கச் செய்வோமென்று சொல்லிக் கிறிஸ்தவராக்கினார்கள்; சைவ சமயத்தை மிக இகழ்ந்து பிரசங்கங்களும் செய்தார்கள்; பத்திரிகைகளும் எழுதிப் பரப்பினார்கள்; யாழ்ப்பாணத்தை முழுதும் பிடித்து விட்டோமென்று ஊதுதற்கு வெற்றிச் சங்கைக் கையில் எடுத்தார்கள்" ஆறுமுக நாவலர் சரித்திரம்: இரண்டாம் பதிப்பு பக்சம் (2) இதனையும் காண்க.

நாற்புறமும் நாட்டு நடப்புகளினால் வலியுறுத்தப் பெறு கின்றது.

மேற்காட்டிய அரசமரபு விளக்கத்திலேயும், நாட்டு நடப்பின் சரித விளக்கத்திலேயும் கோவை வழக்கறிஞரும் சாசன சரித்திரவாராய்ச்சி வல்லுநரும் ஆகிய எனது நண்பர் திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. எ., பி. எல். அவர்கள் எனக்குச் செய்து தந்த உதவிகள் மிகப்பெரியன. அவர்க்கு எனது கடமைப் பாடுடைய நன்றி உரியதாகும்.

**சிந்தாமணிக்கு மாறகச் சேக்கிழார் புராணம் செய்தமை**

அநபாயர் அரசசமூகம் சிந்தாமணியிலே மகிழ்ந்து கிடந்தது. அதுகண்டு அமைச்சர் சேக்கிழார், அரசரை "இது இம்மைக்கு மாகாது; மறுமைக்கு மாகாது" என்று தெருட்டினர். ஆயின் 'இம்மைக்கும் மறுமைக்கும்ஆகும்கதை எது?' என்று அரசர் கேட்கவே, 'அது சிவகதையே' என்றுசொல்லி அமைச்சர் சேக்கிழார், இப்புராணக் கதைகளைச் சொன்னர். அரசன் வேண்ட அமைச்சரே ஆசிரியராகிப் பெரிய புராணம் பாடினர் என்ற வரலாறு மேலே கண்டோம். "ஒன்றினைக் கண்டு மாறுபட்டு நிற்பது சைவர்க்கு அழகாகுமோ ? மாறுபாடுகொண்டு இயற்றப்பட்டதும் உத்தம மாகுமோ?" என்று சிலர் கூறலாம். ஆனல் மக்கள் மனதை மாறுபடுத்திச் சிற்றின்ப வசத்திலே ஆழ்த்தி வைப்பதுமன்றிப் புறச் சமயத்திலேயும் ஆழ்த்திப் பிறழ்ந்த வுணர்ச்சி யுண்டாக்கி நிற்பதாகிய ஒரு செயல் கண்டால், அதனைத் திருத்தி உண்மைப்பொருள் காணும்படி செய்து மக்களைத் தெருட்டுதல் சைவ நன்

மக்கள் கடமையே யாகும். இதுவே சைவநூல் விதி. அன்றியும் தம் சமயப் பாதுகாவலின் வழியேயும் தற்காப்புக்காகச் சைவர்கள் இது செய்யக்கடமைப்பட்டுள்ளார்கள். மேலே காட்டிய நாட்டு நடப்புச் சரிதத்தை விரிவாக நாம் உணர்வோமாயின் எமது செந்தமிழ்ச் சைவப் பரமாசாரிய மூர்த்திகளாகிய சம்பந்த மூர்த்திகள், மாணிக்கவாசகமூர்த்திகள், அப்பமூர்த்திகள், சுந்தர மூர்த்திகள், சேக்கிழார் மூர்த்திகள் முதலிய பெரியோர் தத்தம் புனித வாழ்க்கையிலே இவையிவை செய்யாதிருந்தார்களாயின் நமக்குச் சைவமும், சைவ நூலும், சைவச் செந்தமிழும் இன்றைக்கும் ஒன்றும் கிடைக்கமாட்டா என்பது துணிபு. மேலும் அரசர் தவறுசெய்யக் கண்டபோது இடித்துக்கூறி நல்வழிப் படுத்தல் அமைச்சராகிய சேக்கிழார் பெருமானின் அரசாங்கக் கடமைகளில் ஒன்றுகும் என்பது நீதிநூல். ஆகவே மாறுபாடாகிய எண்ணம் பற்றியேனும் பொருமை கோபம் முதலிய தீக்குணம் பற்றியேனும் நமது தூய பெரியபுராணம் இயற்றப் பெறவில்லை என்பது விளங்கும். இது அரசர்மேலும் ஏனைய ஆன்மாக்கள் மேலும் வைத்த பெருங் கருணையினலே மக்களை நல்வழிப்படுத்தி உய்விக்க வல்ல பத்தி வழியைப் போதித் தற்பொட்டுச் செய்யப்பெற்றதாதலால் மேலே குறித்த ஆசங்கைகள் நிகழ இடமின்றி ஒழிகின்றது காணலாம்.

பெரியபுராண மியற்றக் காரணராயிருந்த அநபாயர் பெருமையைப்பற்றிச் சில வார்த்தைகள் பேசுவோம். சிந்தாமணியிலே தாழ்ந்தமை பற்றிச் சேக்கிழார்

அவரை இடித்துக் கூறித்தெருட்டினார். நாம் அதுபற்றி

**அநபாயர் பெருமை**

அவரை வாழ்த்துவோம். என்னை? அவர் அவ்வாறு தாழ்ந்திராவிட்டால் நமக்குப் பெரியபுராணமாகிய செந்தமிழ்ச் சைவச் சேமநிதி கிடைத்திராதன்றோ! அநபாயர் கலைஞான விநோதராக இருந்தார். புலவர்களிடத்தேயன்றி அவர் சிவபெருமானிடத்தும் அடியார்களிடத்தும் பேரன்பு பூண்டு விளங்கினாரென்றும் தூயமனமுடையாரென்றும் தெரிகின்றோம். பேரம்பலம் பொன் வேய்ந்தமையும் திருத்தில்லைத் திருவெல்லையும் திருவீதியும் பொற்பணிகள் செய்தமையும் அவரது அன்பினைக் காட்டுகின்றன. பெரிய புராணமேயன்றித் திருவாரூர்க் கல்வெட்டு முதலியனவும் இதற்குச் சான்று பகர்கின்றன. பல தலங்கள் கண்டார். பல தலங்கட்குப் பல தானங்கள் செய்தார். அவரது மனதைத் திருக்கைலாய மலைக்கு உவமானப் பொருளாகச் சேக்கிழார் எடுத்துரைக்கிறார்.

"திருமனத் தோங்கும் திருக்கயிலாயநீள் சிலம்பு"

திருமனம்போல ஓங்கும் திருக்கைலாயம் என்பதாம். அதாவது கைலையிற் போலவே இவர் மனதிற் சிவபெருமான் எப்பொழுதும் நீங்காது விரும்பி விளங்க வீற்றிருக்கின்றார் என்பது கருத்தாம். அன்றியும் அது போலவே பெருமையும் தூய்மையும் பெற்றதாம் என்பதும் காண்போம். அநபாயர் சூரியகுலச் சோழர் வழி வந்தவர் என்பதும், இமயத்திலே புது வழி உண்டாக்கியதைப் பாதுகாத்து அயல் நாட்டாரினால் வரும் துன்பத்தை வராமற் காத்தமையும் தெரிகின்றோம். நீதி

தவறாது அறநெறியிலே செங்கோல்செலுத்திப் பல அரசர்க்கும் அரசராய் விளங்கினார் என்றும் காண்கிறோம். கருவூர், சேய்ஞலூர். உறையூர், காவிரிப்பூம் பட்டினம், திருவாரூர் என்ற ஐந்து ஊர்களிலே வைத்துத் தான் முடி சூட்டிக்கொள்வது இவரது அரச மரபு வழக்கம் என்பதும் அறிகின்றோம்.* அநபாயர் தமிழிலே வைத்த ஆர்வமே நமக்குப் பெரிய புராணத்தைத் தந்தது. அவரது தமிழ் ஆர்வத்தை விடத் தமிழுலகையும் சைவவுலகையும் ஈடேற்ற வல்ல அமைச்சரின் ஆற்றல் பெரிது. இத்தகைய அரசும் அமைச்சும் பொருந்தக் கூட்டிய திருவருள் எவற்றினும் பெரிது.

**சைவ மக்கள் கடமை**

சேக்கிழார் வாழ்ந்த வீட்டிடத்தே கட்டப்பெற்ற அவரது சிறு ஆலயத்தையும், அதன் சுற்றிடத்தையும், அவர் கட்டிய திருநாகேச்சுரத் திருக்கோயிலையும், அவர் தம்பியார் கண்ட பாலறாவாயர் கேணியையும், அவரது சரிதப் பிற பௌதிக அடையாளங்களையும் பாதுகாத்துப் பரிபாலிப்பது சைவநன்மக்கள் தமிழ் நன்மக்களின் பெருங்கடமையும் பெருஞ் சிவபுண்ணியமுமாம். அவரது ஞான அடையாளமாகிய பெரிய புராணத்தைப் பயில்வதும் பயில்விப்பதும் தூர்த்த மாக்களின் கவர்ச்சியிலிருந்து பாதுகாத்துப் பரிபாலிப்பதும்

* நமது மன்னர் பெருமானாகிய மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னரும் தமது ஊரினின்றும் ஆறாயிரம் நாழி வழி கடல் கடந்து நம் நாட்டிற்கு வந்து டில்லி என்கிற இந்திரப்பிரத்த நகரத்திலே முடி சூட்டிக்கொண்டமை இங்கே குறிக்கப்பாலதாம்.

அவற்றினும் பெரிய தமிழ்த் தொண்டும் சிவபுண்ணியமுமாம். ஒருக்கால் பெரியபுராணப் பிரதிகளே எங்கும் கிடைக்காவிடினும் அதனை முழுதும் நினைவிலிருந்தே சொல்ல வல்ல தமிழ் மக்களை உண்டாக்கி வளர்ப்பது பெரும் புண்ணியமாகும். தமிழ் மக்களும் சைவ நன்மக்களும் இதனை நாடோறும் தவறாது பயில்வாராக. அதனிற் பெறும் தவவொழுக்கங்களைக் கைக்கொண்டு வளரச் செய்வார்களாக.

**பெரிய புராணத்தின் அமைப்பும் காவிய நிலையும்**

பெரிய புராணம் பாடிய வரலாறு உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் நமக்கு உபகரிக்கப் பெற்றதாம். பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் வாழ்ந்து பன்னிரண்டாந் திருமுறை யியற்றி யருளிய சேக்கிழார்சுவாமிகளுக்குப் பதினான்காம் நூற்றாண் டளவிலே வாழ்ந்து சித்தாந்த சாத்திரம் பதினான்கிலே எட்டுச் சாத்திரங்கள் இயற்றியருளிய சந்தானசாரியாராகிய உமாபதியார் சரிதம் இயற்றுதலும் கடவுட் டிருவருட் சம்பந்தமான ஒரு குறிப்பாகும். உமாபதியார் பதினான்காம் நூற்றாண்டிலே வாழ்ந்தமை அவரது சங்கல்ப நிராகரணம் "எழுஞ் சிறுநூ றெடுத்த ஆயிரம் வாழு நற்சகம்" (அதாவது சகம் 1235க்கு கி. பி. 1313) என்றதிற் காண்க. தமிழ்ப் புலவர் தம் சரிதங்களைத் தாங்களே எழுதிக் கொள்வதில்லை. பிறரும் அவற்றை விரிவாய் விளங்கத் தீட்டினாரில்லை. ஆயின் இவ்வாறு ஆதாரவுடன் நம்பத்தக்க வகையிலே பழமையாகச் சரிதம் பெற்ற பெருமை தமிழ்ப் புலவர்களுக்குள்ளே நமது சேக்கிழார்க்கே உரியது.

பெரிய புராணத்தைத் தனித் தனி பற்பல சரிதங்கள் கோர்த்த கோவை என்று சிலர் கருதுகிருர்கள். அது தவறு. பெரியபுராணமானது தொடர் நிலைச் செய்யுளாய் ஒரு பழஞ் சரிதத்தைச் சொல்வதாய் ஒரு பெரிய உள்ளீடாகிய கற்பனையை எடுத்துக் காட்டுவதாயுள்ள ஒரு பெருங்காவியமே யாகும்.

என்னை? ஆலால சுந்தரர் என்ற பெரியார் திருக்கயிலாய மலையிலிருந்து மாதவம் செய்த தென்திசை வாழவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரவும் ஆக இரண்டு பெருங் காரியங்கள் நிகழ்தற் பொருட்டுக் கமலினி, அநிந்திதை என்ற இரு சேடிமாருடன் பூவுலகத்திலே திருவருள் வழியே அவதரித்தார். ஆலால சுந்தரரே வன்ஞெண்டராகிய சுந்தர மூர்த்திகளாம். கமலினியாரே பரவை நாச்சியாரும், அநிந்திதையாரே சங்கிலியாரும் ஆவர். இவர்கள் திருவவதரித்து முறையே திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் சுந்தர மூர்த்திகளை மணந்துகொண்டனர். திருவாரூரிலே தியாகேசப் பெருமானுர்,

"தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

என்று அடியெடுத்துக் கொடுத்து அருளப் பெற்ற திருத்தொண்டத் தொகை பாடித் தலங்கள் தோறும் சென்று தரிசித்துப் பதிகம் பாடிப் பல அற்புதங்கள் நிகழ்த்தியமையாலே மாதவம்செய்த தென்திசை வாழ்வடைந்தது. தாம் வந்த காரியம் முற்றியவுடன் பரமசிவன் ஆணையின்படி அவர் அனுப்பியருளிய வெள்ளை யானையை மேல்கொண்டு இந்திரன் மால் பிரமன் முதலிய தேவர்கள் எதிர்கொண்டழைக்கச் சுந்தர மூர்த்திகள்

மீண்டும் கயிலாயத்திற்கு எழுந்தருளினர். அவருடன் அவர் தோழராகிய சேரமான் பெருமாளும் சென்ற னர். இவர்கள் வரவின் காட்சியே பேரொளியாய் ஆயி ரம் ஞாயிற்று ஒளிபோலத் தூரத்தே தோன்றிற்று. இதனைக் கயிலைச் சாரலில் பல முனிவர்கள் சூழத் தவம் செய்துகொண்டிருந்த உபமன்னிய மாமுனிவர் கண்டு எழுந்து கை கூப்பித்தொழுதார். 'இது என்ன ஆச்சரி யம்'! என்று சூழ இருந்த முனிவர்கள் கேட்க, இந்த வர லாறுகளை உபமன்னிய முனிவர் அவர்கட்குச் சொன் ஞர். இச்சரித நிகழ்ச்சியை விரித்துக் கூறுகின்ற வகையி ஞலே திருத்தொண்டத் தொகையிலே சுந்தரமூர்த்தி களால் துதிக்கப் பெற்ற அடியார்களது வரலாறும் உப அங்கங்களாக அங்கங்கே வந்து பொருந்தப் பெற்றன. திருமலைச் சருக்கத்திலே தொடங்கப் பெற்றுக் கயிலையி லிருந்து பூவுலகிற் போந்த சுந்தரமூர்த்திகள் சரிதம், வெள்ளை யானைச் சருக்கத்திலே மீண்டும் அவர் கயி லைக்கு வெள்ளை யானையின்மீது எழுந்தருளும் வரலாற் ருேடு நிறைவேறுகின்றது. சுந்தரமூர்த்திகளே இந் தப் பெருங் காப்பியத்துக்கு நாயகராவர். அவரே பாட்டுடைத் தலைவர். பரவையாரும் சங்கிலியாரும் தலைவியர்கள். திருத்தொண்டத் தொகை பிறந்ததும், பரவையார் காதல் மணம் நிகழ்ந்ததும் ஆகிய சோழ நாடும் திருவாரூருமே இப்பெருங் காப்பியத்திற்கு நாடும் நகருமாகும். சிவபத்தி அடியார் பத்தி என்ற இரு பகுதியினதாகிய அன்பே இக்காவியத்தின் உள் ளுறையாகிய கற்பனை. இதனை ஆதியிற் சொன்னவர் உபமன்னிய மாமுனிவர். கேட்டார் சூழவிருந்த முனி

வர்கள். நிகழ்ச்சிக் களன் திருக்கயிலாய மலைச்சாரல். இக்காவியத்திற்கு முதனூல் முதல்வன் அருளிய மொழிபற்றிச் சுந்தரமூர்த்திகள் அருளிய திருத்தொண்டத் தொகையே யாகும். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய கலித்துறை அந்தாதியே வழிநூலாகும். இவற்றிற்கு விரிநூல் பெரிய புராண மாகும்.

> "தூக்கு சீர்த் திருத் தொண்டத் தொகைவிரி
> வாக்கினற் சொல்ல வல்ல பிரான்"

என்பது மாதவச் சிவஞான சுவாமிகள் திருவாக்காம்.

உபமன்னிய மாமுனிவர் தொடர்பு பற்றிய சரித வரலாற்றினை,இந்நாள் சில நவீன ஆராய்ச்சியாளர் ஐயங் கொள்கின்றனர். அந்த ஐயப்பாட்டிற்குப் போதிய ஆதாரவுகள் கிடையா. இவ்வரலாற்றினைச் சேக்கிழார் திருவாக்காகவே கொண்டு ஆன்றோர் இதனைக் கைக் கொள்வர் என்பது துணிபாம்.

# II

## இரண்டாம் நாட் பிரசங்கம்

### பெரிய புராணமும் அதன் கலைஞானங்களும்

முன் பிரசங்கத்திலே பெரிய புராணம் இயற்றிய வரலாறும், புராண ஆசிரியர் சரித வரலாறும், அவர் கால முதலிய ஆராய்ச்சிகளும், புராணம் இயற்றுவித்த அநபாயச் சோழர் வரலாறுகளும், புராண அமைப்பும், அது பெருங்காவிய மாகும் வரலாறும், பிறவும் பற்றிச் சில பேசினேன்.

இனிப் புராணத்தினுள்ளே புகுந்து, அது கால நிலைக்கேற்ப உலகத்தார்க்கு இவ்வுலக நிலையிலேயும், உயிர்த்தன்மையில் வைத்து மேலுலக நிலையிலேயும் பயன் செய்யும் தன்மைகளைப் பற்றி இயன்றவரை பேசப்புகுவேன். முதலிற் பேசுவது அதனாற் கிடைக்கும் இவ்வுலக வாழ்க்கைப் பயனேயாம். அதனையே பெரிய புராணமும் அதன் கலைஞானங்களும் என்ற தலைப்பின்கீழ்ப் பேச எண்ணினேன்.

என்னை? மனிதர்களாலே கற்கப் பெறுவனவும், அவற்றால் மனிதர் பயிற்சி பெற்று உலகிலே உயர்வடைவனவும் ஆகிய ஞானங்களே நமது முன்னோர்களால் கலைஞானங்கள் என்று தொகுக்கப்பெற்றன. இவை எந்தமட்டில் பெரிய புராணத்திலே நாம் கிடைக்கக் காண்கின்றோம் என்று சில உதாரணங்கள் கொண்டு இன்றைய நாட் பேச்சிலே ஆராய்வேன்.

இனி, மேலுலக வாழ்க்கையில் உயிர்க்கு அது எம் மட்டில் பயன் செய்கிறதென்பதைக் 'கலைச் சிறப்பும் பயனும்' என்ற தலைப்பின் கீழ்ப் பேசுவேன்.

கற்கப் பெறுவன எல்லாம் கலைகள். அவற்றால் உளவாகும் அறிவு கலைஞானம். அவ்வறிவினால் உள தாகும் பயிற்சியின் தரம் எவ்வளவோ அவ்வளவே மக் களின் உயர்வும் தாழ்வும் கணிக்கப்பெறும். இந்தக் கலை ஞானங்களை நமது பெரியோர் 64 என்று வகுத்திருக் கின்றார்கள். இவைகளே மனிதர்க்கு இவ்வுலக அறிவை யும் உலக மேன்மைகளையும் கொடுக்கின்றன. இவற் றாலே உலகம் நடைபெறுகின்றது.

"பண்ணோடு மெண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனை"

"கலையாகிக் கலைஞானந் தானே யாகி"

என்பனவாதி திருவாக்குகளால் அப்பர்சுவாமிகள் இவற் றைச் சிறப்பித்துள்ளார்கள். கலைகள் யாவும் அறிவு உருவமாகையினாலே கடவுளே கலைகளாவார். கலைஞான மும் அவரேயாவார். மாணிக்கவாசக சுவாமிகள் பதி னாறுவது வயதிலே 64 கலைகளையும் பயின்று மேம்பட்டு விளங்கினமையினாலே அரிமர்த்தன பாண்டியர் அவரை அழைத்துக் கண்டு சிறப்புச் செய்து "தென்னவன் பிரம ராயன்" என்ற பட்டமும் கொடுத்து அவரைத் தமது முதன் மந்திரியாக அமைத்துக்கொண்டார் என்று சரி தங் கூறுகின்றது. "பார்வாய் எண்ணெண் கலையும் பதினாறுண்டினிற் பயின்றார்" என்பது அவர் புராணம். பிரமம் என்றால் ஞானம். பிரமராயன் என்பது ஞானத்

தின் அரசன் எனப் பொருள் தரும். எனவே, 64 கலைகளே ஞானத்திற்கு ஏதுவாயின என்று நம் பெரியோர் கண்டனர். இவற்றை இளமையிலே பயிலவேண்டுமென்பதும் நமது முன்னோர்கள் கருத்தாம்.

இந்தக் கலைகளை அக்காலக்கலாம் முதல், அவத்தைப் பிரயோகம் ஈறாக 64 ஆக நம் பெரியோர் வகைப்படுத்தியுள்ளார்கள்.

கலைஞானங்களே உலக உயர்வைத் தருகின்றன; அதல்லாமல் உலகத்தையும் உடலையும் அறிதற்கு உபகாரம் செய்கின்றன; உயிரைப்பற்றி அறிய உதவுகின்றன; ஒருவகையால் உயிர் உடம்பிலேயும், உடம்பு மூலம் உலகிலேயும் தங்குகின்ற அளவிற்கு அறியவும் உதவி செய்கின்றன. இவ்வறிவின் ஏற்றமே மக்களுக்கு நாகரிக மேம்பாட்டைத் தருகின்றது என்று சொல்லலாம். இந்தக் கலைஞானங்கள் அறுபத்து நான்கினையும் பகுத்துப் பார்ப்போமாயின் அவை மக்களின் உடலின்ப வாழ்விற்கு வேண்டி யிருக்கும் வைத்தியம் முதலியனவும், சமூகப் பெருவாழ்விற்கு வேண்டிய இலக்கணம், இலிகிதம், தருமம், நீதி, மதுர பாடணம் முதலியனவும், சமூக வாழ்க்கையின் இந்திரிய இன்பங்களுக்கு வேண்டிய நாடகம், வீணை, குழல் முதலியனவும், பொருளாதாரத்திற்கு வேண்டிய பூமிப்பரீட்சை முதலியனவும், நாடுகாவல், தற்காப்பு இவைகட்கு வேண்டிய மல்யுத்தம், அசுவப் பரீட்சை, கட்கத்தம்பனம் முதலியனவும், உலக மேனிலைக்கு வேண்டிய சலத்தம்பனம், ஆகாயகமனம் முதலியனவும், பிறசெந்துக்களுடன் வாழ்வதற்கு வேண்டிய பைபீலவாதம் முதலி

யனவும் ஆக இவை வகுக்கப்பெற்றன என்பது காண லாம். தமிழ்மக்கள் முற்காலத்திலே இந்தக்கலைஞானங் களிலே எவ்வெவ்வளவு மேம்பட்டிருந்தனர் என்று காண்போமாகில் அவ்வவ்வளவே அவர்களது முற்கால உயர்வு வெளிப்படும். இதுவே அவர்களது நாகரிக உயர்ச் சியையுங் காட்டும். தமிழ் மக்களது முற்கால நாகரிகத் தைப்பற்றிய ஆராய்ச்சியின் பொருட்டே சென்னைச்சர்வ கலாசாலைச் சங்கத்தார் இந்தச் சொற் பொழிவுகளைத் திட்டம் செய்து நிர்மாணித் துள்ளார்கள் என்று உணர் கின்றேன். ஆதலின், கலை ஞானங்களின் பகுதியிலே பெரியபுராணத்தி லிருந்து தெரியக் கூடியவற்றை ஒரு வாறு சுருக்கி, யானறி யளவையிற் பகுத்துக்கூற இப் பகுதியிலே மேற்கொண்டேன். ஆனல் கலைஞானங்கள் எல்லாவற்றையும் பற்றித் தனித்தனி பேசவும் காட்ட வும் எனக்கு அறிவும், ஆற்றலும், போதிய காலமும் இல்லை. ஆதலின், இவற்றைப் பாகுபாடு செய்து அரசிய லும், குடிமையும், போர்முறை, புறப்பொருள், நீதி முறை, சமூகவாழ்க்கை, சிற்பம், ஓவியம், பாட்டு முத லிய அழகுக் கலை - மருந்து முதலியன, அறநிலை - இல் வாழ்க்கை, பெண்மக்கள் நிலை, பொருள் நிலை—பொருள் செயல் வகை, இன்பப் பகுதி - அகப்பொருள், உண் மைச்சரித இயல்பு என்ற சிற்சில பகுதிகளிலே வைத் துச் சிற் சில உதாரணங்கள் பெரியபுராணத்தி லிருந்து காட்டி மேற் செல்வேன்.

காவியமும் இக்கலைஞானங்களில் ஒன்றெனக் கண் டோம். ஆயின் அதுபற்றி முன் பிரசங்கத்திலே தோற் றுவாய் செய்துள்ளேன். காவியச் சிறப்பும் பயனும்



சிதம்பரம் கோயில் - மேற்பார்வை 1. (4 - 5 - பக்கங்கள்)

1. கிழக்குக்கோபுரம். 2. தெற்குக்கோபுரம். 3. கனகசபை.
4. சிற்சபை. 5. சிவகங்கை.



சிதம்பரம் கோயில் - மேற்பார்வை II. (4 - 5 - பக்கங்கள்)

1. வடக்குக்கோபுரம். 2. மேற்குக்கோபுரம். 3. கனகசபை. 4. சிற்சபை. 5. நிருத்தசபை. 6. சிவகங்கை தீர்த்தம்.

என்ற தலைப்பின்கீழ் அதுபற்றி மறுநாட் பிரசங்கத்தில் பேசுவேன். ஆதலின் இன்றையநாட் பிரசங்கத்திற் பேசுவன எனைக் கலைகளைப் பற்றியேயாம்.

பெரியபுராண சரிதங்களிலே முடியுடை மன்னர்களாகிய பல பேரரசர்களையும் பற்பல சிற்றரசர்களையும் காண்கின்றோம். கோச்செங்கட் சோழர், புகழ்ச்சோழர் என்ற இருவர் சோழ மரபின் முடியுடை மன்னர்கள். நின்ற சீர் நெடுமாறரும், அவர் தேவியாரும் இராணியாரு மாகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டிய மரபினர். கழறிற்றறிவார் சேரர் பெருமானர். இடங்கழியார் வேளிர் குலத்தரசர். பல்லவ காடவ மரபைச் சேர்ந்த ஐயடிகள், கழற்சிங்கர், மெய்ப் பொருளார், கூற்றுவர், நரசிங்க முனையர் இவர்கள் சிற்றரசர்கள். இவர்களையன்றி வேறு பல வமிசத் தரசர்களைப் பற்றியும் புராணத்திலே கேட்கின்றோம். தமிழ் மூவேந்தர்கள் என்ற சேரசோழ பாண்டிய வமிசத் தரசர்களின் ஆட்சியின் கீழ்த் தமிழ்நாடு விளங்கிற்று. இவர்களின் மரபுகள் ஒவ்வொரு காலத்தே அன்னிய அரசர்களின் படையெடுப்பினாலும் பிறவாற்றாலும் சில சுருங்கியும் தேய்ந்தும் மாய்ந்தும் போகும். இரு வேறு அரச மரபு ஒன்றாகும். பின்னருந்தழைத்துத் தனியாக ஓங்கும். வேறு வமிசத்தரசர்கள் இவர்களைவென்று இவர்களது அரசைக் கைக்கொள்வர். இப்பெரு மரபுகளுக்கு இளைத்த காலமும் செழித்த காலமும் உள்ளன வாகையால் இவைகளுக் குள்ளேயே ஒன்று மற்றொன்றினை அடிப்படுத்தித் தனக்குள் அடக்கிக்கொள்ளும்.

அரசியலும், அமைச்சும் குடிமையும்.

மூர்த்தி நாயனுர் காலத்திலே பாண்டிய நாட்டை ஒரு தெலுங்கநாட்டு வடுகக் கருநாட மன்னன் வென்று பாண்டிய அரசனைத் தோற்கடித்து மதுரையில் அரசு செய்ததாகத் தெரிகின்றோம். கோச்செங்கட் சோழர் ஒருகால் பாண்டிய நாட்டைச் செயித்து அடிப் படுத்தி அரசாண்டனர். இதையே,

"தென்னவனுய் உலகாண்ட செங்கணுற் கடியேன்"

என்று திருத்தொண்டத் தொகையும்,

"நிம்ப நறுந்தொங்கற் செழியன்"

என்று திருத்தொண்டர் திருவந்தாதியும் பேசுகின்றன.

"திக்கனைத்துந் தனிச்செங்கோல் முறைநிறுத்தித் தேர்வேந்தர்
முக்கண்முதல் நடமாடும் முதற்றில்லை முன்னினுர்"

—கோச் : 15.

என்பது பெரியபுராணம்.

அரசு ஆளும் வமிசக் கிரமமானது தந்தையி னிடத்திருந்து மைந்தனுக்கு வருவது அந்நாட்டுப் பொது மரபாயிருந்தது. மக னில்லாதபோது வேறு வாரிசுகளுக்கும் செல்லும். அப்படிக் குலமைந்தரும் வேறு வாரிசுகளும் இல்லாதபோது அமைச்சர்களும் குடி மக்களும் கூடி ஆலோசித்து இறைவனை வேண்டிக் கொண்டு ஒரு யானையைக் கண் கட்டிவிட்டு அது போய், யாரை எடுத்துப் பிடரிமேல் வைத்து ஏந்தி வரு கிறதோ, அவரை அரசராகக் கொள்வது என்ற வழக்க மும் இருந்தது. இதனை மூர்த்தி நாயனுர் புராணத்துக் காண்கின்றோம்.

"செம்மாண்வினை யர்ச்சகரை நூன்முறை செய்து தோளால்
இம்மாநிலம் ஏந்தவோர் ஏந்தலை ஏந்து கென்று

பெய்ம்மாமுகில் போன்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார்"
—மூர்த்திநாயனுர் புராணம்-31.

சில நாட்டு வழக்கிலே நேர் மைந்தர்க்கன்றி வேறு தாய வழியில் அரசுரிமை சென்றதும் உண்டு எனக் காண்கின்ருேம். சேர நாட்டில் இக்காலத்து வழங்கும் மருமக்கட்டாயம் என்ற தாயக்கிரமம் அந்நாள் அரச மரபினின்றும் வழங்கி வந்தது என எண்ண இடமிருக்கிறது. கழறிற்றறிவார் புராணத்திலே அவர்க்குமுன் அரசுசெலுத்திய செங்கோற் பொறையன் என்ற அரசர் இராச்சிய பாரத்தைவிட்டுத் தவஞ்செய்யப் போய்விட்ட போது அமைச்சர்கள் அடுத்த அரச வாரிசு யார் எனச் சில நாள் ஆழ்ந்து தெளிந்ததன் பேரில் அப்போது திருவஞ்சைக்களத்திலே தங்கிச் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த இளவரசர் பெருமாக் கோதையார் தான் அடுத்த வாரிசாயினர் என்று துணிந்தார்கள். அவரிடம் சென்று "மலைநாட்டுச் செய்தி முறையால் உரிமைச் செங்கோலரசு புரிவதற்குப் பொய்தீர் நெறியின் முடிசூடி யருளுமரபால் வந்தது தேவரீரே" என்று சொல்லி அரசப் பட்டத்தை ஏற்றுக்கொள்ள அழைத்தனர் என்று தெரிகின்ருேம். அரச பாரம் தாங்கி நின்ற பேரரசர்கள் அதனில் வெறுப்புற்றுத தரணி நீத்துத் தவஞ்சாரச் சென்ற சரிதமும் நமது தமிழ்நாட்டிலே சேர மரபிலே கேட்கின்ருேம். சமீபத்திலும் கொச்சி சமஸ்தான மன்னர் (ஸ்ரீராமவர்மா) அரசு விட்டுத் தவஞ் செய்யச் சென்றமை உலகம் நன்குதெரிந்துள்ளது. இவ்வரிய செயல் இந்நாட்டிலன்றி

வேறெவ்வுலகத்திலும், எந்நாட்டிலும், எக்காலத்தும் கேட்க நிகழ்வதல்ல. அரசு அமைச்சு முதலிய உலக போகங்களுக்கு என்று பொங்குபோர் பல புரியும் இந் நாளிலே இது ஒரு வியப்பாய்த் தோன்றலாம். இளவர சர் தமக்கு அரசு என்றுவரும் என்று எதிர் பார்த்து அம்முயற்சியிலே காலங்கழிப்பரே யன்றித் தம் அரண் மனையை விட்டுத் திருக்கோயிலிலே சென்று சிவத் திருப்பணிசெய்து கிடப்பதும் இந்நாட்டிலே அரச மரபிலே நிகழ்ந்த பெருவியப்பான செய்தியாம்.

இந்தப்படி முடியால் அரசாண்ட மூவேந்தர்களின் கீழே பற்பல சிற்றரசர்களும் உண்டு. அவர்களது அரசுரிமையும் வமிச பாரம்பரியமாய் வரும். ஆனால் மூவேந்தர்கள் போல் இவர்கள் முடிசூடிக் கொள்வ தில்லை. களந்தையில் குறு நில மன்னராகிய கூற்றுவ நாயனார் அநேக அரசரை வென்று நாடு பெருக்கிப் புகழுடன் விளங்கினர்.

.......................................முடி
யொன்று மொழிய அரசர்திரு வெல்லா முடைய ராயினர்
—**கூற்றுவ நாயனர் புராணம் - 3.**

முடி மன்னர் மூவர்களைப் போலவே தமக்கும் முடிசூட்ட வேண்டுமென்று தில்லைவாழந்தணர்களைக் கேட்டார். அவர்கள் "சோழ வமிசத்தரசர்க்கே யல் லாமல் பிறருக்கு நாங்கள் முடி சூட்டமாட்டோம்." என்று மறுத்து இவருக்குப் பயந்து தம்மில் ஒரு குடி யைமட்டும் நடராசருக்குப் பூசைசெய்யும் பொருட்டுத் தில்லையிலே வைத்துவிட்டுச் சேரநாட்டுக்குப் போய் விட்டார்கள். இதுபோலவே அயோத்தி மன்னர்கள்

முடிசூட்டிக் கொள்ளும்போது வேளாளர்கள் கிரீடத்தை எடுத்துக் கொடுக்கும் வழக்கம் இருந்ததைச் "சடையன் றன், மரபுளோர்கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மவுலி" என்று கம்பர் தெரிவிக்கின்றார். நமது ஆங்கிலேய மன்னர்களுக்கு அவர்கள் குருவாகிய கந்தர்புரிக் குருசிரேட்டர் (Archbishop of Canterbury) முடி சூட்டுவதும் வழக்கமாகக் காண்கின்றோம். அதுபோலவே தமிழ்நாட்டிலே சோழ அரசருக்குத் தில்லைவா ழந்தணர்கள் முடி சூட்டும் வழக்கம் இருந்தது போலும். சோழ அரசர்கள் காவிரிப்பூம்பட்டினம் முதலிய ஐந்து ஊர்களில் ஒன்றிலே வைத்துத் தான் முடிசூட்டிக் கொண்டார்கள்.

மன்னர் பெருமான் அநபாயன்
வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதிஐந்தின்
ஒன்றாய் நீடுந் தகைத்தவ்வூர்.

—சண்டேசுர நாயனார் புராணம் - 8.

பேரரசோ சிற்றரசோ என்ற ஏதாவது ஓர் அரசரின் கீழல்லாமல் குடிகளே தம்மைத்தாம் அரசு செலுத்திக்கொள்ளுதல் என்ற குடியரசுக் கொள்கை அக்காலத்திலே காணப்படவில்லை. அரசரைக் காத்தற் கடவுளின் அம்சமாகவே கருதினார்கள். எனவே, இராசத்துரோகமான தீய எண்ணம் அந்நாளில் மக்கள் மனத்தே உண்டாகக் காரணமே யில்லாதிருந்தது. தமிழ் நாடாகிய பாண்டிநாட்டைப் போரில் வென்று தெலுங்கனாகிய வடுகக்கருநாட மன்னன் கொடுங்கோல் அரசு செலுத்தியபோதும் அவனுக்கு மாறாகக் குடிகள் கிளர்ப்பிய

தாகக் காணவில்லை. அவன் மகனின்றி வேறு வாரிசு மின்றி இறந்துபட்டான். அப்போது அமைச்சரும் குடிகளும்கூட 'அரசனையின்றி நிலத்துக்குக்காவலில்லை. சூழும் குடியும் ஒழுங்குபட இருப்பினும் இந்தப் பூமி அரசனில்லாமல் வாழுந் தன்மையுடையதல்ல' என்று துணிந்தனர் எனக் காண்கின்றோம்.

அரசர்கள் எல்லா அரச காரியங்களையும் நேரில் பார்த்துத் தாங்களே செய்து விடுவதென்பதில்லை. தங்களுக்குக் கீழ்ப் பல துறையிலும் பல வேறு அமைச்சர்களைக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் மந்திராலோசனை செய்தே அரச காரியங்களைச் செய்து வந்தார்கள். அமைச்சு என்பது அரசர்க்குரிய ஆறு அங்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. நல்ல அமைச்சனைப் பெறாத மன்னனை அங்கங் குறைந்தவன்-அங்கவீனன் என்பதே தமிழர் மரபு.

அரச அங்கங்கள், அமைச்சு.

படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு—திருக்குறள்.

கல்வியறிவும், அதற்குத் தக்கபடி அமைந்த சொல் வன்மையும், மதிநுட்பமும், உலகத்தியற்கையை அறிந்து செய்தலும், பகைவருக்குத் துணையாயுள்ளோரைப் பிரித்தலும், தம்பாலாரைப் பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும், முன்னே தம் பக்கத்தினின்றும் பிரிந்தாரை மீண்டும் பொருத்திக் கொள்ளுதலும், அரசன் தானும் அறியாதவனாய் அறிந்து சொல்வார் சொல்லையும் அழிப்பானாயினும் அதனை நோக்கிப்

அமைச்சர் பண்பு

பயந்து ஒதுங்கிநின்றுபடாமல் அவனுக்கு உறுதி கூறு தலும் அமைச்சர் பண்பாகத் தமிழர் கொண்டிருந்தனர். சென்ற ஜர்மன் மகாயுத்தத்திலே பகை அரசருக்கு நட்பாயினரைப் பிரித்தலும், தம்மினின்று பிரிந்தாரைச் சேர்த்தலும் எவ்வளவிற்கு நிகழ்ந்தன என்பதும், அவற்றிற்கு அமைச்சர்கள் எவ்வளவு தூரம் துணை செய்தனர் என்பதும் கண்கூடாகக் கண்டோ மன்றோ? நமது சட்டசபைக் கட்சிகளிலேயும் தேர்தல்களிலேயும் இராசகாரிய நிர்வாகத்தின் பொருட்டுப் பிரித்தலும், பேணிக் கொள்ளுதலும், பிரிந்தாரைப் பொருத்தலும் அமைச்சர்கள் செய்கையாய்த் தினமும் நிகழக் காண் கின்றோமல்லவா? இது அமைச்சர் கடமையாக நமது தமிழர்கொண்ட கொள்கையின் வந்த வழிவழி இயற்கை போலும்!

**பண்டைத் தமிழர் நீதி முறை**

குடி காத்தலும், சேனைத்தலைமை பூண்டு போர் செய்து நாடு காத்தலும், பகைவரை அழித்தலும், நீதி முறை செய்தலும், நீதி பாலிக்க வேண்டிய வாறு சிறை செய்தல், அரசாணை நிறைவேற்றல் முதலியனவும் அமைச்சர்களின் கடமைகளாக இருந்தன. குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வாராமற் காத்தல் அரசர் கடமை என்று சேக்கிழார் சுவாமிகள்,

மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்

ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனே.

—திருநகரச் சிறப்பு - 36.

இவ்வாறு எடுத்துக் கூறுகின்றார். இது பல்லாயிரக் கணக்கான (சுமார் 4000) ஆண்டுகளின் முன் அரசாண்டவராகக் கருதப்படும் மனுநீதிச்சோழர் வாக்கிலே வைத்து அரசியலின் தன்மை கூறப்பெற்றதாகும். அஃது எப்படியாயினும், சேக்கிழார் சுவாமிகள் காலத்தே தமிழர்கள் இதனையே அரசியலின் உயர்ந்த நோக்கமாகக் கருதினர்கள் என்பது வெளிப்படை. ஒரு பசுவின் கன்றின்பேரில் அரசகுமாரன் ஊர்ந்துசென்ற தேர்ச்சக்கரம் ஏறி அது இறந்துபட, அதன் தாய் துன்புற்று வந்து அரசர் வாயிலிலே தூங்கிய ஆராய்ச்சி மணியைக் கொம்பினல் அசைத்து அடித்தது. அரசர் அதன் வரலாற்றை விசாரித் தறிந்து அதற்குரிய தண்டனையாகத் தங்குமாரனை அவ்வீதியிலே கிடத்தி அவன் மார்பிலே தமது தேரைச்செலுத்தினர். பின்னர் இந்நீதிக்குத்தக்கவாறு இறைவன் அருள் புரிந்தார். இது, இச்சரித வரலாறு. மனிதரையும் பிற அறிவுள்ள உயிர்களையும் அரசன் ஒப்பநாடி முறைசெய்வதே அரச நீதியாய்க் குறிக்கப்பெற்றது. தினமும் இந்நாளில்மிருகமனிதன் கையால் அவன் வயிற்றிற் புகுத்துவதற்காக எவ்வித சிந்தனையுமின்றிக் கொல்லப்படும் பிராணிகளில் ஒன்றாகிய ஒரு சிறிய பசுவின் கன்றுக்காக நடந்த தமிழரசின் நீதிக் கதையை உற்று நோக்குவதும் தமிழர் தருமமாகும். தன்னாலே யன்றித் தன பரிசனத்தாலும் குடிகட்குக் கேடு வாராதபடி மன்னன் பார்க்க வேண்டியவனவன்

என்பது அந்நாள் தமிழர் கொண்ட நீதியாம். அரசாங்க பதவியில் உள்ள ஒருவன் எத்துணைக் கேடுகள் செய்தாலும் அவன் பதவி உயர உயர அக்குற்றங்கள் எல்லாம் குணமாகப் பாவிக்கப்பட்டுச் சின்மானமும் செய்யப்படுவது இக்காலநிலை. தமிழர் முற்கால நிலை இதுஅல்ல. ஒருவன் ஒரு குற்றஞ் செய்யின் அவனை அக்குற்றம் நிகழ்ந்த இடத்திலேயே வைத்துத் தண்டித்தல் என்பது அந்நாள் வழக்கங்களில் ஒன்று. மேற் சரிதத்திலே, "முன்னிவனை அவ்வீதி முரண் தேர்க்கால் ஊர்க" என்பது அரசர் கட்டளையாயிற்று. இப்படிச் செய்தல் அங்குள்ள எல்லார்க்கும் வெளிப்பட அறிவுறுத்தி மக்களை நீதியிற் பிறழாமல் வைத்தற்பொருட்டே யாகும். ஏறக்குறைய ஓர் அரை நூற்றாண்டின் முன்னே குற்றஞ் செய்தாரைச் சதுக்கங்களில் வைத்துத் தண்டித்தலும் தூக்கிலிடுவோரைப் பறைசாற்றிப் பகிரங்கமான ஓரிடத்தில் யாவரும் அறியத் தூக்கிடுதலும் ஆகிய வழக்கங்கள் நமது அரசாங்கத்திலு மிருந்தன.

**அரச அடையாளம்**

வெண்குடையும், செங்கோலும், ஆணைச் சக்கரமும் அரச அடையாளங்களாம். "சென்னி வெண்குடை நீடந பாயன்", "செய்யகோ லபயன்" "முறை புரியும் தனித் திகிரி" என்பன பெரிய புராண வாக்குகள். முடியுடை நாட்டரசர்க்குக் கோலும் குடையும் அரசாங்க அடையாளமானல், வேட்டுவர் முதலிய காட்டரசர்க்கு வில் அரச அடையாளமாயிற்று. என்னை? அதுவே தான் அவர்கள் காவலாகும். "இத்தனை காலமும் நினது சிலைக்கீழ்த்தங்கி இனிதுண்டு தீங்கின்றி யிருந்தோம்" என்று

பொத்தப்பி நாட்டு மலை வேடர் தம் அரசனை நாக னிடம் தெரிவிக்கின்றார்கள். தம் குடிகள் பசியால் வாடாமல் இனிது உண்டு உடுத்து வாழும்படிக்கும் பிற வற்றால் தம் உடலுக்கும் உடைமைகளுக் கும் தீங்கில்லாமல் நிர்ப்பயமாயிருக்கு மாறுங் காப்பதே அரசர் கடமையாகும் எனத் தமிழர் அறிந்தனர். உடம்பையும் உடைமையை யும் காவல் செய்வது மன்னரின் முதற் கடமை என நம் முன்னோர் கண்ட முறைபோலவே நமது அரசாங்கத்தாரும் இந்நாளிலே தமது தண்ட நூலில் (1) ஆளைப் பற்றிய குற்றம், (2) சொத்துக்களைப் பற் றிய குற்றம் (Penal Code—Offences against person and offences against property) என்று இரு பெரும்பிரிவாகக் குற்றங்களை வகுத்து முறை செய்திருத்தல் இங்கே குறிப்பிடத் தக்கதாம். இத னையே உடுப்பூர் வேட்டுவர் வாக்கிலே வைத்துச் சேக்கி ழார் பெருமான் "நினது சிலைக் கீழ்த்தங்கி யினிதுண்டு தீங்கின்றியிருந்தோம்" என்று தெரிவிக்கின்றார். குற்றம் நிகழ்ந்தபின் தண்டிப்பதென்று நில்லாமல், குடிகள் பசி யால் வாடினார்கள், பசித் திறந்தார்கள், ஒருவன் ஒரு வனை வதைத்தான், ஒருவன்பொருளை ஒருவன் வெளவி னன் என்ற நிகழ்ச்சிகள் இல்லாமலே செய்வது நல் அரசின் முறை என்பது நம் முன்னோர் கருத்து.

**அரசாங்கக் காவல் முறை**

அக்காலத்துக் குடிகள் வாள், வில், தண்டாயுதம் மழு முதலிய ஆயுதங்களை எவ்விதத் தடையுமின்றி, யாருடைய அனுமதியும் உத்தரவு மின்றித் தாங்கிச் சென்றார்கள். நீதித் தவறு நடந்தபோது அவற்றை உபயோகமும் செய்

**ஆயுதச் சட்டம்**

தார்கள். ஆனால் நெறி தவறி உபயோகம் செய்தால் அதற்காகத் தண்டிக்கவும் பெற்றார்கள். எறிபத்தர், சத்தி நாயனார், செருத்துணை நாயனார் முதலியோர் சரிதங்களே இதற்குச் சாட்சியாகும். ஆயின், நீண்டகால அளவிலே அன்னியர் படை எடுப்புக்களும், அன்னியர் ஆட்சியும், ஆயுதச் சட்டமும், தண்டச் சட்டங்களும் சேர்ந்து ஆண்மக்களை யெல்லாம் பேடிகளாக ஆக்கி விட்ட இக்காலத்து மக்கள் நமது தமிழ்மக்களால் முன்னாளில் தங்கு தடையின்றி ஆயுதந் தாங்கிச் சென்று செய்யப்பெற்ற வீரச் செயல்களைக் கண்டு இவை அநாகரிகச் செய்திகள் என்று நகைக்கவும் கூடும். ஆனால் அந்த முற்காலத் தமிழ் மக்கள் இந்நாளில் வந்து, ஒரு சிறு குற்றத்தையும் மாற்றிக் கொள்ள முடியாமல் சீட்டு ஒட்டி நீதித் தலம் தேடி மூன்று கோர்ட்டும் கையுமாய் நிற்பதைத் தவிர வேறு வகை யறியாத நம்மைக் கண்டார்களேயானால் "நமது பின் சந்ததியார்களாகிய தமிழர் இவ்வாறு பேடிகளாகி விட்டனரே" என்று தாமும் இரங்கி எள்ளி நகைப்பர்.

## அமைச்சர் கடமைகள்

**அமைச்சர்கள் கடமைகள் சிற்றரசர்களை யடக்குதல்**

பேரரசர்க்குத் திறை கொடாமலும் ஆணைக்கு அடங்காமலுமுள்ள சிற்றரசர் மீது படையெடுத்துச் சென்று அவர்களை வென்று அடிப்படுத்துதலும் அக்காலத்து மந்திரிகளின் கடமைகளில் ஒன்று என்பது,

"ஈங்கு நமக் கெதிர்நிற்கும் அரணுளதோ"

என்று புகழ்ச்சோழர் சொல்லித் தமது அமைச்சர்களை அதிகன் என்பவன் மீது படை எடுக்கும்படி ஏவின வரலாற்றில் காண்கின்றோம்.

குடிகளுக்குத் தீங்கும் அநீதியும் வராமல் காத்தலும் அமைச்சர் கடனே யாம். தன் கன்றினை அரசகுமாரன் தேர்ச்சக்கரத்தில் இறக்கவிட்ட தாய்ப்பசு வந்து அரண்மனையில் ஆராய்ச்சி மணியை அடித்தபோது மநுநீதிச் சோழர்,

**குடிகட்குத் தீங்கு வராமற் காத்தல், தீங்கு செய்தாரைத் தண்டித்தல்**

"வருந்திய பசுவை நோக்கி என்னிதற் குற்ற தென்பான்
அமைச்சரை இகழ்ந்து நோக்"கினர்.

என்பது சரிதம். யாராவது பெரியோர்கள் செல்வாக்குள்ளவர்கள் முதலியோர் மீது ஏதாவது குற்றம் சுமத்தப்பட்டு அவர்களை விசாரணைக்காக அரச சபையிலே கொண்டுவருதல் வேண்டுமானால் ஒரு மந்திரியைச் சேனையுடன் அனுப்பி அவர்களைக் கொண்டுவரச் செய்தலும் அக்கால வழக்கமாயிருந்தது. இது குணபரன் என்ற மகேந்திரவர்மன் தனது சமணகுருமார் சொற்கேட்டுத் திருவதிகையிலிருந்த வாகீசரைச் சேனையையும் மந்திரியையும் அனுப்பிக் கொண்டுவரச் செய்தான் என்பது முதலிய வரலாறுகளால் தெரிகிறது. இக்காலத்தும் அவ்வாறு நிகழ்ச்சி காணப்பெறுகின்றதை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

**சிறைசெய்து விசாரணைக்குக் கொண்டு வருதல்**

சமயப் பாதுகாவலும் அந்நாள் அரசர் கடமைகளில் ஒன்றாக விருந்தது. அது சம்பந்த சுவாமிகள் அப்பர் சுவாமிகள் புராணங்களிலே சமணர்கள் தங்கள் அரசர்களிடம் சொல்லி அவர்களைத் தம் சமயச் சார்பாகத் தூண்டுகிற வரலாற்றினின்று தெரிகின்றது. ஆனால் அரசர்கள் ஒரு சார்பு பற்றி ஒன்றை

**சமயப் பாதுகாப்பு முறை**

யும் துணிந்து விடாதபடி பின்னும் விசாரித்து அறிந்த பின்பே மேற்காரியங்களை நடத்தியிருக்கின்றார்கள். "கைதவம் பேசமாட்டே னென்று கைதவனுஞ் சொன்னான்" என்பது சம்பந்தமூர்த்திகள் புராணம். (749)

அப்பர் சுவாமிகள் புராணத்திலே நாம் காண்கிற படி திருப்பழையாறை வடதளிக் கோயிலை மறைத்துச் சமணர்கள் தங்கள் பள்ளியாக ஆக்கிக் கொண்டனர். இதனை வெளிப்படுத்திச் சிவபெருமானது வண்ணங் கண்டு வணங்கி யல்லாமல் அப்புறம் போவதில்லை என்று கடைப்பிடித்து அப்பர் சுவாமிகள் உண்ணாவிர தங் கிடந்தார். இதனைக் கனவிலே சிவபெருமான் உத் தரவிட்டுக் காட்டிய குறிகளின் வழியே அரசர் அந்த மோசத்தைக் கண்டு வெளிப்படுத்தினார். தண்டியடி கள் நாயனார் புராணத்திலே சமணர்கள் அவருக்குச் செய்த தீங்கைத் தெருட்டி முறை செய்யுமாறு இறை வன் கனவி லுணர்த்த அரசர் உணர்ந்தார். இவ்வாறு திருவருள் தெருட்ட உணர்ந்த அரசர்கள் அதனோடு அமைந்து நின்று விடாமல் பின்னும் தாமே பொருள் களை நேரில் பரிசோதித்தும் அவ்வமணர்களை நேரில் விசாரித்தும் அறிந்த பின்னர் நீதி செலுத்தித் தொக்க அமணர் தூரறுத்துத் தமது சமயப் பாதுகாவல் செய் தார்களே யன்றித் தம் சமயச் சார்பு பற்றியே துணிந்து எதையும் செய்து விடவில்லை.*

---

* சமயப் பாதுகாவல் செய்வது மன்னர்களின் கடமை களில் ஒன்றென்பதனை உட்கொண்டே இந்நாளிலும் நமது மன்னருக்கு **D. F.** அதாவது "Defender of the Faith" "சமயக் காவலன்" என்ற பட்டமும் உண்டு.

ஒரு காரியத்தை முடிக்க முற்பட்டவர்கள் உண்ணு விரதங் கிடக்கும் வழக்கம் அக்காலத்தும் பெரியோர் கையாண் டிருந்தனர் என்பது மேற் கூறிய பழையாறை வடதளி வரலாற்றில் அப்பர் சுவாமிகள் சமணர்களால் மறைத்துச் சமணர்பாழி யாக்கப்பட்ட திருக்கோயிலின் முன்னே,

**உண்ணுவிரதம்**

"வண்ணங் கண்டு நானும்மை வணங்கி யன்றிப்
போகேனென்
றெண்ண முடிக்கும் வாகீசர் இருந்தா ரமுது
செய்யாதே"

—திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 296.

என்பதனால் விளங்குகிறது. இவ்வாறு நாட்டுச் சமயப் பாதுகாவலில் அரசர் வழுவியபோது அவரைத் தக்கபடி சூழ்ந்து வழிப்படுத்தி நிறுத்துதல் அமைச்சர் கடமைகளில் ஒன்று என்பது குலச்சிறையார் சரிதத்திற் காண்கின்றோம்.

குடிகள் அநீதியான கொடுமைகள் செய்யக் கண்டால் அதற்கு அரசனையே பொறுப்பாகக் கொண்டனர். அரசாணை முறை பிறழ்ந்தமையே தான் குடிகளைக் கொடுமைகளில் புகுத்துவது என்று தமிழர் கொண்டனர். சம்பந்த சுவாமிகள் திருக்கூட்டத்துடன் தங்கிய திருமடத்தில் இரவிலே தீ வைத்தார்கள் சமணர்கள். இதை யறிந்த சுவாமிகள் "மன்புரக்கு மெய்ம்முறை வழுவென மனங்கொண்டார்". "வெய்ய தீங்கிது வேந்தன்மேல"தேயாகும் என்று தமது தூய உள்ளத்திற்கொண்டு "சைவர் வாழ்

**குடிகளின் தீங்குக்கு அரசாட்சியே பொறுப்பு**

மடத்துச் சமணர்க ளிட்ட தீத்தழல் போய்ப் பையவே சென்று பாண்டியற்காக" என்று பணித்தார். அது நிறைமொழி யாகிய மெய்த்திருவாக் காதலாலே அவ்வாறே போய்ப் பெருஞ் சுரமாக மூண்டது என்பது சரிதம்.

மனிதர்களையே யன்றி ஏனைய உயிர்களையும் நீதி முறையிலே பாதுகாப்பது அரசர் கடமை என்று தமிழர் கொண்டனர் என்பதை ஒருவாறு மேலே சுட்டிய மனுநீதிச் சோழர் வரலாற்றினுற் கண்டோம். கழறிற்றறிவார் என்கிற சேரமான் பெருமாள் நாயனுர் சரிதத்தாலே இவ்வுண்மை மிக வலுப்படுகின்றது. திருவஞ்சைக்களத்தில் திருத்தொண்டினையேசெய்துகொண்டிருந்த இளவரசர் பெருமாக் கோதையாராகிய நாயனுரிடம் மந்திரிகள் சென்று 'அரசுரிமை நும் மேலதாய் நின்றது; அரசு தாங்கவேண்டும்' என்று அழைத்த போது 'இவர்கள் மொழியானது நான் செய்யும் இன்பம் பெருகுந் திருத்தொண்டுக் கிடையூறுக விருந்தது. ஆயினும் அன்புநிலை மெய் வழுவாமல் அரசு புரப்பதற்குத் திருவருள் துணைசெய்யுமாயின் அதனை இறைவனிடத்துச் சென்றறிவேன்' என்று திருவஞ்சைக்களத்துப் பெருமானிடம் சென்று தொழுது விண்ணப்பித்தார். பெருமானிடம் வேண்டி அவ்வாறே அரசுடனே அன்பு வழிபாடும் கூடி யிருக்கும் பேற்றினை யடைந்தார். அதனுடன் யாவும் யாருங் கழறினவு மறியும் உணர்வும் வரப்பெற்ருர். இது அவர் சரிதம். இதனுல்தான் அவருக்குக் கழறிற் றறிவார் என்று பெய

எல்லா உயிர்களையுங் காத்தல்

ராயிற்று. இதனை "எவ்வுயிருஞ் சாற்று மாற்றங்கள் உணர் பெருந் தலைவர்" என்று சேக்கிழார் சிறப்பிக்கின்றார். அது கொண்டு அவர் தம் கீழ் வாழும் எவ்வுயிர்களும் பேசுவன எல்லாம் அறிந்து நீதி செலுத்த வல்லவ ராயினர். இதுவே தமிழரசர் நீதியின் குறிக்கோளாகிய இலக்கிய மாகும். இதைத்தான் பைசீல வாதம் என்று 64 கலைஞானங்களில் ஒன்றாக வகுத்துள்ளார்கள் எனத் தெரிகின்றோம். பல்லி சொற்பலன் இன்றும் நமது பஞ்சாங்கங்களிற் குறிக்கப் பெற்று வருகிறது. பலர் அதன்மூலம் வருங்காலநிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் வழக்கம் இப்போதும் இருக்கிறது.

பல்லியின் பேச்சைப்பற்றி ஒரு நிகழ்ச்சியை நான் அறிவேன். சில ஆண்டுகளின் முன் எனது உறவினர் ஒருவர் சில நண்பர்களுடன் சாலை வழியாக ஒரு ஊருக்கு நடந்து சென்றுகொண் டிருந்தார். வெயில் வெப்பத்தினாலும் அயர்ச்சியினாலும் சிறிது இளைப்பாறும் பொருட்டு இவர்கள் அவ்வழியில் இருந்த ஒரு ஆலமர நிழலில் உட்கார்ந்தனர். அந்த மரத்தைச் சுற்றிலும் ஒரு மேடை கற்களால் உயர்த்திக் கட்டப்பட்டிருந்தது. சில நேரத்திற்குப் பின் வழிப்போக்கர் மற்றொருவரும் இவ்வாறே அங்கு வந்து தங்கினர். அவர் வந்தபின் சிறிது போது கழித்து அந்த மரத்திலே ஒரு பல்லி சொல்லிற்று. அதைக் கேட்டதும் புதிதாய் வந்தவர் 'ஐயோ!' என்றார். எனது உறவினர் 'இது என்ன' என்று கேட்டனர். 'இன்னும் கொஞ்ச நேரத்தில் புதிதாய் மணஞ் செய்து கொண்டு ஒரு மணமகன் வந்து இந்த மர நிழலின் மேடையில் தங்கப் போகின்றான்.

இந்தக் கல்லின் கீழ் இருக்கும் ஒரு நாகப் பாம்பு அவனைத் தீண்ட அவன் இறந்துபடப் போகின்றான் என்று இந்தப் பல்லி சொல்கிறது' என்று அவர் சொன்னார். இதன் உண்மையைப் பார்ப்போம் என்று அவர்கள் கல்லைப் புரட்டினார்கள். பல்லி சொற்படியே அதன் கீழ் ஒரு நாகப் பாம்பு இருக்கக் கண்டு அதை அடித்து எடுத்து அப்புறம் போகட்டு விட்டனர். அதன் பின் சிறிது நேரத்திற்கெல்லாம் எதிர் பார்த்த படியே மணமகனும் வந்து சேர்ந்தான். இவ்வரலாற்றினை வந்தவர் கேட்டார்கள். அந்தப் பாம்பு எங்கே என்று கேட்டான் மணமகன். 'அதோ அங்கே எறிந்திருக்கிறோம்' என்று அங்குள்ளார் சொல்ல அதன் பக்கம் போய் ஒரு கோல் கொண்டு 'இந்தப் பாம்பா என்னைக் கடிக்க இருந்தது' என்று அதைக் குத்தினான். அடி பட்டாலும் சாகாமல் மயங்கி யிருந்த அப்பாம்பு உடனே திரும்பி அவனைக் கடித்தது. அவனும் அதனால் மூர்ச்சித்து விரைவில் இறந்தான். (நாகப் பாம்புகள் அடிபட்டால் இறந்தது போல் பாசாங்கு செய்வது வழக்கமாம்.) இது நேரிற் கண்டார் சொல்லக் கேட்ட வரலாறு. இது போன்று பிராணிகளின் பேச்சை அறியும் கலைஞானம் இந்நாள் அருகி வருவது வருந்தத் தக்கதாம்.

**போர் முறை**

இனித் தமிழரசர் போர் முறையைப்பற்றிப் பார்ப்போமானால், இதுவே புறப்பொருளில் விதந்து விளக்கப் பெற்றுள்ளது. அந்நாளில் தமிழர்கள் போரில் மிகவும் வல்லவரா யிருந்தனர். பல போர்களிலே பற்பல வேற்றரசர்களையும் வென்றனர். தேர்ப்படை, யானைப்படை, குதி

ரைப் படை, காலாட்படை என்பன அவர்கள் கைக் கொண்ட நால்வகைப் படையாம். தேர் வீரர்கள் தம் மோடொத்த தேர் வீரருடனும், யானையோரும் அவ்வம் முறையாளருடனும் போர் புரிவர். அதை விட்டு விலகி யானை, குதிரை வீரர் காலாட்களுடன் போர் செய்யார். இது அவர்கள் கையாண்ட அறப்போர். இந்நால்வகைச் சேனைகளையும் அணிவகுத்து முன் செல்ல நடத்தித் துணையாய்ப் பின்னே நிற்பர் சேனைத்தலைவர்கள். முன் அணிகளின் சேனைகள் இளைக்கும்போது முன் வந்து தலைவர் நேரிற் போர் புரிவர். எளியோரை வலியார் ஆயுதங் கொண்டு வதைப்பதும் நிராயுதரைக் கொல்வதும் தமிழர் ஒருபோதும் செய்யார்.

“ ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறா அ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் ” —புறநானூறு - 9.

என்பது தமிழர் போர் முறை. அன்றுதான் நீறிட்டவனைத் தம்மை வெல்ல வந்த அதிசூரனுங்கூட நிராயுதனைக் கொன்றார் என்ற பழியை அடையக்கூடாது எனக் கொண்டு போர் செய்யாமலே ஆயுதந் தாங்கி நின்றார் ஏனாதிநாத நாயனார். போர்க்கெழுந்த பகையரணை முற்றுவிப்போரும் அந்த அரணுள்ளிருந்து தற்காத்துப் பொருவோரும், வஞ்சி, காஞ்சி முதலிய ஏற்றனவாகிய மாலைகளைச் சூடிப் போர் புரியும் முறைகளைக் கையாளப்

பெற்றன. இவை புறப்பொருளிலே கண்ட முறை யாகும்.

"வளவனார் பெருஞ்சேனை வஞ்சிமலர் மலைந்தேற
அளவிலரணக்குறும்பில் அதிகர்கோன் அடற்படையும்
உளநிறைவெஞ் சினந்திருகி யுயர்காஞ்சி மலைந்தேறக்
கிளர்கடல்கள் இரண்டென்ன இருபடையுங் கிடைத்தனவால்"

"வரிவிற்கதை சக்கரம் முற்கரம் வாள்
சுரிகைப்படை சத்தி கழுக்கடை வேல்
எரிமுத்தலை கப்பண மெற்பயில் கோல்"

—புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 10, 26.

முதலியன அக்காலத்துப் போரில் பயின்ற தமிழர்க ளது படைகளாகும். தமிழ் வீரர் போரில் தம் உயிர் கொடுத்து இறந்து படும் வரை போர் செய்து செவம் பெறுதலையே குறிக் கோளாகக்கொண்டு போர் புரிவர். அன்றிப் புறங் கொடுத்து ஓடுதல், பின்னிடைதல், முதலியன மிக இழிவாகவும் பேடியர் செயலாகவும் கரு தப் பெற்றன. உண்ட சோறு கழிக்க உயிரையும் கொடுத்துத் தமிழ் வீரர்கள் போர் செய்வர்.

"மண்டு போரின் மலைப்பவர், துண்ட மாயிட வுற்றெதிர்
கண்ட ராவி கழித்தனர், உண்ட சோறு கழிக்கவே"

—புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 23.

திலகவதியாருக்கு மணமகனுய் நிச்சயிக்கப் பெற்ற கலிப்பகையார் "மன்னவர்க்காய் மலையப்போய்ப் பொரு வாரும் போர்க்களத்தி லுயிர் கொடுத்துப் புகழ் கொண் டார்" என்று காண்கின்றோம். கூலி கொடுத்துப் போர் வீரர்களது சேவகத்தைக் கொள்வதும், அவர்களைக் கொண்டு மாற்றாருடன் போர் செய்வதும் அந்நாளில்

ஒரு வழக்கமாயிருந்ததென்று முனையடுவார் சரிதத்தால் அறிகின்றோம். இன்னும் போர் முறைசளையும் தமிழர் வீரத்தையும் புகழ்ச் சோழ நாயனர் புராணத்தும், நின்ற சீர் நெடுமாற நாயனர் புராணத்தும், பிற இடத்தும் பரக்கக் காணலாம்.

**வேளாளரும் போர்த் தொழிலும்**

வேளாண் மக்கள் அந்நாளில் சேனைத் தலைவர்களாகவும் போர் வல்லவர்களாகவும் விளங்கினர்கள். மேலே சுட்டிய கலிப்பகையார், முனையடுவார் என்ற இவர்களேயன்றி, ஏயர்கோன் கலிக்காமரும், சேனைதிபதி யாராகிய மானக்கஞ்சாற நாயனரும், போர்த் தந்திரியாராகிய கோட்புலி நாயனரும் வேளாளர் களேயாம். கோட்புலியார் சோழர்களிடம் தந்திரத் தொழில் பூண்டு அவர்களுக்காகப் போர்முனையிற் சென்று "வேற்றுப், புலம்பெருகத் துயர்விளையப் போர் விளைத்துப் புகழ்விளைப்பார்" என்று காண்கின்றோம். நமது பெரிய புராண ஆசிரியரான சேக்கிழார் சுவாமிகளும், அவர் தம்பியார் பாலறுவாயரும் சோழர்களிடம் அமைச்சர்களாயிருந்தமையும் காண்கின்றோம். எனவே, வேளாளருக்கு உழுதொழிலே தொழிலாம் என்பது சரியல்ல. அவருக்கு மந்திரித் தொழிலும் சேனைத்தலைமையும் போர்செய்தலும் அந்நாளில் உரிமைத் தொழில்களாம் என விளங்குகின்றது. இந்தக் குறிப்பினை உட்கொண்டுதான் சேக்கிழார்சுவாமிகள் திருநாவுக்கரசு நாயனர் புராணத்திலே,

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்

பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞராரப் பொலிபிறங்க
நெருங்கியசா தூரங்கபல நிகர்ப்பனவா நிறைமருதம்.

என்று உழுதுண்ணும் வேளாளர் தொழில் நிகழ்ச்சிக் களத்திலே நால்வகைச் சேனையுடைய போர்க் களத்தை நினைவூட்டுகின்றார் போலும்! வேளாளர் பெருமக்களைச் சூத்திரர் என்று பாகுபடுத்தி அவர்களுக்குப் பிற மூவரிடம் ஏவல் செய்யுந் தொழிலே தொழிலாக்கும் பிறர் இதனை ஊன்றி நோக்குவார்களாக. உழுதுண்டு வாழ்வது கொண்டே இவர்கள் தொழுதுண்டு வாழ்பவர்களல்ல என்று துணியப் படும்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

என்ற தேவர் வாக்கே இதற் காதாரமாம். தொழுங் குலத்தாராக வேளாளர்கள் இருந்தால் அவர்கள்,

"............வெண்ணெயூர்ச் சடையன் றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மவுலி"

என்று கம்பர் சொல்கிறபடி அரசருக்குக் கிரீடங்கொடுக்கும் மரபின ராயிருத்தல் பொருந்தாதாம்.

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே"

என்ற தொல்காப்பியமும் இங்கே குறிக்கத் தக்கதாம். எனவே, தமிழ் நாட்டுக் குடிமக்கட் பிரிப்பில் வேளாளர் என்ற பகுப்பினர்வேறு; ஆரியர் கொணர்ந்த நால்வகைச் சாதியிலே சூத்திரர் என்ற தொழுதூண் குலத்தார்

வேறு என்பது வெளிப்படை. ஆனால் காலக்கிரமத்திலே ஆரியர் வகுப்பும் தமிழர் வகுப்பும் ஒன்றுபட்டு விரவி வாழத்தலைப்பட்ட பின்னரிலே அவ்விரு வேறு வகுப்பும் ஒன்றாக எண்ணப்பட்டு வேளாளர்களை ஆரியச் சூத்திரரோடுமயங்கிப் பிறழப் பேசும் வழக்கம் எழுந்தது என்று தோன்றுகின்றது.

இனி, வேளாளர்களே யன்றிப் பிற குலத்தவர்களும் அந்நாளிலே போர்த் தலைவர்களாகவும் போர் வீரர்களாகவும் விளங்கினார்கள் என்பது சிறுத்தொண்டநாயனார் புராணத்தும் பிற இடங்களிலும் அறிகின்றோம். சிறுத்தொண்டர் மாமாத்திரர் குலத்தைச் சேர்ந்தவர். இதனையே இக்காலத்து வழங்கும் ஒரு வகை மருத்துவ குலம் என்கின்றார்கள். இதனைச் சிலர் 'ஆமாத்தியர்' என்பததனோடு பிறழ்வாக உணர்ந்து, இவரைப் பிராமணர் எனவும் சொல்வாராயினர். அது தவறு. இவர் குலத்தைப் பற்றிச் சேக்கிழார் சுவாமிகள்,

"உலகில்வள ருயிர்க்கெல்லா முயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்மா மாத்திரர் தங்குலம்"

என்று எடுத்துரைத்துள்ளார்கள். எனவே, இது ஒரு வகை மருத்துவ குலம் என்பது குறிப்பாகத் தெரிகின்றது. இவர் நரசிங்கவர்மன் என்ற

"மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்து"

என்று வரும் வரலாறு இற்றைநாட் சரித ஆராய்ச்சியாளரால் கல்வெட்டு ஆதாரங்களின் உறுதிபெற்றுத் திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்ந்த கால நிச்சயஞ் செய்வதற்குப் பெருந்துணையாக நின்றது யாவரும் அறி

வர். பெரியபுராணமாவது உண்மைச் சரித நிலையே எழுந்த உயர்ந்த இலக்கிய மென்பதற்கு இது ஒரு பெரிய சாட்சியாகும். ஆகவே பெரியபுராணத்திலே போந்த மெய்யடியார்களுட் பலர் சிறந்த போர்வீரர்களாகவும் போர்த்தலைவர்களாகவும் விளங்கினார்கள் என்பது இந்நாளில் சைவருக்கும் பிறர்க்கும் ஒரு வியப்பையே தரும். 'அடித்தால் அழ முடியாத பேடிகளே அடியார் கூட்டத்தாராவார்' என்று இந்நாளிலே சிலர் கொண்டிருக்கும் எண்ணம் போலியாய் ஒழியும் என்பது இதனால் விளங்குகின்றது. அடியார்கள் மகாவீரர்கள் என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றார்.

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"

—திருக்கூட்டச் சிறப்பு - 9.

என்பது பெரிய புராணம்.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்(டு)
ஊனமொன் றில்லா வொருவனுக் காட்பட்ட வுத்தமர்க்கே.

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. அந்த அப்பர் சுவாமிகள் தான் தம்மை இடறிக் கொல்லும் பொருட்டு அரசன் யானையை ஏவி விட்டபோது,

"......... உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை"

என்று வீரமாய் அஞ்சா நெஞ்சுடன் நின்று வெற்றி கொண்டருளினவர்.

"ஈனர் கட்கெளி யேன லேன்திரு ஆல வாயரன் நிற்கவே"

என்பது, எண்ணாயிரம் சமணர்க்கு நடுவே தனித்து நின்ற பாலராகிய திருஞானசம்பந்த சுவாமிகளது தீர மாகிய திருவாக்கு.

ஆகவே, தமிழர்கள் போர்முறையில் ஆயுதந் தாங்கிப் போர் செய்தும் வெற்றி பெறுவர்; அன்றிப் போர் செய்யாமலே மனத்திண்மையினாலே எதிர்த்து நின்றும் வெற்றி பெறுவர்; எனக் காண்கின்றோம்.

இனி, அந்நாளில் தமிழர் நீதிமுறை செய்யும் பரிசு பற்றிச் சில பேசுவோம். ஊர்கடோறும் நீதிவிசாரித்துத் தீர்ப்புச் செய்து முறைசெய்யச் சபைக ளிருந்தன.

**தமிழர் நீதிமுறை**

அவைகளுக்கு மேற்பட்ட நிலையிலே அமைச்சர்களும் வேறு அரசாங்க உத்தியோகத்தர்களும் நீதி பரிபாலனஞ் செய்துவந்தார்கள். இவர்களில் யாரேனும் தவறி நடந்து நீதி பிறழ்ந்த காலத்திற் குறையுடையோர் அரசனிடம் நேரே அறிவித்து நீதி பெறுதலும் அந்நாள் வழக்கம். அரசரது அரண்மனை வாயிற்காவலர் இவ்வாறு குறையுடையோரை உள்ளே அரசரிடம் அறிவித்து விடுக்காமற் போனால் அரச நீதிக்குக் குறைவு வருமே என்று அஞ்சி அரச முற்றத்திலே யாவரும் சென்று அடிக்கத் தக்கபடி ஓர் ஆராய்ச்சிமணி தொங்கவிடப் பெற்றிருக்கும். இதைப்பற்றிமுன்னரே குறிப்பிட்டோம். ஆராய்ச்சி மணியாவது குற்றம் நடந்துவிட்ட வகையைப் பற்றி ஆராய்ச்சியைக் கிளப்பும் மணி என்று பொருளாகும். எனவே, யாருடைய தயவுமின்றியே குறையுடையார்கள்

அரசனிடம் நேரில் தம்குறைகளை அறிவித்துக்கொள்ள அந்நாள் அரச நீதி இடங் கொடுத்தது. ஆராய்ச்சி மணியோசை கேட்ட அரசன் தானே நேரில் வந்து நிகழ்ச்சிகளை விசாரித்து முறை செய்வான். இவ்வரலாறு திருவாரூர்ச் சிறப்பில் காண்கின்றோம். ஆராய்ச்சி மணியடிக்க அவசியம் பெருமலே ஒருவன் அரசாட்சி நிகழுமானால் அது அந்த அரசனுக்குப் பெருமையாகக் கருதப்பட்டது. இதுவரை இந்தமணி அடிக்கப்படவில்லை என்ற குறிப்பை, "இறைவ! நின் கொற்றவாயில் தூங்கிய மணியை" என்பதனால் ஆசிரியர் காட்டுகின்றார். ஆனால் குறையுடையோர் தம் குறைகளைச் சபைகளிலேயோ, அமைச்சர்களிடமோ, அரசரிடமோ அறிவிக்க இந்நாளிற்போல எழுத்து மூலமான பிராதுகள் வேண்டப்படவில்லை.

**ஆராய்ச்சி மணி**

**வாய்மொழிப் பிராது**

வாய்மொழிப் பிரியாதுகளே விசாரித்து முறை செய்யப்பட்டன. எனவே, பிராதுகளுக்கு இந்நாள் விதிக்கப்படும் கட்டண (கோர்ட்டு பீசு ஸ்டாம்பு) விதி அந்நாளில் இல்லை. நம் தமிழரசர்கள் நீதி பரிபாலனத்திற்காகத் தனி வரி விதிக்கவில்லை என்பது துணிபு. ஒருவன் மற்றொருவன் பேரில் குறை சொல்லிக் கொள்வானானால் முதலில் அந்த எதிரியை வரவழைத்து, முன்னால் வைத்துக்கொண்டு, பிராது சொல்பவன் பேச்சைக் கேட்டு, அதன் பின் எதிரி அதற்கு என்ன மறு மொழி சொல்கிறான் என்பதையுங் கேட்டு, அதில் இருவரும் மாறுபட்டால் அதன் பின் சாட்சியங்களை விசாரித்துத் தீர்ப்புச் செய்வது, இக்கால நீதி முறை போலவே. அக்காலத்தி

லும் அரச நீதிமுறை வழக்கமா யிருந்தது. இவ்வரலாறுகள் திருநீலகண்ட நாயனார் புராணத்திலேயும், தடுத்தாட்கொண்ட புராணத்திலேயும், பிற இடங்களிலும் காண்கின்றோம். ஒரு வழக்கில் நீதித் தீர்ப்புக்குத் துணை செய்வன மூன்று வகைப்பட்ட சாட்சியங்களாகும். அவை ஆட்சி, ஆவணம், அயலார் காட்சி என்பன. ஆட்சி யென்பது, தொன்று தொட்டு அதாவது இத்தனை காலம் என்று அறியப்படாத காலமாய்ச் சான்றோராற் கையாளப் பெற்று அங்கிகரிக்கப் பெற்ற ஒழுக்கமாம். இதனையே ஆன்றோர் ஆட்சி என்பர்.

**மூவகைச் சாட்சியம்**

ஆவணம் என்பது, ஒரு வழக்கைத் தீர்மானிக்க உதவும் சுவடி ஓலை முதலிய எழுத்துச் சீட்டுகள். அயலார் காட்சி என்பது, வழக்கு நிகழ்ச்சியைக் கண்டார் சொல்வது. இவை முறையே(Oral Evidence) வாய்மொழிக்கூறு என்றும்(Documentary evidence) இலிகிதக்கூறு என்றும் தற்கால ஆங்கில நீதி முறையில் பேசப் பெறும். அயலார் தங்கள் காட்சி என்பதனால் தாமே கண்டதே சான்றாகு மன்றிப் பிறர் கண்டதைக் கேட்டுப் பேசுவது சான்றாகாது என்று ஒதுக்கப்பெற்றதும் தெரியலாம். Hearsay is not evidence என்ற இந்நாள் விதியும் காண்க. ஆவணம் என்பவை அந்நாளில் ஓலைகளில் எழுதப்பெற்றன. அவைகளில் எழுதிக் கொடுத்தோர் பெயரும், எழுதிவாங்கிக் கொண்டோர் பெயரும், எழுதும் பொருளின் விவரமும் அடங்கும். இறுதியில் 'இதற்கு இவை என் எழுத்து' என்று எழுதிக் கொடுத்தோர் கையெழுத்தும் இடப்பட்டிருக்

கும். ஒப்பந்தங்களுக்குஇசைவுஎன்று பெயர்.இவ்வகை ஒப்பந்தங்கள் பண்டை வழக்கத்திற்கும் ஆட்சிக்கும் மாறுதலாகவும் இருக்கலாம். அவ்வாறு உலக ஒழுக்கத் திற்கு மாறுபட்டிருப்பினும் இசைவு சபையாருக்குத் தெளிவு பெறுத்தப் பெற்ருல், அதுவே தீர்மானிக்கப் படும். ஆட்சிக்கு விரோத மென்று ஒரு இசைவு வழக் கைத் தள்ளிவிட மாட்டார்கள். இசைவு வழக்கு என் பது இருவர் ஒப்பந்தத்தினைப் பற்றிக் கோரும் தீர் மானத்தை உட்கொண்டதாம். இவ்வழக்குகளைத்தான் Causes based on agreement என்று ஆங்கில முறை சொல்லும். இவ்வாறு எழுதிக் கொடுக்கும் இசைவு ஓலைகளுக்குச் சாட்சிக்காரர்கள் கையெழுத்துப் போடுவதும் வழக்கம். சாட்சிக் கையெழுத்துப் போடு பவர்க்கு 'மேலெழுத் திடுவோர்' என்று பெயராம். எழுதிக் கொடுத்தவர் இறந்துபட்டால் சாட்சிக்காரர் களின் கையெழுத்தையும் எழுதிக் கொடுத்தவரின் கை யொப்பத்தையும் வேறு சாதனங்களையும்கொண்டுஅவை அவையே என்று நிச்சயித்துத் தீர்ப்புக் கொடுப்பார் கள்.அவ்வாறு இறந்தோர் கையெழுத்துக்களை அவர் களுடையனதாம் என்று நிச்சயிக்கிறதற்கு அவர்களு டையன என நிச்சயமாய் அறிந்த வேறு கையெழுத்து ஓலைகளை வரவழைத்து இரண்டு கையெழுத்துக்களையும் ஒத்து நோக்கி நிச்சயிப்பதும் தீர்மானிப்பதும் அந்நாள் வழக்கு விசாரிக்கும் முறைகளில் ஒன்ருகும். இதனல் Comparison of handwriting and signatures என்று இந்நாள் ஆங்கில நீதி முறைக்காரர் கொண்டுள்ள விதிகள் பல்லாயிரம் ஆண்டுகளின் முன் அக்காலத்தே

தமிழர்கள் கையாண்ட விதிகளாக நாம் அறிகிறோம். இவ்வாறு கையெழுத்துக்கள் ஒத்துப் பார்ப்பதற்காக அந்தந்த ஊர்களில் உள்ளவர்களது கையெழுத்துக்களை யும் கையொப்பங்களையும் தனியாக ஊர்ப்பொது அரசாங்க நீதிச்சாலைப் பாதுகாப்பில் காப்பாற்றி வைக்கும் வழக்கமும் இருந்தது. இது இந்நாள் பத்திரப்பதிவு (Registration) இலாகாதார் செய்யும் முறையைவிட மேற்பட்ட முறையில் விளங்குவது காணலாம். இம் முறைகள் தடுத்தாட்கொண்ட புராணத்திலே சுந்தர மூர்த்திகளைப் பரமசிவனார் வல் வழக்கிட்டு வெண்ணெய் நல்லூர்ச் சபையிலே தமது ஆள் ஓலையைக்காட்டித் தம் பக்கம் தீர்ப்புப்பெற்று ஆட்கொண்டருளிய வரலாறுகளினாலும் பிறவற்றாலும் நன்கு அறியக்கிடக்கின்றது. ஊர்கள்தோறும் உள்ள நீதிமுறைச் சபைகளிலே தக்கோர் இருந்து செந்நெறியிலே நமர் பிறர் என்ற எவ்வகைப் பேதமும் ஒருபாற் கோடிப் பாரபட்சம்செய்தலும் இல்லாமல், இரு வகையும் ஒப்பநாடி நீதித்தீர்ப்புச் செய்துவந்தார்கள். அந்தச் சபைகளுக்கு கரணத்தான்(குமாஸ்தா clerk)ஒருவன்உண்டு. அவனே அந்தச் சபையார் ஏவலின்படி நீதி விசாரணைக் காரியங்களில் உதவிசெய்வான். அவனே நீதிமன்றத்தின் சுவடி முதலியவற்றைக் காவல் புரிபவன். அக்காலத்து நீதி முறையைப் பற்றிச் சிவஞான முனிவர்,

"வேதிய னாளாமோ என்னாது வெண்ணெநல்லூர்ச்
சோதிவழக் கேபுகழ்ந்தாய் சோமேசா"

என்று விதந்து உதாரணங் காட்டியருளினார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் நீதிமுறை காட்டும் பாட்டுகள் மேலே நாம் கண்ட முடிபுகளை வற்புறுத்துவன.

"அந்தண ரவையின் மிக்கார் மறையவ ரடிமை யாதல்
இந்தமா நிலத்தி லில்லை யென்சொன்ன யையா வென்றார்
வந்தவா றிசைவே யன்றோ வழக்குஇவன் கிழித்த வோலை
தந்தைதன் தந்தை நேர்ந்த தென்றனன் தனியாய் நின்றான்"
—தடுத்தாட்கொண்ட புராணம் - 52.

எனவும்,
"இசைவினு லெழுது மோலை"

எனவும்,

"இவ்வுல கின்கண் நீரின் றிவரை நும் மடிமை யென்ற [டும்'
வெவ்வுரை யெம்முன் பேற்ற வேண்டுமென் றுரைத்து மீண்

எனவும்,

" ஆட்சியி லாவணத்தி லன்றிமற் றயலார் தங்கள்
காட்சியின் மூன்றி லொன்று காட்டுவா யென்ன முன்னே
மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூல வோலை
மாட்சியிற் காட்ட வைத்தே னென்றனன் மாயை வல்லான்"
—தடுத்தாட்கொண்ட புராணம் - 55.

எனவும்,
"அருள்பெறு கரணத்தான்"

எனவும்,

" அருமறை நாவ லாதி சைவனு ரூரன் செய்கை [பால்
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு மென்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னே ழுத்து"

எனவும்,

(அந்நாள் இசைவு ஓலை எழுதும் வாசகம் இதனில் நன்கு தெரிகிறது.)

"............மற்று **மேலெழுத் திட்டார்கள்**
ஆசிலா எழுத்தை நோக்கியவையொக்கு மென்றபின்னர்"

(Attestation proved) எனவும்,

"தந்தைதன் தந்தை தானவே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தவா வணத்தி னோடு மெழுத்துநேர் ஒப்பு நோக்கி"

(Comparison with other admitted signatures) எனவும்,

"மருண்டது தெளிய மற்ற மறையவ னெழுத்தா லோலை"

(Admitted Signatures) எனவும்,

"**அரண்தரு** காப்பில் வேறுன் றழைத்து"

(Safe and proper custody) எனவும்,

"உடன் ஒப்புநோக்கி **(Comparison)**, இரண்டு மொத்
திருந்ததென்னே யினிச்செய வில்லை யென்றார்"

எனவும் வருவன காண்க.

பனையோலைகளில் எழுதின இலிகிதங்கள் (தஸ்தாவேஜிகள்) கொண்டு குடிகளின் உரிமைகள் இவ்வாறு நீதிச்சபைகளில் விசாரிக்கப்பெற்று முறை செய்த ஒழுங்கானது, இந்நாள் நமது ஆங்கில அரசாட்சியிலே தான் நாம் இவ்வாறு சாட்சிச்சட்டம் முதலிய நீதி முறை ஒழுங்குகளைப் பெற்றுள்ளோம் என்று கருதும் மாக்களுக்கெல்லாம் வியப்பையே விளைவிக்கும்.

இவ்வாறு நீதி செலுத்தும் சபைகளும் சமூக சபைகளும் ஊர்கள் தோறும் இருந்தன. இவைகள் அவ்வவ்வூர்களைப் பொறுத்து எல்லா அரசாங்க அதிகாரங்களையும் செய்து வந்தன. இப்படித் தாமே தமது நீதி பரிபாலன முதலியவற்றைச் செய்துவந்த அவ்வவ்வூர்

**ஊர் நீதி மன்றங்கள்**

கள் அங்கங்கே சிறுநாட்டுப் பகுதிகளிலே சேனை முதலிய அரச அங்கங்கள் கொண்டு நின்ற சிற்றரசர்களுடைய அதிகாரத்தின்கீழ் நின்றன. அந்தச் சிற்றரசர்கள் தாம் தமக்கு விதித்த திறைகளை அளந்து கொடுத்துப் பேரரசாகிய முடியரசுக்குக் கீழ்ப்பட்டு நின்றார்கள். திருநாவலூரிலே சுந்தரமூர்த்திகள் கலியாணத்தில் வழக்கு நேரிட்டபோது அங்கு மணப்பந்தலிலே கூடியிருந்த மறையவர்கள் வழக்கு மேலிட்டு வந்தவேதியரைப் பார்த்து,

"பெருமுறை யுலகி லில்லா நெறிகொண்டு பிணங்கு கின்ற
திருமறை முனிவ ரே!நீர் எங்குளீர் செப்பு மென்றார்"

அதற்கு அவர் 'நான் வெண்ணெய்நல்லூரி லிருப்பவன்' என்று சொல்லக்கேட்டு 'உன்பிழைநெறி வழக்கைப் பேச அங்கே போவோம் வா' என்று கூப்பிட்டனர். அதற்கு அவர் 'வெண்ணெய் நல்லூரிலே நீ போந்தாலும் நலமே' என்று சொன்னார் என்பது சரிதம். ஆதலின் திருநாவலூரில் மேலிட்ட வழக்கு பிரதிவாதியின் இடமாகிய அவ்வூரிலேயும் வாதியின் இருப்பிடமாகிய ஊரிலேயும் இரண்டிடத்தும் தீர்க்கத்தக்கதாக விருந்ததென்று தெரிகின்றது.

**வழக்குழலமும் விசாரிக்கு மிடமும்**

இந்நாள் அரச சட்டத்திலும் வழக்குகள் அவற்றின்மூலம் நிகழ்ந்த இடத்திலும் பிரதிவாதி இருக்கு மிடத்திலும் விசாரிக்கப்படுதல் ஒப்பு நோக்கத்தக்கது. ஆயின் இது வெளிப்படையாய் அநீதியாய் உலகிலில்லா வழக்காயிருந்தமையின் வெண்ணெய் நல்லூரிலே போனால் வாதியை அறிந்த ஊர்ச்சபையார் இதனை இலகுவில்

ஒழுங்கு செய்வர் என்று ஒரு வேளை எண்ணி அம்மறை யோர் அவரை அங்கு கூப்பிட்டார்கள் போலும். திரு

**ஒப்புதலின் பேரில் தீர்ப்பும் பிரமாணஞ் செய்யச் செய்தலும்**

நீலகண்ட நாயனருக்கும் வேதியர்க்கும் ஒப்பி வைத்த (பொருள்) ஓட்டினைக் காணுமற் போக்கிய வழக்கு (Breach of trust) நேர்ந்தபோது அதனைத் தில்லையிலுள்ள சபையோர்கள் உபய வாதிகளாகிய இருவரையும் கேட்டுப் பிரதிவாதி ஒப்புதலினாலே,

" திருவுடை யந்த ணாளர் செப்புவார் திகழ்ந்த நீற்றின்
உருவுடை யிவர்தாம் வைத்த வோட்டினைக் கெடுத்தீ ராஞல்
தருமிவர் குளத்தின் மூழ்கித் தருகவென் றுரைத்தா ராகின்
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே"

—திருநீலகண்ட நாயனுர் புராணம் - 35.

என்று தீர்மானித்தனர். எனவே பிரமாணத்தின் பேரில் வழக்குத் தீர்த்தலும் பிரதிவாதி வாதியின் வழக்கை

**சிறுவர் செய்யும் குற்றத் தீர்வு**

ஒப்பியபோது வாதி கேட்கிறவாறு சத்தியம்செய்யவேண்டியதும் முறையா யிருந்தது. சண்டீச நாயனர் பாலைக் கறந்து மணலில் ஊற்றியது கண்டு அத்திறத்தை யறியாத அயலா னொருவன் அப்பதியில் அந்தணாளராகிய கிராம சமுதாயச் சபையார்க்கு அறி விக்க, அவர்கள் அவர் தந்தையாகிய எச்சதத்தனை வா வழைத்து விசாரித்தார்கள். அவன் அது கேட்டு 'இது சிறுவன் செய்த பிழை. இதனை நான் இதற்குமுன் சிறிதும் அறிந்திலேன். முன் நடந்துபோன குற்றத் தை நீங்கள் பொறுக்க வேண்டும். இனியும் அக்குற்றம்

(பக்கம் 9)



சேக்கிழார் நாயனர்

சோழநாட்டுத் திருநாகேச்சுரத்தில் உள்ள திருவுருவம்.

(தாயார் வலப்புறமும் தம்பியார் இடப்புறமுமாகத் தாபிக்கப் பெற்றுள்ளார்கள்.)



சிதம்பரம் - கீழ வீதி - ஆக்ம சிவப்பிரகாசர் மடாலயம் - முன்பார்வை - சேக்கிழார் சுவாமிகள் தங்கியதாகச் சொல்லும் மடாலயம்.



பாலருவாயர் குளம்.

(பக்கம் - 7)

நிகழ்ந்தால் நானே அக்குற்றத்திற்குள்ளாவேன்' என்று கேட்டுக்கொண்டபடி சபையோர் இசைந்தார்கள். எனவே, சிறியோர் செய்த பிழைக்குப் பெற்றோரை விசாரித்துப் பொறுப்பாளியாக்குதலும் அந்நாள்வழக்கமாயிருந்தது எனத் தெரிகிறது. சிறுவர் செய்யும் பிழைக்கு ஒருவரையும் பொறுப்பாக்காத இந்நாட் சட்டமுறையோடு இதனை ஒப்பு நோக்குக.

---

## இல்வாழ்க்கையும் இல்லற நிலையும்

இனி அந்நாள் இல்லறம், இல்வாழ்க்கைத் திறங்களைப்பற்றிப் பெரிய புராணத்திலிருந்து தமிழ் மக்கள் கொண்டனவாகக் கண்ட பொருள்களிற் சில பேசுவேன். ஒரு பெண்ணை மணஞ் செய்ய வேண்டுமாயின் பெண் கேட்பதற்காகப் பெண்ணைப்பெற்றோரிடம் மணமகன் வீட்டார்கள் சில பெரியோரை அனுப்பி இன்ன மகனுக்கு நும்மகளைத் தருதல் வேண்டுமென்று கேட்பர். புகழனரிடம் கலிப்பகையார்க்குத் திலகவதியம்மையாரை மகட் கொள்ளவேண்டி மேலோரைச் செல்லவிட்டார். புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியாரிடம் திருநாவலூரராகிய சுந்தரமூர்த்திகளுக்குக் கன்னி மணத்திறஞ் செப்பி விட்டதையும் காண்கின்றோம். திருஞான சம்பந்தருக் கேற்றகுலத்தோ டிசைந்த திருப்பெருமண நல்லூர் நம்பாண்டார் நம்பிகளிடம் தந்தையாகிய சிவபாத விருதயரும் சுற்றத்தாரும் சென்று

**பெண் பேசுதல்**

'உம்பால் மகட் பேச வந்தோம்' என்று அறிவிக்க, அவரும் 'எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தரு கின்றோம்' என இசைந்தார். பெண் பேசும்போது அவர் குலம் கோத்திரம் குணம் முதலியன ஆராய்ந்து ஏற்றவாறு இசைவு கொள்ளுதல் மரபாகும். சுந்தர மூர்த்திகளாகிய "தந்தனித் திருமகற்குச் சைவ அந் தணர் குலத்துட் டங்கள் அரும் பெரு மரபுக் கேற்ப வந்ததோர் சிறப்பிலே" உள்ளவர் என்று கருதியே சடங்கவி சிவாசாரியார் மகளைச் சடையனர் பெண் பேசினர். கலிப்பகையாரும் ஒத்த குல முதல் வேளாண் குடியிலே உள்ளாரெனக் கண்டே புகழனு ரிடம் திலகவதியம்மையாரை மகட் கொள்ள வேண்டி னர். அவரும் அவ்வாறு பேசி வந்த மேலோரிடம் குணம் பேசிக் குலம் பேசியே அதன் பின் மணம் நேர்ந்தார். குலத்திற்கு முன்னே குண நலமே ஆராயப் பெற்ற தாகும். இக்குண நலன்களாவன முதலாவது உயிர்க் குணமும், அதன் பின்பாகவே உடற் குணங்களும் ஆகும். மணமகன் ஈசுரபத்தி உடையராதலே முதலிலே தேர்ந்தார்கள். அதன் பின்பு அவர் உத்தியோக முறையும், பின்பு அவர் ஆண்மை உடலழகு முத லியவையும் தேரப்பெற்றன வாகும். இக்காலத்து மணம் பேசுவோர் தேரும் வியாபார முறையை இதனேடு ஒப்புநோக்கலாம்.

குணம் குலம் பேசுதல்

"மின்னர்செஞ் சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னரு மணிமவுலிப் புரவலன்பால் அருளுடையார்"

"ஆண்டகைமைத் தொழிலின்கண் அடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையா ரெனும்பெயரார்"

எனவரும் திருப்பாட்டுக்களா லுணர்க. மகட்பேச வந்த போது முதியவர்களாகிய இருதிறத்தின் குல் முதலறிவின் மிக்கார் கோத்திர முறையுந் தேர்வதும் முறைப்பட்ட வழக்கமாம். இவ்வாறு மகட்பேசும் முறையைக் காரைக்காலம்மையார் சரித்திரத்தும் பிறஇடத்தும் காணலாம். பன்னிரண்டு வயதே பெண்களுக் குரிய மணவயதா யிருந்தது.

**விவாக வயது**

"அந்நாளிற் றிலகவதி யாருக்காண்டு **ஆறிரண்டின் முன்னுக**"

—**திருநாவுக்கரசுநாயனர் புராணம் - 22.**

"நல்லவென வுறுப்பிநூ லவருரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினல்
**இல்லிகவாப் பருவத்தில்** இவர்களமர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்"

—**காரைக்காலம்மையார் புராணம் - 6.**

என் று தெரிகின்றோம். இல்லிகவாப் பருவமாவது,பெண்கள் உரிய பருவமடைந்து தமது பெண் தன்மையை அறியும் பக்குவமாகும் காலம். இது வரவே, பெண்களை அதன்பின் வெளியிற் புகவிடாமல் வீட்டிலேதானே இருக்கும்படி செய்வதும் தமிழ் மக்கள் மரபாகும். 'இற்செறி வறிவித்து வரைவு கடாதல்' என்ற அகப் பொருட்டுறையின் கருத்தும் இங்கே காணத்தக்கது. தலைவியினது அவயவ நலங்களை உற்றுநோக்கி "மெல்லியலைப் போய விளையாட லென்றுள் எம்மன்னை" என்று தோழி வாக்கில் வைத்துக் கூறும் திருக்கோவையும் காண்க. பெண்களுக்குப் பன்னிரண்டு ஆண்டும் ஆண்

மக்களுக்குப் பதினாறு ஆண்டும் மணப் பருவ வயதாகக் கொண்டது அந்நாள் தமிழர் வழக்கென்பது தமிழ் இலக்கண வரம்பாகும். அவனும் பதினாறாட்டைப் பிராயத்தனாய் அவளும் பன்னீராட்டைப் பிராயத்தளாய் என்னும் இறையனாரகப் பொருளுரையுங் காண்க.

இவ்வாறு மகட்பேசிப் பெண் பெற்றோர் மண மிசைந்தபின் அதனைக் கேட்ட மணமகன் வீட்டார்கள் மணத்திற்கு நன்னாட் குறித்து ஓலை யெழுதிப் பெண் வீட்டார்க்கு விடுப்பர். கலியாணத் திருநாளும் ஓரையும் கண்டு கணித மங்கல நூலவர் வகுத்துச் சொல்வர்.

மணவோலை கொண்டு செல்லுதல் - மணநாள் வகுத்தல்

"திருமணஞ்செய் கலியாணத் திருநாளுந் திகழ்சிறப்பின்
மருவியவோ ரையுங்கணித மங்கலநூ லவர்வகுப்பப்
பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப்பா லிகைவிதைத்தார்"
—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - 1169.

இவ்வாறு எழுதிய மணவோலையை ஏந்தி அங்கயற் கண்ணினாரும் ஆடவர் பலரும் சேர்ந்து மங்கலம் பொருந்த மணமகள் வீட்டிற்குக் கொண்டு செல்ல அதனை எதிர்கொண்டு வந்து பங்கய வதனிமாரும் மைந்தரும் பணிந்து ஏற்றுக் கொள்வர். அதன் பின்னே மணவினைகள் தொடங்கப் பெற்று மண நாளுக்குமுன் ஏழாம் நாள் நீண்முளை சாத்துவார்கள். இதற்காகச் சுற்றத்

மணச் சடங்குகள் - முளைசாத்துதல் - மண எழுச்சி

தார்கள் கூடி வீடும் தெருவும் நகரும் அலங்கரித்துப் பல வாத்தியங்கள் ஒலிக்கப் பாலிகைகளில் முளைதெளித்துக் கொண்டாடுவர். அதன்பின் திருமண வினைகள் இரண்டு வீடுகளிலும் நிகழ்ந்து கலியாண நாளுக்கு அடுத்த முன் னாளிலே மணமகன் தன்வீட்டிலே காப்பு நாண் பூண்டு கொண்டு சுற்றத்தார் பெண்கள் ஆடவர் முதலியோர் சூழ, மண எழுச்சியாகச் சிறக்கச் சென்று பெண்வீடு சேர்வர்.* இவற்றை,

"மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னாளில்
பன்மணிமங் கலமுரசம் பல்லியங்கள் நிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார்"

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் - 1173.

என்றும்,

'புணர்மணத் திருநாள் முன்னாள் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொனாண் காப்புச் சேர்த்தார்'

—தடுத்தாட்கொண்ட புராணம் - 12.

என்றும்,

"மாறி லாநிறை வளந்தரு புகலியின் மணமீக்
கூறு நாளின்முன் னாளினில் வேதியர் குழாமும்
நீறு சேர்திருத் தொண்டரும் நிகரிலா தவருக்(கு)
ஆறு சூடினர் அருட்டிருக் காப்புநா ணணிவார்"

—திருஞானசம்பந்த நாயனர் புராணம் - 1182.

எனவும் வரும் திருப்பாட்டுக்களால் அறிகின்றோம்.

* இவ்வாறு மணத்தின் முன்னர்த் தனித் தனி முளை சாத்திக் காப்புச் சேர்த்தி மண எழுச்சி செல்லும் வழக்கம் இந்நாளிலும் தொண்டை நாட்டுச் (செங்கற்பட்டுச் சில்லா விலே) சூளும்பேடுச்சமீன் முதலிய பழங்குடும்பங்களின் மணங் களிற் காணலாம்.

இது போலவே, மணத்தின் முன்னர் மணமகளுக்கும் காப்புநாண் அணியப் பெறும்.

"கற்பகப் பூங்கொம் பன்னூர் தம்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்கு முன்னுப் புரிவுடன் செய்த வேலை"
—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் - 1222.

**மணப்பந்தர் - நீர்வார்த்துக் கொடுத்தல்**

திருமணத்துக்குத் தனியிடம் அமைக்கப் பெறும். அதற்கு ஆதிபூமி யென்று பெயர் "ஆதி பூமியினுட் புக்கார்" (திருஞானசம்—1230). மணமகன் காப்பு நாணுடன் பவித்திரமுங் கையில் அணிவன். (தடுத்தாட் - 17) மணமகன் குதிரையின் மேலாவது சிவிகையிலாவது வருவான். மணஞ்செயிடத்தே மணமகன் பாதங்களைப் பெண்பெற்றவர் தமது மனைவியார் வெண்பாலும் தூயநீரும் ஏந்தி வார்க்க, மணமகனைச் சிவபெருமானுகக் கருதி விளக்குவர். அதன்பின் தனது கோத்திரமும் குலமும் எடுத்துக் கூறி 'என் பெண்ணை இம்மணமகனுக்குக் கொடுத்தேன்' என்று மகட் பெற்ருர் மணமகன் கையிலே *கரக நீர்வார்த்துக் கொடுப்பார். அதன்பின் பெண்ணை அலங்கரித்து அழைத்து வந்து மணமகன் வலப்பக்கத்தே வைப்பர். பின்னர்த் தீ வளர்த்து மணவினைச் சடங்குகள் செய்து வெண்பொரியை அதில் இட்டு அதனை வலம் வருவர். இவற்றின் விரிவுகளும் வரலாறும் திருஞானசம்பந்த நாயனர் புராணம், தடுத்தாட்கொண்ட புராணம் முதலியவற்றிற் காண்க.

---

*கரகம் = மூக்குவைத்த சிறு பாத்திரம் - இதுவே கன்னல் - குண்டிகை - கெண்டில் என்றும் வழங்கப்பெறும்.

தாய்தந்தையர்களே தமது பெண்ணை ஒருவர்க்கு மணம்பேசிக்கொடுக்க உரியவர்கள். அவர்கள் இசைந்து விட்டால் அதுவே மணத்தின் உள் ளுறையாகிய உயிர்ப்பொருத்தம் நிகழ்ந்துவிட்டமைக்கு அறிகுறியாகக் கருதப்பெற்றது. பின்னர்ச் செய்யப்படும் மணவினைகள் அதனைக் காட்டும் வெறும் வெளிச் சடங்குகளாகவும் உடற்பொருத்தம் நிகழ்வதற்கு ஏதுக்களாகவுமே கருதப் பெற்றன. இது, திலகவதி யம்மையார்,

**மன இசைவும் சடங்குகளும்**

"எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்க
அந்தமுறை யால்அவர்க்கே யுரியதுநான் ஆதலினல் [ள்
இந்தவுயிர் அவருயிரோ டிசைவிப்பன் எனத் துணிய"

என்றமையினல் விளங்கும். இதுவே அந்நாள் தமிழர் கொண்ட உயர் குறிக்கோளாகும். இதனை இந்நாளிலே ஒரு கணவன் இறந்தபின் அல்லது ஒன்றன்பின் ஒன்ருய்ப் பல கணவர் இறந்த பின்னர் மேலும் பெண்கள் மணஞ் செய்து கொள்ளுதல் தகும் எனவும், மணமக்கள் மணமானபின் இல்வாழ்க்கையிலே மனமிசைவு நீங்கியபோது மணத்தை ஒழித்து வேறு மணஞ் செய்தல் தகும் எனவும் வாய்போன போக்கிலே மனம்போன போக்கிலே பலவாறு பேசி நடக்கும் இக்கால மிருகப் பிராய மாக்கள் கொள்கையொடு ஒத்து நோக்கத் தக்கதாம். கணவன் இறந்தால் கணவனுடன் மனைவியும் இறந்துபடுவே தாகிய உடன் கட்டையேறி உயிர் நீத்து அவரை யடைதலும் அப்படிக் கல்லாமல் கைம்மை நோன்பு பூண்டு உயிர் தாங்கித் தவம்செய்தலும் அந்நாள் தமிழர் மேற்கொண்ட வழக்கங்களாம். திலகவதியம்மை

யாரின் தாயாகிய மாதினியார் தமது கணவராம் புகழனுர் இவ்வுலகைவிட்டவுடனே "சுற்றமுடன் மக்களையுந் துகளாகவே நீத்துப், பெற்றிமையா லுடனென்றும் பிரியாதவுலகெய்துங், கற்புநெறி வழுவாமற் கணவனுருடன்சென்ருர்" எனவும், திலகவதியார் "தம்பியா ருளராக வேண்டுமென வைத்த தயா" வினுல், "உயிர் தாங்கி அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி, இம்பர் மனைத்தவம் புரிந்து" இருந்தார் எனவும், வரும் வரலாறுகளால் இவ்விருவழக்கங்களும் இனிது விளங்குகின்றன. எல்லா உயிர்களிடமும் அன்பு பூண்டு வீட்டிலே தவம் செய்திருத்தலும் திருக்கோயில் விளக்குதல், மெழுகல், விளக்கிடுதல், பூத்தொடுத்தலாதி திருப்பணி செய்தலும் கைம்மை நோன்பு பூண்டார் செய்தொழிலாம் என்பது திலகவதி யம்மையார் சரிதத்தால் தெரிகின்ருேம்.

**உடன்கட்டையேறுதலும் கைமை நோன்பும்**

மகட்பெற்றவருக்கு வேறு ஆண்பெண் மக்க ளில்லாமற் போனுல் மணமகனையே மகனுகக்கொண்டு, தமது ஊரில் வேருகக் குடி வைத்து இல்வாழ்வு நடத்துமாறு செய்து போற்றிக்கொள்ளுதலும் வழக்கமாமென்பது,

**மணமகனையே மகனுகக் கோள்ளல்**

"தங்கள்குடிக் கொருபுதல்வி யாதலினுற் றனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க வணிமாட மருங்கமைத்தான்"

என்று காரைக்கா லம்மையார் சரித்திரத்தில் தெரிகின்ருேம். பெண்கள் உடல் நலங்களைத் தம் கணவர்க்காகவே தாங்கி நிற்பர் என்று 'இவனுக்காகத் தாங்கிய

வனப்பு நின்ற தசைப்பொதி' என்னும் திருப்பாட்டு அறிவிக்கின்றது.

இல்வாழ்க்கையில் பெண்களுக்குப் பெரிய உரிமையும் உயர்வு மிருந்தன. 'இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகட'த்தைத் தமிழர் 'மருவிய காதல் மனையாளும் தானு'மாய் இருவரும் பூண்டு இழுத்துச் சென்றனர். மனைவியே வீட்டுக்குத் தலைவியாயினள். அது காரணம்பற்றியே

**இல்வாழ்க்கையிற் பெண் மக்கள் உரிமை**

அவளுக்கு இல்லாள் - மனைவி - மனையாட்டி முதலிய காரணப் பெயர்கள் வந்தன. அவள் ஆலோசனையின்படியே வீட்டுக் காரியங்கள் யாவும் நிகழ்ந்தன. மனைவியரே தம் கணவர்க்கு வாழ்க்கைத் துணைவியராய் இருந்தனர். பெண்களின் அறியாமை அடிமைத்தனம் என்றெல்லாம் இக்காலம் பேசும் வெறும்பேச்சு அந்நாள் தமிழர் வாழ்க்கையிற் கேட்க முடியாது. 'முன்பு இங்கு நமக்கு உணவில்லை யாயினும் தீரவே பசித்தடைந்த இவ்வடியார்க்கு அமுது அமைக்குமாறு எங்ஙனம்?' என்று இளையான் குடிமாறனார் தமது மனைவியாரைக் கேட்கின்றமையும், அவர் சொல்லியபடி சென்று அந்நாள் பகலிலே விதைத்த நெல்

**இளையான் குடிமாற நாயனர் மனைவியார்**

முளையை அவர் வாரிக்கொண்டு வருதலும் விறகுக்காக வீட்டின் கூரையை அறுத்து வைத்தலும், 'கறிக்கினி யென்செய்கோ'மென்று கேட்ட மனைவியார்க்கு மாறனார் கொல்லைக் குறுங்கீரைகளைப் பறித்துக் கொடுத்தலும், அவற்றை அவர் விருப்புடன் தமது பழைய கைப்பழக்

கத்தால் வேறு வேறு கறியமுதாக்கிக் கணவனுர்க்குக் காட்டிய பின்பு இருவரும் அடியவரை அமுது செய்ய அழைத்தலும், தமிழ் மக்கள் இல்வாழ்க்கை நடத்தும் திறத்தினையும் மனைவியர்க்கு அதில் இருந்த ஏற்றத்தை யும் உரிமையையும் இனிது விளக்குவனவாம்.

அடியவரை உபசரிப்பதே யன்றிக் குடும்பப் பாது காவலுக்கும் மனைவியே பொறுப்பாளியா யிருந்தாள்.

**குங்குலியக் கலயநாயனுர் மனைவியார்**

"தனங்கள் மாளப் பயில் மனைவாழ்க் கை தன்னின், மன்னிய சுற்றத்தோடு மக்களும் வருந்திய" போது குங்குலியக் கலய நாயனுரின் மனைவியார் "யாதொ ன்று மில்லையாகி யிருபக லுணவு மாறிப்,பேதுறு மைந்த ரோடும் பெருகு சுற்றத்தை நோக்கிக்" கணவனுர் கையிலே தமது மங்கலநூற் ருலியைக் கொடுத்து அதனை மாறி நெல்வாங்கி வருமாறு சொல்லினுர் என்ப துவும், அதுகொண்டு அவர் நெல் வாங்காது எதிர்வந்த குங்குலியத்தை வாங்கிக் கோயில் சேர்க்கவே, சிவபெரு மான் மனைமுழுதும் பெருஞ் செல்வமாகச் செய்து முத லிலே மனைவியார்க்கு அறிவித்ததுவும் இங்கே உற்று உணர்தற் பாலனவாம். அப்பர் சுவாமிகள் தமது திரு மனையில் அமுதுசெய்ய இசைந்தபோது அப்பூதியார் தமது திருமனைவியாரை நோக்கி 'எப்தியபேறு நம்பால் இருந்தவாறுதான் என்னே! இது சிவபெருமான் திரு வருளினுல் கிடைத்தது!' என்று சொல்ல, அதனை உவப் புடன் உட்கொண்டு அவரும் திருவமுதும் தூயநற்கறி களும் அறுவகைச் சுவையாலும் ஆக்கிச் சிந்தைமிக்குத் திருவமுது எடுத்து நல்கினுர் எனபது சரிதம். இனிச்

சிறுத்தொண்ட நாயனுர் சரிதத்திலே பார்த்தால் இவ்வியல் முழுதும் நன்கு விளங்கும்.

**திருவெண்காட்டு நங்கையார்**

சிறுத்தொண்டர் மனைவி வந்த உத்தராபதியார் மனைக்கடையில் வந்து நின்று "தொண்டனுர்க் கெந்நாளும் சோறளிக்கும் திருத்தொண்டர்இம்மனைக்குள்ளாரோ?" என்று கேட்க 'அவர் தொண்டர்களைத் தேடி வெளியே போயிருக்கின்றார். தேவரீர் வீட்டினுள் எழுந்தருளியிருப்பீராக' என்றுசந்தனத்தாதியார் சொல்லவும், உத்தராபதியார், 'பெண்கள் இருக்குமிடத்தே தனி புகுதோம்' என்று சொல்லிப் போகப் புறப்படுகின்றார். அதைக்கேட்டு உள்ளே யிருந்த மனைக்கட னுடைய வெண்காட்டு நங்கையார் கடைத்திருத்தலையில் வந்து, 'அடியாரை அமுது செய்விக்க இன்றைக்கு ஒருவரையுங் காணுது தேடிச் சென்றனர் எமது கணவர். இங்கு எழுந்தருளிய உமது திருவேடத்தைக் கண்டாற் பெரிய பேறு என மிக மகிழ்வர். இனித் தாழாமல் இப்போதே அணைவர். தேவரீர் எழுந்தருளியிரும்' என்று உபசரிக்கின்றார். அதற்கும் அவர் மறுத்துப் போகவே, கணவர் வந்தவுடன் திருவேடத் தொருவர் வந்தபடியை அறிவிக்கின்றார். பின்னர்க் கணவர் பயிரவரிடம் போய்த் திரும்பியபோது இன்பம் பெருக மலர்ந்த முகங் கண்டு மாதவத்தோர் செயலை வினவிக் கேட்டு அவர் நினைக்கும் வகை அவர்க்கு அமுது அளிக்க ஒரு குடிக்கு ஒருபிள்ளையாய்ப் பெறுதல் எங்ஙனம் என்று கேட்கின்றார். கணவனுர் தாழாமே "எனை இங்குய்ய நீ பயந்தான் றன்னை யழைப்போம்" என்று சொல்லக் கேட்

டலும், உடனே உவப்புடன் இசைந்தனர். அவ்வாறு வந்த மகனை நீராட்டி அலங்கரித்துத் தலை யரிவதற்கு "இனிய மழலைக் கிண்கிணிக் காலிரண்டு மடியின் புடையிடுக்கிக்" கையிரண்டும் கையாற் பிடிக்கின்றார். அதன் பின்னர்க் கணவனாரின் அருமை உயிரை எனக்களித்தான் இம்மகன் என அக மலர்கின்றார். அதன் பின் தலைவர் பணி தலை நிற்பாராய்ச் "செய்ய மணியே! சீராளா! சிவனா ரடியார் யாம் உய்யும் வகையால் உடன் உண்ண அழைக்கின்றார்" என்று ஓலமிட்டு அழைக்க, ஓடிவந்த புதல்வனை எடுத்துத் தழுவி முன்னணைத்துக் கணவனார் கையிற் கொடுக்கின்றார் என்பன வெல்லாம் காண்கின்றோம்.

இல்வாழ்க்கையில் சுற்றந் தழுவுதலிலும் அடியார் பூசையிலுமேயன்றி இறைவன் பூசையிலும் மனைவிமார்கள் ஏற்றமான பங்கும் உரிமையும் பெற்றிருந்தார்கள். அரிவாட்டாய நாயனார் மனைவியார் ஆனைந்து (பஞ்ச கவ்வியம்) ஏந்திக்கொண்டு கணமங்கல மமர்ந்தார் பூசைக்குக் கணவருடன் செல்கின்றார். ஒருமை யன்புற்ற முறைமையால் வரும் பூசைக்கு முற்றவேண்டுவன குறைவறக்கொண்டு திருநீல நக்க நாயனார் மனைவியார் தமது கணவனார் கூடவே இறைவர் கோயிலுக்குச் சென்று அங்கு அவருடன் பூசனையிலே இணைய நின்று பூசனைக்கு வேண்டுவனவற்றை ஏந்தி நிற்கின்றார். இவ்வாறே மற்ற சரிதங்களிலும் கண்டு கொள்ளலாம். மனைவி, இல்லாள் என்ற பெயர்களே வீட்டுக்குடையவள் என்ற உரிமையைத் தமிழ்ப் பெண்மக்களுக்குக் கொடுத்தது அதனை யெடுத்துக் காட்டி நிற்கிறது.

ஆயின் இவ்வுரிமைகளும் பெருமைகளும் தமிழ் மனைவியர் தங்கள் கணவரைத் தெய்வமாய் நினைத்து வழிபட்டு அவர் வழி நிற்றலுக்குச் சிறிதும் இடையூறு செய்ததில்லை.

**கணவன் வழி நிற்றல் கற்பின் திறம்**

இயற்பகை நாயனார் தம் மனைவியாரை நோக்கி "உனை இன்று இம்மெய்த் தவர்க்கு நான் கொடுத்தனன்" என்ற போது, அம் மனைவியார் முதலிற் கலங்கிப் பின்னர்க் கற்பின் திறம் நினைந்து தெளிந்து "இன்று நீர் எனக்கருள் செய்தது இதுவேல் என்னுயிர்க்கு ஒரு நாதர் நீர் உரைத்தது ஒன்றை நான் செய்யு மத்தனை யல்லால் உரிமை வேறுளதோ" என்று சொல்லி வணங்குதல் காண்கிறோம். திருநீலநக்க நாயனார் மனைவியார் இறைவர் திருமேனியில் விழுந்த சுதைச் சிலம்பியைப் போகும் படியாக இளங்குழவி மேல் விழுந்ததைத் தாய்மார் விரைந்து வாயால் ஊதி அகற்றுவது போல் அன்பினால் ஊதித் துமிந்தார். அது கண்டு நாயனார் அனுசிதமென்று கொண்டு 'பெருமான் மேல் வாய்நீர் பட முயன்றாய்; உன்னை யான் இனித் துறந்தனன்' என்றபோது, மனைவியார் அந்த ஏவல் வழியே நின்றவராய் ஒரு புறம் நீங்கி அஞ்சும் உள்ளமோடு அவரிடத்து அணைய மாட்டாராகிக் கோவிலிலேயே அன்றிரவு தங்கினதும், பின்னர் இறைவனே கனவில் திருமேனி காட்டி நாயனார்க்கு மனைவியார் பெருமையை உணர்த்த, அவர் உணர்ந்ததையும் கேட்கின்றோம்.

பிள்ளைகளுக்குத் தாம் வழிபடும் தெய்வங்களின் பெயரை வைத்து வழங்குவது அந்நாள் மரபாகும்.

**பிள்ளைகளுக்கு வழிபடு கடவுளின் பெயரிடல்**

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூர் இறைவன் பெயரை இட்ட காரணத்தால் அவருக்கு ஆரூரர் என்று பெயர் வந்ததென்பது அவர் திருவாக்காலேயே தெரிகின்றோம்.

அம்மான்தன் திருப்பேர்கொண்ட தொண்டன் ஆரூரன்
—பண் - தக்கேசி - திருவாரூர் - 11.

எனவும்,

சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்
—பண் - சீகாமரம் - திருவன்பார்த்தான் பனங்காட்டூர் - 10.

எனவும்,

சீராருந் திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்
—பண் - சீகாமரம் - திருவெண்பாக்கம் - 11.

எனவும்,

ஆரூர்த் திருமூலட்டானத்தே யடிப்பே ராரூரான்
—பண் - செந்துருத்தி - திருவாரூர் - 10.

எனவும் வரும் தேவாரங்கள் காண்க. காரைக்காலம்மையாரின் கணவனாகிய பரமதத்தன், அவரை ஒரு தெய்வ அணங்கென்று கருதி நீத்துப் பாண்டி நாட்டில் ஒரு பட்டினத்துச் சென்று மறுமணஞ் செய்து வாழ்ந்து ஒரு மகளைப் பெற்றான். முன்மணந்த அம்மையாரை வெளிக்காட்டாத வழிபடு கடவுளாகவே உள்ளன்பு கொண்டு எப்போதும் நினைந்து ஒழுகினனாதலாலே அம்மகவுக்கு அவர் பெயராகிய புனிதவதியார் என்ற திருநாமத்தை யிட்டான். அதை அவன்

சுற்றத்தாரிடம் "மானிடம் இவர்தாமல்லர், நற்பெருந் தெய்வமாதல் நானறிந்து அகன்றபின்பு, பெற்ற இம் மகவு தன்னைப் பேரிட்டேன்" என்று அறிவிக்கின்றான்.

விருந்தினரையும் அடியாரையும் உபசரிக்கின்றமை மனைவியர்களைச் சார்ந்திருந்தது. அதற்கு அவர்கள் தம் கணவர் சொல்லை எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. தம் கணவர்க்கு முன்னேயும் அடியார்கள் உபசரிக்கப் பெற்றார்கள் என்பது காரைக்காலம்மையார் சரிதத்திற் காணப்பெறும் உண்மையாம்.

**விருந்தினரையும் அடியாரையும்உபசரித்தல் மனைவியர் கடமை**

இனிக் குலமணஞ் செய்கின்ற ஒத்தமரபுடனேயன்றியும் மேற்குலத்தார் கீழ்க் குலத்தாரிடம் பெண் கொண்டு மணஞ்செய்து கொள்ளலாம் என்றதும் அக்காலத்து வழக்கத்திலிருந்த சமூகநிலை போலும்! சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாதொருபாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் வேதியர். இவர் உருத்திர கணிகையர் மரபில் அவதரித்த பரவையாரையும், வேளாளர் மரபில் உதித்த சங்கிலியாரையும் விதிப்படி மணந்து கொள்ளக் காண்கிறோம். திருநாட்டியத்தான்குடி வேளாளராகிய கோட்புலியார் வனப்பகை, சிங்கடி என்ற தமது இரண்டு பெண்களையும் சுந்தரமூர்த்திகளிடம் தந்து அவர்களை ஏற்று மணந்து கொள்ளுமாறு வேண்டுகின்றார். மயிலாப்பூர் வணிகராகிய சிவநேசச் செட்டியார் தமது மகளாகிய பூம்பாவையாரை மணந்து கொள்ளும்

**சமூகநிலை - மேற்குலத்தார் கீழ்க்குலத்தாரிடம் பெண் கொள்ளல்**

படி மறையோராகிய திருஞானசம்பந்த சுவாமிகளை வேண்டுகின்றார். அவர்க்கென்று சொல்லியே பூம்பாவை யாரை வளர்த்தும் வந்தார். சுவாமிகள் அதனைமறுத்தா ரேனும் குலம்பற்றி மறுக்கவில்லை. 'உம்முடைய பெண், விடத்தால் வீந்தபின் சிவபெருமான் கருணை கொண்டவர மீண்டும் உற்பவிப்பிக்கப் பெற்றனள். ஆதலால் இவ் வுரை தகாது' என்றே மறுத்தனர்.

ஆயின் இந்த மணங்கள் சமூக ஒழுக்கம்பற்றியே எழுந்தன என்பதின்றி அன்புநெறி பற்றியும் எழுந் திருத்தல்கூடும். எப்படியும் அக்காலத்துச் சமூக வாழ்க் கை இவ்வழக்கத்தை ஒப்பி நிகழ்ந்ததென்பது ஒரு தலையாம்.

பற்பல சாதிக்குள்ளே மணத்திறத்தின் நிலை மேலே கண்டோம். இனிப் பற்பல சாதியர்க்குள்ளும் உடன் உணவு கொள்ளுதல் முதலிய கலப்புமுறை எவ்வாறிருந்த தென்று பார்ப்போமாயின்:—சாதிகள் பல விள ங்கின. அவற்றின் உண்வு முதலிய ஒழுக்கமும் வெவ் வேறு. முதற்பந்தி கடைப்பந்தி சமபந்தி முதலியவை அந்நாளிருந்து வந்த உலக வழக்கேயாம். ஆயின் அன்பு நெறியிலே இவை குறுக்கிட்டதே யில்லை.

**சாதியும் உட னுண்ணலும்**

வேதியராகிய அப்பூதி நாயனாருடைய விண்ணப் பத்திற் கிணங்கி அவர் திருமனையிலே வேளாண் மர பினராகும் நமது அப்பர் சுவாமிகள் திரு அமுது செய்கின்ற வகையிலே தீப முதலியவற்றுடன் பர மேசுரனுக்குச் செய்கின்றபடியே உபசாரங்கள் செய் யப்பெற்றனர். அப்பர் சுவாமிகள் அப்பூதி யடிகளை

நோக்கி 'அரும் புதல்வர்களும் நீரும் இங்கே இருந்து அமுது செய்வீர்' எனப் பணித்தபடியே மைந்தரும் அந்த மறையோரும் சுவாமிகளின் பக்கத்தில் கூட இருந்து அமுது செய்தார்கள். இல்லமாதர்கள் மகிழ்ச்சியோடு திருவமுது எடுத்தளித்தார்கள். உத்தராபதியாராகிய பபிரவ் வேடங்கொண்ட அடியவர் மர்மாத்திர மரபினராகிய பரஞ்சோதியார் என்கிற சிறுத்தொண்ட நாயனார் திருமனையிலே நரப்பசுப் படுத்து அமுது உண்பார், அவரையும் உடனுண்ணுமாறு ஏவினபடி, அவரும் கூட இருந்து அமுது உண்ணத் தொடங்கினர்.

சிவவேதியராம் சுந்தரமூர்த்திகள் உருத்திர கணிகையர் மரபில் அவதரித்த பரவையாரையும், வேளாளர் மரபிலே அவதரித்த சங்கிலியம்மையாரையும் மணஞ் செய்து கொண்டமை மேலே கண்டோம். பரவையாருடைய திருமாளிகையிலே தான் அரச மரபினராகிய சேரமான் பெருமாள் உபசரிக்கப்பெற்றனர். விளக்கு, நிறைகுடம், தூமாலை, புகை, அகில் முதலியவைகளை மடவார் ஏந்தி எதிர்கொண்டார்கள். ஆளுடைய நம்பிகளையும் சேரமான் பெருமாளையும் உடனே வைத்துப் பரவையார் நிறைபூசனைகள் முறையினாலே செய்தளித்தார். வேண்டும் பரிசிலே வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும் சமைப்பித்து விருந்தும் அமைத்துப் பரிகலங்களைப் பரவையார் தமது திருக்கரத்தாலே இரண்டு படியாக ஏற்றினார். அதனை நோக்கிய சுந்தரமூர்த்திகள் அதற்கிசையாது பெருமாளையுடனே அமுது செய்தருள வேண்டுமென்று சொல்லியருளினார். அது கேட்டுப் பெருமாள் வணங்கி, அது தகாதென்று உட்

கொண்டு வெருவுற்றபோது சுந்தரமூர்த்திகள் அவர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு மீண்டும் நேரே குறை கொள்ள அவர் இசைந்தனராகி இரு பெருமக்களும் ஒக்க இருந்து அமுது செய்தார்கள். இவர்களைப் பரவை யார் அமுது செய்வித்தருளினர். எனவே, அந்தணரும் அரசரும் மரபு வழக்கம்பற்றி உடனிருந்து அமுது செய்வது அக்காலத்தில் உலக வழக்கிலே இல்லையென் றும் அன்பு நெறியிலே இது நிகழ்ந்தது என்றும் விளங் கும். உடன் உண்ணுதல் என்ற சமபந்தி போசனத் திலேயே எல்லாச் சீர்திருத்தமும் உலக உயர்வும் உள்ளதென்றும், அதுவே மனித வர்க்கத்தாருள் உள்ள வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமை உண்டாக்கக் கூடிய வழி யென்றும் கூக்குரலிடுவோர் இக்கருத்துக்களைச் சிந்திப்பார்களாக. மனிதர்க்குள்ளே உயர்வும், தாழ் வும், ஒருவர் பார்க்க ஒருவர் உண்ணுதல் கூடாதென் றும், இவ்வகையான பற்பல வேற்றுமைகள் இருந்தே தீர வேண்டுமென்றும் எவரும் சொல்லமாட்டார்கள். ஆனல் அவைகள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. எந்தப் பெயரினலாவது எல்லா நாட்டிலும் இது ஒரு வகையால் உள்ளதேயாகும். இதை ஒழிப்ப தென்றால் மேலே காட்டிய அன்புநெறி ஒன்றினலே தான் முடியும். குறித்த பயனும் தரும். வேற் றுமை ஒழிந்து ஒற்றுமை உண்டாகும். 'நாயும் கழுதை யும் பார்த்துக்கொண்டிருக்க உண்ணும் மனிதன், ஏன் பிறமனிதன் பார்க்க உண்ணலாகா' தென்பது ஒரு சரி யான கேள்வியாகாது. நாய்க்கும் கழுதைக்கும் மனித னைப்போல் விகற்பமான பார்வையில்லை. நாம் உண்பதைக்

கண்டு அவைகள் வேற்றுமையான எண்ணங் கொள்வதில்லை. வெவ்வேறு பல ஒழுக்க மாறுபாடுகளும் இல்லை. இந்த வகைகளில் மனிதன் அவற்றை விடக் கீழாகத்தானிருக்கிறான். ஆனால் அன்புநெறிப் பார்வை பெற்ற மனிதன் மட்டுமே மேலாகின்றான்.

இன்னும் சாதிப் பிரிவிலே தீண்டாமையைப் பற்றிச் சில பார்ப்போம். திருநீலகண்ட யாழ்ப்பாணர், மரபினாலே தீண்டாதாராகிய பாணர் வகுப்பினர். அவர் திருவாலவாய்த் திருக்கோயிலிலே திருவாயிலை அடைந்து அதற்கு வெளியிலே நின்று,

**தீண்டாமை**

"பாலையீ ரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கி
.............................பாணிகள் யாழி லிட்டார்"

அப்போது ஆலவாய்ப் பெருமான் அடியவர்களுக்குக் கனவிலே உத்தரவிட்டபடி அடியவர்கள் பாணனாரைக் கோயிற்குள் அழைத்துச் சென்று திருமுன்பு கொண்டு புக்கார். பின்னார்த் திருவாரூருக்குச் சென்ற பாணனார் கோயில்வாயில் முன்னடைந்து சிவபெருமானது புகழ்களை யாழிற் றொடுத்துப் பாடக் கேட்டு "அங்கண் வாயில் வேறு வடதிசையில் வகுப்பப் புகுந்து வணங்கினார்" என்று சரிதங் கூறுகிறது. திருஞானசம்பந்தப் பெருமானைச் சேவித்துக் கொண்டும் அவர் அருளிய திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசித்துக் கொண்டும் பாணனாரும் அவர் மனைவியாராகிய இசை வடிவான மதங்க சூளாமணியாரும் அவரது திருக்கூட்டத்துடன் ஞானசம்பந்தப்பெருமானோடுங்கூடி எண்ணிறந்த திருத்தலங்களை வணங்கிக்கொண்டு சென்றார்கள். அதுவேயு

மன்றிச் சுவாமிகளைத் தழது பதியாகிய திருவெருக்கத் தம்புலியூருக்கும் அழைத்துச்சென்று உபசரித்தார்கள். 'இது அடியனேன் பதி' யென்று பாணனார் சுவாமிகளி டம் விண்ணப்பித்தபோது, சுவாமிகள் "ஐயர் நீரவதரித் திட இப்பதி அளவின் மாதவம் முன்பு செய்தவாறு" என்று பாராட்டிச் சிறப்புரைத் தருளினர். பாணனா ருடைய தாயார் பிறந்த பெரும்பதியாகிய திருத்தரும புரத்திலே பிள்ளையார் எழுந்தருளியபோது திருயாழ் மூரித் திருப்பதிகம் அருளினர். அந்த வரலாற்றிலே யும் சுவாமிகள் பாணனாரை 'ஐயரே!' (திருஞானசம்பந் தர் - 450, 451.) என்று அழைக்கக் காண்கின்றோம். திருஞானசம்பந்தமூர்த்திகளுடன் தலயாத்திரையிலே பாணனாரும் அவர் பத்தினியாரும் திருச்சாத்த மங்கை யிலே வந்தபோது வேதியர் பெருமானாகிய திருநீலநக்க நாயனாரது திருமனையிலே தங்கி உபசரிக்கப்பெற்றனர். பாணனாருக்கும் பத்தினியார்க்கும் "இன்று தங்க ஓர் இடங்கொடுத்தருளுவீர்" என்று சுவாமிகள் திருநீலநக்க நாயனார்க்குப் பணித்தபடியே அவரும் "நடு மின்புற் றுத் (தமது) நடுமனை வேதியின் பாங்கர்" அவர்க்கு இடங்கொடுத்தார். அப்போது அவ்வேதியில் இருந்த அருத செந்தீ வலஞ்சுழித் தோங்கி முன்னையிலும் பார்க்க ஒருபடி மேலும் விளங்கி ஒளிர்ந்தது. பாணரும் பத்தினியாரும் அங்கே அன்றிரவு பள்ளிகொண்டார் கள் என்ற சரிதமுங்கேட்கின்றோம். அன்புடைத் திருக் கூட்டத்திலே தீண்டாமை என்பது இருந்திருக்குமாயின் இவ்வாறெல்லாம் நிகழ்ந்திருத்தல் கூடுமோ? தீண்டா மைப் பிரசாரஞ் செய்வோர் இந்த வரலாற்றை உற்று நோக்குவாராக.

நமிநந்தி யடிகள் நாயனார் என்கிற வேதியர் பெருமான் திருவாரூரிலே யிருந்து சிவபெருமான் எழுச்சித் திருமணலிக்கு எழுந்தருளியபோது இன்னார் இன்ன குலத்தார் என்ற பாகுபாடில்லாமல் எல்லாரும் ஒருங்கே யிருந்து சேவிக்கத் தாமும் உடனே சென்று திரு விழாச் சேவித்து வந்தார்.

"யாவ ரென்ன துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும்
மேவ வன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து"

—நமிநந்தி யடிகள் புராணம் - 22

தம் ஊர்க்குத்திரும்பிய நமிநந்தியடிகள் தமது தூய மனையிற் புகுதாது புறங்கடையிற் றுயின்றார். அவரது மனைவியார் வந்து 'உட்புகுந்து பூசை முடித்து அங்கி வேட்டு அமுது செய்து பள்ளி கொள்வீர்' என்று அழைத்தபோது, 'திருமணலி யெழுச்சி சேவித்து உடன் நண்ணியபோது எங்கும் எல்லாக்குலத்துள்ளாரும் போயினதாலே என்னை இழிவு தொடக்கிற்று. ஆகையால் குளித்துப் பின்னரே வீட்டிற்புகுந்து பூசனை தொடங்கவேண்டும். அதற்கு வேண்டிய சீதநன்னீர் முதலியவைகளைக் கொண்டு வருவீர்' என்று மறுமொழி பகர்ந்தனர். அவ்வாறு கொண்டுவர மனைவியார் உள்ளே சென்றபோது நாயனார்க்கு மேனி அயர்ச்சியாலேயோ திருவருளினாலேயோ உடனே உறக்கம் வரவும், அவரும் உறங்கினார். அப்போது அவரது கனவிலே வீதி விடங்கப் பெருமான் தோன்றித் 'திருவாரூரிற் பிறந்தார்கள் யாரும் நமது கணங்களாயின பரிசு காண்பாய்' என்றருளிச் செய்தனர். நாயனார் அது கண்டு இருந்தபடியே சென்று பூசனை முடித்துக்கொண்டு விடியற்காலை அத்

திருநகரத்திற் புகுந்தபோது எல்லோரையும் பரமேசுவரன் திருவடிவமாகவே கண்டு பணிந்தனர் என்பது சரிதம். எனவே, எல்லாக் குலத்தோரும் சேர்ந்து சென்றதால் இழிவு தொடக்கிற்று; அதாவது இப்போது சொல்லப்படுகின்ற "தீட்டு" உண்டாயிற்று என்பது அக்காலத்தோரும் கொண்ட கொள்கையாயிருந்ததென்றும், அந்த வேற்றுமையானது அன்பு நெறியினாலே இல்லாமற் போயிற்று என்றும் விளங்குகின்றது. இந்தப்படியே சாதிகளின் கலப்பு, உடனுண்ணல் முதலியன ஓராயிரம் ஆண்டுகளுக்குமுன்னும் முற்காலத்தமிழர் சமூகநிலையாயிருந்தது என்று தெரியலாம். இவ்வாறு சமூகம் பிரிவு பெற்றுள்ளது எஞ்ஞான்றும் இயல்பே. இதன் கேட்டினை வாராமற் காக்க அன்பு நெறியினையே தமிழர் கைக்கொண்டனர் என்று தெரியலாம். அவ்வாறன்றிச் சாதி சமூக அமைப்புகளைத் தலை தடுமாறச் செய்தொழிக்க முயல்வது விபரீத உணர்ச்சியேயாம் என்பது வெளிப்படை.

**பொழுது போக்கு - ஆண்மக்கள் விளையாட்டுகள்**

இனி அந்நாள் பொழுது போக்குக்காக அரசரும் பிறரும் மேற்கொண்ட விளையாட்டு முதலிய அனுபோகங்கள் யாவை என்று பார்த்தால் கழறிற்றறிவார் நாயனாராகிய சேர அரசரும் சுந்தரமூர்த்திகளும் சேர்ந்த கூட்டத்திலே இவை காணலாம். நிலைச்செண்டு ஆடுதல், பரிச்செண்டு வீசுதல், தகர்ப்பாய்ச்சல் கண்டருளல், வாரணப் போரும் பிற புட்களின் அமர்த்தொழிலுங் காணல் முதலியவை மேம்பட்ட பொழுதுபோக்கு விளையாட்டுக்களாயின.

"பாட லாடல் இன்னியங்கள் பயிறல் முதலாம் பண்ணையினில்
நீடு மினிய விநோதங்கள்............"

நிகழ்விக்கக் கண்டு மகிழ்தல் ஒருவகைப் பொழுது போக்கு ஆகும்.

மேலே கண்டபடி செண்டாடும் மகிழ்வு ஒரு வகைப் பொழுதுபோக்கான விளையாட்டாக நமது பண்டைத் தமிழர் கொண்டு மகிழ்ந்தமை இந்நாட் பந்தாட்ட விளையாட்டுகளோடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாம்.

நிலைச்செண்டு என்பது நின்ற நிலையிலிருந்தே பந்துகளை வீசி விளையாடுவது போலும். [தற்காலம் (Tennis) டென்னிஸ் முதலியன போல] பரிச்செண்டு வீசுதல் குதிரைகளின் மீதிலிருந்து குறித்த விதிப்படி பந்தாடி மகிழ்தல் போலும். இதனை இந்நாள் இவ்வகை ஆட்டங்களுடன் ஒப்பிட்டுக் காணின் தமிழர்களது பண்டைக்கால நாகரிகம் தெற்றென விளங்கும்.

பாடல், ஆடல், பல இன்னியங்கள் பயிலுதல், மற்றும் நீடும் இனிய விநோதங்கள் என்பன இக்காலத்து அவ்வகையிலுள்ள நாடகக் காட்சிகளையும் சினிமா முதலிய படக்காட்சிகளையும் நினைவூட்டுகின்றன.

ஆராமங்கள் அதாவது சோலைகளிலே உல்லாசமாகக் காலங் கழித்தலும், சிறு சோற்றுப் பெருஞ் சிறப்பும், (Tea and Garden parties) நீர்விளையாட்டு, பொழில்விளையாட்டு வகைகளும் நமது முன்னோர்களின் மனங்களை மகிழ்வித்த பொழுதுபோக்கு விளையாட்டுகளாயிருந்தன.

சிறுமியராகிய பெண்மக்களின் விளையாட்டு வகைகளைத் தனியே பிரித்தும் அறிகின்றோம். பெண்மக்கள்

**மகளிர் விளையாட்டு**

வளர்ச்சிப் பருவத்திற் கேற்றவாறு பற்பல வெவ்வேறு விளையாட்டுகளை மேற்கொள்வர். திருமயிலைப் பூம்பாவையார் எழியாண்டென்னும் பேதைப் பருவம் கடந்து அணையலும்,

“ அழகின் முன்னிளம் பதமென வணிவிளக் கென்ன
விழவு கொண்டெழும் பேதைய ருடன்விளை யாட்டிற்
கழலோ டம்மனை கந்துக மென்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென மனையிடை யாடி ”

“ பொற்றொ டிச்சிறு மகளிரா யத்தொடும் புணர்ந்து
சிற்றின் முற்றவு மிழைத்துட னடுந்தொழிற் சிறுசோ(று)
உற்ற வுண்டிகள் பயின்றேறி மணியூசலாடி
மற்று மின்புற வண்டலாட் டயர்வுடன்வளர ”

—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - 1047, 1048.

என்று புராணம் கூறுகின்றது.

“ தருந்தடக்கை முத்தொழிலோர் மனைகள்தொறும்
இறைவனது தன்மை பாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந்து அம்மானைப் பாட்டயருங்
கழுமலமே ”

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரமும் இங்கே குறிக்கற்பாலதாம். இவ்விதம் கழலும் பந்தும் அம்மானையும் ஊசலும் பிறவும் ஆடும்போது இறைவன் தன்மைகளை வாயினால் இசையப்பாடிக்கொண்டு விளையாடுவது வழக்கம்.

தெள்ளேணம், தோணோக்கம், பூவல்லி, உந்தி, ஊசல், அம்மானை முதலிய மகளிர் விளையாட்டுக்களையே பொருளாக வைத்து ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய திருவாசகப் பகுதிகளிலே இவற்றில் இறைவன் புகழைப்பாடி ஆடுவதாகக் கூறியருளிய கருத்தும் இங்கே காணத்தக்கதாம். பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பகுதிகளிலே அம்மானை, நீராடல், பொன்னூசல் என்ற பகுதிகள் வைக்கப்படுவதும் சிறுமகளிரின் இவ்விளையாட்டு வகைகளைக் குறிப்பதேயாம். இவ்வாறு பெண்கள் ஆடிய பந்தாட்டம் முற்றும் இக்காலத்து ஆண்மக்கள் "ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்", என்றபடி கவர்ந்து கொண்டனர் போலும்.

இப்போது (Fine Arts) அழகுக் கலைகள் என்று சிறப்பிக்கபெறும் சிற்ப, சித்திர, கீத, நாட்டியங்கள் என்றவை அந்நாளிலே மிக மேலான நிலையிலே விளங்கின. ஆனயர் குழலோசையினால் அண்டத்திலே நிறைந்த அனைத்துயிர்களும் மகிழ்ச்சியடைந்து மனமுருகித் தத்தம் முன்னைப் பகை முதலிய உணர்ச்சிகளையும் மறந்து வந்து சேர்ந்து அணைந்தன. இது சங்கீத முதலிய மனங் கவரும் மாட்சிமை யுடைய கலை ஞானங்களுக் குரிய விசேட இலக்கணமாம். இதனையே சேக்கிழார் சுவாமிகள்,

**கீதம் - யாழும் குழலும்**

நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றா நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவ மயில்மீது மருண்டுவிழும்;
சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன்சாரும்;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

—ஆனயநாயனார் புராணம் - 34.

என்று கூறித் தத்துவ விளக்கம் செய்கின்றார். குழற் கருவியின் அமைப்பும் இலக்கணங்களும் குழற்கீதத்

தின் இலக்கணமும் முறைகளும் விரிவாக ஆனாயநாய னார் புராணத்திலே 13, 23 முதல் 28 பாட்டுகளிலும் பிறண்டும் பேசப்பெற்றுள்ளன. அவ்விதமே யாழின் இலக்கணமும் யாழிசையின் தன்மையும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் மனைவியாராகிய மதங்கசூளாமணி யாரும் செய்த யாழ்த்திறத்திலேயும் அவர்கள் திரு ஞானசம்பந்த மூர்த்திகளுடைய திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசித்தும் கண்டப் பாட்டும் கலந்து பாடியும் வந்த வரலாற்றிலேயும் பேசப்பெற்றுள்ளன.

தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினால்
ஆனவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார்; நான்மறையோ ரதிசயித்தார்.
யாழிலெழு மோசையுடன் இருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையு மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடைநின்(று)
எழிசைநூற் கந்தருவர் விஞ்சையரு மெடுத்திசைத்தார்.

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம் - 135, 136.

யாழும் குழலுமே தீஞ்சுவை தரும் இன்னியங்களி லே மிகச் சிறந்தனவென்பதை நமது தமிழ் முன்னோர் உணர்ந்திருந்தனர். "குழலினிது யாழினிது என்ப" என்பது நாயனார் திருவாக்கு. "குழலொலி யாழொலி கூத்தொலி..............."என்ற திருவிசைப்பாவும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வுண்மையை, இக்காலத்து நாம் கேட்டு மகிழும் உள்நாட்டுப், பிறநாட்டுக் கோர அசுர வாத்திய விசேடங்களுடன் ஒத்துப் பார்ப்போமானால், நமது முன்னோர்களது உயர் நிலையிலிருந்து நாம் எவ் வளவு தூரம் கீழே இறங்கி யிருக்கின்றோ மென்பதும்,

கீழ்க் கீழ்த் தாழ்ந்துகொண்டே போகும் நாம் அதை உணராமல் நாகரிகத்தில் மேன் மேல் உயர்ந்து போவதாய் மயங்கியிருக்கின்றோமென்பதும் நன்குவிளங்கும்.

பின்னும் யாழ் வாசிக்கும் முறையை,

பாலையீ ரேழு கோத்த பண்ணினிற் கருவி வீக்கிக்
காலமா தரித்த பண்ணிற் கைபல முறையு மாராய்ந்(து)
ஏலவார் குழலார் பாகர் பாணிகள் யாழி லிட்டார்.

—திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனுர் புராணம்-2.

என்பது முதலியவற்றில் சுவாமிகள் விரித்துக் காட்டியருளினுர்.

காலத்துக்குத் தக்க பண் பாடலும், வாசித்தலும், பண்ணிற்கு உள்ளுறையாக உயர்பொருள் ஒன்று விளங்குதலும், வேண்டுவதாயிற்று. இனி இவ்வாறு இன்னிசைக் கருவிகளின் ஓசையுடன் மிடற்றின் ஒலியும் இசையப் பாடுவதேயன்றித் தனியாகக் கண்டப் பாடல் பாடுவதும் மரபாகும். அது அவ்வத் தானங்களின் சுதிபிழையாமல் அழகுபொருந்துங் கான இசையமுதம் பரப்பும் படி அசைவின்றிச் சித்திரப் பதுமைபோலிருந்து பாடுவதாம்.

தானநிறை சுருதிகளிற் றகுமலங்கா ரத்தன்மை
கானவமு தம்பரப்புங் கனிவாயி லொளிபரப்ப
பானல்நெடுங் கண்கள்வெளி பரப்பியிசை பாடுவார்.

—திருநாவுக்கரசுநாயனுர் புராணம் - 419.

நாட்டிய மென்பது கூத்து எனப் பெற்ற தமிழ் வழக்காம். இதற்கு அடிபிழையாது பெயர்க்கு முறையே அடி நிலேயாகும். அதற்குத் தக்கவாறு விரல்கள் வட்டணையாகப் பெயரவும், கைகள் காட்டும் வழியே கண்கள் புடை பெயரவும், உட்

கூத்து

குறித்த ஒரு பொருளை விளக்குவதாய் ஆடுவதே கூத்தாகும். பாட்டும் கூத்தும் ஒருங்கே நிகழ்வதும் மரபாகும்.

கற்பகப்பூந் தளிரடிபோங் காமருசா ரிகைசெய்ய
உற்பலமென் முகிழ்விரல்வட் டணையோடுங் கைபெயரப்
பொற்புறுமக் கையின்வழி பொருகயற்கண் புடைபெயர
அற்புதப்பொற் கொடிநுடங்கி யாடுவபோல் ஆடினர்.

—திருநாவுக்கரசுநாயனர் புராணம் - 420.

இதன் விரிவைச் சிலப்பதிகாரம் முதலியவற்றுட் காண்க.

இனி, மருந்து முதலிய ஆயுட் கலைஞானங்களையும் பெரிய புராணத்தில் அங்கங்கே காணலாம். குமர

**மருந்து முதலியன**

கண்டவலி என்று சொல்லப் பெறும் முயலகன் என்கிற ஒரு பெரு நோயையும், அதன் இலக்கணத்தையும், அது தீர்வகையையும் கொல்லிமழவன் மகள் சரித மூலமாகத் திருப்பாச்சிலாச்சிராமத்திலே திருஞானசம்பந்தசுவாமிகள் செய்தருளிய அற்புதத்திலே விரிவாய்க் காண்கின்றோம். பக்கத்திலேயும் மக்கள் அணுகக் கூடாதபடி அனல்வீசி உணர்வுமாய்க்கும் பெருஞ் சுரத்தின் இலக்கணம் முதலியவற்றைக் கூன்பாண்டியர் சரிதத்திலே சம்பந்தப்பெருமான் நிகழ்த்திய சுரவாதத்திலே பார்க்கலாம். மெய் விதிர்ப்புறுதல் - வெம்மை காந்துதல் - உணர்வும் ஆவியும் ஒரு புடை ஒதுங்குதல் - அணைய வுற்றார்களையும் தூரத்திடை அகலச் செய்தல் - இளங் கதலிக்குருத்துப் புடையே கொணரினும் சுருங்கித் துகளாகச் செய்தல் - கருத்து ஒழிந்து உரைமறத்தல் முதலியன பெருஞ் சுர நோயின் இலக்கணமாகக் காண்

கின்றோம். (திருஞானசம் - 711 - 712 - 713) இந்நோய் ஒரோ வழி மனித உடம்பின் ஒரு பக்கத்தையே பற்றியும் நிற்பது இதன் சிறப்பியல்புகளில் ஒன்றென்பதும் தெரிகின்றோம். இந்நோயின் தீர்வும் விரிவாகப் பேசப்பெற்றுள்ளது. இதுவேயுமன்றித் திருஞானசம்பந்த சுவாமிகள் திருக்கொடிமாடச் செங்குன்றூர்க்கு எழுந்தருளியபோது அந்நாட்டில் அந்நாளில் பரவியிருந்த நளிர்சுரம் என்ற ஒருவகைக் குளிர் சுரத்தைப்பற்றியும், அதன் தன்மைகளைப் பற்றியும் அறிகின்றோம்.

பாம்பின் விடம் உடம்பிற் புகுதலும், அதனை அது தானென அறியும் அடையாளங்களும், அது முறையே ஏழு வேகங்களாக உடம்பிலே ஏறித் தலைக்கேறுதலும், மேனி கருகுதல் முதலிய குறிகளும், தீர்வும், பிறவும் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தும், அப்பூதி நாயனார் புராணத்தும், திருஞானசம்பந்த நாயனார் புராணத்தும் காண்கின்றோம். பாம்பின் கூரிய விடப்பற்கள் ஈரிரண்டு. அவை கூரிய வெள்ளிய குழாய்கள் போன்று உள்துளையை யுடையன. அவற்றின் அடியிலே நச்சுப்பை இருக்கும். "கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிறு" என்பது திருமுருகாற்றுப்படை.

"பையஞ்சுடர் விடு நாகப்பள்ளி"

என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம்.

"பைப்பணி யவர்கருப் பறிய லூரினில்"

என்பது பெரிய புராணம். (திருஞான : 254).

இந்தப் பற்கள் உடம்பிலே தொளைத்த வுடனே உண்டாகின்ற தொளையின் வழியாகப் பல்லாகிய குழாய்களின் மூலம் மேல் உள்ள நஞ்சு உகுக்கப் பெறுகின்

றது. இது இரத்தத்துட் கலந்து இரத்த வோட்டத்துடனே உடம்பிற் பரப்பப்படுகின்றது. இவ்வோட்டமானது கடிந்த இடத்திலிருந்து இரத்தக் குழாய்களின் வழியே இரத்தாசயத்திற்குப்போய் அங்கிருந்து மீள வெளிவந்து உடம்பிற் பரவுவது ஒரு ஓட்டமாகும். இதற்கு ஒரு வேகம் என்று பெயர். இவ்வாறு ஒருமுறை ஓட்டம் வந்து முடிந்தால் உடம்பினுள் எழு தாதுக்களிலே ஒருதாது வலிகெடும். இப்படி ஏழுமுறை சுற்றி வந்தால் ஏழுவேகம் தலைக்கேறியதாகச் சொல்வர். அப்போது சத்த தாதுக்கள் எனப்படும் ஏழுவகைத் தாதுக்களும் வலி கெடும். பல்லும் கண்ணும் மேனியும் விடத்தினாற் கருகும். உணர்வு போய் உயிர் மாயும்.

எரிவிட முறையே யேறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற வெயி றுங் கண்ணும் மேனியுங் கருகித் தீந்து
விரியுரை குழறி யாவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்

—அப்பூதி யடிகணயனர் புராணம் - 27.

என்று அதன் இலக்கணத்தை எடுத்துக் காட்டினர் சேக்கிழார் சுவாமிகள். தமது மூத்தபிள்ளையை

"...........உற்று நோக்கி யுதிரஞ்சோர் வடிவு மேனி
விளங்கிய குறியுங் கண்டு விடத்தினல் வீந்தா னென்று"

அறிந்தனர் அப்பூதி நாயனரும் அவர்தந் திருமனைவியாரும்.

"நாலு தந்தபூ மென்புறக் கவர்ந்துகஞ் சுகுத்து
மேலெ மூம்டணம் விரித்துநின் மூடிவே றடங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது போன்றுள மயங்கி." த்

—திருஞானசம்பந்த நாயனர் புராணம் - 1058.

தரையில் வீழ்ந்தார் திருமயிலைப் பூம்பாவையார். விடந் தொலைப்பதற்குப் பல பெரியோர் பல விதமான தீர்வு முறைகளையும் செய்தனர். அவற்றை ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்,

"திடங்கொள் மந்திரந் தியான பாவக நிலை முட்டி
தொடர்ந்த செய்வினை"

என்று விவரித்தருளினர். இவ்வாறு தீர்க்கவும் இவற்றின் மேலும் மருந்து செய்யவும் தீராததாய் ஏழு வேகமும் முறையே பொங்கியேறி விடம் தலைக்கேறிக் கடந்தது. அப்போது உயிர்க்குறி யாவும் ஒழிந்தன. காருடவித்தை வல்லாரும் இது விதி என்று கைவிட்டனராம்.

எனவே, விடந்தீர்த்தற்கு மந்திரம் இயற்றுதல் முதலிலே கைகண்ட தீர்வாகும். அதன்பின் தியான பாவக நிலைகள் ஒவ்வோர் தீர்வாயின. கருடத்தியான மாகிய நிலையிலே விடங்களைத் தீர்க்கும் நடைமுறையானது நமது நாட்டிலே கைகண்ட ஒப்புயர்வற்ற ஒரு உண்மையாம். இது விசேடமாகிய ஒரு தத்துவ உள்ளுறையையும் காட்டி நிற்கிறது. "கருடனுருவம் கருதும் அளவில் பருவிடந்தீர்ந்து பயங்கெடுமா போல்" என்ற வாக்கியப்படி, கருடத்தியானத்திலே உறைப்புப் பெற்றவர்களுக்குக் கருடனுடைய தன்மை உண்டாகும் என்பது அறிவோர்களால் துணியப்பட்ட உண்மை. சிவோகம் பாவனையினலே உயிர் சிவத்தன்மை யடையதலைக் காட்டி நிற்பது இப்பாவக நிலையாம்.

கத்தி முதலிய ஆயுதங்களால் உண்டாகிய புண்களைப் பச்சிலைச் சாறுபிழிந்து தீர்க்கும் வகையைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர்.

"மின்செய்வார் பகழிப் புண்கள் தீர்க்குமெய்ம் மருந்து நாடிப்
பொன்செய்தாழ்வரையிற்கொண்டுவருவன்நான்என்றுபோன"

கண்ணப்ப நாயனுர் அம்மருந்துகள் கொணர்ந்து பிழிந்து வார்த்தனர் என்று காண்கிருேம்.

இல்வாழ்க்கை, மணமுறை, சமூகநிலை முதலிய வகைகளிலே அறநிலையின் ஒரு பகுதியை ஒருவாறு கண்டோம். அரசியல், குடிமை, நீதிமுறை, மருந்து முதலிய வகைகளிலே வைத்துப் பொருள் நிலையை ஒருவாறு கண்டோம். போர்முறை வகையிலே புறப்பொருள் நிலையை ஒருவாறு தெரிந்தோம். இனி அகப்பொருளாகிய இன்ப நிலையினைப் பற்றிச் சிலவற்றை இங்கே ஆராய்வோம். சுந்தரமூர்த்திகளும் பரவையாரும் கண்டும் பிரிந்தும் உள்ள பகுதிகளிலே, காட்சி, ஐயம் முதலிய அகப்பொருள் துறைகளையும், நிலா, தென்றல், கடல் முதலியவற்றைப் பற்றிய அவர்கள் கூற்றிலே வைத்து ஒருதலைக் காமம் என்கிற கைக்கிளையாகிய பொழுது கண்டிரங்கல் முதலிய துறைகளையும் காணலாம். பரவையார் ஊடலும், பின்னர்க் கூடலும், ஆகிய நிகழ்ச்சிகளிலே புலவி, ஊடலுவகை முதலிய துறைகளையும், பரவையார் சங்கிலியார் திருமணங்களிலே அகப்பொருட் பிற துறைகளையும் மிகச் சுவையுறும் வகையிலே காண்கின்ருேம்.

**அகப் பொருள்**

### காட்சி

"நற்பெரும் பான்மை கூட்ட நகைபொதிந் திலங்கு செவ்வாய்
விற்புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யவரைக் கண்டார்".

—தடுத்தாட்கொண்ட புராணம் - 139.

எனவும்,

(பக்கம் - 9)



சோழநாட்டுத்திருநாகேச்சுரம்கோயில் உட்புறம்-விநாயகர் கோயில் முதலியன. சேக்கிழாரது ஆன்மார்த்த தலம்.

" மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் அருச்சிப்பார் பிணிதீர்க்கு நலம்போற்றி "

—திருஞானசம்பந்தநாயனர் புராணம் 412.

சோழநாட்டுத் திருநாகேச்சுரக் கோயிலில் உள்ள திருவுருவங்கள். (பக்கம் - 9)

சேக்கிழார் நாயனாரது தாயார்.



சேக்கிழாரது தம்பியார் - பாலறுவாயர்.

"பண்டைவிதி கடைகூட்டப் பாவையாருங் கண்டார்"

எனவும்,

"மின்போல் மறையுஞ் சங்கிலியார் தம்மை
விதியாற் கண்ணுற்றார்".
—ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 226.

## கூட்டம்

"பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்".
—தடுத்தாட்கொண்ட புராணம் - 181.

எனவும்,

"..........................................தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றுணர்ந்திருந்தார் காதலினால்"

எனவும்,

"மிகுபுலவிப் புணர்ச்சிக்கண் ஊழியாம் ஒருகணந்தான்
அவ்வூழி ஒருகணமாம்"

எனவும்,

## கைக்கிளை

"பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையு மாயினார்"

எனவும்,

"பிறந்த தெங்கள் பிரான் மலயத்திடை
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டணி
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம் பயின்றதெங் கோதமிழ் மாருதம்"

எனவும்,

வந்திங் குலவும் நிலவும் விலையார்
மலயா னிலமும் எரியாய் வருமால்

அந்தண் புனலும் அரவும் விரவும்
சடையான் அருள்பெற் றுடையார் அருளார்

எனவும், பிறவும் வருவன அகப்பொருட் சுவைகளை மிக நுணுகியும் சுவைபெறவும் உணர்த்துவன காண்க.

**உண்மைச் சரித இயல்**

பெரிய புராணச் சரிதங்களின் போக்கானது உண்மைச் சரிதப் போக்கை ஒட்டியே ஆக்கப்பெற்றுள்ளது அதன் சிறப்பியல்புகளிலே ஒன்றாய் அதனைப் பெருங் கலையாய்க் கற்குமாறு மக்களை ஏவும் தகையதாகும். சிறுத்தொண்டநாயனார்

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்து"ப்

பெரும்போர் புரிந்து தம் அரசராகிய நரசிம்மவருமருக்குப் பெருவெற்றி விளைத்தார். இவ்வரலாறு கல்வெட்டுகளாலும் பிற ஆராய்ச்சிச் சாதனங்களாலும் வலியுற்றுத் திருஞானசம்பந்தமூர்த்திகள் ஏறக்குறைய கி. பி. 640-ம் ஆண்டின் பக்கம் வாழ்ந்தவர் என்று நிச்சயஞ் செய்யப் பெருந்துணையாயிற்று. இதனை ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, M.A., அவர்கள் எழுதிய "1800 ஆண்டுகளின் முன்னைத் தமிழர்" என்ற வரலாற்றிற் காண்க.

இனி, நடுநாட்டிற் பாடலிபுத்திரத்தில் அரசுசெய்த சமண மன்னவனாகிய மகேந்திரவர்மன் அப்பர்சுவாமிகளை நீற்றறையில்இட்டும் மற்றவகைகளிலும் வருத்தஞ் செய்தான். ஆனால் நாணில்லா அமணபதகருடன் ஒன்றிய அம்மன்னவன் சூழ்ச்சியைத் திருத் தொண்டின் உறைப்பினாலே அப்பரடிகள் வென்ற பின்னர்ச் சமணத்தைவிட்டு அந்த மன்னவன் சைவனானான். சமண்

பாழிகளையும் பள்ளிகளையும் இடித்துக்கொண்டு வந்து குணபர வீச்சரம் என்ற கோயிலைக் கட்டினன்.

" கூட்இடித்துக் கொணர்ந்து குணபர *வீச்சர மெடுத்தான் "

இதனால் அவனுக்குக் குணபரனென்றும் ஒரு பேர் இருந்தமையைச் சேக்கிழார் பெருமான் அறிவிக்கின்றார். இந்த மகேந்திர வர்மனது திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டினால் இவனது காலம் ஏழாவது நூற்றாண்டின் இடைப்பட்டது என்றறிகின்றோம்.

எனவே, இந்தக் கால வரையரையானது மேலே கண்ட ஞானசம்பந்தப் பெருமானது காலத்தினோடு ஒப்புமை பெற்றுச் சரிதத்தை வலியுறுத்துகின்றது. பாண்டி நாட்டுச்சரித நிகழ்ச்சியிலும் " கூனபாண்டியன் " வரலாற்றை ஏழாவது நூற்றாண்டிற் கேட்கின்றோம். இங்ஙனமே பெரியபுராணத்தில் வருகின்ற ஏனைச் சரித நிகழ்ச்சிகளும் உண்மைச் சரித ஒழுங்கைப் பின்பற்றி விரிக்கப்பெற்றுள்ளன என்பது புராணத்தின் பெருஞ்சிறப்பாகும்.

இன்னும் ஒன்றிரண்டு உதாரணங்கள்கண்டு மேற் செல்வேன்.

சோழன் கரிகாற் பெருவளத்தானையும் அவன் இமய மலையிலே தனது புலிக் கொடியை நாட்டிப் பொறித்தமையும் பிறவும் பற்றிச் சேக்கிழார் சுவாமிகள் எடுத்துப் பேசுகின்றார்கள்.

**கரிகாற் சோழன்**

*குறிப்பு:--இது அச்சிட்ட புராணப் பிரதிகளில் "குணதர வீச்சரம்" என்றுள்ளது.

"பொன்மலைப் புலிவென் றோங்கப் புதுமலை யிடித்துப் போற்
அந்நெறி வழியே யாக அயல்வழி யடைத்த சோழன்" [றும்
—எறிபத்த நாயனார் புராணம் - 2.

"புண்டரிகம் பொன்வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்"
(புண்டரிகம்=புலி - வடமொழி)
—ஏனாதி நாயனார் புராணம் - 1.

"குலகிரியின் கொடுமுடிமேற் கொடிவேங்கைக்
குறியெழுதி..........சோழர்"
—புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 1.

"என்று முள்ளவிந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்தி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதலான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்"
—திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 85.

இந்த வரலாறுகள் நாம் காண்கின்ற வேறு சரித்திர ஆதாரவுகளுடன் ஒன்றுபட்டு இச்சரித்தை வலியுறுத்துதல் காணலாம்.

சிலப்பதிகாரம் - இந்திரவிழ வூரெடுத்த காதை,

"அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"
(95 - 98 - வரிகள்)

என்ற இடத்திலே அடியார்க்கு நல்லார், "தமிழ்நாட்

டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப் பொரும் அரசரை இரண்டு திசையினும் பெறாத கரிகாலன் போரிலே பேராசை யுடைய னாதலின், வடதிசை பெருந்திசை யாதலின், பகைபெறலாமெனக்கருதி ஆண்டுச் சேறற்கு விரும்பி வாளும் குடையும் முரசும் நாளொடுபெயர்த்து என்வலிகெழு தோள் இத்திசையினுயினும் நண்ணாரைப் பெறுவதாகவேண்டுமென்று தன் வழிபடுதெய்வத்தை மனத்தான் வணங்கி........வடதிசை நோக்கிப்போகின்ற நாளிலே இமயவர் உறையும் இமயமலை பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றாகலின், மனஞ்சலித்து மீள்கின்றவன் 'மடிதலின்றி மேலுஞ் செல்ல முயலும் என் னசை பின்னிட் டொழிய இம்மலை எனக்குப் பகை யாகக் குறுக்கிட்டு விலக்கிற்று' என முனிந்து அதன் பிடரிடத்தே தனது புலியைப் பொறித்துத் தான் வேட் டது பெறாத கோட்பாட்டால் மீள்கின்ற கரிகாலற்கு" என்று உரை எழுதினர். அவ்வுரையின் கீழ்க் குறிப் பிலே பின்னரும், "பிடர்த்தலை யேற்றி" யென்றது "தன்னோடு எதிர்த்து விலக்குதலின் அதனைப் புறங் காண்டற்கும் அதன் வடபாலும் தனது ஆணை சேறற் கும் சாத்தன் அருளால் தான்பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தான் என உணர்க; என்னை?

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி லிமையச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிப்பொறி குறித்தது மறித்த பொழுதே"

—கலிங்கத்துப்பரணி.

எனவும்,

" கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவன்
மெச்சி யினிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத் தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு "

எனவும் கூறினராகலின் " என்று விரித்து எழுதியுள்ளார்.

" ...............செண்டுகை யேந்தி
வித்த கக்கரி மேற் கொளுங் காரி மேவு செண்டணை
வெளிய மொன் றுளதால் "

—திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணம் - 82.

என்ற பெரிய புராணத் திருப்பாட்டும் இங்கே காணத் தக்கது. இதனல் கரிகாற் சோழன் வடதிசை நோக்கிச் செல்லுவானக, அதற்கு முன்பே கச்சிக் கோட்டத்தின் வளமையை ஒரு வேடன் சொல்லக் கேட்டுப், போய்க், கண்டு, நகர் வகுத்துக், குடியேற்றிச், சாத்தக் கடவுளையும் வழிபட்டு, அக்கடவுள்பாற் கைச் செண்டு பெற்று, அதனைக்கொண்டு இமயமலையை அடிப்படுத்தி, அதன் சிகரத்திற் புலி பொறித்தான் என்று அறியப் படும். கரிகாலன் கச்சி மூதூரை மதில் தெரு முதலிய வற்றை வகுத்து அமைத்தான் என்பது

" விண்ணுளார் மறைகள் வேதம் விரித் தோதுவார்
கண்ணுளார் கழலின் வெல்வார் கரிகாலனை
நண்ணுவார் எழில் கொள்கச்சி நகர் ஏகம்பத்(து)
அண்ணலார் ஆடுகின்ற அலங் காரமே "

என்ற திருஞானசம்பந்த சுவாமிகளது கச்சியேகம்பத் (பண் இந்தளம் 7) திருப்பதிகத்தாலும் வலியுறுகிறது.

"பின்னுஞ் சனக மேரு மீமிசைக் கொடியை நாட்டி
மன்னனய் உலக மெல்லாம் மலரடிப் படுத்து நீடும்

"பொன்னுலக கிறைவன் ருனே புதுக்கினன் என்னில் அந்தக்
கொன்னுடை நகரின் காமர் கூறலாம் படிய தேயோ"

—நகரேற்றுப் படலம் - 274.

என்ற காஞ்சிப்புராண வரலாறுகளும் இங்கே காணத் தக்கன.

இனிப், புகழ்ச் சோழ நாயனர் தமது தலை நகராகிய உறையூரிலே இருந்து அரசு செலுத்தி வந்தனர். அந்நாள்களில் அங்கே பற்பல அரசர்களும் தம்மை இறைஞ்ச அரசு வீற்றிருந்தார். அக்காலத்திலே கொங்கர்களும் மற்றும் குடபுலத்து மன்னர்களும் திறை கொணரும்படி தமது குலமரபில் முதற்றனிநகராம் கருவூரில் அரச அங்கங்களுடன் வந்தணைந்தார். வந்தவாறே குடபுலமன்னர் பலரும் திறைகொணர்ந்து பணிந்து கொண்டனர். அப்படிப் பணிந்த அரசர்க்கு அவ்வவர் செயலுரிமைத் தொழில்களைச் செலுத்துமாறு ஆணை தந்தபின் தமது,

அதிகன்

"முறை புரியுந் தனித்திகிரி முறைநில்லா முரணரசர்
உறை அரணம் உளவாகிற் றெரிந்துரைப்பீர்"

என அமைச்சர்க்கு ஏவல்செய்து அரசு வீற்றிருந்தார். அமைச்சர்களும் அவ்வாறே தெரிந்து,

"அளந்த திறைமுறை கொணரா அரசன் உளன் ஒருவன்"

என்று அரசரிடம் அறிவிக்க 'அவன் யார்' என்று கேட்டார்க்கு,

"......அதிகன் அவன்; அணித்தாக
ஓங்கு எயில்சூழ் மலையரணத்து உள்ளுறைவான்"

என்று தெரிவித்தார்கள். இவ்வரலாறு பெரிய புரா

ணத்துக் கேட்கின்றோம். இந்த அதிகனையும் அவன் நாட்டையும் அவன் அரசாங்கத்தையும் பற்றிப் பழந் தமிழ்ச் சங்கப்பாட்டுகள் அறிவிக்கின்ற செய்திகள் இப்புராண வரலாறுகளை உறுதிப்படுத்துகின்றன. புற நானூற்றிலே பாடப்பட்டோருள்ளே அதியமான் தக டூர் பொருது வீழ்ந்த எழினி என்றும் அதியமான் நெடுமா னஞ்சி எனவும் இரண்டு அரசர்களைப்பற்றிக் கேட்கின் றோம். அதியமான் - அதிகன் - என்பன முதலில் ஒரு புகழ் வாய்ந்த அரசனது பெயராயிருந்து பின்னுளிலே அவ்வழிவந்த அரச பரம்பரையின் பெயராய் வழங்க லாயிற்று. கொங்கு நாட்டிலே போந்து போர்புரிந்த பிற அரசர்கள் அதியமானுடன் போர் செய்ததாகவே பேசப் பெறுகின்றது. இந்த அரசர்கள் கொங்கு நாட் டின் கீழ்ப்பாகங்களை ஆண்டனர். தகடூர் இவர்களது தலைநகர். இதுவே இப்போது சேலம் சில்லாவிலே தர்மபுரி என வழங்கும் ஊர் என்று அறிகின்றோம். இந்தத் தகடூர் முன்னுளிலே மிக்க சிறப்புடன் ஆண்ட அரசரின் தலைநகராகக் காண்கின்றோம். கொல்லிமலை யும் (சேலம் சில்லாத் தென்பாகத்தில் உள்ளது) குதி ரை மலையும் (கோயமுத்தூர் சில்லா உடுமலைப் பேட்டை தாலுக்காவில் உள்ளது) இவர்களது மலைகள் எனவும் புற நானூறு அறிவிக்கின்றது. குதிரை ஆறு என ஓர் ஆறும் இங்கு உள்ளது. “கொல்லிக் கூற்றத்து நீர் கூர் மீமிசை, பல்வேற்றுனை அதிகமான்” என்பது பதிற்றுப் பத்து. கூற்றம் என்பது மலைச்சாரல் நாடு. நீர் கூர்மீ மிசை என்பது மலையினது நீர்மிக்க உச்சியிடம். இவ் வாறு தகடூரிலும் கொல்லியிலும் அரசுசெலுத்திய அதிக

மாணப் பெருஞ் சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் வெற்றிகொண்டு அவனது தகடூரினையும் எறிந்தனன் எனப் பதிற்றுப்பத்தில் காண்கின்றோம். இந்த அதிகமான் பெரு மன்னர்களுக்கு அடங்காதவனைச் சேரன் சோழன் பாண்டியன் முதலிய எழுவரோடும் பகைத்து மேற்சென்று அவர்களோடு போர் புரிந்தவன் என்றும் புறநானூறு அறிவிக்கின்றது. அதிகனது மேலே கண்டவாறு உள்ள நாடும் மலையரணமும் புகழ்ச் சோழர் தலைநகராகிய கருவூரிற்குச் சமீபத்தில் உள்ளன. ஆதலின் " அணித்தாக ஓங்கெயில் சூழ் மலையரணம்" என்றார் சேக்கிழார்நாயனார். அதிகமான் பாண்டியனோடு போர் செய்ததை நெடுஞ் சடையன் சாசனம் ஒன்று அறிவிக்கின்ற வரலாற்றைக் கொங்கு மண்டல சதகத்திற்காணலாம்.

" மாயிரும் பெரும்புனற் காவிரி வடகரை
ஆயிர வேலி அயிரூர் தன்னிலும்
புகழி யூரும் திகழ்வே லதியனை
ஓடுபுறங் கண்டவன் "

என்ற பாட்டில் அயிரூர் புகழியூர் என்பன இப்போதும் அயிலூர், புகழூர் என்ற பெயர்களால் கருவூருக்குச் சமீபத்தில் வழங்கப்படும் நகர்களாக அறிகின்றோம்.

**மலாடர் கோமான்**

பின்னும் மெய்ப் பொருள் நாயனாரைச் சேக்கிழார் பெருமான் "சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி, மாதொரு பாக ரன்பின் வழி வரும் மலாடர் கோமான்" என்றும் "மெய்ப் பொருட் சேதி வேந்

அ

தன்" என்றும் "சேதி நாதனுர்" என்றும் அறிவிக்கின்ருர். "மலையமான் நாடு" என்பது "மலாடு" எனவரும் என்று இலக்கண நூலார் மரூஉ மொழிக்கு உதாரணங் காட்டுவர். அந்நாடு பெண்ணை யாற்றங் கரையில் உள்ளதென்றும், அதற்குத் தலை நகர் திருக்கோவலூர் என்றும், அதுவே சேதி நாடு என்று வழங்கவும் பெறும் என்றும், இப்போது நடுநாடு என்று வழங்கப் பெறுவதும் இந்நாடே என்றும், இந்நாட்டரசர் "சேதிராயர்" "சேதி வேந்தர்" என அழைக்கப் பெறுவர் என்றும், இந்நாட்டை ஆண்ட மலையமான் திருமுடிக்காரி என்ற கடையெழு வள்ளல்களில் ஒருவனுகிய அரசனைப்பற்றிய புறநானூறு, சிறு பாணாற்றுப்படை, அகநானூறு முதலியவற்ருலும், பிற சாதனங்களாலும் அறிகின்ருேம்.

மேலே கண்டவாறு சரிதநிகழ்ச்சிகளை அறிவிக்கும் புற ஆதரவுகளேயல்லாமல் அவ்வப் பெரியார்கள் பாடியருளிய மூவர் தேவாரங்களும், திருமூலர் திருமந்திரமும், காரைக்காலம்மையார் திருவந்தாதி முதலியனவும், சேரமான் பெருமாள் பாடியருளிய பொன்வண்ணத் தந்தாதி முதலியனவும், ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் அருளிய க்ஷேத்திர வெண்பாவும் பிற திருப்பாடல்களும் சேக்கிழார் சுவாமிகள் புராணத்திற்குப் பேராதரவுகளாய் விளங்கின. சுவாமிகள் எடுத்துக்கூறும் எந்தச் சரிதநிகழ்ச்சிகளையும் ஒவ்வோர் முன் ஆதரவு பெற்றே கூறியருளுவர். தேவாரம் முதலிய திருப்பாடல்கள் சுவாமிகள் கட்டிய சரிதக் கட்டிடத்திற்குப் பெருத்த அடிநிலையாயிருந்தன. உதாரணமாகச் சில பார்ப்போம்:

**தேவாரம் முதலிய திருப்பாடல்களினுற் பெற்ற சரித ஆதரவு**

குலச்சிறை நாயனுர் புராணமும், மங்கையர்க்கரசி யம்மையார் புராணமும் திருஞான சம்பந்த சுவாமிகளது "மங்கையர்க்கரசி" என்று தொடங்கும் திருவாலவாய்த் (பண் - புறநீர்மை) திருப்பதிகத்தையே அடிப்படையாகக் கொண்டன. திருஞான சம்பந்த மூர்த்திகளது திருமுதுகுன்றத் தலயாத்திரையிலே "மத்தாவரை நிறுவி........" என்ற அத்தலத்து நட்டபாடைத் திருப்பதிகத்தை வரும் வழியிலே அருளிச் செய்தார் என்றும், "நின்று மலர் தூவி" என்ற திருவிருக்குக்குறள் - குறிஞ்சித் திருப்பதிகத்தை அத் தலத்தை வழிபட வலங்கொள்ளும்போது அருளினர் என்றும், "மூரசதிர்ந் தெழும்" என்ற திருமுக்கால் - சாதாரித் திருப்பதிகத்தைத் திருமுதுகுன்றப் பெருமானது முன்னிலையிலே அருளினர் என்றும் கூறிய புராண வரலாறுனது அந்தந்தத் தேவாரங்களிலே கிடைத்தபொருள்களையே தழுவி எழுந்த சரிதமாகும். இவ்வாறே திருவாலவாய்த் தலயாத்திரையிலேயும் வரும் புராணத்தின் எல்லாச் சரித நிகழ்ச்சிகளுக்கும் அவ்வத் தேவாரங்களே சேக்கிழார் பெருமானுக்கு அடிநிலை தேடித்தந்தன என்பதும் கொள்க. இன்னும் திருஞானசம்பந்த சுவாமிகளின் அற்புதத் திருவருட் செயல்களாகிய திருவீழிமிழலை காசு வாசி தீரப்பாடியது: பழயனூரில் பெருமான் கனவில் நினைப்பிக்கப் பாடியது: திருவோத்தூரில் ஆண்பனை பெண்பனையாகப் பாடியது: திருமயிலையில் எலும்பு பெண்ணாகப் பாடியது: முதலியவற்றைப்பற்றிச் சேக்கிழார் சுவாமிகள் விரித்துக்கூறும் வரலாறுகள்யாவும் அவ்வத் தேவாரங்களையே அடியொற்றி

எழுந்தன என்பதும் ஒப்பிட்டுக் காணலாம். ஸ்ரீபுகலி யும் திருவீழிமிழலையும்: திருநள்ளாறும் திருவாலவாயும்: என்ற தேவாரத் திருப்பதிகங்களிற் போந்த பொருள் களையே சேக்கிழார் சுவாமிகள் அவ்வச் சரிதப்பகுதி களின் ஆதரவாகக் கொண்டனர் என்பது புராணம் கற் போர்க்கு இனிது விளங்கும். அப்பர் சுவாமிகள் புரா ணத்திலே திருப்பழையாறை வடதளிச் சிவாலயத்தைச் சமணர் தூராறுத்து விளக்கின பகுதிக்கு அத்தலத் தேவாரமே மூலமான ஆதரவாக இருந்தது காணலாம். சுந்தரமூர்த்திகள் திரு அவிநாசியிலே முதலைவாய்ப் பிள்ளை எழுப்பியபோது "உரைப்பார் உரை" என்ற திருப்பாட்டிலே, முதலையானது பிள்ளையைக் கரையிற் கொடுவந்து உமிழ்ந்தது என்றும், திருத்தில்லையிலே தரிசிக்கும் "பேரூரிற் கண்ட நிலை சிறப்பித்தார்" என் றும், திருவாரூரிலே கமலாலயக் குளக்கரையின் கண் நின்றுகொண்டு கூடநின்றவராகிய பரவையார் "தன் செய்ய வாயின்நகை தாராமே" பொன்தாரும் எனப் பெருமானை வேண்டினுர் என்றும், திருக்கச்சூர் ஆலக் கோயிற்றிருப்பதிகத்தைக் "கண்ணீர் மழைபொழிவி" பாயநின்று பாடினுர் என்றும், திருவெண்பாக்கத்திலே,

"வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரே
யென்ற வன்றொண்டர்க்(கு) உளன்றுகோ லருளி
இணங்கி லாமொழி யால்உளோம் போகீ
ரென்றி யம்பினர் ஏதிலார் போல"

என்றும், திருத்துருத்தியிலே வடகுளத்திலே,

"புக்கதனில் முழுகுதலும் புதிய பிணியது நீங்கி
அக்கணமே மணியொளிசேர் திருமேனி யாயினுர்"

என்றும், பிறவும் சேக்கிழார் சுவாமிகள் எடுத்துக் கூறும் சரித நிகழ்ச்சிகள் அவ்வத் தேவாரத்திற் காணப் பெற்ற உள்ளுறை சான்றுகளாற் கிடைத்த சேம நிதிகளாம். நமிநந்தி யடிகள் நாயனுரைத் "தொண்டர்க்கு ஆணி" என்று அப்பர் சுவாமிகள் தேவாரத்திற் சிறப்பித்தமையையும், திருவாக்கூர் மறையோர் "இன்மையாலிரந்து சென்ருர்க் கில்லையென் ருதே யீயும், தன்மை யோர்" என்று திருஞானசம்பந் தப் பெருமான் தேவாரத்திற் சிறப்பித்தமையையும் இன்னும் இவ்வாறே தேவாரம் முதலிய அருட்பாட்டுக் களிற் காணப்பெறும் மெய்த் திருக்குறிப்புகளையும் நாம் ஊன்றிப் பார்த்து அனுபவிக்குமாறு சரிதத்திற் கோத் துச் சேக்கிழார் பெருமான் விளக்கினமை காண்க.

திருமூல நாயனர் திருமந்திரத்திலே ஞானம் முத லிய நான்கு பாதங்களும் இறைவன் அருளிய ஆகம உண்மைகளும் விளக்கப் பெற்றன: அதற்காகவே அவர் இவ்வுலகத்திலே போந்தார்: என்பனவாதி வர லாறுகள் அவர் திருவாக்காகிய திருமந்திரத்திற் பெற் றவைகளே யாம். காரைக்கா லம்மையார் இளமையிலே "வண்டல் பயில் வனவெல்லாம் வளர் மதியம் புனைந்தசடை அண்ணல்பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று" வந்தார் என்பதும், அவர் சிவ கண மாகிய பேய் வடிவங் கொண்டார் என்பதும், அவர் திரு வாக்காகிய அற்புதத் திருவந்தாதியிலே,

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்"
"பேயாய நற்கணத்தில் ஒன்ருய நாம்"

என்று வருவனவற்றிலிருந்து போந்தன. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தலங்கள் தோறும் சென்று தரிசித்து "ஏற்ற பணிசெய்தே, வண்டமிழின் மொழி வெண்பா வோரொன்று வழுத்துவார்" என்பதும், அவர் தமது அரசாட்சியை "இன்னலென இகழ்ந்து அதனை எழிற் குமரன் மேலிழிச்சி"த் தொண்டு செய்வாராயினார் என்பதும், பிறவும் அவரது க்ஷேத்திர வெண்பாவிற் போந்த பொருள்களே யாம். சேரமான் பெருமாள் நாயனாரைக் "காரால் நிகர்க்க வரிய கொடைக் கையார் கழறிற் றறிவார்தாம்" என்றும், "ஈகையினாற் செம்பொன் மழையா மெனப் பொழிந்து" என்றும் சேக்கிழார் சுவாமிகள் விவரிக்கின்ற பொருள்கள், "கார்கொண்ட கொடைக் கழறிற் றறிவார்க்கு மடியேன்" என்ற திருத் தொண்டத் தொகையையும் "பருவக் கொண்மூப்படியென," என்ற திருமுகப் பாசுரத்தையும் ஆதாரவாகக் கொண்டு எழுந்தன என்று துணியலாம். "காரைகள் கூகை முல்லை" என்ற திருநனிபள்ளிப் பியந்தைக் காந்தாரத் திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்த மூர்த்திகள் அத்தலத்திற்குப் போகும் வழி நடையிலே தமது தந்தையார் தோளின்மேல் இருந்து அருளினார் என்பதும், சுந்தர மூர்த்திகள் "திருக்கோத்திட்டையும் கோவலும்" என்ற திருப்பதிகத்தைத் திருப்பரங்குன்றார் சன்னிதானத்தில் தமிழ் மூவேந்தர்களும் தம் கூட இருந்து தரிசித்தபோது பாடியருளினர் என்பதும் ஆகிய புராண வரலாறுகள் அவ்வத் தேவாரங்களாகிய கண்ணாடியிற் காணும் காட்சிகளே யாம். ஆங்காங்கு வருவன பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

**நாட்டின் அமைப்புகள்**

இனி, அந்நாளில் நிகழ்ந்தபடி வெவ்வேறு நாடுகளின் அமைப்பும், வழிகள் முதலியநிலைகளும், உண்மைச் சரித இயல்பிலே அறிவிக்கப் பெறுகின்ற அமைப்பைத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்காளத்தியி லிருந்து திருக்கயிலாயத்துக்கு எழுந்தருளிய யாத்திரையிலேயும், திருமூலதேவர் திருக்கயிலாயத்திலிருந்து பூவுலகிற்போந்த வரலாற்றிலேயும் பிற இடத்தும் காணலாம்.

பெரிய புராணத்தின் உண்மைச் சரித இயலைக் காட்டச் சிற்சில உதாரணங்களை மட்டும் மேலே காட்டினேன். அந்நாள் வல்லரசாய் விளங்கிய சோழமன்னரின் அமைச்சராகித் தாம் அறிந்து கொண்ட நாட்டு முற்காலச் சரிதங்களும், முதல் நூல்களாகிய தமிழ் நூல் - சைவ நூல் வல்லராய்த் தாம் பயின்றறிந்த உண்மைகளும், எல்லாவற்றிற்கும் மேலாய்த் திருவருள் வழியே தமக்கு அறிவிக்கப்பெற்ற உண்மைகளுமே சேக்கிழார் பெருமானுக்கு ஆதரவுகளாயின. ஆதலின் கல்வெட்டுகளோ, அன்றி முற்காலத்துப் பிற சரித அடையாளங்களோ, அன்றிப் பழ நூல்களோ, பிறவோ, எவையேனும் இதுவரையும் கண்டனவும் இனிமேற் காண்பனவும் அறிவிக்கும் உண்மைகள் ஒவ்வொன்றும் பெரிய புராணச் சரித இயலினுடன் ஒத்தியின்று எவ்வித வேற்றுமையுமின்றிப் பொருந்துமாற்றை எங்கும் காணலாகும் என்று துணிந்து சொல்வேன்.

இதனுடன் எனது இரண்டாவது நாட் சொற்பொழிவினை ஒருவாறு முடித்துக்கொள்வேன். இனிப் பெரியபுராணத்தின் 'கவிச் சிறப்பும் பயனும்' என்பது பற்றிய எனது மூன்றும்நாட் சொற்பொழிவை நாளை நிகழ்த்துவேன்.

SAMBASANATHA MUDALIAR
31 AUG 1933
SHIYALI

# III

## மூன்றாநாட் பிரசங்கம்

### பெரியபுராணம்: கவிச்சிறப்பும் பயனும்

பெரியபுராணத்தின் ஆசிரியரைப்பற்றி முதல் நாளும், அதன் கலைஞானங்களைப் பற்றி இரண்டாம் நாளும் சிறிது பேசினேன். இன்றைக்கு அதன் கவிச் சிறப்பையும் பயனையும் பற்றி உங்கள் முன்னிலையில் சில பேசத் துணிகின்றேன்.

கவி என்பதே தமிழிற் செய்யுள் என்ற பெயரால் அழைக்கப் பெறுவதாம்.

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்று செய்யுளாவது யாதென, அதன் இலக்கணத்தை வரையறுத்தார் பெரியோர். உயிர் தங்கும் உடம்பு போல உறுபொருள் தங்கும் இடனேயாகிச் சொற்களால் அணி பெறப் புலவோர் செய்வன செய்யுளாம். எனவே, சொல்லின் சிறப்பு ஒரு புறம் இருக்கப் பொருளின் சிறப்பே சிறப்பாகப் பெற்று அழகும் பொருந்துவது செய்யுள் என்பதாயிற்று. ஆதலின் சொல் முதலியன அணிபெற அமைந்த கவிச் சிறப்பை முதலிற் பேசி, அதனுள் அமைந்த பொருட் சிறப்பைப் பின்னர் முறையிலே பேசி, இறுதியிலே இக்குறித்த பொருளாற் கருதிப் பெறப்படும் பயனைப் பேசி, இன்றைய சொற் பொழிவை ஒருவாறு முடிக்க எண்ணுகிறேன்.

**அணிகள்**

அணிகள் இந்நாளில் தமிழிலே எண் வரையறையின்றி வழங்குவனவாயின. அவை சொல்லணி பொருளணி எனப் பொதுவகையால் இரண்டாக வகுக்கப்பெறும். செய்யுளுக்கோ, அன்றிக் காப்பியத்துக்கோ இவை அழகு செய்வதால் அணி யெனப் பெற்றன. சொல்லணிகள் பொருளணிகளைப் போல் அத்துணைச் சிறப்புடையனவல்ல; ஆயினும் செய்யு ளின்பத்தை மிகும்படி செய்து உவகை யூட்டுவதால் இவைகளும் காப்பியத்தில் வேண்டப்படுவனவாம். மடக்கும் அதன் வழிப்படும் மிறைக் கவி என்கிற பல வகைச் சித்திரக் கவிகளும் சொல்லணிகளாம். மடக்கிலும் பலவகையுண்டு. இதனையே யமகம் என்பது வடநூல் வழக்கு. இவற்றின் விரிவுகளை இலக்கணங்களிற் காண்க. தமிழ்மொழியிலே இடைக் காலத்திலே, அதாவது சங்க முதலிய முற்காலத்திற்குப் பிற்பட்ட நாட்களிலே, இந்தச் சொல்லணிகள் பெரிதும் பயின்று கையாளப்பெற்றன. இது வடநூலாரைப் பின்பற்றித் தமிழர் மேற் கொண்டதாகும். யமகத்திற்கும் பல சித்திரக் கவிகளுக்கும் பெயர்தானும் வடமொழிச் சொற்களாக வழங்கப் பெறுதலே இதற்குச் சான்றாகும். ஆறும் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்த மூர்த்திகள் தமது தேவாரப் பதிகங்களிலே திருவி யமகம், திரு ஏக பாதம், திருக்கோமூத்திரி, திருமாலை மாற்று, கூட சதுக்கம் முதலிய பதிகங்களை மிறைக்கவி வகையிலே கட்டளையிட்டருளியதே அந்நாளில் வட மொழி முறைகள் தமிழர்களிடத்தே மேற்கொண்ட முதன்மையைக் காட்டுகின்றது. ஆதலின் அதற்கு ஐந்நூறு ஆண்டுகளின் பின்னர் பதினொன்றும் நூற்

ருண்டில் வாழ்ந்த நமது பெரியபுராண ஆசிரியர் இந்தச் சொல்லணிகளைத் தமது காப்பியத்தில் அங்கங்கே பெய்தமைத்தது வியப்பாகாது. ஆனால் இவற்றிற்கு அநாவசியமானதோர் பெருமைத்தானத்தைத் நமது ஆசிரியர் அளிக்கவில்லை. மிக அருகியே இவற்றை ஒரு சில இடங்களில் மட்டும் அழகு பொருந்த அமைத்துள்ள சிறப்பு நோக்கத்தக்கது. ஆசிரியர் அமைத்த ஒரு சிலவற்றிலேயும் ஒரு சில உதாரணங்கள் மட்டும் இங்குத் தருவேன்.

"பண்டரு விபஞ்சி யெங்கும் பாதசெம் பஞ்சி யெங்கும்
வண்டறை குழல்க ளெங்கும் வளரிசைக் குழல்க ளெங்கும்
தொண்டர்த மிருக்கை யெங்குஞ் சொல்லுவ திருக்கை யெங்கும்
தண்டலை பலவு மெங்குந் தாதகி பலவு மெங்கும்" 32.

"கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்னச்
சுரும்பல்லி குடைநீலத் துக*ளல்ல பகலெல்லாம்." 15.

—திருநாட்டுச் சிறப்பு.

"ஐவரைக் கொன்று நின்றார் அருவரை யனைய தோளார்" 25.

"சென்னியிற் கொண்டு சென்னி
திருவளர் கோயில் புக்கான்" 53.

"படரொளி மறுகி லாடும் பயில்கொடி கதிர்ப தாடும்
தடநெடும் புவிகொண் டாடுந் தனிநகர் வளமை யீதால்" 4.

†"தேமல ரளகஞ் சூழுஞ் சிலமதி தெருவிற் சூழுந்
தாமகிழ்ந் தமரர் சூழுஞ் சதமக னகரந் தாழ" 3.

—எறிபத்தநாயனர் புராணம்.

---

* அல்ல: அல் = இருள்; இருளினைச் செய்கின்றன.

† இவ்வடிகளில் 'தெருவிற் சூழும்' வினை முற்று; ஏனை இரண்டு இடங்களிலும் வெவ்வேறு பொருள்களில் வந்த பெயரெச்சமாகப் பொருள் கொள்க.

"பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்னுசை எழுபரவை"
—தடுத்தாட்கொண்ட புராணம் - 148.

"தெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர்"

"சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு"
—திருநாவுக்கரசுநாயனார் புராணம் - 12, 11.

"கைதவம் பேச மாட்டே னென்று கைதவனுஞ் சொன்னான்"
—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம் - 749.

இன்னும் இவை போல்வன பலவுங் காண்க.

சேக்கிழார் பெருமான் சொல்லணிகளை மிக அருகியே வழங்குவர். ஆயின், அவை இலகுவிற் பொருள் தரும் வகையிலே அமைவன. அன்றியும் சிற்சில செய்யுட்களில் ஒரு சொல்லே மீள மீள வரும்படி ஆசிரியர் அமைப்பார். அவற்றில் அருகிய அழகிய பொருட்பேதம்பெற அமைக்கப்பெற்ற அந்தச் சொல்லானது படிப்போர் ஊன்றிப்பார்த்தல்லாது அவர்களிடமிருந்து அதன் பொருட்பேதங்கள் மறைந்து நழுவிவிடும்படி அமைக்கும் இயல்பு இவ்வாசிரியரது மாண்பான தனி இயல்பாம். மேலே காட்டிய எறிபத்தநாயனார் புராணம், 3, 14, நாட்டுச்சிறப்பு 15 முதலிய பாடல்களைக் காண்க. ஆயின், இவ்வகை அணியைச் சொல்லணியின் வகையிலே சேர்த்துப் பின்வருநிலை எனப் பெயர் தந்து உரைத்தனர் பின்னுசிரியர்கள். அவை சொல்லைப் பற்றியனவாம். ஆதலின் இங்கே காட்டப்பெற்றன.

**சொல் அணி**
**பொருள் அணி**

இனிப் பொருளணிகளைப்பற்றிச் சிறிது பார்ப்போம். முதலில் தமிழிலக்கணம் உவமம் ஒன்றையே அணியெனக் கொண்டதாகும். இது தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் உவமவியல் என ஒருஇயல்வகுத்து அதில் உவமத்தின் இலக்கணங்களை விரித்து வரையறுத்தமையால் இனிது விளங்கும். உவமம் ஒன்றைத் தவிர வேறு அணிகளைத் தொல்காப்பியர் கூறினரில்லை. ஆனால் அவர்குப் பிற்காலத்தில் வடமொழியாளர் தமிழ்நாட்டில் மிகுந்து கலந்து பயின்றபோது அவர்களது இலக்கிய இலக்கணங்களும் தமிழிற் புகுந்து கலந்து பரவின. அவற்றிலிருந்தும் ஏனைப் பிற்காலத்துத் தமிழ் நூல்களிலிருந்தும் வேறுபல அணிகளையும் தமிழ் இலக்கணம் ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு இலக்கண வரையறை வகுக்கலாயிற்று. ஏறக்குறைய 700, 800 ஆண்டுகளின் முன்னர் இயற்றப்பெற்ற தண்டியலங்காரம் என்பது முழுமையும் வடமொழி அலங்காரத்தையே தமிழில் புகுத்திவிட்டது. அதனை ஒட்டிப் பின்வந்த இலக்கண விளக்க நூலுடையாரும் "தன்மை யுவமை யுருவகம் தீவகம்" என்னும் அணியியற் சூத்திரத்திலே 35 அணிகளை உடன்படுத்தினர். தொல்காப்பியரின் உவமவியல் இலக்கண விளக்கத்திலே அணியியல் ஆயிற்று. ஆயினும், ஊன்றிப்பார்க்குமிடத்து இம்முப்பத்தைந்து அணிகளுள்ளே தொல்காப்பியர் கொண்ட உவமம் ஒழிந்த மற்ற 34 அணிகளில் சொல்லணி மாத்திரையாய்க் கொள்ளத்தக்க பின்வரு நிலை முதலியனவும், பொருள்கோள் நிலையளவிலே காணத்தக்க தீவகம், நிரனிறை, முதலி

யனவும், பிறவும், ஒழித்து உள்ளவை பெரும் பகுதி உவம விசேடங்களிலே அமையுமாறு காணலாம். சிலேடை, ஒப்புமைக்கூட்டம், தற்குறிப்பேற்றம் முதலியன உவம இயல்பினையே ஒரோர் முறையிலே தாங்கி நிற்றலின், இவைகளை உவம வகையிலே வைத்தாலும் இழுக்கில்லை. மேலும் சுவை அணிகள் என்றவை மெய்ப்பாடுகளின் வகையிலே படுவனவாம். அதிசயம் ஆர்வம், விரோதம் முதலியவற்றைக் காண்க. இவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் தனியாக மெய்ப்பாட்டியலில் வைத்துக் கூறினார். எனவே, தமிழர் கொண்டதாகத் தொல்காப்பியர் உடன்பட்ட உவமம் ஒன்றே அணியென்று கொள்வதும் தகுதியாகும். தன்மை என்பது உள்ளதை உள்ளவாறு கூறுதலாம். உருவகம் என்பது,

> "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்
> தொன்றெனமாட்டினஃ துருவ மாகும்"

ஆதலின் அதுவும் உவமத்திலடங்குதல் காணலாம். ஆகவே, இன்று நாம் இங்கே பெரியபுராணத்திலே கண்ட அழகுகளில் 'தன்மை' என்ற இயற்கைக் கூற்றையும், 'உவமம்' என்ற தமிழணியினையுமே பற்றிச் சிறிது காட்டி முடிப்போம் உருவகம் உவமத்தி லடங்குவதாயினும் சிறப்புப் பற்றி வேறுபிரித்து எண்ணப் பெறுவதால் அதனையும் பற்றி ஒரு சில கூற எண்ணுகிறேன்.

தன்மையாவது குறித்த பொருளை உள்ளது உள்ளவாறே அழகு பெறக் கூறுதலாம். இதனை இயற்கை வர்ணனை எனவும், ஆங்கிலத்தில் Natural description எனவும் கூறுவர். இது ஆங்கிலத்திலே

மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதாகிச் சேக்ஸ்பியர் (Shakespeare), மில்டன் (Milton) முதலிய மகாகவிகளிலே காணப்பெறும் பேரழகுகளில் ஒன்ருய் விதந்து பாராட்டப்பெறும். இதனை நம் தமிழ்ப் புலவர் கையாளுகிறதில்லை என்று ஒரு குறையும் சிலர் கூறுவர். ஆனல் நமது சேக்கிழார் பெருமானர் இதனை எவ்வகையில் வைத்து ஆண்டிருக்கிருர்கள் என்று பார்ப்போம்.

"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை ; அதுதான்
பொருள்குணஞ் சாதி தொழிலொடு புலனும்."

என்று அதன் இலக்கணத்தை ஆசிரியர் வகுத்தனர். எவ்வகைப்பட்ட பொருளையும் உண்மைக் கூறுபாட்டிலே விளக்குஞ் சொன் முறையாற் பாடப்படுவதே தன்மை யென்னும் அணியாம் என்ருயிற்று.

ஒரு பொருளை உள்ளவாறு கூறுவதெவ்வாறு? ஒரு வாவியை யெடுத்துக் கொள்வோம். அது ஒரு நாழி சுற்றளவிருக்கும். தண்ணீர் மழைக்காலத்தில் நிறைந்தால் 10 அடி ஆழமிருக்கும். கரைகள் 20 அடி உயரம் என்பது போல வெல்லாம் கூறுவதும்; இது போலவே ஒரு பசுவைப் பார்த்து அது வெள்ளை நிறம், கொம்பு ஒரு அடி, வயது நான்கு, இரண்டு படி பால் தரும் என்பது போலக் கூறுவதும்; ஒரு பெண்ணைப்பற்றி அவள் நிறம் சிவப்பு, ஐந்தடி உயரம், மெலிந்தவள் என்பது போலக் கூறுவதும் ; இன்னோரன்ன பிறவும் உண்மைக் கூறுபாடாம். ஆயினும் இவைகள் குறித்த பொருள்களின் விவரணமாகுமேயன்றித் தன்மை என்ற செய்யு

ளணியாகா என்பது யாவரும் ஒப்புவர். இனிச் செய்யுளணியாய்க் கருதப்பெறும் தன்மை யணிகளின் ஒரு சில உதாரணங்களைப் பெரியபுராணத்தி லிருந்து காண்போம். இவற்றைச் சிறிது ஊன்றிப் பார்ப்போமானல் இவ்வணி நயம் பெற உரைப்பதில் ஸ்ரீ சேக்கிழார் பெருமானுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஆகிய கவிவாணர் தமிழ் மொழியிலே மட்டுமன்றி ஏனை ஆங்கில முதலிய பல மொழிகளிலும் கூட இல்லை என்றே துணிந்து சொல்லலாம்.

"காலெல்லாம் தகட்டு வரால்"

—திருநாவுக்கரசு நாயனூர் புராணம் - 4.

என ஓரிடத்தில் வரால் மீனின் உடம்பின் தன்மை கூறுகின்றார்.

"......................பூமலி தேமாவின்
காவி னறுங்குளிர் நீழ லுறங்குவ கார்மேதி.

—ஆனய நாயனூர் புராணம் - 2.

என்று எருமைகளின் செயலைக் கூறுமிடத்து எத்தனை உவப்பான நயங்கள் உள்ளத்தே தோன்றுகின்றன!

**வேடர் சேரி** குறிஞ்சி வாசியர்களாகிய குன்றவர் தன்மையைச் சென்று காண்போம்.

"குன்றவர் அதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்திரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியும் எண்குங் கடமையும் மானின் பார்வை
அன்றியும் பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்."

"வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னேடும்
புன்றலைச் சிறும கார்கள் புரிந்துட ஞட லன்றி

அன்புறு காதல் கூர அணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடும் எயிற்றியர் மகளி ரெங்கும்."

—கண்ணப்ப நாயனர் புராணம் - 3, 4.

மலைவாழ்நராகிய வேடர்களது சேரியின் தன்மையைத் தன்மை யணியிலேயே இங்கே நம்முன் காண்கின்றோம். வேட்டைக்கு மிக உதவியாகும் தொங்கிய காதுகளையுடைய நாய்களும், அங்குள்ள விளாமரத்திலே தொங்க விடப்பட்ட வார் வலையும், முற்றங்களில் பழக்கி வளர்க்கப்பட்டுத் தத்தம் இனமாகிய ஏனைய விலங்குகளை அகப்படுத்துக் கொண்டு வருதற்காகப் பயிற்சி செய்யப் பெற்ற காட்டுப் பன்றி - புலி - கரடி - கடமை - மான் முதலிய பார்வை மிருகங்களும், வீட்டின் முன் பாறையா லியன்ற முற்றத்தில் உணவின் பொருட்டு உணங்கும் ஐவன அரிசியும், நம் கண்முன் வருகின்றன. வேடர் சிறுவர் அங்குள்ள புலிக்குட்டிகளுடனும் யானைக் கன்றுகளுடனும் விளையாடலும், அச்சிறுமியர் மான்பிணைகளுடன் விளையாடலும் காண்கின்றோம். மலையில் வாழும் வேடர் சேரியின் இயல்பையும் அங்குள்ள மாவும் உணவும் தொழிலும் ஆகிய பொருள்களையும் ஆசிரியர் மிக உருசி பெற இப்பாட்டுகளாலே படம் வரைந்து காட்ட, நம் உள்ளதை உள்ளபடியே நம் கண்முன் நிற்பது போலக் காண்கின்றோம்.

மலையிலிருந்து மிறங்கி ஊர்கள், நகர்கள், நகர்ப்புறங்கள், சேரிகள் முதலியவற்றைச் சிறிது பார்ப்போம். பெரிய ஊர்களிலும், நகர்களிலும் உள்ள மக்களையும், மாடமாளிகை முதலியவற்றையும் உள்ளபடி எடுத்துக் காட்டுவமென்றல், அது பெரும்பாலும் புல



குன்றத்தூர் - சேக்கிழார் கோயில்

(பக்கம் 7 - 10)

வர்களுக்கு இல்குவானதே. ஆனால் நகர்ப்புறங்களிலும் சேரிகளிலும் தாழ்ந்தவர்களோ, அன்றி, இப்போது சொல்லுகிறபடி தாழ்த்தப்பட்டவர்களோ, இருக்கும் இடங்களைப்பற்றி உண்மைக் கூறு பாட்டில் கூறுவது பெரும் புலவர்களுக்கு அல்லாமல் தகுதி பெற இய லாது.

தீண்டாதார் என்கிற பறையர்களின் பாடியை ஸ்ரீ சேக்கிழார் தன்மை நவிற்சியில் வைத்துக் கூறும் செயலையும் இயலையும் பற்றி நாம் அவருடன் கூட அச் சேரிக்குச் சென்று அவர் காட்டக் காண்போம். ஓர் ஊர்ப்புறத்து ஒரு புலைப்பாடி உள்ளது. அதனை வயல்கள் சூழ்ந்திருக்கும்.

**புலைப்பாடி**

அந்தப் புலைப்பாடியில் அதாவது பறைச்சேரியில் புல்லால் வேய்ந்த பழங் கூரையுடைய பல சிறு குடிசைகள் உள்ளன. அவற்றில் வாழும் புலையர்கள் அவற்றின் கூரைகளை அடிக்கடி புதுக்க இயலாதவர்களாதலின் அவை பழங் கூரைகளாகவேநிற்கின்றன. ஆனால் பழங் கூரைகள் மழை, காற்று, வெயில் முதலியவற்றிற் சிதைந்து போகாத படி அதற்கு அவர்கள் ஒரு காவலாக அந்தப் பழங் கூரைகளைச் சேர்த்துப் பற்றுகின்ற மெல்லிய கைகளையுடைய கொடிச் சுரைகளை அவற்றின் மேற் படர வைத்துள்ளார்கள். கூரைக்குக் காவலேயன்றி அந்தச் சுரைக் கொடிகள் அவர்களுக்கு, உண்ணக் காய்களையும், பாத்திரங்களாகவும் பிறவாறுகவும் வழங்க நெற்றுக்களையும் தருவனவாம். மேலும் ஏனைப் பூசுணி முதலிய போலச் சுரைக்காய்களை இவர்களின் பண்ணையாளிகள் விரும்பார்களாதலின் இவற்றின் விளை

பொருள் இவர்களுக்கே முழுப் பயனும் தருவன. அன்றியும் இவர்கள் உண்ணும் இறந்த பிராணிகளின் புலால் முதலியவற்றிற்குச் சுரைகள் ஏற்ற கூட்டுணவுமாம். சுரைகள் பல நாளைக்கு நீடித்து வாழும். இவையாதி காரணங்களால் ஏனைய கொடிகளை விடுத்து இவர்கள் சுரைக் கொடிகளைக் கூரைகளின்மேற் படர வைத்தனர். செடி கொடிகள் படர வைப்பதற்கு வேறிடமில்லாமல் ஒரு சிறு இடத்தில் பல குடிசைகள் கட்டி வாழ்வதற்குத் தான் இவர்களுக்கு இயல்வதாகையால் சுரைக்கொடிகளை அவரவர் சிற்றில்களின் கூரைமேற் படர விட்டார்கள். இந்தச் சிற்றில்களின் கூரை புல்லால் வேயப் பெற்றன. வெயில் மழைகளால் விரைவில் இற்று விடக்கூடிய புற்களை இச்சுரைக் கொடிகள் சேர்த்துப்பற்றி மேற்படர்ந்து கொள்வன. இந்தச் சேரியில் வாழும் புலையர்கள் ஏனைச் சிலர்போல் ஊர் தொறும் திரிந்து செல்லாமல் ஊர்ப் புலைமையாகிய குடித்தொழிலில் நிலைத்து வழிவழியாக உழவுத்தொழில் செய்து விருந்து ஓம்பிக் கிளைஞர்களுடன் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். மேலே காட்டியவும் பிறவுமாகிய இத்தன்மைகளையெல்லாம் மிக அழகாகச் சேக்கிழார் சுவாமிகள் திருநாளைப் போவார் நாயனார் புராணத்திலே அந்நாயனார் வாழ்ந்த ஆதனூர்ப் புலைச்சேரியை எழுதிக்காட்டிய தன்மையணியிலே நாம் உள்ளது உள்ளவாறே காண்கின்றோம்.

“மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிலைத்துள்ளதோர் புலைப்பாடி”

இனி, இங்கிருந்து நெய்தல் நிலமாகிய கடலைச் சார்ந்த வலைஞர் சேரிக்குச் சேக்கிழார் சுவாமிகளைப் பின்தொடர்ந்து சென்று காண்போம். நாகப்பட்டினம் என்பது ஒரு பெரும் கடற் றுறைமுகப் பட்டினம். மலையிடத்திலே தினையும் தேனும் போலவும், ஊரிடத்திலே நெல்லும் கரும்பும் போலவும், கடற்றுறையிடத்திலே மீன் உணவே மிகுதியாம். இது, இயற்கையின் அமைப்புகளில் ஒன்று. யாவர் யாவர் யாங்கு யாங்கு வசிக்கின்றனரோ ஆங்கு ஆங்கு இயல்பிற் கிடைப்பனவற்றையே உணவாகக் கொள்வர் என்பது இயற்கை. இவ்வாறு துறைமுகத்தினர் மீன் மிகு விருப்பினராதலைப் பிற முகத்தினர் எடுத்துக் காட்டுதல் பரிகசித்தவாறாகாது. இது அவர்க்குப் பழவழக்காதலால் இதனை அவர்கள் விடுதலும் கடினமென்பர்.

"அங்கொ டுந்திரு நகர்மருங் கலைகடல் விளிம்பிற்
பன்னெ டுந்திரை நுரைதவழ் பாங்கரின் ஞாங்கர்
மன்னு தொன்மையின் வலைவளத் துணவினின் மலிந்த
தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப் பாடி"

—அதிபத்தநாயனர் புராணம் 5.

கடற்கரைகளில் மீன் வியாபாரமே பெருந்தொழிலாம். இதனைச் சிறிது நேரிற் சென்று ஒருநாட் காலையில் உற்று நோக்கினால் பல அதிசயங்கள் விளங்கும். நள்ளிரவிலும் சிறிது பின்னரும் எழுந்து பெரு வலைகளையும் மீன் பிடிக்கும் கருவிகளையுங்கொண்டு கட்டுமரத்தோணியில் ஏறி நுளையன் தனித்தோ, ஒருவனைத் துணைக்கொண்டோ கடலில் நெடுந் தூரம் மீன் கவர்ந்து வரச் சென்றுவிடுவான். பொழுது கிளம்பவோ அல்

லது முன்னதாகவோ அவன் கொண்ட மீனுடன் திரும்பி வருவான். பத்துப் பதினைந்து நாழிகை யளவு அவன் நடுக்கடலுட் சென்று அலையால் மோதுண்டும் நீருள் மூழ்கியும் மீனொடு பொருதும் ஓர் இரவிற்பாதியும் பெரு முயற்சியுடன் உழன்று திரும்பி வருகின்றான். அவன் இல்லக்கிழத்தியாகிய பரத்தியோ் என்றால் பொழுது விடிய எழுந்து மீன்கொண்டு விலை செய்தற் பொருட்டுள்ள கூடை முதலிய கொள்கலத்துடன் அவன் வரும் வழியிலே கடற்கரையில் எத்தனை தூரம் நீர் விளிம்புக்குள் அலைக்குள்ளே சென்று நிற்கக் கூடுமோ அவ்வளவு தூரம் சென்று நின்றுகொண்டு அவன் வரவை எதிர் நோக்கி நிற்கின்றாள். சில நாள் நன் மீனுகவும் பெரு மீனுகவும் அவனுக்குக் கிடைக்க, அவன் கொண்டு வருதலின் விலை மிகப்பெற்று மகிழ் வாள். சில நாள் சாதாரண மீன்களே அவனுக்குக் கிடைக்கும். ஆதலின் அதுகொண்டு பரத்தி பெறும் விலையும் சாமானியமாகும். வேறு சில நாள் மிகக் குறை ந்த மீனே அவன் படுத்து வருதலின் அவள் பெறும் விலையும் அவள் மனமும் மெலியும். மற்றும் ஒன்றிரண்டு நாள் எண்ணற்கரிதாய் மிகப்பெரிய மீன் பட, அவளும் பேருதியம் பெற்றுக்களிப்பாள். ஆதலின் இவள் நோக் கம் நள்ளிரவிற்சென்று சங்கடம் பலவும் பட்டுவந்த தன் நாயகனை நினையன் நன்கு திரும்பினனே, என்று காண்போம்: அவனுக்கு வேண்டுவனசெய்து அவனது கட்டுமரத்தோணியினைக் கரையேற்றவும், வலை முதலிய வற்றை ஒழுங்கு செய்யவும் பிறவுமாக அவனுக்கு உற்ற உதவி செய்வம்: என்பன அந்நளைச்சியின் மனத்தில்

வருதலில்லை. பின் என்னையெனின், மீன் உண்ணும் ஆசையினால் கைவிலைக்குப் பெறும் பொருட்டுப் பெரும் பொருள் கைமேற்கொண்டு வாங்குநர் வந்து கரையிற் காத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவசரம்! ஏன்? இம்மீன்கள் இரவிற் படுத்தன. காலையில் நுளையன் கரையேறி இளைப்பாறிய பின் அவற்றை நுளைச்சி கொண்டு விலைசெய்யு மிடத்துக்கு (ஆவண வீதி=கடைவீதி) கொண்டுவரக் காலமாகும். அதற்குள் அவை பழையனவாகிக் கெடத் துவங்கும். அன்றியும் மீனுள்ளே தக்கனவற்றைக் கரையிலேயே முன்னேரத்திலே பிறர் கொள்ளவே, தகாதனவே மீந்து கடைகளுக்கேகும். மேலும் நேரத்தில் இவைகளைக் கொண்டு செல்லா விட்டால் வீட்டிற் சென்று இவை பக்குவமாகவும் அவற்றை யுண்டு ஆபீசுக்குப் போவார் போகவும் காலம் வேண்டும். இவையாதி காரணங்களினால் மீன் கொள்வோர்க்கு மிக அவசரம்! மீன் விலைக்குக் கொடுப்போர்க்கோ அதைவிட அவசரம். ஏன்? மீன்கள் எணைக் காய் கறிகளைப்போல முன்னர்த் தெரிந்து வந்து கொண்டு சேர்க்கக்கூடிய பொருள் அல்ல. அவை அவ்வப்போது படுத்தே கிடைக்கத் தக்கன. நுளையர் எண்ணம் போலும் கொள்வோர் வேட்கை போலும் உள்ள வகையோ, பெரிதோ, சிறிதோ, நினைத்தது நினைத்த படி கிடைக்காது. கிடைப்பது அவரவர் அதிர்ஷ்டமே. மீன் பெறுவோர்க்குள்ளும் போட்டியும் காணும். ஆதலின் இன்றைக்கு எனக்குக் கிடைத்த மீனை நான் கரையிலேயே ஆசைப்பட்டார்க்குக் கொடுத்துப் பெருவிலை பெறுவேன் என்ற ஆவலே, பரத்திக்கு

மிகுதி. அவள் நுளையனைக் கரைசேர்த்திக் கொண்டு காலம் போக்கினால் வாணிபம் தவறிவிடும். இந்த எண்ணங்களுடன் கடலினுள்ளேயே சிறிது தூரம் சென்று எதிர்பார்த்து நிற்கும் நுளைச்சியின் கண்கள் முதலில் தூரத்திலேயே அவன் கொணர்ந்த மீனின் பெருமை, சிறுமை, வளமை, தகுதி, சாதி முதலியவற்றிலே சென்று இன்றைக்குக் கிடைக்கும் மீன் இன்ன விலை தரும் என்று அளந்து விடும். அதை அப்படியே கை நீட்டிப் பற்றிக்கொண்டு கரைக்கு ஓடிவந்து மீன் விலை செய்வள் பரத்தி. நடுக்கடலில் மீன் படுத்தற்குரிய வலைகள் பெரிய அளவுள்ளன. அவற்றைச் சேர்த்து வைக்கும்போது பெரிய வைக்கோற்போர் அளவும் உள்ளன. மீன் கொள்வோர் பெரும் பணக்காரர்களாய் அதன் ஆசையினால் அதனைக் கரையிலேயே பெரும் பொருள் கொடுத்துப் பெறுவர். பரத்தி மீனின் விலையைக் கடலினின்றும் பரதவன் ஏறும் முன்னரேயே அவன் தோணியிலுள்ள போதே தனது கண் பார்வையால் அளந்து விடுகிறாள். இந்தக் கருத்துக்களை யெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் மிக அழகாக ஒரு பாட்டிற் சுருக்கி அமைத்ததிறம் வியக்கற்பாலது. இக்காட்சிகள் நேரிற் கண்டு மகிழத் தக்கனவன்றிச் சொல்லி அளவிட இயலாதன.

"புயல் அளப்பன வெனவலைப் புறம்பணை குரம்பை
அயல் அளப்பன மீன்விலைப் பசும்பொனின் அடுக்கல்
வியல் அளக்கரில் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த
கயல் அளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள்".

—அதிபத்தநாயனர் புராணம் - 6.

இதனைச் சாதாரணமாகப் பெண்களின் கண்கள் மீனைப் போன்றுள்ளன என்ற உவமானமாகிய பொரு

ளே கருதியதாகக் கொண்டு விடுவார்கள் மலர். இப்பாட்டின் பொருட் செறிவையும் உயர்ந்த தன்மை நவிற்சியணியின் செறிவையும் ஒரு நாள் அதிகாலையிற் கடற்கரை சென்று இப்பொருள்களை நேரிற் கண்டார்க்கேயன்றி ஏனையோர்க்கு உள்ளவாறு உணர்தல் இயலாது.

சேக்கிழார் சுவாமிகளின் தன்மைநவிற்சியின் வளத்தை வேடர் சேரி, பறையர் சேரி, நுளையர் சேரிகளில் வைத்து ஒரு சிறிது கண்டோம். இவையே சொல்வதற்கு மிக்க கடினமானவை யாதலின் இவற்றில் எனது உதாரணங்களைப் பொறுக்கிக் கொண்டேன். பிறவும் இவ்வாறே காண்க.

இனி, அவரது உவமை வளங்களைப் பற்றி இரண்டொரு உதாரணங்களைப் பார்ப்போம்.

அனேக இடங்களிற் சுவாமிகள் பொருள்களின் இயல்பை விளக்குகின்ற வகையிலே சாமானிய அடைமொழிகளாலே உவமை அமைத்து விளக்கி விடுவர்.

“ கலவமயி லெனவெழுந்து கருங்குழலின்
பரமாற்றுக் கைய ளாகி ”

என்பன போலவரும் உவம அடைமொழி நயங்களைக் காண்க.

“ பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி.

—திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம் - 22.

இந்தப் பாட்டிலே தன்மை நவிற்சியும் உவம அணியும் எடுத்த பொருள் விசேடமும் மிக அழகாகப்

பொருந்த வைத்திருக்கும் சிறப்பு கூர்ந்து நோக்கத் தக்கது. என்னை ? சுரபியின் திருமுலை

உவமை

சொரிபால் தீர்த்தமாகி வரும் காரணத்தாலே பாலி யாறுனது அப்பேர் பெற்றதென்ப. குழவிகளைப் பால் தந்து வளர்ப்பது தாயின் செய்கை. இது பாலி யாறுமாகில் தாயின் தன்மை இதனிடத்துள்ளதோ ? எனின், உண்டு: என்னை ? தாயின் தனபாரத்திலே குழவி தன் சிறு கைகளினாலே தடவி வாய்வைத்து உண்ணும் காலத்தன்றி ஏனைய காலத்திலே தாய் முலை சுரந்து பால் சொரிவதில்லை. அப்படிச் சொரிந்துகொண்டே யிருப்பதானால் அது ஒரு நோயின் வகையிலே பட்டு மருந்து கொடுத்து மாற்றற்பாலதாம். குழவி கைவைத்து உண்ணும் காலத்திலே சுரந்து, ஏனைக்காலத்திலே உள்ளூறும் பால் சுரவாது கரந்து நிற்றலே தாய்முலையின் இயல்பாகும். அதுவே குழவிக்கு ஊட்டி வளர்க்கும் நிலையுமாகும். இந்தப் பாலியாறும் அத்தன்மை யுடையது. இதிற் புதுவெள்ளம் வரும் சில நாட்கள் தவிர ஏனைக்கால முழுமையும் மேல் நீர் சுரந்து ஓடுவதில்லை. பார்ப்போர்க்கு ஆறு வெறும் மணற் பரப்பினதாகவே வெளியிற் காணும். ஆனால் அடியில் நீர் சுரந்து ஓடும். மள்ளர்கள் வேனிலில் வேண்டியபோது மணற்றிடர்களைக் கையினால் வாரி வகிர்ந்து கால் உண்டாக்கிச் சென்றபோது நீர் சுரந்து ஓடிப் பள்ளத்தாக்கிலே உள்ள வயல்கள் மிகச் செழிக்கப் பாயும். இத்தகைய வயல்கள் அதிக விலைபெறக் கூடிய நிலையில் மூன்று போக விளைவும், மிகு விலையும் உள்ளதை இற்றைக்குங்காணலாம். மள்ளர் மணற்றிடர்

களைக் கையினற் பிசைந்து வகிர்ந்தபின் சுரந்து கால் வழிச் சென்றும் ஏனைக்காலத்திற் கரந்தும் நீர்தரும் பாலியாறுனது குழவிகள் கையினிற்றடவி வாய்வைத்து உண்ணும்போது பால் சுரந்து வாய்வழிச் சென்றும் ஏனைக் காலத்துக் கரந்தும் ஒழுகும் தாய்முலை போலுள் ளது என்பது உவமம். இதிலே பாலியின் பெருமையும் தேற்ற மாயினவாறு காண்க. அதாவது எந்நாளும் பொய்யாது பெருகிவரும் காவிரி, கங்கை முதலிய பெரு நதிகளோ எனின், குழவி கைவைத்து வாய்வைத்து உண்ணுதபோதும் எப்போதும் பால்வழியும் நோய்த் தன்மை யுடைய தாய்முலை போல்வன. பாலி யாறே குழவி கையும் வாயும் வைத்து உண்ணும்போது சுரந்து ஏனைக்காலத்திற் கரந்து நிற்கும் இயற்கைத் தாய் முலை போன்று உலகிற் கூட்டுவதாம் என்று இதன் பெருமை யும் உவமான முகத்தாலே தேற்றியவாறாயிற்று. மந் திரவாதியின் கைத் தண்டு தொட்ட மாத்திரத்திலே இரும்பு கரும்பாவதும், கரும்பு இரும்பாவதும்போலச் சேக்கிழார் சுவாமிகளின் உவமானத்திற் பட்ட மாத்தி ரத்திலே வெறும் மணற்காடான பாலியாறு நீர் செழித் தோடும் காவிரி, பொருனையாதி ஆறுகளைவிடச் சிறந்து காண்கிற அற்புதம் நம்மாற் கண்டு அதிசயிக்கத்தக்க தொன்றும். இப்பாட்டிலே தன்மை, உவமம், உருவகம், சிலேடை முதலிய பல அணிச்சுவைகள் கலந்து விரவு மாறு நயம்பெற அமைந்திருத்தலும் காண்க.

இனி வடமொழிக் கலப்புப்பற்றித் தமிழில் பிற் காலத்துப் புலவர்கள் கைக்கொண்டு இலக்சிய வழக்கில் எடுத்தாண்டனவாய் நாம் கண்ட உருவகம் முதலிய

அணிகளிலே சிலவற்றைச் சேக்கிழார் சுவாமிகள் எவ்வாறு எடுத்தாண்டிருக்கிறார் என்பதற்கு இரண்டொரு உதாரணங்கள் பார்த்து மேற் செல்வோம்.

"பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்
தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தியின் பால் முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்.

—திருநாட்டுச் சிறப்பு - 22.

என்ற திருப்பாட்டிலே நெற்பயிர் விளைவுக்கும் அன்பர் கூட்டத்திற்கும் முற்று உவமமும் உருவகமும் சிலேடையுமாய்க் கூறப்பெற்றுள்ள அழகு காணத்தக்கதாம்.

"..............................வண்டலர் கைதை
துன்று நீறுபுனை மேனிய வாகித்
தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச்
சென்று சென்றுமுரல் கின்றன கண்டு
சிந்தை யன்பொடு திளைத்தெதிர் சென்றார்"

"பார்வி ளங்கவளர் நான்மறை நாதம்
பயின்ற பண்புமிக வெண்கொடி யாடுஞ்
சீர்வி ளங்குமணி நாவொலி யாலுந்
திசைகள் நான்கெதிர் புறப்பட லாலுந்
தார்வி ளங்குவரை மார்பின் அயன்பொற்
சதுர்மு கங்களென வாயின் தில்லை
ஊர்வி ளங்குதிரு வாயில்கள் நான்கின்
உத்த ரந்திசையின் வாயின்மு னெய்தி"

—தடுத்தாட்கொண்ட புராணம் - 96, 97.

இவற்றின் உருவகச் சிலேடை நயங்கள் கண்டு களிக்கத் தக்கனவாம்.

நீறு பூசி விளங்கும் சிவத் தொண்டர்களைப்போல மகரந்தம் நிறைந்து நின்ற தாழைப்பூ மடலும்; வெண் கொடியாகிய கலைமகளுடன் பொருந்திய நான்கு தலைகளோடு விளங்கும் பிரமனைப்போலவே மேலே வெண் கொடி பறக்க நாற்றிசையிலும் ஓங்கி வளர்ந்த திருவாயில்களும்; சேக்கிழார் சுவாமிகளது அரிய சிவக்கண்ணிற்குப் புலப்பட்டது போல வேறு எந்தப் புலவருக்குப் புலப்பட் டிருத்தல் கூடும்?

உருவகம் சிலேடை

சிலேடை என்பது காளமேகப் புலவர் முதலிய பிற்காலப் புலவர்கள் பலர் 13 முதல் 19 நூற்றாண்டு வரை மிகவும் கையாண்டு வந்ததொரு அணியாகும். சொற்சிலேடை அதாவது சொற்களை ஒரு வகையாற் பிரித்துப் பொருளுரைக்கும் போது ஒரு பொருளுக்கும், வேறு வகையாய்ப் பிரிக்கும்போது வேறு பொருளுக்கும் ஏற்றவாறு பொருந்தும்படி அமைத்தலையே பிற்காலத்தவர் எடுத்துக் கையாண்டனர். அதைச் சேக்கிழார் மிக அருகியே வழங்கினர்.

"மாலினுந் திச்சுழி மலர்தன் மேல்வருஞ்
சால்பினாற் பல்லுயிர் தருதன் மாண்பினாற்
கோலநற் குண்டிகை தாங்குங் கொள்கையாற்
போலு நான்முகனையும் பொன்னி மாநதி"

—திருநாட்டுச் சிறப்பு - 4.

பொன்னி = சுழிகளை யுடைத்தாதல், உயிர்களை ஓம்புதல், அகத்தியர் குண்டிகையினாலே தாங்கப் படுதல்.

நான்முகன் = திருமாலின் உந்தியில் வருதல், உலகம் படைத்தல், குண்டிகையைத் தாங்குதல் என்று சொற்

போக்கிலே இருதிறமாகப் பொருள் தருமாறு அமைந்தமை காண்க.

இனி இருபொருட் சிலேடை அல்லது உவமமும் உருவகமுமே விரவும் வேறொரு வகையாலும் அமையும். அதனைச் சேக்கிழார் பல இடங்களில் அருமையாகப் பத்திச் சுவைபெற அமைப்பர்.

> "வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
> செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
> தெம்பி ரானை இறைஞ்சலி னீர்மபொன்னி
> உம்பர் நாயகற் கன்பரு மொக்குமால்"
>
> —திருநாட்டுச் சிறப்பு - 7.

முதலிய பாட்டுகளைக் காண்க.

ஓர் ஊர் அல்லது நாட்டை அல்லது இடத்தைச் சொல்லும் போது அதனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான பொருள்களை எல்லாம் ஒருங்கே சுவைபெற அமைத்து வர்ணனை போலே எடுத்துச் சொல்லிக் காட்டுவது சேக்கிழார் சுவாமிகளது இயல்பு.

> "வாரி சொரியுங் கதிர்முத்தும்
> வயன்மென் கரும்பிற் படுமுத்தும்
> வேரல் விளையுங் குளிர்முத்தும்
> வேழ மருப்பி னொளிர்முத்தும்
> மூரன் முறுவல் வெண்முத்த
> நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
> சேரர் திருநாட் டூர்களின்முன்
> சிறந்த மூதூர் செங்குன்றூர்"
>
> —விறன்மிண்ட நாயனர் புராணம் - 2.

" மன்றல் விரவு மலர்ப்புன்னை
மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின்
முன்றில் தோறுஞ் சிறுமடவார்
முத்தங் கொழிக்கு மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த
கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக்
கோவு மரசுந் திருமுன்பு "

—திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 264.

இப்பாட்டுகளைப் படிக்கும்போது மலையின் வளமும், மறைக்காட்டின் நலமும், அங்கங்குக் கிடைக்கும் பொருள்களின் வகையும், அவ்வவ்விடத்துச் செய்யும் தொழிலும், தொழில் செய்வோரும் இனிமையானதொரு இயல்பிலே நமது மனத்தின்முன் காட்சிப்படுகின்றார்கள். வேதாரணியம் என்ற திருமறைக்காட்டுக் கடற்றுறையானது இந்நாளும் முத்துக் குளிக்கும் பெருந் தொழில் நிகழு மிடமாகவும் நின்று வழங்குதல் காண்க. அக்காலத்தில் இருந்த உப்பளங்கள் பிற்காலத்தில் உப்புவரி முதலிய அரசாங்க ஏற்பாடுகளால் மாறுபட்டொழிந்து போயின போலும். ஆயினும்சேக்கிழார் சுவாமிகள் அந்நாளின் இத்துறையிலே மலிந்த உப்பளங்களை இனிய காட்சியும் நறு மணமும் மலிந்ததொரு பேருதியமுள்ள தொழிற் சாலையாகக் காட்டுவது காண்கின்றோம். புன்னையும் முத்தும் நெய்தனிலத்துப் பொருள்களாதலும், உப்பு செய்தொழில் வகையிற் படும் பொருளாதலும் காண்க. இந்நாளிலும் உப்புவரிச் சட்டத்தை மீறியோர் வேதாரணியக்கரையிலே உப்புக்

காய்ச்சச் சென்ற செய்தியும் இங்கே நினைவு கூரத்தக்கது.

ஆனால் தன்மை யாயினும், உவமை உருவகமாயினும், தற்குறிப்பேற்றம் முதலிய பிற எந்த அணிகளே யாயினும், சேக்கிழார் சுவாமிகள் கைப்பட்ட போது அவைகள் பத்திச் சுவையே காட்டுவனவாம்.

**பத்திச்சுவை**

"பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ"

என்று மகாவித்வான் திரு மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் துதித்த இயல்பு சேக்கிழார் சுவாமிகள் எடுத்துக் கூறும் தன்மை உவமை முதலிய அணிகளுக்குங் கூடப் பொருந்துவ தாகும். மேலே காட்டிய "தூய நீறுபுனை தொண்டர்களென்ன" "ஈர்ம்பொன்னி உம்பர் நாயகற் கன்பரு மொக்குமால்" முதலிய அணிகளையும் இவ்வாறே கண்டுகொள்க. சேக்கிழார் புராண மியற்றிய உள்ளுறையும் அவரது வாழ்க்கையின் உள்ளுறையும் சிவபத்தி யடியார்பத்தியே யாதலின் உலகிலே காண்கின்ற அறிவுள்ள, அறிவில்லாத, எப்பொருளும், எச்செயலும, அவர்முன் பத்திச்சுவை விளக்கும் பொருள்களாகவே காணப் பெறுகின்றன. அவர் அவைகளை அவ்வாறே நமக்கும் காட்டுகின்றூர்.

**நாடக இயல்**

இவ்வுவமங்களைத் தாம் கண்டு நமக்குக் காட்டும்போது இவ்வாறு காட்டுவதே யன்றிப், பிறர் எல்லாம் அவ்வவர் காண்பவற்றை அவ்வவர் வாயின்மூலம் நமக்குத் தெரிவிக்க நேர்ந்தபோது அவ்வவர் மனப் போக்கிற் கண்டவாறே அறிவிப்பார். தம்மனப் போக்கை அவற்றுட் புகவிடார். இதுவே

உண்மை நாடக இயல். நாடக அங்கத்தினர் அவரவர் சொல்லும் செயலும் அவ்வவர்க்கே ஏற்றபடி அமைதல் வேண்டும் என்பது கண்ணப்ப நாயனார் காளத்தி நாயனாரைப்பற்றிக்கொண்டு விடாது நின்ற நிலைமையை நாணன் காடனுக்கு அறிவிக்கும்போது வேடர்களுக்குள் நிகழும் பேச்சுத்தன்மையிலே சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றார்.

"அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்"

—கண்ணப்பநாயனூர் புராணம் - 116.

இதுவும் தன்மை நவிற்சியின் சிறப்பேயாகும்.

**நடைச் சிறப்பு**

சேக்கிழார் செய்யுள் நடை மிகச் செம்பாகமானது. கடினமான சொற்கள் வாரா. பாட்டுப் போக்கும் ஆற்றெழுக்கிற் போகும். போக்கிலே வைத்து உரைநடை வசனம் போலே பொருள் செய்யும்படி இருக்கும். பொருள் செய்யும் போது பாட்டின் ஒரு இடத்துள்ளசொற்களை வேறிடத்துக்கொண்டு சேர்த்துப் பொருள்செய்ய வேண்டிய அவசியம் சேக்கிழார் கவிகளிற்காண்பது மிகஅரிது. சரிதத்தைத் தொடர்ச்சியாய்க் கதை சொல்வதுபோலப் பாட்டுக்களாலே அழகாகச் சொல்லிக் கொண்டு போவதில் சேக்கிழார் கைதேர்ந்தவர். அவர் பாட்டுகளை மோனை, எதுகை, அடி, தொடை ஆகிய பாட்டுஅமைப்பை நீக்கி வரிசையாய்த் தொடர்ந் தெழுதுவே மானல் வசனமாக வே ஆகிவிடும்.

"ஆனந்த சீர்த்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
வானுறு நடைபரக்கும் மலர்ச்சடையார் அடிவணங்கி

ஊனாலும் உயிராலும் உள்ளபயன் கொளநினைந்து
தேனருசு மலர்ச்சோலைத் திருத்தில்லை மருங்கணைந்தார்''

" ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்(டு)
ஈனந்தங் கியதிலதாம் ; என்னஅதி சயம்என்றார் "

—திருநாவுக்கரசுநாயனர் புராணம் - 156, 101.

இந்தப் பாட்டுகளை அடிதொடை யின்றித் தொடர்ந்து எழுதினால் செம் பாக மான உரைநடை வசன மாய்ப் பொருள் எளிதில் விளங்குவது காணலாம்.

"வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை;
மருமகன் மற்(று)இவன்; அவற்கு, மகளிர் நல்ல
இளம்பிடியார் ஒரெழுவர் ; இவரின் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக்(கு)
உளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
ஒரொருவ ராகஎனை யொழிய வீந்தான் ;
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவு செய்துஅங்கு
அவரைமறைத்து இவன்றனையே சார்ந்து போந்தேன்.

—திருஞானசம்பந்தர் - 480.

என்பனவாதி வரலாறு திருமருகலிலே வணிகப் பெண் தனது சரிதத்தைச் சொல்லும் முறை எளிய வசனமாக வருவது காணத்தக்கது.

சுந்தரமூர்த்தி நாயனர் கொங்குநாட்டிலே திரு அவிநாசித் தலத்தின் பிராமணர் தெருவழியாக வந்து கொண்டிருந்தார். அப்போது எதிரெதிராகவுள்ள இரண்டு வீடுகளிலே ஒரே காலத்தில் ஒன்றில் மங்கல வாத்திய ஒலியும், மற்றொன்றில் அழுகை யொலியும் கேட்டன. அதன் காரணம் என்னவென்று சுவாமிகள்

அங்கு நின்ற பிராமணர்களைக் கேட்டார். அதற்கு அவர்கள் 'ஐந்து வயதுள்ள இரண்டு பிராமணச் சிறுவர்கள் சில ஆண்டுகளுக்குமுன் இவ்வூர் மடுவிற் குளிக்கச் சென்றனர். ஒரு சிறுவனை முதலை விழுங்கிவிட்டது. தப்பி வந்த சிறுவனுக்குப் பூணுநூல் அணிகின்ற கலியாணம் இந்த மனையில் நிகழ்கின்றது. சிறுவனை இழந்தார் தம் மைந்தனை நினைந்து அழுகை நிகழ்வது அந்த வீடு' என்று சொன்னார்கள். சுந்தரமூர்த்திகள் அது கேட்டு இரங்கிச் சிவபெருமானைப் பாடி அச்சிறுவனை முதலை வாயிலிருந்து தருவித்துக் கொடுத்தருளினார். இவ்வரலாற்றினை அவ்வாறே விளங்க இச்சரிதப் போக்கை மிகச் சுருக்கமான அழகிய கதைப் போக்காகச் சேக்கிழார் சுவாமிகள் சொல்லியருளுவது காண்க:

“மறையோர் வாழு மப்பதியின்
மாட வீதி மருங்கணைவார்
நிறையுஞ் செல்வத் தெதிர்மனைகள்
இரண்டின் நிகழ்மங் கலவியங்கள்
அறையு மொலியொன் றினில் ; ஒன்றில்
அழுகை யொலி;வுந் தெழுதலும்அங்(கு)
உறையு மறையோர் களை இரண்டும்
உடனே நிகழ்வதென்? என்றார்” 5.

“அந்த ணாளர் வணங்கி அரும் புதல்வர் இருவர்: ஐயாண்டு வந்த பிராயத் தினர்;குளித்த மடுவின் முதலை யொருமகவை முந்த விழுங்கப், பிழைத்தவனை முந்நூ லணியுங் கலியாணம் இந்தமனை;மற்று அந்த மனைஇழந்தார் அழுகை;என் றுரைத்தார்”

—வெள்ளானைச் சருக்கம் - 6.

இங்கே இருதிறத்தார் நேர்நின் றுபேசுவதும் கதை நிகழ்ச்சியும் தொடர்பான வாக்கியம் போலவே பொருட்

பெருக்கமும் சொற் சுருக்கமும் செறிந்து செல்லும் இனிய நடை காணத்தக்கது. மேலும் சுவாமிகளது செய்யுள் நடை மிகவும் கம்பீரமான பெருமித முடையது.

**படிப்போரை உயர்ந்த நோக்கத்திலே செலுத்துதல்**

எளியபோக்கானுலும் உயர்ந்த நோக்கங்கொண்டு படிப்போர் மனத்தை உயர்விலேயே கொண்டுபோய் வைப்பது. சரிதம் சொல்லிப் போகும் போக்கிலேயே 'ஆழ்க தீயதெல்லாம்' என்றபடி, தீமைகளும், நன்மைகள் அல்லாதவைகளும், பயனற்றவைகளும், சுருங்கி ஒதுங்கிப் போகும். 'அரன் நாமமே சூழ்க' என்றபடி அரன் பெருமைகளும், அடியார் பெருமைகளும், நன்மை நிகழ்ச்சிகளும் சரிதம் சொல்லிப் போகும் அழகிலேயே மிகப்பெருகிச் சிறந்து நமது உள்ளத்தே பதிந்துவிடும். சுவாமிகள் புராணம் பாடிய நோக்கம் அதுவேயாம் என்பது அவர் சரிதத்தாற் கண்டோமல்லவா ? திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருப்பாசுரத்தின் உட்கிடைப் பொருள் உரைக்கவந்த ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் முதற் பாசுரத்திலே,

> " ஆழ்க தீயதென் றோதிற் றயல்நெறி
> வீழ்க வென்றுவே றெல்லாம்; அரன்பெயர்
> சூழ்க வென்றது தொல்லுயிர் யாவையும்
> வாழி யஞ்செழுத் தோதி வாழ்கவே."
>
> —திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம் - 823.

என்று விதந்து எடுத்துக்காட்டி அந்தப் பரமகருணாநிதியாகிய ஆசாரிய சுவாமிகளின் உலக முழுதும் வியாபித்த பெருங்கருணையை விளக்கிப் போற்றினர்.

அதனையே பின்பற்றிய சுவாமிகள் தமது கருத்தும் அதுவேயாதலை இப்புராணச் சரிதங்கள் சொல்லிப் போகும் செய்யுட் போக்கிலேயே வைத்துக் காட்டினார். சரித நிகழ்ச்சியைப் படித்துக்கொண்டு போகும் பொழுதே தீமைகளில் வெறுப்பும், நன்மைகளில் விருப்பும், தானாகவே படிப்போர் மனத்தில் உண்டாகும். வல்லவன் நடிக்கும் கூத்தையோ அல்லது ஓர் உண்மை நிகழ்ச்சியையோ ஒருவன் நேரிற்கண்டால் எவ்வாறு அந்தந்த இடங்களிலே தக்கபடி சினம், நகை, ஆசை, அன்பு, இரக்கம் முதலிய மனவெழுச்சிகள் தாமாகவே காண்பவன் மனத்தில் உண்டாகி எழுந்து நிகழுமோ, அதுபோலவே சேக்கிழார்கூறும் சரிதங்களைப் படிக்கின்றார்க்கும் நிகழும். இவற்றை அங்கங்கே போர், வேட்டை, தலைவன் தலைவியர் பிரிந்து நிற்கும்நிலை, அவர்கள் கூடிய நிலை, அடியார்களைப் பகைத்தோர் செய்த வஞ்ச நிகழ்ச்சிகள் முதலிய வரலாறுகளைச் சொல்லும்போது அங்கங்கே அனுபவித்துக் காணலாம்.

**சொல்லும் பொருளும் ஒத்தியலுதல்**

சொல்லும் பொருளும் ஒத்தியலும் நலம் சேக்கிழார் சுவாமிகள் செய்யுள் நடையில் மிகச் சிறந்ததோரியல் பாகும். சொல்கின்ற பொருளுக்கேற்ற சொற்களும் சந்தமும் யாப்பமைதியும் ஒருங்கே காணலாம். அல்லாமலும் சொற் போக்கிலே செய்யுள் யாப்பும் அமைந்து நிற்குமேயன்றி, யாப்பமைதிக்காகச் சொற்களையாவது சொற்றொடர்ச்சியையாவது பெரும்பாலும் சிதைக்கின்றதில்லை. யாப்பின் உறுப்பாகிய சீர்களுக்காகச் சொற்களைச் சிதைத்து ஒரு சொல்லின் ஒரு

பாகம் முன் சீரிலும் மீந்த பாகம் வருஞ்சீர் அல்லது சீர்களிலுமாக வரும்படி அமைத்துவிடுவர் பல கவிகள். பெருங் கவிவாணர்களின் பாட்டுக்கள் அவ்வாறு இரா.

அப்பொழுதே அம்பலத்துள் ஆடுகின்ற கழல்வணங்கி
அருள்முன் பெற்றுப்
பொய்ப்பிறவிப் பிணியோட்டும் திருவீதி புரண்டுவலம்
கொண்டு போந்தே
எப்புவனங் களும்நிறைந்த திருப்பதியின் எல்லையினை
இறைஞ்சி ஏத்திச்
செப்பரிய பெருமையினார் திருநாரை யூர்பணிந்து
பாடிச் செல்வார். 179

தொண்டர்குழாம் புடைசூழத் தொழுதகரத் தொடுநீறு
துதைந்த கோலம்
கண்டவர்தம் மனங்கசிந்து கரைந்துருகுங் கருணைபுறம்
பொழிந்து காட்டத்
தெண்டிரைவாய்க் கன்மிதப்பில் உகைத்தேறுந்
திருநாவுக் கரசர் தாமும்
வண்டமிழால் எழுதுமறை மொழிந்தபிரான்
திருப்புகலி மருங்கு சார்ந்தார். 180

—திருநாவுக்கரசு நாயனர் புராணம்.

இங்கே நான்கு காய்ச் சீர்களும் இரண்டு மாச்சீர்களுமாக வரும் அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தப் பாவிலே சொற்களும் சீர்களும் மேலே அலகிட்டுக் காட்டியவாறு ஒத்துழைத்துநின்று இயல்பாகச் சென்று பொருளினிமையும் யாப்பின் சந்த இன்பமும் ஒன்று போலவே நிகழ்வது காண்க. வேட்டைக் களத்தின் நிகழ்ச்சிகளைக் கூறும்போது நாமும் அங்கே கூட இருந்து வேட்டையில் கலந்து கொண்டு அனுபவிப்பது

போலவே தோற்றக் கூடிய சந்தமும் யாப்பும் பொருளமைதியும் ஆசிரியர் அமைத்துப் பாடுவர். யுத்தகளத்திலே நிகழ்ந்த போரினைக் கூறும்போது நமக்கும் வீரம் பிறந்து சண்டையில் நீதி நிலைபெறும் பக்கம் சார்ந்து சண்டை செய்வது போலவே அனுபவம் உண்டாகும். கீழ்க்குறித்த பாட்டுகளையும் இவைபோன்ற பிறவற்றையும் கவனித்தால் இவ்வுண்மை விளங்கும்.

வேட்டை

ஏன மோடு மானி னங்க ளெண்கு திண்க லைக்குலம்
கான மேதி யானை வெம்பு லிக்க ணங்கள் கான்மரை
ஆன மாவ னேகமா மருண்டெ ழுந்து பாயமுன்
சேனை வேடர் மேல டர்ந்து சீறி அம்பின் நூறினர். 78.

தாளறுவன இடைதுணிவன தலைதுமிவன கலைமா -
வாளிகளொடு குடல்சொரிதர மிறிவனசில மரைமா -
நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வனமிடை கடமா -
மீளிகொள்கணை படமுடலெழ விழுவனபல வுழையே. 79.

வெங்கணைபட பிடர்கிழிபட விசையுருவிய கயவாய்
செங்கனல்விட வதனொடுகணை செறியமுனிரு கருமா
அங்கெழுசிர முருவியபொழு தடலெயிறுற வதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள். 80.

—கண்ணப்ப நாயனர் புராணம்.

போர்

“வாளொடு நீள்கை துடித்தன-மார்பொடு வேல்கள் குளித்தன-
தோளொடு வாளி நிலைத்தன தோலொடு தோல்கள் தகைத்தன-
தாளொடு வார்கழ லிற்றன - தாரொடு சூழ்சிர மற்றன -
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில்”

—ஏனதிநாத நாயனர் புராணம் - 18.

"கயமொடு கயமெதிர் குத்தின -
வயமுட னயமுனை முட்டின -
வயவரும் வயவரு முற்றனர் -
வியனமர் வியலிடை மிக்கதே" 20.

"மண்டு போரின் மலைப்புவர்
துண்ட மாயிட வுற்றெதிர்
கண்ட ராவி கழித்தனர்
உண்ட சோறு கழிக்கவே" 23.

"வரிவிற்கதை சக்கர முற்கரம் வாள்
சுரிகைப்படை சத்தி கழுக்கடை வேல்
எரிமுத்தலை கப்பண மெற்பயில் கோன்
முரிவுற்றன துற்றன மொய்க்கள மே" 26.

—புகழ்ச் சோழ நாயனார் புராணம்.

இப்பாட்டுகளிற் பொருளுக் கேற்பச் சொற்களும் சீரும் மருவுதல் காண்க. இவற்றினுடைய விரைந்து முடுகிய சந்தமும் சுருங்கிச் செறிந்த சொற் போக்கும் அவ்வந்நிகழ்ச்சிகளை நம் கண் முன்னே நிற்பனபோலக் கொண்டு வருவன அன்றி நம் மனத்திலே அந்நிகழ்ச்சிகளையும் ஊடுருவப் புகட்டுகின்றன. நிகழ்ச்சிகள் விரைந்து செல்லப் பாட்டு முடுகி விரைந்து போகும். நிகழ்ச்சிகள் மனத் தாமத்திலோ புறத் தாமத்திலோ செல்லுமானால் பாட்டும் அவ்வாறு தாமதித்துப் படிக்கும்படி யிருக்கும். திருவொற்றியூரிலே சுந்தர மூர்த்தி சுவாமிகள் மகிழ மரத்தின் கீழே வெளிப்பட எழுந்தருளியிருக்கும்படிக்கும் சந்நிதானத்திலே மறைந்துநிற்கும்படிக்கும் சிவபெருமானை வேண்டிக்கொண்டனர். இவையிற்றை இறைவன் உணர்த்த உணர்ந்த சங்கிலியாரது உள்ளக் கருத்தின்படி மகிழ மரத்தின் கீழேயே

சுந்தரமூர்த்திகள் சபதம் செய்யும்படி நேரிட்டு விட்டது. இது தமது கருத்திற்கு மாறாகி விட்டமையால் விரைவில் உடன்பட முடியவில்லை. ஆயினும் அப்படிச் செய்ய மறுத்தால் அலராகிலும் ஆகும் என்று எண்ணி மிகத் தயங்கி மகிழ மரத்தை முக்காலும் வலம் வந்து சபதம் செய்து தருகின்றார். இதைச் சொல்லும் அந்தப் பாட்டையும் அவ்விதமே நாம் விரைவில் வாசிக்க முடியாத படியே அமைந்துள்ள சீர்மை நோக்கற்பாலது.

“ தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
மேவாதிங் கியானகலே னெனநின்று விளம்பினார்
பூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப் புரவலனார் ”

—ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 260.

நாயனாரது உள்ளத் தாமதம் செய்கைத் தாமதங்களைச் செய்யுட் போக்கும் அறிவித்தல் காண்க. இனி இவ்வாறே கவியின் குணமாகிய செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலே பொருண்மை, சாந்தம், வலி, சமாதி என்பன பத்தும் இப்புராணப் பாட்டுகளில் அமைந்துள்ளது அங்கங்கே கண்டுகொள்க.

பெருங் காவியம்

இனிப் பெரிய புராணமானது தனித்தனிச் சரிதங்கள் சேர்த்துக்கோர்த்த ஒரு கோவை என்று சிலர் கருதுகின்றார்கள். அது அப்படி யல்ல. “திருக்கயிலாயத்தினின்றும் திருவாணையின்படி ஒரு குறித்த காரியத்தின் பொருட்டு நில்வுலகிலே அவதரித்தருளிய சுந்தரமூர்த்திகள் இரு தேவியர்களை மணந்தும், உலக முப்பும்

படித் திருத்தொண்டத் தொகையை அருளியும், பல தலங்களிற் சென்று தரிசித்தும், உலக உபகாரமாகப் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தியும்,மீளக் கயிலையைச் சென்று சேர்கின்றார்' என்ற சரிதமே இதனால் பேசப் பெறுகின்றது. இது ஒரு பெருங்காப்பியமே யாகும். இவ்விவரங்களை விரித்து எனது முதல் நாட் பிரசங்கத்திலே கூறியுள்ளேன். காப்பிய குணங்கள் யாவும் இப்புராணத்திலே அமைந்துள்ளதைச் சிற்சில உதாரணங்களாலே காட்ட முயல்கின்றேன். காப்பியம் என்பது நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய் ஒரு பழஞ் சரிதம் பற்றி வரும் தொடர் நிலைச் செய்யுளாம். அது பெருங்காப்பியம், சிறுகாப்பியம், என இருவகைப்படும். பெருங்காப்பியத்தின் உறுப்புக்களிற் சில குறைந்து சிற்சில பகுதிகளை மட்டும் கொண்டு ஒரு கதை பற்றி வரும் தொடர் நிலைச் செய்யுளாய் வருவது சிறு காப்பிய மாகும்.

பெருங்காப்பியத்திலே தெய்வவணக்கமும், செயப்படு பொருளும், வாழ்த்தும் முன்னே அமைக்கப்பெற்றிருக்கும்.அது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பொருளின் பயனையும் தருவதையே பயனாகக் கொண்டிருக்கும். அதற்குப் பாட்டுடைத் தலைவனும் தலைவியும் வேண்டும். மேலும் அது, மலை, காடு, நாடு, நகர், கடல் என்ற இடத்தின் பகுதிகளையும்,பெரும்பொழுது, சிறுபொழுது என்ற காலப்பகுதிகளையும்பற்றிய வளங்களைச் சிறப்பித்துக் கூறும். மணமுடித்தல், முடிசூடுவித்தல், பொழில் விளையாட்டு, நீர் விளையாட்டு, உண்டாட்டு, புலவி, கலவி என்றிவற்றைச் சுவை பெறப் பேசுதலும்

அதற் கிலக்கணமாம். மந்திரம், தூது, செலவு, போர், வென்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதலும் அதன் தன்மை. அது சருக்கம், இலம்பகம், படலம் என்னும் பகுதிகளைப் பொருந்தி யிருக்கும். இவ்விலக்கணங்கள் முழுதும் நமது பெரிய புராணத்திலே அமைந்திருத்தல் நன்கு புலனாகும்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் சிவாஞ்ஞையின்படி உலக உபகாரமாகத் திருக்கயிலை மலையிலிருந்து உலகில் அவதரித்து மீளவும் திருக்கயிலைக்கு எழுந்தருளுவதாகிய ஒரே தொடர்பாகிய பழங்கதை வரலாறே இப்புராணத்திற் பாடப் பெற்றுள்ளதாதலின், இது ஒரு பழங் கதை பற்றிய தொடர்நிலைச் செய்யுளாம் என்றும் மேலே குறித்துள்ளேன். "எடுக்கு மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்" என்று ஆசிரியர் கூறுவதும் காண்க. இனிக் காவிய இலக்கணங்கள் பிறவும் இதனுள் அமைந்துள்ளதைச் சிறிது காண்போம்.

'உலகெலாம்' என்று இறைவன் அடி எடுத்துக் கொடுக்கப் பாடிய முதற்செய்யுளிலே "வணங்குவாம்" என்றதனால் தெய்வ வணக்கமும், "வாழ்த்தி" என்றதனால் வாழ்த்தும் கூறியவாறாகும். இறைவனது மலர் சிலம்படியை வாழ்த்துதலாவது "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்று ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய படி தன்னுள்ளிட்ட உலகினர் யாவரும் வாழும் பொருட்டே யாகலின் இது வாழ்த்து ஆயிற்று. மலர் சிலம்படியானது எக்காலத்தும் மிகுவதும் குறைவதும், வாழ்வும் தாழ்வும், இல்லாமல் ஒரு தன்மைத்தாகவே சத்தாகி நிலவுவதாகலின் அதனை

வாழ்த்துதல் அதனை வழி வழி பிடித்த அடியார்களை வாழ்வித்தற் பொருட்டே யாகும்.

"நமச்சி வாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க ;
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க;
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க ;
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க;
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க."

என்று ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனது திருவடியை வாழ்த்தித் தமது திருவாசகத்தைத் தொடங்குவதும் காண்க.

"வாலறிவன் நற்றாள்"—"மலர்மிசை ஏகினான் மாணடி"—"வேண்டுதல் வேண்டாமை யிலான்அடி"—"தனக்குவமை யில்லாதான் தாள்"—"இறைவனடி" என நாயனார் தமது திருக்குறள் முதலதிகாரமாகிய கடவுள் வாழ்த்திலே திருவடியையே பற்றிக் கூறி வாழ்த்துதலுங் காணத்தக்கது. இதற்கு நாயனார் கடவுள் வாழ்த்து எனப்பெயர்தந்ததும், "மாணடிசேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்றதனால் அவ்வாறு வாழ்த்துவதன் பயன் குறித்துக் கூறியதும், இங்கே குறிக்கற் பாலனவாகும். இனி, மேலே காட்டியவாறு வாழ்த்தும் வணக்கமுமே யன்றிச் செயப்படு பொருளையும் இம்முதற் செய்யுளிலே காட்டி ஆசிரியர் காப்பியத்தின் முதலிலே அமைத்திருக்கும் அழகு வியக்கத்தக்கது. திருவடியை வாழ்த்தியதனால் அடியார்கள் வாழ்வது பயன் என்று மேலே எடுத்துக் காட்டப்பெற்றது. இப்புராணம் அடியார்கள் சரிதங் குறித்ததாகலின் அவர்களும், அவர்கள் புகழும், என்றும் நின்று நிலவு

வதே இதன் நோக்கம். அடியார்களின் வாழ்வைக் குறித்தே திருவடியை வாழ்த்தினராகலின் இது அடியார் பெருமையைக் குறிக்கோளாகவும் அதையே செயப்படு பொருளாகவும் கொண்டுள்ளதென்பது தெளியக் கிடக்கின்றது.

அன்றியும் இப்புராணத்திற் கூறப்பெறும் அடியார்கள் தாந் தாம் செயப்படு பொருளாய்க் கொண்டொழுகிய செய்கை அடிவாழ்த்தி வணங்குதலே யாயினமையின் அதனைச் சொல்லவே புராணத்தின் செயப்படு பொருளும் சொல்லியவா றாகும் என்பதும் பொருத்தமுடையது. அன்றியும் திருவடி நீழலிலே இரண்டறக் கலந்தவர்கள் அடியார்களாதலின் திருவடியை வாழ்த்தியபோது, அவர்களையும் உடன் வாழ்த்தினர் என்பதுமாம். மேலும் இப்பாட்டிலே, இறைவனது சொரூப தடத்த நிலைகளும், உருவம், அரு உருவம், அருவம் என்ற மூன்று திருமேனிகளும், அவன் அம்பலத்தே திருக்கூத்துச் செய்து ஐந்தொழில் இயற்றி உயிர்களுக்கு அருள் புரிகின்றதும், பிறவும் சொல்லிய படியால் இப்புராணத்திலே எடுத்துச் சொல்லிய திருத்தொண்டத் தொகையில் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதலில் வைத்தெண்ணப் பெற்ற "தில்லைவா ழந்தணர்"களின் முதல்வருடைய இலக்கணமும் "குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் நின்ற கோர் நேர்மையும்" நமக்கு அறிவுறுத்தியவாறுமாயிற்று. ஆகவே, அடியார்களின் வரிசையில் முதலில் வைத்துத் துதிக்கப் பெற்றவரைக் குறிப்பிடவே

அவருள்ளிட்ட அனைவரையும் இப்பாட்டுக் குறிப்பிட்ட வாறு மாயிற்று. இக்கருத்துப் பற்றியே மேலே தில்லை வாழ்அந்தணர் புராணத்திலே அம்பலவர் தில்லைவாழந்த ணர்களில் ஒருவரும் முதல்வருமாதலின் முதலில் அம் பலவாணர் துதியாக இரண்டு பாடல்கள் அமைந்துள்ள தும் காணலாம். அடியார் சரிதங்களும், பெருமைகளும், அவற்றின் வழியாக ஆண்டான் அருளும் நிலையும், இப் புராணத்தின் செயப்படு பொருளாமென்பது கடவுள் வணக்கத்தினை அடுத்துப் பாயிரத்திலே திருக்கூட்டப் புகழ்ச்சியையும், புராண முடிவிலே அடியார் புகழ் வாழ்த்தும், வைத்த முறையினாலேயும் காணலாம்.

> "மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
> துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
> பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
> விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே"
>
> —பாயிரம் - 4.

எனவும்,

> "என்று மின்பம் பெருகு மியல்பினால்
> ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
> மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
> நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்"
>
> —வெள்ளானைச் சருக்கம் - 53.

எனவும் வரும் பாட்டுகளினாலே அடியார் புகழே இப் புராணத்துக் கருத்தாகவும் அது உலகில் எங்கும் என் றும் நீடி இருப்பதே பயனாகவும் குறித்துள்ளது காண லாகும்.

இன்னும் இவ்வாறு ஆண்டான் அடி வாழ்த்துத லிலே தொடங்கிய இப்புராணம் அத் திருவடிகளையே

பற்றிய ஒழுக்கத்தினராகிய ஆண்டானடியவர் புகழ்களை வாழ்த்தி முடிபெய்தும் நயமும் குறிக்க. அடிபற்றியதனாலேதான் அவர்கள் அடியவர்களாயினர். அவர்கட்குப் பற்றுக் கோடாகிய அடியை வாழ்த்தி அதன் பின் அடிபற்றிய அடியவரை வாழ்த்துவதும் முறையும் பயனுமாகும்.

இனிப் பாயிரத்திலே "புனிதர் பேரவை" என்று (அடியார் கூட்டமாம்) இந்நூல் கேட்டற்குரியாரையும், 'நாயன்மார்களுடைய தூயசொன்மலர்ப் பொதிநலனுகிய அளவிலாப் புகழையும் பொருவரும் சீர்களையும் புகல்கின்றேன்' என்ற முகத்தாலே இந்நூல் நுதலிய பொருளையும், இந்நூல் கேட்டற்குமுன் கேட்க வேண்டுவன திருத்தொண்டத் தொகையும் திருத்தொண்டர் திருவந்தாதியுமாம் என்று குறித்ததனாலே நூல்வந்த வழியையும், "இன்றமிழ்ச் செய்யுளாய்" என்றமையாலே நூல் வழங்கும் எல்லையையும், "விரும்பும் அநபாயன் அவைக்களம்" என்று இதனைக் கேட்டாரையும், "மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய இருளை நீக்கும் **திருத்தொண்டர் புராணம்**" என்றதனால் நூற்பெயரையும், நூற்பயனையும், பிறவற்றையும் ஆசிரியர் அழகுபெற அமைத்திருத்தலும் அதன் காவிய இலக்கண அமைப்புகளில் ஒன்முக நாம் காணத்தக்கது.

அன்றியும் ஒரு பெருங் காவியமானது முதனூல் வழிநூல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; நூல் வந்த வழியும் தெரிதல்வேண்டும். அவ்வாறு பெரிய புராணத்தின் முதல் வழி நூல்களிவை என்று முன்னேயேகுறித்திருக்கின்றேன். அவை, தொகை = வகை =

விரி என்றும் சொல்லப்பெறும். திருத் தொண்டத் தொகையே அத் தோகைநூலாம் என்பது பெயரா லேயே விளங்கும். நம்பியாண்டார் நம்பிகளது திருத் தொண்டர் திருவந்தாதி வகை நூலாம் என்பது,

"நந்தம் நாதனும் நம்பியாண்டார் நம்பி
புந்தி யாரப் புகன்ற வகையினல்"—திருமலை - 39.

என்று சேக்கிழார் சுவாமிகள் அறிவிக்கின்ருர்கள். அத்தோகை வகைகளின் வழிவந்த விரிநூல் பெரிய புராணமாம் என்பதையும்,

"அன்று சீர்த்திருத் தொண்டத் தோகை விரி
இன்றென் ஆதர வாலிங் கியம்புகேன்"
—திருமலைச் சிறப்பு - 37.

என்ற சேக்கிழார் சுவாமிகளது திருவாக்கே நமக்கு அறிவிக்கின்றது.

"தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த [ற்றி
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போ
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி"

என்று ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிய தும் காண்க.

திருத்தொண்டத் தொகையின் அமைப்பையே பெரிய புராணத்திலே அடிநிலையாகவும், சருக்கம் முதலியனவாகவும் வகுத்திருக்கின்றமையும், அத்திருப் பதிகப் பாட்டுகளிலே "ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே" என்ற பகுதியையே அந்தாதியில் அவ்வவ் விடங்களில் சுந்தரமூர்த்திகளுக்கு ஒவ்வோர் தோத்திர மாகவும், புராணச் சருக்கங்களின் இறுதியிலும் அவ்

வாறே ஒவ்வொரு திதிகளாகவும் வைத்திருப்பதும் தொகை வகை விரி நூல்களினியல்பைக் காட்டுவனவாம்.

இனி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளின் பயனையும் தருவதையே பயனக் கொண்டது பெருங்காப்பியமாம் என மேலே கூறினோம். "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற் பயனே" என்ப. பெருங்காப்பியங்கள் என நிற்கும் பிறநூல்கள் இந்நான்குபொருள்களில் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று பொருட் பயன்களைக் குறித்தனவாய் நிகழக்காண்போம். என்னை ? "அவற்றுள் வீடென்பது (உணர்ந்தோதற் கரியவன் என்றபடி) சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாதலின் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்" என்று எடுத்துக் காட்டினர் ஆசிரியர் பரிமேலழகர். ஆனல் இப்பெரிய புராணமோ இந்நான்கு பெரும் பொருள்களையும் ஒருங்கே தருதற் பயனுடையதாயுள்ளது. அதுவுமல்லாமல் இந்நான்கிற்கு மேற்பட்டதாய், அப்புறப்பட்டதாய், ஒன்று உள்ளதாயின் அதனையும் குறிப்பதாய் நிற்கும்.

**பெரிய புராண நூற் பயன்**

இல்லறம் துறவறம் என்ற இரு பகுதியிலே பட்ட அறத்தின் பயன் இதனுட் பேசப் பெறும். அது அளவிறந்த அடியார்களுள்ளே இல்லறத்திலிருந்தோரும் அதை விடுத்துத் துறவறத்தி லிருந்தோரும் ஆகிய இருதிறத்து அடியார்களின் சரிதங்களாலே விளங்கப் பெறும். ஆனல் அறம் இருவகையாக

வும் அதன் பயன் மூன்றும் எனப் பேசுவர் ஆசிரியர் பரிமேலழகர்; அறம் இம்மை மறுமை வீடு என்ற மூன்றும் பயக்கும் எனவும், பொருள் இம்மை மறுமை என்ற இரண்டும் பயக்கு மெனவும், இன்பம் இம்மை ஒன்றையே பயக்கும் எனவும், ஆதலின் சிறப்புப் பற்றி இவை இம் முறையிலே வைக்கப் பெற்றன எனவும் எடுத்துக் கூறுவர். ஆனல் இப் புராணத்திலோ என்றால் இம்மூன்றும் வீடுபேறு கருதிய பயனையே உறுதிப் பொருளாகக்கொண்டு இதனுட் கூறிய நாயன்மார்களின் சரிதங்கள் நிகழும். இல்லறத்தி விருந்து வீடு பேறு உற்ற சரிதங்களிலே அப்பூதி நாயனரையும், சிறுத்தொண்ட நாயனரையும், துறவறத்திற் சிறப்பாகத் திருநாவுக்கரசு நாயனரையும் காணலாம். இல்லறமும் துறவறமும் ஒருங்கே காண நிற்பது இப்புராணக் காப்பியத் தலைவராக நாம் காணும் சுந்தரமூர்த்தி நாயனர் சரிதமாகும். இதனலன்றே "துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா" என்று எடுத்துப் பாராட்டினர் சிவப்பிரகாச சுவாமிகள். சுந்தர மூர்த்திகளது துறவற நிலை திருவெண்ணெய் நல்லூரிலே தடுத்தாட்கொள்ளப் பெற்றபின் சுவாமிகள் திருத்துறையூரிலே "தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவ நெறியே" என்று துறவறத்தின் தலை ஒழுக்கமாகிய தவநெறியை வேண்டிப் பெற்றுக் கொண்டதாலும், அ ன்பின் திருநாட்டியத்தான் குடியிலே கோட்புலிநாயனர் தம் மக்களாகிய வனப்பகை சிங்கடி என்ற இரு பெண்மணிகளையும் தந்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டபோது அவர்களைத் தமது தூய மக்களாகக் கொண்டமை



குன்றத்தூர் - குன்றம் - முருகன் கோயில் -
(பக்கம் - 7)

குன்றத்தூர் சேக்கிழார் கோயில் சந்நதி
வீதியிலுள்ள பழைய சிவாலய
மதிற்புறத்தில் உள்ள உருவங்கள்,
(பக்கம் - 11)

யாலும், பிறவற்றாலும் அவர் சரிதத்திலே காணத்தக்கது.

இனிப் பொருளாவது, அகம் புறமென இரு வகைப் படும் எனத் தமிழாசிரியர்கள் வகுத்துள்ளார்கள். அகப்பொருள் பற்றிச் சுந்தர மூர்த்திகள் சரிதத்திலே பரவையார், சங்கிலியார் திருமண நிகழ்ச்சிகளிலும், பிற சரிதங்களில் ஏற்ற இடங்களிலும், புறப்பொருள்: புகழ்ச் சோழ நாயனர் புராணத்திலும், பிற இடங்களிலும், காணலாம்.

இன்பமாவது கற்பியலிலே வைத்து இப்புராணத்துப் பல சரிதங்களிலேயும் காணத் தக்கதாம்.

வீடு என்பது உயர்ந்ததின் உயர்ந்த குறிக்கோளாய் மனிதரால் அறிந்தடையத் தக்கதென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்த பொருள். பரனையே நினைந்து அறம் பொருள் இன்பம் ஆகிய "இம் மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்று ஆன்றோர் இதனை எடுத்துக் காட்டுவர். இதற்குச் சிறந்த உதாரணங்கள் இப் புராணத்துள்ள எல்லாச் சரிதங்களும் ஆகும் என்றும் சொல்லத் துணிவேன். இவ்வாறு வேறு எந்தப்பெருங் காவியத்திலும் காணுதல் அரிதாகும். வீட்டைக் குறிப்பால் உணர்த்துவதன்றி மக்களின் உலக உயிர் வாழ்க்கையிலே கொண்ட குறிக்கோளாக இப் புராணம்போலக் கண்ட கண்ட இடங்கள்தோறும் ஏனைய காப்பியங்கள் காட்ட மாட்டா. முடிந்த நிலையாகிய வீட்டிற்குமேலும் ஒரு நிலை யுளதேல், அதனையும் இப்புராணம் காட்டும் என்பது உண்மை.

"கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"
—திருக்கூட்டச் சிறப்பு - 8.

என்று ஆசிரியர் இப்புராண சரிதமுடைய பெரு மக்களின் வாழ்க்கையின் குறிக்கோளை எவ்வளவு உன்னதமாய் எடுத்துக் காட்டி யிருக்கின்றார் என்பது இங்கே நாம் ஊன்றி ஞாபகப்படுத்திக் கொள்ளுதல்வேண்டும்.

தலைவன் தலைவி

இப்புராணம் சுந்தரமூர்த்திகள் சரிதமாகிய பெரும் பழங்கதையே யாகும் எனக் காட்டினேன். ஆதலின் இதற்குக் காவிய நாயகனாகிய தலைவர் சுந்தரமூர்த்திகளே; தலைவியர் பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் என்ற இருவருமே. இவர் தம் சரித நிகழ்ச்சிகள் முன்னிலையிலே ஆலால சுந்தரர், கமலினி, அநிந்திதை என்ற உருவத்தில் வடதிசையிலே கயிலாய மலையிலும், மேற்கூறிய இவ்வுருவத்திலே மாதவஞ் செய்த தென்றிசையாகிய நம் நாட்டிலே திருவாரூர் திருவொற்றியூர்களிலும், பிற இடங்களிலும் நிகழ்ந்தன.

இப்பெருங் காப்பியத்தில் விதந்து பேசப் பெறும் மலையாவது திருமலை என்ற கயிலை மலை; நாடானது சோழ நாடேயாகும்; நகரம் திருவாரூரேயாம். இவை முறையே ஆசிரியர் திருமலைச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு இவைகளால் எடுத்துக் கூறி யருளினர். ஏனைக் காப்பியங்களிலே பெரும்பாலும் காண முடியாத தன்மையிலே இவை இக்காவியத்திலே சரிதப் போக்குடன் விரவி வருதல் ஒரு பேரழகைத் தருவதாகும். இவையே யன்றி மலையும், காடும், நாடும், நகரும்,

கடலும், இப்புராணத்திலே அங்கங்கு வரும் அவ்வச் சரிதங்கள் பொருந்தும் அளவிலே தன்மை முதலிய அணிகளிலே எடுத்துக் காட்டிப் பேசப் பெறும். இவை யனைத்தையும் ஒரு சிறந்த தமிழ் இலக்கியப் போக்கைக் கற்பித்து எடுத்துக் காட்டும் வகையிலே திருக் குறிப்புத் தொண்ட நாயனர் புராணத்திலே அமைத்துக் காட்டி யிருக்கின்றார் ஆசிரியர். அஃதன்றி மலையையும் காட்டையும் கண்ணப்ப நாயனர் புராணத்தும், கடலை அதிபத்த நாயனர் புராணத்தும், நாட்டையும் நகர்களை யும் திருநாவுக்கரசு நாயனர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணங்களிலும் இன்னும் பற்பல புராணங் களிலும் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்.

**குறிஞ்சி : மலை**

பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரியா னென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை

—திருமலைச் சிறப்பு - 1.

திரைசெய் கடலின் பெருவளனுந் திருந்து நிலனின் செழுவளனும்
வரையின் வளனும் உடன்பெருகி மல்கு நாடு மலைநாடு.

—விறன்மிண்ட நாயனர் புராணம் - 1.

**மருதம் : நாடு**

சங்கங்கள் வயலெங்குஞ் சாலிகழைக் கரும்பெங்குங்
கொங்செங்கு நிறைகமலக் குளிர்வாசத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற வொலியெங்கும்
எங்கெங்கு மலர்ப்படுகர் இவைகழிய வெழுந்தருளி.

கருங்கழிவே லைப்பாலைக் கழிநெய்தல் கடந்தருளித்
திருந்தியசீர்ப் புனனாட்டுத் தென்மேல்பாற் றிசைநோக்கி
மருப்குமிடை தடஞ்சாலி மாடுசெறி குலைதெங்கு
நெருங்கிவளர் கமுகுடுத்த நிறைமருத வழிச்சென்றார்.
—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம் - 626, 625.

வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை யிறைஞ்சலி னீர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரு மொக்குமால். 7.

உழுத சான்மிக வூறித் தெளிந்தசே(று)
இழுது செய்யினு ளிந்திர தெய்வதந்
தொழுது நாறு நடுவார் தொகுதியே
பழுதில் காவிரி நாட்டின் பாப்பெலாம். 12.

சாலிநீள் வயலி னோங்கித் தந்நிக ரின்றி மிக்கு
வாலிதாம் வெண்மை யுண்மைக் கருவினும் வளத்த வாகிச்
சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தானுக் கன்பர்
ஆலின சிந்தை போல வலர்ந்தன கதிர்க ளெல்லாம். 21.
—திருநாட்டுச் சிறப்பு.

முல்லை : காடு

கார்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
நீர்நாடு முகைமுல்லைக் கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடு தென்பாண்டி நன்னாடு சென்றணைவார்.

கானவர்தங் குலமுலகு போற்ற வந்த
கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய
மானவரிச் சிலைவேட்டை யாடுஞ் சாரும்
வானமறை நிலைபெரிய மாமுந் தூறும்

ஏனையிமை யோர்தாமு மிறைஞ்சி யேத்தி
யெய்தவரும் பெருமையவா மெண்ணி லாத
தானமுமற் றவைகடந்து திருக்கா ளத்தி
சாரவெழுந் தருளினர் சண்பை வேந்தர்.

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணம் - 628, 1018.

நெய்தல்: கடல்

உணங்கல் மீன்கவர் வுறுநசைக் குருகுட னணைந்த
கணங்கொ ளோதிமங் கருஞ்சினைப் புன்னையங் கானல்
அணங்கு நுண்ணிடை நுளைச்சிய ரணிநடைக் கழிந்து
மணங்கொள் கொம்பரின் மருங்குநின் றிழியல மருளும்.

—அதிபத்த நாயனர் புராணம் - 7.

என்றிவ்வாறு வருவன பலவற்றுள்ளும் காடும், மலையும், நாடும், நகரும், கடலும், ஆகிய யாவற்றையும் அழகிய பண்பிற் காணலாம். சேக்கிழார் சுவாமிகள் இக்காவியத்திற் கூறும் இடப் பகுதிகளை இங்கே ஒரு சில உதாரணங்களாற் கண்டோம்.

இனி, இக்காவியத்துள் பெரும்பொழுது சிறுபொழுது ஆகிய இவற்றின் அழகினைக் காண்போம்.

பெரும்பொழுது : வேனில் :

மகிழ்ந்த தன்றலை வாழுமந் நாளிடை வானில்
திகழ்ந்த ஞாயிறு துணைப்புண ரோரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணம் - 384.

தண்பு னற்குளிர் கான றுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமதி முத்தணி நாளும
உண்ப மாதுரி யச்சுவை உலகுளோர் விரும்ப.

அறன்மலியுங் கான்யாற்றின் நீர்கன சயால் அணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்படரும்
முறையுணவு கொள்ளும்புட் டேம்பியயல் இரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால். 386.

மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்குஞ் சோலையின்மென் தளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில். 388.

—முன்பனி :

ஆங்குடைய பிள்ளையார் அமர்ந்துறையும் நாளின்கண்
தூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்துபெய லொழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெற விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவம் எய்தியதால். 328.

அளிக்குலங்கள் சுளிந்தகல அரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையெனத்
துளித்தலைமெல் லறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியாற்
குளிர்க்குடைந்துவெண்படாம்போர்த்தனையகுன் றுகளும்.329.

மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென்சோலைகளுங்குலைந்தசையக்குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவும் அடங்குவதும் ஆகுமால். 330.

அரிசனமுங் குங்குமமு மரைத்தமைப்பார் அயலெல்லாம்
பரியவகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ் வாய்த்தோணி யிரும்பீர்ப்பார் இடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம். 332.

சிறுபொழுது : எற்பாடு:

அன்னஇம் மொழிகள் சொல்லி அமுதுசெய் வித்த வேடர்
மன்னனார் திருக்கா ளத்தி மலையினார்க் கினிய நல்லூன்

இன்னமும் வேண்டு மென்னும் எழுபெருங் காதல் கண்டு
புன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையிற் றாழ்ந்தான்.

—திருக்கண்ணப்ப நாயனார் புராணம் - 126.

நாட்டு நல்லிசை நாவலூ ரன்சிந்தை
வேட்ட மின்னிடை இன்னமு தத்தினைக்
காட்டு வன்கட லைக்கடைந் தென்பபோற்
பூட்டு மேழ்பரித் தேரோன் கடல்புக.

—தடுத்தாட்கொண்ட புராணம் - 157.

உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்(கு)
எய்து வெம்மை யிளைப்பஞ்சி னன்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்யவன் சென்று மேற்கடல் வீழ்ந்தனன்.

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - 192.

—மாலை :

எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
மையுண் மாலை தமியோர் பனிப்புற.

—தடுத்தாட்கொண்ட புராணம் - 158.

—இரவு :

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான். 159.

—நிலா முளைத்தல் :

மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறுமா ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று

நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா. 160.

தோற்றும் மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா. 162.

—வைகறை :

வருங்கறைப் பொழுது நீங்கி மல்கிய யாமஞ் சென்று
சுருங்கிட வறிந்த புள்ளின் சூழ்சிலம் போசை கேட்டுக்
கருங்கட லென்ன நின்று கண்துயி லாத வீரர்
அரும்பெறல் தம்பி ரானார்க் கமுதுகொண் டணைய வேண்டி.

—கண்ணப்ப நாயனார் புராணம் - 132.

சண்பை யாளியார் தாங்கண்ட பேரருட்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்ட ருக்கருள் செய்து தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிருள் நீங்கலும்.

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - 207.

மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்(து)
ஏல அஞ்செழுத் தோதி எழுந்தனர். 208.

—சூரியன் உதயம் : காலை :

தேமரு தொடையன் மார்பன் திருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ் செய்தான்.

—தடுத்தாட்கொண்ட புராணம் - 13.

மொய்காட்டும் இருள்வாங்கி முகங்காட்டுந் தேரிரவி
மெய்காட்டும் அன்புடைய வில்லியார் தனிவேட்டை

எய்காட்டின் மாவளைங்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்பொழுதில்.
—கண்ணப்ப நாயனார் புராணம் - 134.

போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன்.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் - 209.

—நண்பகல்

"வெண்டிருநீற் றணிதிகழ விளங்குநூ லொளிதுளங்கக்
கண்டவர்கள் மனமுருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் கழல்புவிமேற் பொருந்தமனை தொறும்புக்குக்
கொண்டுதாம் விரும்பியாட் கொண்டவர்முன் கொடுவந்தார்."
—ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - 178.

இன்னும் ஆங்காங்கு இவை போல்வனவுங் காண்க. முன்பனி, வேனில் முதலியன பெரும்பொழுதே யாயினும் மாலை, காலை ஆகிய சிறு பொழுதேயாயினும் மலையே, ஆறே, கடலே, நாடே எதுவேயாயினும், சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கிற் பட்டு வெளிக் காட்டப் பெறும்போது அவ்வவற்றி னியல்பு அனைத்தும் நம் கண்முன் தோன்றுமாறு நிற்கின்றன. திருஞான சம்பந்த சுவாமிகள் திருமண எழுச்சியின் போது கதிரவன் எழுதலையும், திசைகளையும், ஐம்பூதங்களையும், சுவாமிகள் எடுத்துக் கூறினபடியுங் காண்க.

"நிரந்த கங்குலி னிதிமழை விதிமுறை எவர்க்கும்
புரந்த ஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய

அரந்தை வல்லிரு ளகலமுன் னவதரித் தாற்போற்
பரந்த பேரிருள் துரந்துவந் தெழுந்தனன் பகலோன்" 1189.

"அஞ் சிறைச்சுரும் பறைபொழிற் சண்பையார் தனிடையார்
தஞ்சி வத்திரு மணஞ்செயத் தவஞ்செய்தா ளென்று
மஞ்ச னத்தொழில் புரிந்தென மாசிருள் கழுவிச்
செஞ்சு டர்க்கதிர்ப் பேரணி யணிந்தன திசைகள்" 1190.

"பரம்பு தன்வயி னெங்கணு முள்ளபல் வளங்கள்
நிரம்ப முன்கொணர்ந் தெண்டிசை யவர்நெருங் குதலால்
தரங்க டந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பில் தன்பயன் காட்டுவ தொத்தது வையம்" 1191.

"நங்கள் வாழ்வென வருந்திரு ஞானசம் பந்தர்
மங்கலத்திரு மணவெழுச் சியின்முழங் கென்னத்
துங்க வெண்டிரைச் சுரிவளை யார்ப்பொடு சூழ்ந்து
பொங்கு பேரொலி முழக்குடன் எழுந்தது புணரி" 1192.

"அளக்க ரேழுமொன் றாமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமணி விழாவுடன் விரைந்துசெல் வனபோல்
துளக்கில் வேதிய ராகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி" 1193.

"சந்த மென்மலர்த் தாதணி நீறுமெய் தரித்துக்
கந்த மேவுவண் டொழுங்கெனுங் கண்டிகை பூண்டு
சிந்தை தூயஅன் பர்களுடன் திருமணம் போத
மந்த சாரியின் மணங்கொணர்ந் தெழுந்தது மருந்து" 1194.

"எண்டி சைத்தலத் தியாவரும் புகலிவந் தெய்தி
மண்டு மத்திரு மணவெழுச் சியின்அணி வாய்ப்பக்
கொண்ட வெண்ணிறக் குறூஉச்சுடர்க் கொண்டல்க ளென்ன
வெண் துகிற்கொடி நிரைத்தது போன்றது விசும்பு." 1195.

—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் புராணம்

அதுவேயு மல்லாமல் நான் மேலே பிறிதோரி டத்துக் காட்டியவாறு இந்திர ஞாலம் செய்வோன்

கைப் பிரம்பு பட்டவுடனே பொருள்கள் மாற்றிக் காணுமாறு போலேயும், பரிசவேதி தொட்ட மாத்திரத்திலே இரும்பு பொன்னுமாறு போலேயும் சேக்கிழார் திருவாக்குப் பட்டமாத்திரத்திலே அவை யாவையேயாயினும் சிவப்பொலிவும் அடியார் படிவமும் மேற்கொண்டு நிற்கின்றன. சிவ பத்தி அடியார் பத்திகளிலே அவைகளும் நம்மை ஊக்கிச் செலுத்துகின்றன.

**காவியத்தின் பிற அமைப்புகள்**

மண முடித்தல், புலவி, கலவி என்ற பகுதிகளைச் சுந்தரமூர்த்தி நாயனார் சரிதத்திலே பரவையார் சங்கிலியார் கூட்டத்திலே காணலாம். பொழில் விளையாட்டு - உண்டாட்டு - இவைகளைக் கழறிற்றறிவார் நாயனார் புராணத்தும், முடி கவித்தல்-கழறிற்றறிவார் நாயனார், கூற்றுவ நாயனார், மூர்த்தி நாயனார் புராணங்களிலும், மந்திரம்-திருவாரூர்ச் சிறப்புமுதலிய இடங்களிலும், தூது-சுந்தரமூர்த்திகள் சரிதத்திலும், செலவு-போர்-வென்றி-புகழ்ச்சோழ நாயனார் புராண முதலியவற்றிலும், அங்கங்கு வரும் பிற இடங்களிலும் காணும்படி பேசப்பெற்றுள்ளன. பெருங் காப்பியத்தின் பகுப்பு இலக்கணப் படியே இப்புராணமும் திருமலைச் சருக்கம் தொடங்கி வெள்ளானைச் சருக்க மிறுதியாகப் பதின் மூன்று சருக்கங்களாகவும் அவ்வச் சருக்கங்களில் வரும் ஒவ்வோர் நாயன்மார் சரிதங்கள் தனித்தனி அவ்வவர் பெயரால் புராணங்கள் என்ற பேருடைய உட்பகுதிகளாகவும் பிரிக்கப்பெற்றுள்ளன. பாயிரத்திலே கடவுள் வாழ்த்தும், திருக்கூட்டப்புகழ்ச்சி-அவையடக்கம்-நூல் அரங்கேறிய இடம்-நூற்பெயர்-இவைகளும், திருமலைச்சிறப்

பிலே நூல்வந்த வழியும், இதற்கு முதல்நூல் வழிநூல்களும், பதிகமும் சொல்லப்பெற்றன. ஆகவே, திருமலையிலிருந்து உபமன்ய முனிவர் ஏனைய முனிவர்களுக்குச் சொல்லியபடி சுந்தரமூர்த்தி நாயனார் சரிதமாய், இடையிடையே அவரால் அருளப்பெற்ற திருத்தொண்டத் தொகை ஒவ்வோர் பாசுரமும் அதனதன் முதற்சொற்றொடரையே சருக்கத்தின் பெயராய்க்கொண்டு, அப்பாசுரத்திற் றுதிக்கப்பெற்ற அடியார்களின் சரிதங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டதாய்த், தில்லைவாழந்தணர் முதல் மன்னியசீர் வரை பதினொருபாசுரங்களுக்குப் பதினொரு சருக்கங்களாய்த், திருமலைச்சிறப்பிலே தொடங்கி அவர் கயிலையிலிருந்துபுறப்பட்டு வெள்ளானைச்சருக்கத்து மீண்டும் கயிலையைத் திரும்பியடையும்வரை ஒரே தொடர்நிலைச் செய்யுளான பழங்கதையாய், இறுதியிலே வாழ்த்துடன் நிறைவேறியிருத்தலால் இது பெருங்காப்பிய இலக்கணம் முற்றும் அமைந்த நூல் என்பது இனிது விளங்கும்.

சேக்கிழார் சுவாமிகள் சிறந்த தமிழ்வாணர் என்பது மேலே பலவாற்றானும் கண்டோம். அவர்க்குத் தமிழ் மொழியினிலே ஆற்றல் எவ்வளவு பெரியதாயிருந்ததோ அதைவிட அதிகமாயிருந்தது அதன் மேலிருந்த பற்று. பாண்டி நாட்டைச் சொல்லவந்த போது அது தமிழ் நாடென்பதே சேக்கிழார் உளக்கண்ணுக்கு முதலில் முன் தோன்றிற்று. பாண்டிய நாட்டைத் தமிழ் நாடு என்றே கூறுவார். "தண்ணார் தமி ழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" என்று மாணிக்க வாசக

**தமிழ் மொழிப் பற்று**

சுவாமிகள் எடுத்துக் காட்டினார்கள் அல்லவா? ஆதலின் தமது பெருங் காப்பியமாகிய புராணத்திலே முதன்முதல் பாண்டி நாட்டைச் சொல்ல நேர்ந்த இடமாகிய மூர்த்தி நாயனார் புராணத்திலே சேக்கிழார் தமிழின் மேன்மையும் இனிமையும் பாடிக் காட்டி யனுபவிக்கின்றார். தமிழின்பந் துய்த்துக் களிக்கின்றார். பாண்டிநாட்டிலே நின்று தோன்றி ஆடி அசைந்து வரும் தென்றற் காற்றுத் தமிழ் நினைப்பூட்டுகின்றது. அக்காற்றினைப் போலவே செவ்வி மணஞ் செய்வது "ஞால மளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்று தேற்றம் பெறத் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் எடுத்துக் காட்டுவார். பொதுவாய்ப் பாண்டி நாடேயல்லமால் அதன் தலைநகர மாகும் மதுரையும் "சால்பாய மும்மைத்தமிழ் தங்கிய மூதூ"ராய் அதன் நூல்பா யிடத்துச் செய்புள் மிக்கேறு சங்கத்தை யுடையதாகின்றது. அதுமட்டே யன்றி,

> மும்மைப் புவனங்களின்மிக்க தன்றே யம்மூதூர்
> மெய்ம்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
> செம்மைப் பொருளுந் தருவார் திருவால வாயில்
> எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்க மிருந்த தென்றால்.
>
> —மூர்த்தி நாயனர் புராணம் - 7.

என்று பொருள்நூல் தந்த சிறப்பையும் தமிழ்ச்சங்கத்தையும் ஆசிரியர் வியந்து பேசுகின்றார். சுந்தரமூர்த்திகள் தென்றலைப் பற்றிப் பேசும்போது "மறம் பயின்ற தெங்சோ தமிழ் மாருதம்" என்று தமிழொடு புணர்த்திக் கேட்கின்ற படியிலே தமிழிற்கு அறச் செயலேயன்றி மறச் செயல் இல்லாமையை எடுத்துக்

காட்டுகின்றார் ஆசிரியர். திருவாலவாய்ப் பெருமானைத் "திருந்தியநூற் சங்கத்துள் அன்றிருந்து தமிழ் ஆராய்ந்தருளிய அங்கணர்" எனவும் "தலைச்சங்கப் புலவனார்" எனவும் "நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தான்" எனவும் ஆசிரியர் பாராட்டித் தமது தமிழ்ப் பத்தியை வெளிப்படுப்பார். "திருமறையுந் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகனைப்" "வண்டமிழ்செய் தவ நிரம்ப மாதவத்தோர் செயல் வாய்ப்ப" "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல" அவதரித்த திருஞான சம்பந்த மூர்த்திகள் திருமொழி மாற்று, வழிமொழித்திருவிராகம், திருக்கோமுத்திரி, திருவியமகம், திருஏகபாதம், திரு இருக்குக் குறள், திருவெழு கூற்றிருக்கை, திருஈரடிவைப்பு, திருநாலடிமேல்வைப்பு, திருவிராகம், திருச்சக்கரமாற்று முதலிய செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுள்களை எல்லாம் தமிழில் மூல இலக்கியமாக எல்லாப் பொருள் கோளும் முற்ற உலகுக்குத் தெரிக்கும்படி பாடியருளினார் என்று எடுத்துக்காட்டிய வகையிலே சேக்கிழார் சுவாமிகளது தமிழ்ப்பற்றின் அளவு நமக்கு இனிது புலனாகும்.

**தமது நாட்டினைப் பாராட்டுதல்**

சேக்கிழார் சுவாமிகள் இப்பெருங் காப்பியத்திலே பற்பல நாடுகளையும் பாராட்டிச் சொல்ல வேண்டியவராயினார். "தங்கள் பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரை" என்று மங்கையர்க்கரசியம்மையாரைப் போற்றுகின்றமையாலே திருநீற்றையும் சைவத்தையும் சோழநாட்டிற்குச் சொந்தமாக்கினார். என்னை?

திருஞான சம்பந்த சுவாமிகள் திருவவதாரமும் அதனால் சைவத் தாபனமும் நேர்ந்ததல்லவா! அன்றியும் "செங்கண்வளவன் பிறந்த சீர்நாடு நீர்நாடு" என்கிறபடி கோச்செங்கட் சோழநாயனார் முற்பிறப்பிற் சிலந்தியாயிருந்து திருவானைக்கா வுடையாரைப் பூசித்துப் பின்னை அவ்வறிவுடனே அங்கேயே சோழர் மரபிற் றோன்றி அரசாண்டு சிவபெருமானுக்கு மாடக்கோயில்கள் செய்தமை தேவாரம் முதலிய அருட்பாக்களும் திருவாய் மொழியும் பேசுகின்றன. பாண்டிய நாடோ தமிழ் மொழியோடு புணர்த்தி மேம்பாடுற்றதை மேலே சொன்னேன். திருமுனைப்பாடி என்கிற நடுநாடு (இப்போது கூடலூர் தென்னூற்காட்டுச் சில்லாவின் சில பகுதிகொண்ட பிரதேசம்) "மறந்தரு தீநெறி மாற மணிகண்டர் வாய்மை நெறி, அறந்தரு நாவுக்கரசும் ஆலாலசுந்தரரும் பிறந்தருள உளதாயிற்று"; ஆதலின் அதனைப் பாராட்டுந்திறம் நம்முடைய அளவிற்பட்டு அடங்காது என்று முடிக்கின்றார் ஆசிரியர். மலைநாட்டிருந்து சோழ நாட்டிற்கு வரும்போது சுந்தரமூர்த்திகள் கடந்து வரும் "சேய கொங்கர் நாடானது கற்சுரமும் நீளுருங் கானியாறும் நெடுங்கானும் பலகழிய" இடைப்படுகின்றது. பின்னர் அவர் மீளக் கடைசி முறையாகத் திருவாரூரிலிருந்து திரும்பி வரும்போது அந்தக் "கானகமும் துன்று மணிநீர்க் கானியாறும் துறுகற் சுரமும் கடந்தருளிக் குன்றவள நாட்டகம் புகுந்தார்." ஆனால் இக் கொங்கர் நாட்டினது வடகொங்கு, தென் கொங்கு, மேல்கொங்கு என்ற மூன்று பகுதிகளிலே மேல்கொங்கு நாடானது இவ்வாறு கான்யாறும் கானக

மும் கற்சுரமும் கள்வரால் ஆறலைப்புண்ணும் வழிகளு மாயிராமல் "முல்லைப் படப்பைக் கொல்லைமான் துன்னி யுகைக்கும் குடக்கொங்"காகவும் "தனபனி மலர்ப் படப்பைக்குலவு மீகொங் " காகவும் சேக்கிழார் சுவாமி கள் கண்டு நமக்குக் காட்டுகின்றார். "அப்பாலைச் குட புலத்தில் அரனார் மகிழுந் தானங்கள் பல" வற்றையும் திருஞான சம்பந்தமூர்த்திகள் சென்று பணிந்தனர் எனவும் "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப்பேரூ" ரையும் "செல்வத் திருப்புக்கொளியூரை"யும் சுந்தரமூர்த்தி கள் அடைந்து தரிசித்து என்போன்ற அற்ப ஆன்மாக் களுக்கும் உறுதிகாட்டினார் எனவும் காண்கின்றேன். திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்காளத்தியிலிருந்து கயிலாயமலை யாத்திரையாக நடந்து சென்றபோது பற் பல நாடுகளைக் கடக்கின்றார்கள். அவற்றின் வரிசையும் வழிகளின் தன்மையும் பெயர்களும் பிறவும் சேக்கி ழார் சுவாமிகள் பின்வருமாறு அறிவிக்கின்றார்.

அங்கண் மாமலை மேன்ம ருந்தை
வணங்கி யாரரு ளான்மிகப்
பொங்கு காதலின் உத்த ரத்திசை
மேல்வி ருப்பொடு போதுவார்
துங்க மால்வரை கானி யாறு
தொடர்ந்த நாடு கடந்தபின்
செங்கண் மால்விடை அண்ணல் மேவு
திருப்ப ருப்பத மெய்தினார். 348

அம்ம ருங்கு கடந்து போமவர்
ஆர்கொள் சூல வயிற்படைச்
செம்மல் வெண்கயி லைப்பொ ருப்பை
நினைந்தெ ழுந்ததொர் சிந்தையால்

எம்ம ருங்குமொர் காத லின்றி
இரண்டு பாலும் வியந்துளோர்
கைட ம ருங்கணே யுங்*தெலுங்கு
கடந்து கன்னட மெய்தினர். 350

*கருநடங்கழி வாக வேகிய
பின்க லந்த வனங்களும்
திருநதித்துறை யாவை யும்பயில்
சேணெடுங்கிரி †வட்டையும்
பெருந லங்கிளர் நாடு மெண்ணில
பிற்படச்செறி பொற்பினுல்
வருநெ டுங்கதிர் கோலு சோலைய
‡மாளவத்தினை நண்ணினர். 351.

அங்கு முற்றி யகன்று போகி
யருஞ்சு ரங்க ளிகந்துசென்(று)
எங்கு மிக்க வறங்க ணீடு
§மிலாட பூமி யிகந்துபோய்
மங்குல் சுற்றிய வெற்பி னேடு
வனங்கள் யாறு கடந்தயல்
பங்க யப்பழ னத்து ¶மத்திம
பைதிரத்தினை எய்தினர். 352.

அன்ன நாடு கடந்து ‖கங்கை
அணைந்து சென்று வலங்கொளும்
மின்னும் வேணியர் ⁑வாரணசி
விருப்பி னேடு பணிந்துடன்

* The Telugu and Carnatic Districts.
† வட்டை=வழி. ‡Malwa.
§ இலாடம்=Lata என்ற ஒரு தேசம்.
¶ The Central India. பரதகண்டத்தின் நடுப்பிர தேசம்.
‖ The Ganges. ⁑ Benares.

பின்ன னைந்தவர் தம்மை யங்க
ணெழிந்து கங்கை கடந்துபோய்
மன்னு காதல்செய் நாவின்
மன்னவர் வந்து கற்சுரம் முந்தினர். 353.

*மாக மீது வளர்ந்த கானக மாகி யெங்கு மணித்தாற்
போக லாநெறி யன்றி யும்புரி கின்ற காதல் பொலிந்தெழச்
சாக மூல பலங்கள் துய்ப்பது வுந்த விர்ந்து தனித்துநேர்
ஏகி னார்இர வும்பெ ருங்கயி லைக்கு லக்கிரி எய்துவார். 354.

—திருநாவுக்கரசு நாயனார் புராணம்.

பாரதநாட்டிலே யுள்ள மேற்கண்ட நாடுகளையே யன்றி உலகத்துள்ள எல்லா நாடுகளையும் சேக்கிழார் தமிழ் வழங்கு நாடுகள் எனவும், அவற்றிற் கப்பாற் பட்ட நாடுகள் எனவும், இரு பகுப்பாகப் பிரித்துப் பேசுகின்றார்கள்.

" மூவேந்தர் தமிழ்வழங்கு நாட்டுக் கப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும் "

என்பது காண்க.

இப்படி எல்லா நாடுகளையும் ஒன்று போலவே பாராட்டிப் பேச நேர்ந்த இக்காப்பியத்திலே அதற்கு உரிய நாடும் நகரும், சோழநாடும் திருவாரூருமாயின. ஆதலின் சோழ நாட்டுச்சிறப்பிலும் திருவாரூர்ச்சிறப்பிலும் சேக்கிழார் சுவாமிகள் இக்காவியத்தில் அந்நாடு நகரங்களை முதலில் வைத்துப் பேசினார்கள். ஆனல் இவைகள் எல்லாவற்றுள்ளும் தாம் பிறந்து தம்மைத் திருத்தொண்டிலே வளர்த்து ஈடுபடுத்திய தாய்நாடாகிய

**தாய்நாட்டின் சேவை**

* The high, dense and impenetrable forests.

திருத்தொண்டை நன்னாட்டைப் பேச இடம் வாய்த்த திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திலே சேக்கிழார் சுவாமிகள் தமது தாய் நாட்டிற்குச் செய்த பெருஞ் சேவையானது எல்லாருக்கும் தாய் நாட்டின் தொண்டிலே வழி காட்டுவதாயுள்ளது. அந்த வருணனைகளை நோக்க ஏனைய நாடுகளின் பெருமை யெல்லாம் குறைந்தே காண்கின்றன. தமது தாய் நாட்டைச் சேக்கிழார் பாராட்டியது போலப் பாராட்டிச் சேவை செய்த புலவாணர் மிகச் சிலரே. நாட்டைப் பாராட்டும் வழியிலே ஏனைப் புலவர் பெரு மக்களுக்கு வழி காட்டியாக நின்றவர் சேக்கிழார் சுவாமிகள். இவரது பாராட்டு தனித்தன்மை பெற்று விளங்குகின்றது. இதுபோல வேறெவரும் செய்ததில்லை: இனிச் செய்யப்போவதுமில்லையென்றும் கூடத்துணிந்து சொல்லலாம். தொண்டை நாட்டின் மலை ஆறு வயல்களும், நானிலப் பகுதிகளும், அவ்வவற்றின் ஊர்களும், தலை நகரும், நகரப் பரப்பும், அமைப்பும், தெருக்களும், குடிகளும், நாடு நகரங்களின் முற் சரிதங்களும், பிற விசேடங்களும், அற்புதச் செயல்களும், அதன் பெருமைகளும் தெய்வீகத் தன்மைகளும், இக்காலத்தும் கிடைக்கும் சான்றுகளும் ஆகிய எல்லா விவரங்களும் வரிசையாகத் தனித் தமிழ் இலக்கியமாகச் செய்து காட்டி யிருக்கின்றார் ஆசிரியர். இது பற்றியே பிற்காலத்திலே காஞ்சிப் புராணம் பாடவந்த பேராசிரியராகிய சிவஞான முனிவர்களும் இது பற்றி யெடுத்துக் கூறக் " குன்றை நகர்க் குலக்கவியே வல்லனல்லாற்" பிறர்க்கு அரிது என விதந்து பாராட்டக் காண்கின்றோம்.

சேக்கிழார் சுவாமிகள் அநபாயச் சோழராகிய இரண்டாவது குலோத்துங்கச் சோழரிடம் அமைச்சராயிருந்து இப்புராணம் பாடிய வரலாறு எனது முதல் நாட் பேச்சிலே பேசியுள்ளேன். அவ்வரசர் இப்புராணம் பாடுவித்தமையால் அதற்குக் கைம் மாருகவும் அரசனைப் பாராட்டு முகத்தால் இராச விசுவாசமாகவும் இருத்தல் பற்றிச் சேக்கிழார் சுவாமிகள் அநபாயச் சோழரை இப் புராணத்துள்ளே பற்பல இடங்களிலு மமைத்துப் பாராட்டி யிருக்கின்ருர்கள். அன்றியும் அடிமைத் திறத்திலே சிறந்து பற்பல திருப்பணிகள் செய்து விளங்கினமையாலே அவரை இவ்வாறு பன்முறையும் பாராட்டினர். "வேந்தனு மோங்குக" என்று அரசவாழ்த்துக் கூறியருளிய திருஞான சம்பந்த சுவாமிகளது திருப் பாசுரத்துக்கு ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்

**அரசினைப் பாராட்டல் அல்லது இராச விசுவாசம்**

"வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளும் அர்ச்சனை நல்லுறுப்(பு) ஆதலால்
ஆளும் மன்னனை வாழ்த்திய(து) அர்ச்சனை
மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்" 823.

—திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்.

என்று உரைகண்டு அரசனை அனைவரும் வாழ்த்தவேண்டிய காரணத்தையும் காட்டித் தமது கருத்தையும் உணர்த்தியருளினூர்.

சேக்கிழார் சுவாமிகள் அநபாயரைக் குறிக்கு மிடங்கள்

1 மேய இவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
சேய வன்திருப் பேரம் பலஞ்செய்ய

தூய பொன்னணி சோழன்நீ டூழிபா
ராய சீர்அந பாயன் அரசவை.

—பாயிரம் - 8.

2 கையின்மான் மழுவர் கங்கைசூழ் சடையிற்
கதிரிளம் பிறைநறுங் கண்ணி
ஐயர்வீற் றிருக்குந் தன்மையி னாலும்
அளப்பரும் பெருமையி னாலும்
மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்
வென்றிவெண் குடையந பாயன்
செய்யகோ லபயன் திருமனத் தோங்கும்
திருக்கயி லாயநீள் சிலம்பு.

—திருமலைச் சிறப்பு - 12.

3 நற்றமிழ் வரைப்பி னோங்கு நாம்புகழ்
திருநா டென்றும்
பொற்றடந் தோளால் வையம் பொதுக்கடிந்
தினிது காக்குங்
கொற்றவ னநபா யன்பொற் குடைநிழற்
குளிர்வ தென்றான்
மற்றதன் பெருமை நம்மால் வரம்புற
விளம்ப லாமோ.

—திருநாட்டுச் சிறப்பு - 35.

4 அன்ன தொன்னக ருக்கர சாயினான்
துன்னும் வெங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே.

—திருவாரூர்ச் சிறப்பு - 13.

5 சென்னி வெண்குடை நீடநபாயன் திருக்குலம்புகழ்
பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு வயல்வளந்தர
வியல்பினி லளித்துப்

பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து புணரி தன்னையும்
புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய நலஞ்சிறந்தது
வளம்புகார் நகரம்.

—இயற்பகை நாயனர் புராணம் - 1.

6 பொன்மலைப் புலிவென் றோங்கப் புதுமலை யிடித்துப் போற்
அந்நெறி வழியே யாக அயல்வழி யடைத்த சோழன் [றும்
மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகர மாகுந்
தொன்னெடுங் கருவூ ரென்னுஞ் சுடர்மணி வீதி மூதூர்.

—எறிபத்த நாயனர் புராணம் - 2.

7 சென்னி யபயன் குலோத்துங்கச் சோழன்
தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே
றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொன்
மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்தின் ஒன்றாய்
விளங்குந் தகைத்தவ்வூர்.

—சண்டேசுர நாயனர் புராணம் - 8.

8 எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென்
றெழுது மேட்டில்
தம்பிரா னருளால் வேந்தன் தன்னைமுன்
னேங்கப் பாட
அம்புய மலராள் மார்பன் அநபாயன்
என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூன்
நிமிர்ந்த தன்றே.

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம் - 847.

9 அந்நகரிற் பாரளிக்கு மடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னி நீடநபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னி நதிப் புரவலனார்புகழ்ச்சோழரெனப்பொலிவார்.

**—புகழ்ச்சோழ நாயனார் புராணம் - 8.**

10 அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டிற் பாக்கொங்கிற்
பன்னுதுலைப்பசும்பொன்னாற்பயில்பிழம்பாமிசையணிந்த
பொன்னெடுந்தோளாதித்தன்புகழ்மரபிற்குடிமுதலோர்.

**—இடங்கழி நாயனார் புராணம் - 3.**

(இது அநபாயரைக் குறிக்கிறதென்பர்)

11 மந்திரிக டமையேவி வள்ளல்கொடை யநபாயன்
முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகனாடு தொறுமணியார்
சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தார்.

**—கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் - 14.**

இதுமட்டுமன்றிக் காடவர் பல்லவர் என்ற மரபின் அரசர்களையும் ஏனைச் சேர பாண்டிய மரபுகளின் அரசர்களையும் சுவாமிகள் மிக அருமை பெருமையாகப் பாராட்டிப் பேசியுள்ளார்கள். அவ்வந்நாள் அரசர்களையும் முன்னாட் பேரரசர்களையும் பத்தியின் வழிப்பட்டபோது பாராட்டுதல் தேவார முதலிய முன்னோர் மொழியிலும் நாம் காணும் முறையாம்.

"உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை
மறுக்கஞ் செய்யும்
பெருமையார்."

**—சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்—கோயில் - 4.**

முதலிய அருள் வாக்குகளையும் காண்க. அரசன் திருமாலின் அமிசமாகவும் இறைவன் நீதியை உலகில்

நிறுத்திக் காவல் புரியும் பிரதிநிதியாகவும் அக்காலத்தவர் கொண்டொழுகினர்கள்.

இதனாலேதான் "வேந்தனும் ஓங்குக" என்று தமது தெய்வத் திருவாக்கினாலே திருஞான சம்பந்த சுவாமிகள் ஆசீர்வதித்தருளினார்கள். ஓங்குக என்றமையால் அந்நிகழ்ச்சிக்குக் காரணராயிருந்த அந்நாட் கூன் பாண்டியருடைய கூனும் நிமிர்ந்து அவர் நின்றசீர் நெடுமாற நாயனார் ஆயினர் எனவும் காண்கின்றோம். அரசன் இறைவனுடைய பிரதிநிதி என்பது போய் உலகமனிதருடைய பிரதிநிதி என்ற உணர்ச்சி இந்நாட் பிற்கால நிகழ்ச்சியேயாகும்.

இனிச் சேக்கிழார் சுவாமிகள் தமக்கு முன்னிருந்த பெரியோர் திருவாக்குக்களை ஆப்த வசனமாக எவ்வாறு மேற்கொண்டு பேணி உள்ளார்கள் என்பது பற்றிச் சிறிது பேசுவோம்.

**முன்னோர் மொழி பேணல்**

ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் வடமொழியில் காமந்தக நீதி நூல்—மாக்கவி — காளிதாசர் முதலிய நூல்களிலிருந்து பொருள்களை எடுத்து ஆண்டிருக்கின்றனர் என்று திரு: மகாதேவ முதலியார் அவர்கள் தமது 'பெரிய புராண ஆராய்ச்சி' என்னும் நூலில் சில உதாரணங்களை எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவை நிற்க : காவியச் சுவைகட்கும் நீதிகளுக்கும் சேக்கிழார் பிறமொழிகளுக்குப் போய்த் தேடி யலைய வேண்டிய அவசியமிருந்திராது. சேக்கிழார் தமது அரும்பெருங் காவியமாகிய இப்புராணத்தை ஏனைய காவியங்கள் போல் இந்திரிய இன்ப மயமாக்காமல் உயிர்க்கு ஊதியமாகிய அத

னேயே உள்ளுறையாகக்கொண்டு இயற்றினராகலின், வேத வசனங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், மிருதிகள், மாபுராணங்கள் என்றிவற்றினின்றும் கருத்துக்களை மேற்கொண்டு அங்கங்கே பொதிந்து வைத்திருக்கின்றார் என்பது ஆன்றோர் துணிபு. அவற்றிற்கு உதாரணங்கள் இங்கே விரித்துக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. இவற்றை இன்னும் விரிவாய் வடமொழி தென்மொழி என்ற இருமொழியிலும் வல்லுநர்வாய்த் தெரிந்து கொள்ளலாம்.

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்:

என்றபடி தமிழ் வேதங்களாகிய திருக்குறள் திருவாசகம் தேவாரங்களைச் சேக்கிழார் எவ்வாறு தமது புராணத்திலே கையாண்டு போற்றி வைத்துள்ளார் என்பது பற்றிச் சிறிது ஆராய்வோம்.

**திருக்குறள்**

திருக்குறளை ஆசிரியர் பாராட்டி வைத்திருப்பது மிக அருமையாயுள்ளது. அனேக இடங்களில் திருக்குறள்களின் சொற்களையும் பொருள்களையும் அவ்வப்படியே எடுத்து வைத்துள்ளார். திருக்குறள் உலகம் போற்றும் தனிப் பெரு நூலாகவும், பொது நூலாகவும், சர்வசமய சம்மத நூலாகவும், சைவச் சிறப்பு நூல்களிலே தலையில் வைத்தெண்ணப்படுவதாகவும், பாடின அன்றுபோலவே பல்லாயிரம் ஆண்டு கழிந்த இன்றைக்கும் "புதுமையும் பசுமையும் பயப்ப" விளங்குவ

தாகவும் உள்ளது. அதைச் சேக்கிழார் சுவாமிகள் தமது இளம் பிராயத்திலேயே அறிந்து நன்கு பயின்ருர். இது அவர் சரித வரலாற்றிலே, மலையில்-ஞாலத்தில்-கடலிற்-பெரியன யாவை என்ற கேள்விகளுக்கு "நிலையிற்றிரியாது"-"காலத்தினுற் செய்தநன்றி"-"பயன்றூக்கார் செய்த உதவி"-என்ற மூன்று குறட்பாக்களினுல் விடையிறுத்தார் என்று வழங்கும் ஒரு செய்தியே சான்ருக மேலே சொன்னேன். குறள் பெரியோர்களது இலக்கணமெல்லாம் கூறிப் பெரியோர்களாவார் இப்படி யிப்படி யிருப்பர் என்று இலக்கண வகையாலே அவர்களை அறிவிக்கின்றது. பெரிய புராணமோ என்ருல், அவ்வாறு வாழ்ந்த பெரியோர்க்கு உதாரணங் காட்டி இலக்கிய வகையாலே எடுத்துக் காட்டுகின்றது. எனவே, குறள் என்னும் இலக்கணத்தை விள்க்கப் பெரிய புராணம் இலக்கியமாக விளங்கும் என்று சொல்வேனுனல் அதுவும் உண்மையேயாகும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ருங்(கு)
ஐம்புலத்தா ருேம்பல் தலை"

என்ற குறட்பாவின் பொருளை மிக அழகுபெற,

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாடநீடி மலர்ந்துள பதிக ளெங்கும்.

—திருநாட்டுச்சிறப்பு - 26.

என்ற பாட்டிலே பொருள் விரித்து ஆசிரியர் அமைத்துள்ளது காணத்தக்கதாம். இவ்வாறு "ஐந்து கூறு

வேண்டுதலின் அரசர்க்கு இறைப் பொருள் ஆறிலொன் ருயிற்று" என்ற பரிமேலழகர் கூற்றுங்காண்க.

"குணமென்னும் குன்றேறி நின்ரு ர்"

என்றது,

"கோதிலாத குணப்பெருங் குன்றனு ர்"

—திருக்கூட்டச்சிறப்பு - 7.

என்ற பாட்டிலும்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்ற பொருள்,

"வீடும் வேண்டா விறலின் விளங்கினு ர்"

என்பதிலும் விளங்குதல் காண்க.

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்ற அரிய சைவசாத்திர நுட்ப மமைந்த குறட்பா வின் பொருள் பல இடத்தும் காணலாம்.

தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானே

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் - 63.

தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டு அகலநீங்கிப்

—கண்ணப்பநாயனுர் புராணம் - 104.

கண்ணுதலோன் திருநீற்றுச் சார்பி னோர்க்குங் கவலை வருமோ

—திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் - 562.

சைவமெய்த் திருவின் சார்பே பொருளெனச் சாரு நீரார்

—திருநீலகண்டநாயனுர்புராணம் - 2.

என்பனவாதி பற்பல பாசுரங்களையும் காண்க.

“ மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட் பேறு ”

என்ற திருக்குறளின் உள்ளுறையை,

கனைவான முகிற்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள்.
வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிங் கிணியொலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறுவர் நெருங்கியுள மணிமறுகு.

—திருஞானசம்பந்தர் - 10, 11.

என்ற பாசுரங்கள் விரிவுரை செய்து காட்டுகின்றன. திருஞானசம்பந்தமூர்த்தியும் திருநாவுக்கரசுமூர்த்தியும் ஆகிய எம்பெருமக்க ளிருவரும் சீகாழியில் இயைந்த கூட்டத்தினால் “ உடனுறைவின் பயன் ” பெற்றார்கள். அதிலிருந்து பிரியும் காலை வாகீசர் “ புகலிப் பிரானிசைவோடும் பின்னாக வெய்த இறைஞ்சிப் பிரியாத நண்பொடும் போந்தார் ” என்று கூறுமுகத்தால்,

“ உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் ”

என்ற திருக்குறட்கருத்தை உதாரணங் காட்டி விளக்குகிறார் ஆசிரியர்.

“ பொறிவாயி லைந்த வித்தான் ”

என்ற குறட் கருத்துப்,

“ புலன்க ளைந்துஞ் செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து”

திருஞானசம்பந்தர் - 343.

எனும் திருப்பாட்டிலும்,

“ சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு ”

என்ற திருக்குறளின் சொல்லும் பொருளும்,

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள் தப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவு மாறி
விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்று
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு. 562.

என்னும் பாட்டிலும்,

“ செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு ”

என்னும் திருக்குறட் கருத்து,

அருவிலையிற் பெறுங்காசு மவையே யாகி
யமுதுசெய்யத் தொண்டாள விறந்து பொங்கி
வருமவர்க ளெல்லார்க்கும் வந்தா ருக்கும்
மகிழ்ந்துண்ண வின்னடிசில் மாளாதாக
திருமுடிமேற் றிங்களொடு கங்கை சூடுஞ்
சிவபெருமா னருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்
கரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்க லீந்தார். 571.

என்னுந் திருப்பாசுரத்திலும்,

“ அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார் ”

எனும் கருத்து,

.........................தென்னன் வெப்புறுதீத் தம்மை
எறியமா சுடலுங் கன்றி யருகுவிட் டேற நிற்பார்
அறிவுடை யாரையொத்தா ரறிவிலா நெறியி னின்றார். 766.

என்று நகைச்சுவை தோன்றக் கூறும் திருப்பாட்டி

லும்,

"தனக்குவமை யில்லாதான்"

என்ற கருத்து,

"ஒப்பிலா தவர்தமை வழியிடைப் பணிந்தருகு
மன்பொடு செல்வார்" 961:

—திருஞானசம்பந்த நாயனுர் புராணம்.

என்பது முதலிய திருப்பாட்டுகளிலும் கிடைக்கக் காண்கின்ரும். மேலுங் காமத்துப் பாலிலே,

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னேய்க்குத் தானே மருந்து"

என்ற இரண்டு குறட்பாக்களின் கருத்துக்களையும் சுருங்கிய அழகிய வழியிற் பிணைத்து,

..............................................காமன்
செருவெழுந் தனுவ தொன்றுஞ் சேமவில் லொன்று மாக
இருபெருஞ் சிலைகண் முன்கொண் டெழு தன போலவேற்ப.

—திருஞான சம்பந்தமூர்த்திகள் புராணம் - 1097.

என்ற பாட்டிலே அமைத்தமை வியக்கத் தக்கதாம். சுந்தரமூர்த்தி நாயனுர் சங்கிலி யம்மையாருடன் இனிதிருந்த போது,

புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றுணர்ந்திருந்தார் காதலினல்.

—ஏயர்கோன் கலிக்காம நாயனுர் - 267.

என்று சொல்லிய திருப்பாட்டிற் சேக்கிழார்சுவாமிகள்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்ற திருக்குறளினை அப்படியே எடுத்துத் தலைப்பெய்துகொண்டார்.

வீழுமவர்க் கிடைதோன்றி மிகுபுலவிப் புணர்ச்சிக்கண்
ஊழியா மொருகணந்தான் அவ்வூழி யொருகணமாம்.

—ஏயர்கோன் கலிக்காம நாயனர் - 268.

என்ற திருப்பாட்டு ஊடல் கூடல்களைப் பற்றிய பல குறட் பாக்களின் உள்ளுறையை வடித் தெடுத்துக் கொடுத்தது போலும் உள்ள அழகும் காணத் தக்கது.

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையா னரசருள் ஏறு"

என்ற குறட்பாவுடன்,

"கூழுங் குடியும் முதலாயின கொள்கைத் தேனும்"

—மூர்த்தி நாயனர் புராணம் - 28.

என்னும் பாட்டினையும்,

"உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்"

எனும் குறளுடன்,

பொருளாய மெய்துதற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே
உருளாயச் சூதாடி யுறுபொருள்வென் றனநம்பர்
அருளாகவே கொண்டு........................

—மூர்க்க நாயனர் புராணம் - 8.

எனும் திருப்பாட்டையும்,

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

எனுந் திருக்குறளுடன்,

"பொய் கடிந் தறத்தின் வாழ்வார்"

—திருநீலகண்ட நாயனர் புராணம் - 2.

என்றதனையும் ஒப்பு நோக்குக.

" காண்டகைமை யின்றியுமுன் கலந்தபெருங்
கேண்மையினர் "
—திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 203.

என்பது,

" புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் "

எனுந் திருக்குறட் கருத்தைக் காட்டி நிற்கின்றது.

" மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார் "

என்பது,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை "

எனும் குறளிற் கூறிய கற்பிலக்கணத்தை உதகரித்துக் காட்டி நிற்கின்றது.

* * * * * * வானிற்
றிகழ்ந்த ஞாயிறு துணைப்புணர் ஓரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடல்நீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்.
—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் - 384.

எனும் பாட்டு வான சாத்திரம் சோதிடம் என்ற இரண்டு சாத்திர உண்மைகளை வெளிப்படுத்துகின்றதுடன்,

" நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின் "

எனும் குறட்பாவின் கருத்தினையும் வெளிப்படக் காட்டி நிற்கின்றது.

" செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார் "

என்ற குறட்பாவினுலே திருவள்ளுவர் பெரியார் இலக்



குன்றத்தூர் - திருநாகேச்சுரக் கோயில் -
வெளிப்புறம்.
(பக்கம் - 11)



குன்றத்தூர் திருநாகேச்சுரக் கோயில் - உட்புறம்.
(பக்கம் - 11)

கணம் வரை யறுத்தார். சேக்கிழார் சுவாமிகள் அவ்வகைப் பெரியார்களது சரிதங்களையே தமது புராணத்துட் கூறுகின்றாராதலின்,

“செயற்கருஞ் செய்கை செய்த தீரனே யோல மென்றான்
மயக்கறு மறையோ லிட்டு மாலயன் தேட நின்றான்”
—இயற்பகை நாயனார் புராணம் - 29.

என்ற இடத்திலே அவ்விலக்கணத்தைப் பெரியாராகிய இயற்பகையார்பாற் காட்டி அதனைச் சிவபெருமானது திருவாக்கில் வைத்து உறுதி செய்துள்ளார்.

சேக்கிழார் சுவாமிகள் திருவாசகத்திலே நன்கு பயின்று அதனைப் பாராட்டி யுள்ளார்கள் என்று கொள்ளலாம்.

சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
திருவாசகம் அத்தன் கருணையினாற் றோணோக்கமாடாமோ
—திருவாசகம் - திருத்தோணோக்கம் - 6.

எனவும் அதனை அடுத்த பாட்டிலே தொடர்ந்து அனுவதித்து,

தீதில்லை மாணிசிவ கருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.
—திருத்தோ ணோக்கம் - 7.

எனவும், சண்டீச நாயனார் சரிதத்தின் தத்துவத்தை மாணிக்கவாசக சுவாமிகள் எடுத்துக் காட்டியதைச் சேக்கிழார் சுவாமிகள் சண்டீச நாயனார் புராணத்தை முடித்துக் காட்டுகின்ற அளவிலே,

இந்த நிலைமை யறிந்தாரார்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்.
—சண்டேசுர நாயனூர் புராணம் - 59.

என்று எடுத்துத் தலைப்பெய்து கொண்டார்.

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன் கண்ணிணைநின்
திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக்
காக்கி.............................. —திருச்சதகம் - 26.

என்ற திருவாசகத்தின் சொல்லும், பொருளும், அழகும், அமைப்பும்,

ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காகப்
பாங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமும் செய்வார்.
—நேச நாயனூர் புராணம் - 3.

என்ற திருப்பாட்டிற் சிறந்து மிளிர்வது காணலாம்.

உருத் தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி......................... —கண்டபத்து - 3.

என்ற திருவாசகம்,

...........எனையறி யாப்பருவத்தே யெடுத்தாண்ட
பெருந்தகை..................................
—திருஞான சம்பந்தர் - 880.

எனும் பாட்டிலும்,

"செருப்புற்ற சீரடி" —திருத்தோணுேக்கம் - 3.

என்பது,

"திருப் பாதச் செருப்புத்தோய"—திருஞான சம்பந்தர் - 1017.

என்பதிலும்,

"ஐம்புலன்க ளார வந்தனை" —திருச்சதகம் - 26.

எனுங் கருத்து,

..............................யுருவின்கண்
அணியு மைம்பொறி யளவினு மெளிவா வருளினை.

—திருஞானசம்பந்தர் - 161.

என்ற இடத்திலும்,

"அணிகுழன்மேல் வண்டார்ப்ப"—திருவெம்பாவை - 12.

எனும் திருவாக்கு,

"தேங்கோதை மலர்க்குழன்மேற் சிறைவண்டு கலந்தார்ப்ப"

—தடுத்தாட்கொண்ட புராணம் - 146.

என்ற அழகிய வருணனையிலும்,

"இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளி"

—திருவெம்பாவை - 17.

என்ற கருத்து,

"அடியவர் மனைகடோறும்"

—திருநீலகண்ட நாயனர் புராணம் - 42.

என்பதிலும்,

நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்

—திருப்பொற்சுண்ணம் - 5.

என்ற பொருள்,

"தொண்டர்கள்பின் உம்பர்குழாம்"

—திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 343.

என்ற பாட்டிலும்,

"பள்ளந்தாழுறுபுனலிற் கீழ்மேலாகப்"—திருச்சதகம் - 21.

என்பது,

"அன்பு பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்பு"

சிறுத்தொண்ட நாயனூர் புராணம் - 4.

என்ற திருப்பாட்டிலும் விளங்கும் அழகுகள் ஒப்பு நோக்கிக் காணற்பாலன. இன்னும் பற்பல இடத்தும் திருவாசகச் சொல்லும், பொருளும், போக்கும், பொலிவும், கருத்தும், கவினும், பெரிய புராணத்திலே சிறப்ப விளங்கி நிற்பதைக் காணலாம். விரிவஞ்சி இந்த ஒரு சில உதாரணங்களுடன் நிறுத்தினேன்.

**தேவாரம்**

இனித் தேவாரங்களிலே சேக்கிழார் சுவாமிகள் திளைத்தாடி அவற்றைப் பயன்படுத்தும் முறையை மேலே பிறிதோரிடத்திலே விரித்துப் பேசி யிருத்தலின், இங்கே சொல்லவில்லை. சுருங்கச் சொல்லின் சேக்கிழார் சுவாமிகள் தேவாரங்களை முழுவதும் துருவித் துருவி ஆய்ந்து அவற்றுட் கிடக்கும் பற்பல பொருள்களையும் தேடி வாரி முகந்து எடுத்துத் தமது புராணத்துப் பற்பல இடங்களிலும் அமைத்துவைத்து நமக்குப் பேருதவி புரிந்துள்ளார்கள்.

தேவாரங்கள் என்ற பெருங்கடலினுள்ளே குளித்துத் திளைத்து அதனுட் பெறுபயன் யாவும் தேர்ந்து எடுத்துக் கொடுத்துள்ளார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள். தேவாரக் கடலினுட் கிடைத்த உட்சான்றுகளாகிய ஆதரவுகளே பெரிய புராணத்தின் அடிநிலையாகும். பற்பல தேவாரங்களின் தலைக்குறிப்பையும் உட்குறிப்புகளையும் அங்கங்கே எடுத்துவைத்துக் காட்டியிருக்கின்றார்.

...................அவ்வியல் நாவலர் பெருமான்
"பித்தர்பிறை சூடி"யெனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாமுல கெல்லாமுய வெடுத்தார்.

—தடுத்தாட்கொண்ட புராணம் - 74.

...........மருளும்பிணி மாயை யறுத்திடுவான்
"கூற்றாயினவாறு விலக்ககிலீ"ரென
நீடியகோதில் திருப்பதிகம்
போற்றுலக கேழின் வருந்துயரும்
போமாறெதிர் நின்று புகன்றனரால்

—திருநாவுக்கரசுநாயனார் புராணம் - 70.

"மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்ப தென்று
தணிவில் பிணிதவிர்க்கும் பதிகத்
தண்டமிழ் பாடினார் சண்பைநாதர்.

—திருஞானசம்பந்தர் - 318.

என்பனவாதி பாசுரங்களிலே தேவாரப் பதிகங்களின் முதற் குறிப்பு முதலியவற்றை அவ்வாறே சொல்லும், பொருளும், சந்தமும், இசையும்படி எடுத்து வைத்துப் பாடியிருக்கின்ற கவின் காணத்தக்கதாகும். சில இடங்களில் தேவாரப் பதிகங்களின் உட்குறிப்பை எடுத்துக் காட்டுவர் நாயனார்.

எடுத்த அத்திருப் பதிகத்தி
னுட்குறிப்பிவ் வுலகினிற்பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட
வேண்டுமென் றன்பரன் பினிற்பாட.

—வெள்ளானைச் சருக்கம் - 30.

முதலிய பாடல்களைக் காண்க.

இன்னின்ன பதிகங்களில் இன்னின்ன பாடல் களில் இன்னின்ன செயல்கள் விளைந்தன என்று குறிப்பிட்டு எடுத்துக் காட்டுவதும் சேக்கிழார் சுவாமிகளின் இயல்பாம்.

மன்னு வார்சடை யாரைமுன் னெழுதுமட் டிட்ட
என்னு நற்பதி கத்தினிற் போதியோ வென்னும்
அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதமவ் வங்கந்
தன்ன வட்டுவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள். 1088.

எடுத்த பாட்டினல் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட்(டு)
அடுத்த வம்முறைப் பன்னிரண் டாண்டள வணைந்து
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றோன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விரித்தார்.1091.

—திருஞானசம்பந்தர்.

"உரைப்பா நுரை"யென் றெடுத்ததிருப்
பாட்டு முடியா முன்னுயர்ந்த
வரைப்பான் மையினீள் தடம்புயத்து
மறலி மைந்த னுயிர்கொணர்ந்து
திரைப்பாய் புனலின் முதலைவயிற்
றுடலிற் சென்ற வாண்டுகளுந்
தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப
முதலை வாயிற் றருவித்தான்.

—வெள்ளானைச் சருக்கம் - 11.

.......................... ..நன்மைபுரி தீந்தமிழின்
றொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார்.

—திருநாவுக்கரசு நாயனர் புராணம் - 211.

முதலிய பல இடங்களையுங் காண்க.

இனிப் பற்பல பெரும் பதிகங்களுக்குப் பேருரையும் சிற்றுரையும் கருத்துரையும் ஆக வகுத்துக் கூறு

வதும் சேக்கிழார் சுவாமிகளது தனி மாண்பாகும். "வாழ்க வந்தணர்" என்ற திருஞானசம்பந்த மூர்த்திகளது திருப்பாசுரம் எனும் திருப்பதிகத்திற்குப் பேருரையாக இருபத்தைந்து திருப்பாட்டுகளாலே வியாக்கியானம் அருளிச்செய்தமை காண்க.

வெறியேர்பொழிற் சண்பையர் வேந்தர்மெய்ப் பாசு ரத்தைக்
குறியேறிய வெல்லை யறிந்துகும் பிட்டே னல்லேன்
சிறியே னறிவுக் கவர்தந் திருப்பாதந் தந்த
நெறியே சிறிதி யானறி நீர்மை கும்பிட்டே னன்பால்.

—திருஞானசம்பந்தர் - 844.

என்பது ஆசிரியர் வாக்கு.

**பின் வந்த தமிழ் வாணர் பாராட்டிய முறை**

இனிப் பின்வந்த தமிழ் வாணர்கள் சேக்கிழார் சுவாமிகளையும் அவர் திருவாக்கையும் பாராட்டிய முறையைப் பற்றிச் சிறிது பேசி மேற்செல்வேன்.

சேக்கிழார் சுவாமிகள் சரிதத்தையும் அவர் நடராசர் திருவருட்டுணை கொண்டு பெரிய புராணம் பாடியரங்கேற்றிய வரலாறுகளையும் திருத்தொண்டர் புராண வரலாறு என்று பெயரிட்டு 93 திருப்பாட்டுகளால் புராணமாக இயற்றி யருளினர் 13-வது நூற்றாண்டளவில் வாழ்ந்த ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் என்பது மேலேயே குறித்துள்ளேன். இவர் சைவ சந்தானாசாரியர்கள் நால்வரிலே சிறந்து விளங்கியவர்; தில்லை வாழந்தணர்களிலே சிறந்தவர்; சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்களுள் 8 சாத்திரங்கள் செய்து அருளியவர்; கோயிற் புராண முதலிய பல அருணூல்களைச் செய்தவர்; சிதம்பரத்தினை அடுத்த கீழ்ப்புறமுள்ள

கொற்றவன் குடியிலே சிவானுபூதிச் செல்வராய்ச் சிவ யோகத்திலிருந்தவர்; ஸ்ரீ நடராசருடைய திருவருளை நிரம்பப்பெற்றவர்; திருவருளாலே பல அற்புதங்களை நிகழ்த்தியவர்; ஸ்ரீ நடராசர் திருமுகம் அனுப்பிய வாறே "பெற்றான் சாம்பான்" என்ற அடியானுக்கு முத்திகொடுத்து அதன் பரிசினை அரசன் முதலிய யாவருங் காண நிரூபிக்கும் வகையிலே முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்தவர்; இவை முதலிய அளவிறந்த பெருமை வாய்ந்த பெரியார் நமது சேக்கிழார் பெருமானைப்பற்றித் தமது புராணத்திலே,

"மதுர விராமா யணகதை யுரைசெய்த
வான்மிக புகவனு மொப்பல்ல;
விதிவழி பாரத முரைசெய்து கரைசெய்த
வேத வியாதனு மொப்பல்ல;
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனு மொப்பல்ல;
பொதிய மலைக்குறு முனிவனு மொப்பல;
**புகழ்புனை குன்றை முனிக்கேன்பார்."** 81.

பூவை மறந்தனள் வெண்டா மரைமயில்
புகல்தரு சங்கப் புலவோர்சொல்
பாவை மறந்தனள்; தேசசு பாடித
பயனை மறந்தனள்; பதுமத்தோன்
நாவை மறந்தனள்; பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனும்
கோவை மறந்தனள்; சேவையர் காவல
**ஞர்திரு நாவிற் குடிகொண்டாள்.** 83.

ஒருலகோ? ஒருதிசையோ? ஒருபதியோ? தம்மில்
ஒருமரபோ? ஒருபெயரோ? ஒருகாலந் தானோ?
பேருலகில் ஒருமைநெறி தருங்கதையோ? பன்மைப்
பெருங்கதையோ? பேசொன்றோ? அல்லவே! இதனை

ஏர்"உலகெலாம் உணர்ந்தோ தற்கரியவன்" என்
றிறைவன்முத லடியெடுத்துக்கொடுத்தருளக் கொண்டு
பாருலகில் நாமகள்நின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார். 40.

திருந்துலகைக் கைநீத்துக் கொளவெளிது; முந்நீர்க்
கடற்கரையின் நொய்ம்மணலை யெண்ணியள விடலாம்;
பெருங்கடல்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகும்;
தருங்கடலின் மீனையள விடலாகும்; வானத்
தாரகையை யளவிடலாம்; சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தையள விடநம்
சேக்கிழார்க் கேளிதலது தேவர்க்கும் அரிதே! 41.

தோடு செய்ததிரு நெறிய செந்தமிழோ
டொக்கும் என்றுரை தொடர்ந்துசெப்(பு)
ஏடு செய்துநட ராசர் சந்நிதியில்
ஏற்றி னார்கள்;இது பாலிசூழ்
நாடு செய்ததவம்; நீடு குன்றைவள
நகரி செய்ததவம்; நிகரிலாப்
பீடு செய்தபகி ரதிகுலத் திலகர்
சேக்கிழார் செய்த பெருந்தவம். 87.

என்பன முதலிய திருப்பாட்டுக்களாலே துதித்தருளினார்.

குலோத்துங்கச் சோழர் III காலத்து வாழ்ந்தவர் கவியிற் சிறந்த கம்பர் என்று துணியப் பெற்றுள்ளது. எனவே கம்பர் சேக்கிழாருக்குப் பின் 40 அல்லது 50 ஆண்டுகளில் வாழ்ந்திருத்தல் கூடும். சேக்கிழார் சுவாமிகள் அந்தச் சோழ மரபிலே அமைச்சர் பெருமானாகி விளங்கியமையாலும், அமைச்சர் தொழிலை

விட்டு அவர் அரிய துறவு வாழ்க்கை மேற்கொண்டமையாலும், அவரது அரிய இலக்கியம் அரசன் மனத்தைத் திருப்பி உலகினர்களின் உயிர்க்கு உறுதி செய்யும் இயற்கை யுடைமையாலும், பிறவாற்ருலும், அவரது நூல் அந்நாளின் மக்களது மனத்தை மிகவும் கொள்ளை கொண்டிருத்தல் இயல்பேயாம். அதிலும் விசேடமாக அச்சோழ அரச சமூகத்திற் பாராட்டப் பெற்ற கவி வல்லாராகிய கம்பர் அதில் ஈடுபட்டிருத்தல் மிக இயல்பே. கம்பர் பெரிய புராணக் கருத்துக்களையும் சொற்ருெடர்களையும் அங்கங்கே எடுத்து "முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போற் போற்றுவம்" என்றபடி தமது பெருங் காப்பியமாகிய இராமாயணத்திற் றலைப்பெய்துவைத்து அமைத்துக்கொண்டுள்ளார். இதற்கு அனேக சான்றுகள் உள்ளன.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்ற பெரிய புராண முதற் பாசுரத்தை அடியொற்றி

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

என்ற கம்பரது பாட்டு அதன் பிரதிவிம்பம் போல விளங்குதல் தேற்றமாம்.

அளவிலா அடியார் புகழ்களை அளவில் ஆசை துரப்ப அறைகுவேன் என்று தொடங்கி ஆசிரியர் சேக்கிழார் அவையடக்கம் கூறுவாராய்ப், "பெருகுதண் கடலூற்றுண் பெருநசை ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன்" என முடித்தனர்.

அக்கருத்தையே அநுவதித்துக் கம்பர்,

ஆசை பற்றி...இராமன் கதையினை
"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென" நான் அறைய லுற்றேன்.

என்று கூறி முடித்தனர்.

" முந்தை யெம்பெருந் தவத்தினு லேகொல்
முனிவ ரிங்கெழுந் தருளிய தென்றார்"
—இயற்பகைநாயனார் புராணம் - 5.

என்ற பாட்டின் கருத்தைக் கையடைப்படலத்திலே,

நிலஞ்செய்தவ மென்றுணரின் அன்று; நெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினும் அன்று; நகர் நீயான்
வலஞ்செய்து வணங்கவெளி வந்தவிது முந்தேன்
நலந்செய்தவ மேன்றினிது கூறமுனி கூறும்.

என்ற பாட்டு விரிவுரை செய்கின்றது என்று சொன்னால் அது தவருகாது.

பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினையும் அரன்
அஞ் செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்.
—தடுத்தாட்கோண் புராணம் - 159.

எனும் திருப்பாட்டுடன்,

தாவரு மிருவினை செற்றுத் தள்ளரு
மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற்

போவது புரிபவர் மனமும் பொன்விலைப்
பாவையர் மனமும்போற் பசையு மற்றதே.

—தாடகைவதை - 15.

என்ற இராமாயணச் செய்யுள் இணைத்து நோக்கத் தக்கது. இன்னும் இவ்வாறு பலவுங் காணலாம்.

வேளாளர் பெருமானாகிய வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலாரால் காக்கப்பெற்ற கம்பர் வேளாண் குலதிலகராகிய சேக்கிழார் குடித் தோன்ற லாம் தெய்வப் புலவரைப் பாராட்டுவதும் பொருத்தமே.

மேலும் கம்பர் பாடியதாக நாம் தெரிகின்ற திருக் கை வழக்கத்திலே,

"........................................—காவலவன்
மண்ணிற் கடலின் மலையிற் பெரிதேன் ?என
எண்ணியெழு திக்கொடுத்த எற்றக்கை......"

என்று வியந்து துதித்திருக்கின்றமை இங்கே குறிக்கத் தக்கதாம். இதிற் குறித்த 'மண் - கடல் - மலை-களிற் பெரியன யாவை?' என்று வேந்தன் கேட்ட கேள்விக்கு இளஞ் சேக்கிழார் பெருமான் மூன்று குறட்பாக்களால் விடை எழுதித் தமது தந்தையார்க்குக் கொடுத்தருளி னார் என்ற கர்ன பரம்பரை வரலாற்றை மேலே சுவாமி கள் சரிதத்தைப்பற்றி பேசிய முதல்நாட் பிரசங்கத்தி லேயே பேசியுள்ளேன்.

இவ்வரலாற்றைக் குறித்தே திரு. சபாபதி நாவ லர் அவர்கள் தமது சிதம்பர சபாநாத புராணத்திலே சேக்கிழார் நாயனார் துதியாக,

ஞால-மலை கடல்-தன்னிற் பெரியதேது ? வெனவெடுத்து
ஞாலமாள் செங்
கோலன்பு பாயன்வின வியமுத்திறக் குறிப்பைக்
குறிப்பி னோர்கது

சாலவுயர் திருக்குறள்மூன் று *இறையாக வெழுதி அவன்
அரசு தாங்கி
வாலறிவாற் றிருத்தொண்டர் புகழ்விரித்த சேக்கிழார்
மலர்த்தாள் போற்றி. —கடவுள் வாழ்த்து - 16.

என்று தோத்தரித்துப் பாராட்டி யிருத்தலும் இங்கே காணத்தக்கது.

கம்பர் போலவே பிற்காலத்துப் புலவர்பெருமானுஞ் சற்றேறக்குறைய 150 ஆண்டுகளின் முன் வாழ்ந்த திருவாவடுதுறை யாதீனத்து மாதவச் சிவஞான முனிவர் பெருமான் தமது காஞ்சிப் புராணத்திலே கடவுள் வாழ்த்தினுள்ளே ஏனைய நாயன்மார் கூட்டத்துடன் வைத்துச் சேக்கிழார் சுவாமிகளை "எங்கள் பாக்கியப் பயன்" என்று தனியாக ஒரு துதியினுற் போற்றுகின்றுர்.

"தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னுற்சொல்ல வல்லபிரா னெங்கள்
பாக்கியப்பய னுப்பதி குன்றை வாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்."

இதுவேயு மன்றி,

"திருத்தொண்டை நன்னுட்டு நானிலத்தைந்
திணைவளமும் தெரித்துக் காட்ட
மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் குன்றைநகர்க்
குலக்கவியே வல்ல னல்லாற்
கருத்தொண்ட ரெம்போல்வா ரெவ்வாறு
தெரிந்துரைப்பார் ..............."

என்று சேக்கிழார் பெருமானை விதந்து பாராட்டி எடுத்துக் காட்டி யிருக்கின்றுர். இனி இதனினும் பிற

*இறை=விடை.

காலத்தே ஏறக்குறைய ஓர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திரிசிரபுரம் மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் சுவாமிகள் மீது பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் மிக அழகு பெற இயற்றியுள்ளார்கள். அதிலே "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்பனவாதி பலவாற்றாலும் சுவாமிகளின் திறங்களைச் சிராட்டிப் புகழ்ந்துள்ளார்கள். புராணம் பாடுவித்த அநபாயச் சோழரும் உடனிருந்து கேட்ட சபையார்களும் தில்லைவாழ் அந்தணர்களும் சைவ மடபதிகள் முதலிய பெரியோர்கள் எல்லாரும் இப்புராணத்தைப் பாராட்டியதும், சேக்கிழார் சுவாமிகளுக்கு ஞான முடி சூட்டித் தொண்டர் சீர்பரவுவார் என்று பட்டம் சூட்டியதும், புராணத் திருமுறையைப் பூசித்து யானையின்மீது சுவாமிகளுடன் ஏற்றி அரசருங் கூட ஏறித் தமது இரண்டு கைகளினாலும் இரட்டைச் சாமரை வீசி நகர் விழாச் செய்வித்ததும், அதனைச் செப்பேடு செய்து திருநெறித் தமிழ் வேதங்களுடன் பன்னிரண்டாவது திருமுறையாக வகுத்து நடராசர் சந்நிதியி லேற்றியதும், பிறவும் மேலே சரித வரலாற்றிலே சொல்லி யுள்ளேன்.

**இடைச் செருகல்கள்**

இனி இவ்வாறு சேக்கிழார் பெருமானாற் செய்தருளப் பெற்ற பெரிய புராணக் காவியத்துள்ளே பிற்காலத்துச் சில புலவர்களால் யாது காரணம் பற்றியோ சிற்சில இடைச் செருகல்களான பாட்டுகள் செய்து சேர்க்கப்பட்டு அவையும் இந்நாள் வழக்கிலே புராணத்தோடு புராணமாய் வழங்கி வருகின்றன என்று ஒரு

கொள்கை வழங்குகின்றது. அதைச் சிறிது ஆராய்ந்து மேற் செல்வேன். இடைச் செருகல் என்பது தொன்று தொட்டு எல்லா மொழிகளிலும் எல்லாப் பெரிய கவி வல்லோர் நூல்களிலும் காணப்பட்டதொரு பழைய முறை. ஆங்கிலத்தில் மகா பெரிய நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare) நாடகங்களில் கூட இவ்வாறு இடைச் செருகல்களைப் பிற்காலத்தார் புகுத்தி விட்டனர் என்று சொல்கிறார்கள். கம்பர் காலத்தி லேயே அவரது இராமாயணம் அதிகமாகப் பயிலப் பட்டுத் தெருக்களிற் பிரசங்கிக்கப்பட்டதெனவும் அவ்வாறு உள்ள ஒரு தெருப் பிரசங்கத்தைக் கம்பரே சென்று கேட்டு 'இதில் என் பாட்டும் கொஞ்சம் உண்டு' என்று சொன்னார் எனவும் ஒரு கதை கூட வழங்கு கின்றது. அதாவது இராமாயணத்தில் புகுந்துள்ள இடை செருகல்கள் அதிகம் என்பது கருத்து. கம்ப ராமாயணத்தில் வெள்ளி பாடல்கள் அநேக முண்டு என்றும் கூறுகின்றார்கள். பெரிய ஆசிரியர் நூல்களி னிடையே தங்கள் சொந்தச் சரக்குகளையும் சேர்த்து செருகி விட்டால் தங்கள் சிறு வாக்குகளும் அவர் களது பெரு வாக்குகளோடு விலை மதிப்பும் ஏற்றமும் பெறும் என்று பிற்காலத்துச் சிறு புலவர்கள் கருதி னர் போலும். இக்காலத்து "நாகரிக" வியாபார முறை யும் இவ்வாறே தான் வருகின்றது. தமக்கென்று வேறு தனி மதிப்புப் பெற இயலாத சிறியோர் பிறர் சார்பு பற்றிக்கொண்டு பெருமை யடைவது எங்கும் மனித இயற்கையிலே கண்ட ஒரு உண்மையே யாம். இவ்வாறு நாம் காண்கிறபடி பெரிய புராணத்

திலேயும் பல பாட்டுகள் இடைச்செருகலாகப் புகுத்தப் பெற்றுள்ளன என்பதை மறுக்க இயலாது. தங்கள் தங்கள் உட்கருத்துக்கும் புதுக்கொள்கைக்கும் மாறுபாடாகக் காண்கின்றவைகளை எல்லாம் இடைச்செருகல் எனத் தள்ளி விடுவதே ஆராய்ச்சி முறை என்று கருதும் ஒரு சிலரும் இந்நாளில் உளர். அக்கோட்டியில் நான் சேர்ந்தவ னல்ல. உதாரணமாகச் சுந்தரமூர்த்திகளது முன் நிலையில் நிகழ்ந்த திருக்கயிலை வரலாற்றையும், வேளாளர்களைச் சூத்திரர் என்ற சத்தத்தாற் சொல்கின்ற சில பாட்டுகளையும் பெரிய புராணத்திலே பிற்காலத்தவரால் இடைச் செருகல்களாய் அல்லது மாறுபாடான பாடபேதங்களாய்க் கொண்டு ஒதுக்குவாரும் சிலர் உளர். சிலர்களின் புதிய நாட் கருத்துக்கு மாறுபடுவதாய்க் காண்கின்ற காரணத்தாலேயே பெரியோர் நூல்களின் வாக்குக்களைத் திருத்துதலோ அல்லது இடைச் செருகல் முதலிய ஏதாவது காரணம் சொல்லி ஒதுக்குதலோ நேரான ஆராய்ச்சி முறையாகாது என்று நினைக்கின்றேன். ஆனால் பிற்காலத்தில் பெரிய புராணத்தில் இடைச் செருகல்களாக 33 பாட்டுகள் வரை புகுத்தப்பட்டன என்பதுமட்டும் நிச்சயமாய்த் தெரிகின்றது. சேக்கிழார் புராணம் அல்லது திருத்தொண்டர் புராண வரலாறு செய்தருளிய உமாபதி சிவாசாரியார் பெரிய புராணத்தின் அமைப்பையும் அதன் காண்டம், சருக்கம், பாட்டு, இவற்றின் தொகை வகைகளையும் தாம்கண்டவாறு ஏறக்குறைய 600 ஆண்டுகளின் முன்னரே அளவுபடுத்தி வைத்துள்

படிப்போராலும் எழுதுவோராலும் பிறராலும் பல மாறுதல்களையும் அடைந்திருத்தலும் கூடும்.

காண்டமிரண் டாவகுத்துக் கதைப்பரப்பைத் தொகுத்துக்
கருதரிய சருக்கங்கள் பதின்மூன்று நிலையிட்(டு)
ஈண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த **நாலா**
**யிரத்திருநூற் றைம்பத்து மூன்றாக** வமைத்துச்
சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்(டு)
ஆண்டகைமை பெறவெழுதி மைக்காப்புச் சாத்தி
யழகுபெறக் கவளிகையு மமைத்ததில்வைத் ததன்பின்.

**—சேக்கிழார் புராணம் - 53.**

என்பது அவர் வாக்கு. எனக்குக் கிடைத்த பல பழைய ஏட்டுப் பிரதிகளில் ஒன்றின் இறுதியில்,

“கொண்டலணி தண்டலைசூழ் குன்றைநகர்ச் சேக்கிழார்
ஒண்டாரணி யோருய்ய வோதினார்—கொண்டபுகழ்
என்றதொரு நாலா யிரத்திருநூற் றைம்பத்து
மூன்று திருவிருத்த மும்”

என்ற ஒரு பழய காலத்து வெண்பா கிடைத்தது.

இனி இப்போது கிடைக்கும் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் பதிப்பின்படிக்கும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்பின்படிக்கும் கண்டபடி (4286-4253) அதிகப்படியான 33 பாடல்களைக் கண்டுபிடிப்பது கடினம்தான். புதுக்கொள்கைக்கு மாறுபடுவன எல்லாம் இடைச் செருகல்கள் எனக் கொள்வது சரி யல்ல என்று மேலேயே சொல்லியுள்ளேன். ஆகையாலே இவற்றைக் கண்டுகொள்வதற்கு வேறு வழிகள

போக்கும், சேக்கிழாரது பிற நயப்பாடுகளும், இட வமைதியும், பல பிரதிகளின் ஒப்புமையும் பிறவுமாம். காஞ்சிபுரம் வித்வான் சபாபதி முதலியார் அவர்களின் சித்தார்த்தி வருடத்திய பதிப்பு ஒன்றும், பிரமோதூத வருடத்திய பதிப்பு ஒன்றும், இப்போது நாம் பார்க்கக் கிடைக்கின்றன. அவைகளின்படி (புத்தக இறுதியில் ஆகத் திருவிருத்தம் 4299—4300 என்று கண்டிருப்பது கணக்குத் தவறு.) பெரிய புராணத்தின் மொத்தம் ஆகத் திருவிருத்தம் 4282 மட்டும் என்று தெரிகின்றது. ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்புக்களின்படித் திரு விருத்தங்கள் மொத்தம் 4286 பாடல்கள் உள்ளன. ஆறுமுகநாவலர் அவர்களின் முதற் பதிப்பு 1884-ல் வெளிவந்ததாய்த் தெரிகின்றது. ஆனல் அதனை அவர்கள் முற்றும் பரிசோதித்து வெளியிடுவதற்கு முன்னரே சிவபெருமான் திருவடி நீழல் அடைந்ததாயும் பின்வந்த பெரியோர்களால் அச்சிடப் பெற்றதாயும் தெரிகின்றேன். முதற் பதிப்பிலே முகத்தாளிலே "இஃது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் காரைக்காலம்மையார் புராணம் வரையில் பரிசோதித்து, ஒவ்வொரு புராணத்துக்கும் இறுதியில் அவர்களால் எழுதப்பட்ட சூசனத்தோடு ஷை யூர் சதாசிவப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது" என்றும், "சூசனங்களில் சில பாகம் மாற்றி எழுதவேண்டும் என்னும் கருத்துக் கொண்டிருந்த ஐயாவவர்கள் அக் கருத்து முற்று முன் சிவபதம் அடைந்து விட்டமையால் அவை முன்னெழுதி யிருந்தபடியே பதிப்பிக்கப்

பட்டன" என்றும் அச்சிடப்பட் டிருக்கின்றது காண லாம்.

அச்சுப் பதிப்புக்களிலே ஒரு பதிப்பிற் கண்ட சில செய்யுட்கள் மற்ற பதிப்பிற் காணப்படவில்லை. ஏயர் கோன்கலிக்காம நாயனூர் புராணத்திலே,

"ஆண்ட நம்பி யுடன்வந்த அன்ப ரோடும் புறத்தணைந்து
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதன் மிகுதியினற் புனைமங் கலதூ ரியமொலிப்ப [ர்"
ஈண்டு புகழ்க்கோட் புலியார்மா ளிகையை யெய்தி யுள்ளணைந்தா

என்று 34-வது பாட்டாக ஒரு செய்யுள் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதற் பதிப்பிற் காணப்படுகின் றது. அன்றியும் பெரியபுராணத் திறுதியில்,

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விளங்கிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

என்ற ஒரு வாழ்த்துப் பாட்டும் ஷ்டி பதிப்பிற் காணப் பெறுகின்றது. இவையிரண்டும் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் ஆறுமுக நாவலர் பதிப்புக்களிற் காணவில்லை. மேலேகண்ட "ஆண்டநம்பி" என்ற செய்யுளுக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனூர் புராணத்திலேயே 186 பாட்டாகிய,

ஆண்டநம்பி யெதிர்கொண்ட வடியார் வணங்க வெதிர் வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிறைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்டகாதல் வாழ்த்தினுடன் புனைமங் கலதூ ரியமொலிப்ப
வீண்டு தொண்டர் பெருகுதிரு வேகாம் பரஞ்சென் றெய்தினர்

என்பதற்கும் ஒற்றுமை பெரிதும் காணப்படுகின்றது. மேலும், மேலே காட்டிய 34-ம் பாட்டு அந்த இடத்தில் வேண்டப் படாமலே சரிதப்பொருள் தொடர்பாய்ச் செல்கின்றது. அன்றியும்,

……………………………எதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமாளிகையின்க ணுர்வம் பெருகக் கொடுபுக்கார்.
—ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம் - 33.

என்று மாளிகையின் உள்ளே உபசாரத்துடன் அழைத்துச் செல்லப்பெற்ற நாயனரைப் பின்னும் வெளியில் கொண்டுவந்து வைத்துப் புறத்தணையவும், வீதியிற் போதவும் அதன்பின் உள்ளணைவும், செய்துவிடுகின்றது இச்செய்யுள். ஆதலின் இது இடைச்செருகலாக இருக்கும் என்பது ஐயம். "உலகெலாம்" என்று இறைவன் எடுத்துத் தந்த பதிவாக்காகிய முதலைப் புராண முதலினும் இடையிலும் இறுதியிலும் பதியவைத்துக் காவியத்தைப் பூர்த்தி செய்த சேக்கிழார் சுவாமிகள் அதன்மேலும் ஒரு வாழ்த்துக்கவி சொல்லுதல் இயல்பல்ல. மேலும்,

"மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி யுலகெலாம்"

என்று இப்புராண காவியத்திற்குரிய வாழ்த்தினைக்கூறி முடித்து வைத்துள்ளார். ஆதலின் மேலே காணும் "வையநீடுக" என்ற கவியும் ஐயப்பாடான செய்யுளே. இனிக் கண்ணப்ப நாயனர் புராணத்தில், "157-வது திருவிருத்தத்திற்குமேல் வெள்ளித்தம்பிரான் சேர்த்த ஐந்து பாடல் சில பிரதிகளிலிருக்கும்" என்று காஞ்சி

புரம் வித்வான் சபாபதி முதலியார் தம்து பதிப்புக் களிற் குறிப்பிட்டமையாலும், அப்பாடல்களிற்பொருள் சிறவாமை, பாட்டுக்களின் வாக்கும் போக்கும் வேற்று மைப்படுதல், இடத்திற்கு அவசியமின்மை, இவையன் றியே பொருள் தொடர்ந்து செல்லுதல் முதலிய கார ணங்களாலும் இவ்வைந்தும் இடைச்செருகல்கள் என்று கொள்ள ஏதுவுண்டு.

இனிக் கலியு நாயனர் புராணத்திலே 2-வது,

பீடுகெழும் பெருந்தெருவும் புத்தருடன் பீலியமண்
வேடமுடை யவர்பொருள்போ லாகாச வெளிமறைக்கும்
ஆடுகொடி மணிநெடு[illegible]ளிகைநிரைக ளிலகமுகின்
காடனைய கடல்படப்[illegible]யெனவிளங்கும் கவின்காட்டும்.

என்ற ஒரு செய்யுள் ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமி கள் ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்புக்களிற் காண் கின்றது. "இப்பாடல் பழைய ஏட்டுப் பிரதிகளிற் காணப்படாமையால் வெள்ளி பாடல் என்னும் வேற் றுப்பாடலென்பார்" என்று ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளே அதன்கீழே குறித்துள்ளார்கள். அன்றி யும் இதிற்சேக்கிழார் சுவாமிகளுக்கே உரிய முத்திரைப் பொறி என்றும் காணப்பெறவில்லை. எனவே இதனை யும் இடைச்செருகல் எனக் கொள்வதில் இழுக்கில்லை.

இனித் திருமலைச்சிறப்பு 8-வது பாட்டாகிய,

"காதில்வெண் குழையோன்"

என்ற பாட்டை 'இது வெள்ளிபாடல்' என்றே பெயரிட் டுப் பதிப்பித்தார்கள் காஞ்சிபுரம் வித்வான் சபாபதி முதலியார் அவர்களும் ஆறுமுகத் தம்பிரான் சுவாமி

களும். அதன் நிலையும் அவ்வாறே உள்ளதென்று சொல்லலாம். எனவே வெளிப்படையாய்த் தெரிந்தவை யாகிய மேலே கண்டவைகளைக் கண்டு நீக்கி விடுதல் எளியது. இவ்வாறு இடைச்செருகல்களாய் நிச்சயிக்கக் கூடியனவாகிய ஒன்பது பாடல்களையும் கழித்தால் மீதம் 4277 பாடல்கள் உள்ளன. எனவே ஸ்ரீ உமாபதி சிவம் முடித்துக் காட்டிய 4253 பாடல்களுக்குமேல் இன்னும் 24 பாடல்கள் இடையிலே புகுத்தப் பெற்றன எனத் தெரிகின்றபடியால் அவற்றைப் பிரித்துக் காண்பது எளிதான காரியமல்ல. எனது சிற்றறிவின் குறுகிய ஆராய்ச்சி முறையில், உண்மையாகவே சேக்கிழார் சுவாமிகள் திருவாக்காகிய பாடல்களையும் எங்கேயாவது தவருக அவருடைய வாக்கு அல்ல என்று ஒதுக்கிவிட வருமாயின் அது பெரும்பாதகமும் சிவாபராதமும் ஆகும் என்ற அச்சம் என்னை மிகவும் தாக்குகின்றது. அவ்வச்சத்துடனேயே கீழ் வரும் பாடல்களைப்பற்றிய எனது ஐயப்பாடுகளை வெளியிடலானேன். பிழையுளன பெரியோர் பொறுத்திடுதல் கடன்.

ஆனய நாயனுர் புராணத்தில் 19-வது "நீலமா மஞ்ஞை ஏங்க" என்று தொடங்கும் பாட்டு அந்த இடத்தில் அமைதி பெறவில்லை. அதற்கு முன்னும் பின்னும் தொடர்ந்து தொச்சகக் கலிப்பாவினுல் சரிதத்தைச் சொல்லிப் போகும் கதைப் போக்கிலே இந்தத் தன்னந் தனியனுன அறுசீர் விருத்தம் பொருட்பொலிவும் பொருத்தமும் சொற்பொலிவு மின்றி உட்புகுந்து கொண்டதாகவே தோன்றுகின்றது. முத்தி பெறும்

அந்நாளிலே ஆனைய நாயனாரை அலங்கரித்து 'நிரை காக்கப் புறம்போதச்' செய்த சேக்கிழார் சுவாமிகள் அவ்வாறு போதுகின்ற செலவின் இடையிலே இடத்திற்கு ஏற்காத இடைப் பிறவரலாய்க் குறுக்கிட்டுக் கார்ப்பருவ நல்லாளை ஆடரங்கில் ஆடவைத்திருக்கமாட்டார் என்பதும் பொருந்தும்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்திலே 99-100-101-ம் பாடல்களிலே சிற்சில ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

(99) " அருமறை யந்தணர்......................

..................................................

வருமுறைமை யழைந்துவிட மந்திரமெம் மருங்கும்"

என்ற தொடர் எடுத்துக்கொண்ட எண்சீர் விருத்த யாப்பிற்குப் பொருந்தக் காணவில்லை.

" அவிப்பாகங் கொடுக்கும் " என்று சேக்கிழார் வேறெங்கும் வழங்கக் காணவில்லை. சொற்போக்கும் வேறுபாடு காண்கின்றது.

"........மறை யோரீந்த வவியுணவின் பாக நுகர "

—சண்டேசுர நாயனர் புராணம் - 4.

எனவும்,

" எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டேட்டும் "

—கண்ணப்பர்.

எனவும் இப்பொருளையே பற்றி வரும் இடங்களின் சொற்பொலிவை ஒப்பு நோக்குக. அன்றியும் வேள்விச் சாலைகளும் பாடசாலைகளும் அந்நாள் நகர அமைப்பிலே புறநகரிலே அமைக்கப் பெற்றன என்பது சண்டேசுர நாயனர் புராணத்தும் (3 முதல் 8 வரை பாடல்

கள்) பிற இடங்களிலும் காணலாம். அவற்றை உள் நகரிலே மறையவர் தெருவில் மாட மாளிகைகளுக் குள்ளேயே இருப்பதாக இப்பாட்டுக் கூறுவது கூர்ந்து நோக்கற்பாலது. மேலும் அந்தணர் சிறப்பையும் அமைதியையும் மேலே 76-வது பாடலினுள் வைத்துப் பேசினமையும் ஓரிடத்துச் சொன்ன பொருளையே பிறி தோரிடத்தும் மீண்டும் திருப்பிச் சொல்லாமையாகிய சேக்கிழார் சுவாமிகளது இயல்பும் சிந்திக்கத்தக்கது.

அரசர் செயல்களாகிய தேர் ஏறுதல் யானை யேற் றம் குதிரை யேற்றம் முதலியவற்றையும் தேர் வீதி யினையும் சூழ்ந்த பெருமாளிகைகளையும் 96-97-98 பாடல்களிலே சுவையும் அழகும் பெற அமைத்த ஆசிரி யர் மீண்டும் அவற்றைப்பற்றி "அரசர் குலப்பெருந் தெருவும்" என்ற 100-வது பாடலிற் பேசியமை ஆராயத்தக்கது. இதுபோலவே,

"மாறுபெற லருங்கனக மாடநீடு மணிமறுகு
நெடுங்தெருவும் வளத்தில் வந்த
ஆறுபயி லாவணவீ திகளு மற்று
மமைந்தநக ரணிவரைக ணடுவு போக்கி"

—திருக்குறிப்புத் தொண்டர் புராணம் - 89.

என்ற பாட்டினால் ஆவண வீதிகளையும் அவற்றிற் பயி லும் வணிகர் சிறப்பையும் பேசியபின் மீண்டும் 101-வது பாட்டிலே,

"வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை"

எனப் பாடிவைத்தலின் அவசியமும் ஆராயத் தக்கது. அன்றியும், இப்பாட்டில், (101)

"கயிலைமலை யார்கச்சி யாலயங்கள் பலவும்"

என்ற தொடர் எடுத்துக்கொண்ட எண்சீர் விருத்த யாப்பிற்குப் பொருந்தாமையும் காணத்தக்கதாம். இம் மூன்று பாடல்களின் சொற்போக்கும் பொருட் பொலிவும் இங்கே ஆராயத் தக்கனவாகும்.

திருநாவுக்கரசு நாயனார் புராணம் 356-வது "வெங்கதிர்ப்பக லக்கடத்திடை" என்றபாட்டு அப்பர் சுவாமிகளது திருக்கயிலை யாத்திரையின் இடையில் இடையிட்டு வருணனையினாற் குறுக்கிடக் காண்கின்றேம். முன் பாட்டுகளிலே சுவாமிகளது சரிதம் தொடர்ந்து செல்கின்ற செலவிலே இப்பாட்டு இன்றியமையாததாய்க் காணவில்லை.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்திலே முன்பின் தொடர்பையும் யாப்பமைதி பொருளமைதி இடவமைதிகளையும் பார்க்கும்போது 466-வது பாட்டாகிய "மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு" என்ற பாடல் இடைச்செருகலா யிருக்கும் என்ற ஐயம் தோன்றுகின்றது.

இவ்வாறே திருஞான சம்பந்த நாயனார் புராணம் 705-வது "பாண்டிமா தேவியார் தமது பொற்பில்" என்ற தனி எண்சீர் விருத்தமானது கதைத்தொடர்ச்சியாய் முன்பின் நிகழ்கின்ற கலிநிலைத்துறைப் பாட்டுக்களுக்குள் போய்ப் புகுந்துகொண்டு நிற்கின்றது. இது "பையவே சென்று" என்ற நாயனார் பதிகச் சொற்றொடரின் விரிவுரை கருத்துரைபோல இயற்றப்பட்டதாய் விளங்குகின்றது. இப்பாட்டினாற் பெறக் கருதிய பொருள் மேலே "தீத்தழல்போய்ப், பையவேசென்று

பாண்டியற் காகெனப் பணித்தார்" (704) என்றதி னும்,

..............................திருவால வாயின்
மருந்தினைச் சண்பை மன்னவர் புனைந்திட வருளால்
விரிந்த வெந்தழல் வெம்மைபோய்த் தென்னனை மேவிப்
பெருந்த ழற்பொதிவெதுப்பெனப் பெயர்பெற்றதன்றே-706.

என்றதாலும் பெறுகின்றோம். அன்றியும் இப் பாட்டிலே "பாதுகாத்தும்" "அன்பினாலும்" "அபராத முறுதலாலும்" "விதியினாலும்" "பேறுடையனாத லாலும்" என்ற வினைமுடிபுகளும் கூர்ந்து ஆராயத்தக்கன.

இன்னும் இதுபோலவே ஷை புராணம் 715-716-வது "மால்பெருக்கும்" "கருகிய மாசுடை யாக்கைத் தீயோர்" என்ற இரண்டு பாடல்களும் ஐயப்பாடு உள்ளனவாய்த் தோன்றுகின்றன. இவைகளில் போக்கு வேறுபடுகின்றது. அன்றியும் மேலே 713-வது பாட்டிலே "கருத்தொழிந் துரை மறந்தனன் கௌரியர் தலைவன்" என்று சேக்கிழார் சுவாமிகள் சொல்லியிருப்பவும், இந்த 716-வது பாட்டு,

"ஒருவருமிங் கிருமருங்கு மிராது போமென்
றமணரைப்பார்த் தரைத்தரசன் உணர்வு சோர்ந்தான்"

என்று அவ்வரசனுக்கு மீண்டும் உணர்வும் பேச்சும் சோர்வும் கொடுக்கின்றது. பின்னும் இப்புராணம் 734-735 பாட்டுக்கள் முன்பின் தொடர்பிலே இடையீடிட்டு அறுசீர் ஆசிரியமும் கொச்சகக் கலிப்பாவும் மாறிமாறி வருகின்றன. மேலும்,

ஒன்றுநீ ரஞ்ச வேண்டா வுணர்விலா வமணர் தம்மை
யின்றுநீ ருவகை யெய்த யாவருங் காண வாதில்
வென்றுமீ னவனை வெண்ணீ றணிவிப்பன் விதியா லென்றார்.

என்று சுவாமிகள் சொல்லியதாகச் சொல்லும் இப் பாட்டுப் பின்னர்,

"ஆவதும் அறிவு மெல்லாம் அவர்செயல் அமண ராகும்
பாவகா ரிகளை நோக்கும் பழுதுடன் நீங்க வெல்லச்
சேவுயர் கொடியி னார்தந் திருவுள்ள மறிவேன் என்று
பூவலர் பொழில்சூழ் சண்பைப் புரவலர் போது கின்றார்"-736

என்ற பாட்டுடன் ஒப்புநோக்கி ஆராயத் தக்கது.

பின்னும் இப்புராணத்தில் 812-வது "கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிருள்ளம்" என்ற பாட்டு ஆனாயர் புராணத்து மேலே காட்டிய 19-வது "நீலமா மஞ்ஞை" என்றபாட்டின் உடன்பிறந்தது போலக் காண்கின்றது. இடவமைதியும் பொருட்பொருத்தமு மில்லாத வெறும் வருணனையாகக் காண்கின்ற இப்பாட்டு அவ் விடத்தே இன்றியமையாது வேண்டப்படுவ தாகவும் காணவில்லை.

இனி ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் 122 வது "காட்டுநல் வேள்விக் கோலம்" என்ற பாட்டு எவ் விதப் பொருளமைதியுமின்றி உட்செருக்கியதாகக் காண்கின்றது. இப் பாட்டை நீக்கி விட்டுப் படித்தாற் புராண சரிதம் எவ்வாற்றானும் இடையீடின்றிச் செல் கின்றமை காணத்தக்கதாம்.

மேலும் இதுபோலவே சாக்கியநாயனார் புராணம் 7வது "எல்லாமுடைய வீசனை இறைவனென்ன அறி யாதார்" என்ற பாட்டும் ஐயப்பாடுள்ளதாம். அப்

புராணம் முழுதும் கொச்சகக்கலிப்பா என்ற ஒரேபாவி னுல் இயன்றிருக்க இது ஒன்று மட்டும் தனித்த அறு சீர்விருத்தமாய் அதனுள் நுழைந்து கொண்டு காணப் படுகின்றது. அன்றியும் இப்பாட்டுட்கருத்துச் சிறவா மையும், மேலே 6-வது பாட்டின் பொருளேயே அனு வதித்துத் திரும்பவும் பன்னிச் சொல்லியதாகவும் காணப்படுகின்றது. இதனையின்றியே சரிதமும் தொடர் ந்து செல்கின்றது. மேலே இவ்வாறே ஒரே வகைச் செய்யுளால் இயன்ற குங்கிலியக்கலய நாயனுர் புராணம், மானக்கஞ்சாற நாயனுர் புராணம், மூர்த்திநாயனுர் புரா ணம், (29வது 30-வது பாட்டுக்கள் தவிர) இவைகளையும் காண்க. ஒருசரிதத்தையோ அல்லது சரிதத்தின் ஒரு பகுதியையோ ஒருவகைச் செய்யுளால் பாட ஆரம்பித் தால் பெரும்பான்மை அதனைத் தொடர்ந்து அந்த வகை யாப்பு அமைதியுள்ள செய்யுளாலேயே, வேறு பொருட்பேதம் வரும் வரை, சொல்லிப் போதல் சேக்கி ழார் சுவாமிகளது இயல்பாம். இவ்வாறு போதற்கிடை யில் வேறு வகைச் செய்யுள் தனித்து இடையில் வரக் கண்டால் அதனை ஆராய்ந்து தெளிதல் நமது கடமை யாகும். சரிதத்தைத் தனித்தனி வெவ்வேறு வகைச் செய்யுள்களாற் றுண்டித்துச் சொல்லிப்போதல் சுவா மிகளது இயல்பல்ல. பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் போக்கை இங்கே ஒப்பிட்டு வேறு பாட்டைக் கண்டுகொள்க.

இனி மேலே கூறிய இயல்பின் துணை கொண்டும், இடவமைதியின்மை, இன்றியமையாமையின்மை, முன் னர்ச் சொன்ன கருத்தையே அனுவதித்துப் பன்னு

தல் முதலிய காரணங்கொண்டும் மூர்த்திநாயனர் புராணம் 29-வது 30-வது "பன்முறையுயிர்க ளெல்லாம்" "இவ்வகை புலவு.மெண்ணி" என்றபாடல்களும் ஐயப்பாடுள்ளனவாய்க் காண்கின்றன. 29-வது பாட்டின் கருத்து மேலே 28-வது,

"............மன்னவன் ரேளிணைக் காவலின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையக மென்று சொன்னுர்"

என்பதனுலும், 30-வது பாட்டின் கருத்துக் கீழே 31-வது,

"கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டி விட்டார்"

என்றதனுனும் பெறப்படுதல் காண்க.

பின்னும், முழுநீறு பூசிய முனிவர் புராணத்திலே 1-முதல் 5-வரை உள்ளபாடல்கள் ஐயப்பாடுள்ளன. திருநீற்றின் பிறப்பும் வகையும் பிறவுமாகிய இவ்வரலாறு இங்கே தருதல் அவசியமாகக் காணவில்லை. இப்பாடல்களின் போக்கும் சேக்கிழார் திருவாக்கினின்றும் வேறுபடுகின்றது. முழுநீறு பூசிய முனிவர் புராணத்தில் திருநீற்றைப் பற்றிய வரலாறுகளையெல்லாம் தொகுத்து விரித்துக் கூறுவது அவசியமாயின், அதுபோலவே பத்தராய்ப் பணிவார் புராணத்தில் பத்தியைப் பற்றியும், பரமனையே பாடுவார் புராணத்தில் பாடல்களின் வகை விரிவுகளையும், சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார் புராணத்திற் சித்தம் முதலிய கரணங்களின் வரலாறுகளையும், திருவாரூர்ப் பிறந்தார் புராணத்திலே திருவாரூர் வரலாறுகளையும் முப்போதுந் திருமேனி தீண்டுவார் புராணத்துள்ளே திருமேனி

களின் வகை தொகைகளையும் விரித்துச் சேக்கிழார் சுவாமிகள் பேசியிருக்க வேண்டுமல்லவா? திருநீற்றினைப்பற்றிய ஒருவகை வரலாற்றைச் சண்டேசுர நாயனார் புராணத்திலே ஆசிரியர் சொல்லியிருப்பதும் காணத்தக்கது. எனக்குச் சமீப காலத்தில் பெரிய புராணத்துப் பழைய ஏட்டுப்பிரதி ஒன்றின் மிகவும் சிதைவுற்றுக் கிலமாய்ப்போன பிரதியில் சில தாள்கள் கிடைத்தன. அவற்றைப் பார்க்கும்போது இப்புராணப் பகுதி எழுதியுள்ள ஏட்டுத்தாள் ஏறக்குறைய அதிகச் சிதைவில்லாமற் கிடைக்கப் பெற்றேன். அதிற் "சாதியினிற்றலையான தருமசீலர்" என்று தொடங்குவதும் இப்போது அச்சுப் பிரதிகளில் இப்புராணம் 6-வது செய்யுளாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதுமான ஒரே பாசுரத்தோடேயே இப்புராணம் நிறைவேறி யுள்ளது. ஆதலின் ஒன்றுமுதல் ஐந்துவரை உள்ள திருநீற்றின் வரலாறுகிய இவ்வைந்து பாடல்களும் பிற்காலத்து யாராலேயோ எழுதிச் சேர்க்கப்பட்டன என்று நான் முன்னமே கொண்டிருந்த ஐயம் வலியுறுகின்றது. இன்னும் ஷ்டி சிதலமாகக் கிடைத்த தனி ஏடு இதழ்களையும் மற்றும் பல ஏட்டுப் பிரதிகளையும் ஆராயும்போது இப்போது அச்சுப் பிரதிகளிற் காண்கின்ற பரமனையே பாடுவார் புராணத்துப் "புரமூன்றும் செற்ருன்" என்ற முதற் பாட்டும், திருவாரூர்ப் பிறந்தார் புராணத்து "அருவாகி யுருவாகி" என்ற முதற்பாட்டும், பூசலார் நாயனார் புராணத்து "அன்றினர் புரமெரித்தார்" என்ற முதற் பாட்டும் இல்லாமலே எழுதப் பெற்றிருக்கின்றன. ஆகவே

இம்மூன்று பாட்டல்களும் பிற்காலத்துப் புலவர் யாரோ இதிற் சேர்த்திருத்தல் கூடுமென்று ஐயப்படவேண்டியிருக்கின்றது. அச்சுப்பிரதிகளில் அதிகமாகக் காண்கின்ற பாடல்களில் மேலே குறித்த பாடல்கள்தாம் எளியேனது சிற்றறிவிற்கு எட்டியவரை சேக்கிழார் திருவாக்கு அல்லாத இடைச் செருகலாயிருக்கு மென்பது எனது தாழ்மையான எண்ணம். எனக்குக் கிடைத்த பழைய சிதைந்த ஏட்டுத் தாள்களில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் புராணத்து ஆகமொத்தம் செய்யுள் 1253 என்று கண்டிருக்கின்றது. அதன்படி இப்போது அச்சுப் பிரதிகளில் அதிகச் செய்யுள் 3 மட்டும் காண்கின்றது. ஆனால் அடியேன் மேலே காட்டிய கொள்கையின்படி 7 செய்யுள்கள்வரை ஆளுடைய பிள்ளையார் புராணத்திலே நுழைந்து கொண்டதாகக் காண்கிறது. நான் ஐயப்பாடாகக் கருதிய பல பாடல்கள் எனக்குக் கிடைத்த ஏட்டுப் பிரதிகளில் காணப்படுகின்றன. இந்த இடைச் செருகல்கள் யாவும் ஒரே காலத்து ஒருவராலேயே செய்யப்பட்டன என்று கொள்வதற்குமில்லை. பிற்காலத்திருந்த வெள்ளியம்பலத் தம்பிரான் (இவர் தருமபுர ஆதீன முனிவர்களில் ஒருவர் என்றும், திருவிளையாடல் இயற்றிய பரஞ்சோதி முனிவரின் உறவினர் என்றும், சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இலக்கணம் கற்பித்த ஆசிரியர் என்றும் சொல்கிறார்கள்) என்பவர் தலையிலேயே பெரிய புராணத்திலும் தேவாரங்களிலும் தமது பாடல்களை இடைச் செருகலாக நுழைத்த குற்றம் பொது வகையாய்ச் சுமத்தப்படுகின்றது. மேலும் "வெள்ளி பாடல்" என்பது இடுகுறியளவாய் இடைச

செருகல்களுக்குப் பொதுப் பெயராகவுங்கூட வழங்கத் தொடங்கி விட்டார்கள். ஆனால் அவர் ஒருவரே யல்லாது வேறு சிலரும் இக்காரியம் செய்திருத்தல் கூடுமென்று நினைக்க இடமிருக்கின்றது. மேற்கூறியபடி எனக்குக் கிடைத்த சிதைந்த தாள்களில் முனையடுவார் நாயனார் புராணத்திலே அச்சுப்பதிப்பிற் காணும் 6-வது செய்யுளாகிய "யாவரேனினும்" என்ற பாட்டுக் காணவில்லை. ஆனால் இப்பாட்டும் இடைச் செருகல் என்று கொள்ள என் மனம் துணியவில்லை. அந்த ஏடு எழுதினவர் அதனைத் தவறாக விடுத்து எழுதியிருந்தாலும் இருக்கலாம். ஆதலின் ஏடுகளிற் காணப்படுதலும், காணப்படுதலின்மையும், பற்றி ஒன்றையும் துணிந்து சொல்லக்கூடவில்லை. மேலே நான் இதுபற்றிச் சொல்லியவை யாவும் உண்மை ஆராய்ச்சிக்கு விஷயமாகப் பெரியோர்கள் முன்னிலையில் விண்ணப்பித்துக் கொண்டேனன்றி நான் எதையும் துணிந்தே னல்லேன். இடைச் செருகலைப் பற்றிய பேச்சை இத்துடன் நிறுத்தி மேற்செல்வேன்.

"கவிச் சிறப்பும் பயனும்" என்பது இன்றைய பேச்சின் தலைப்பாகும். இதுவரைக் கவிச் சிறப்பைப் பற்றிப் பேசினேன். இனிப் பெரிய புராணத்தின் பயனைப் பற்றிச் சிறிது பேசி இன்றைய பேச்சைப் பூர்த்தி செய்வேன்.

**பயன்**

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே" என்று பெரியோர் வகுத்துள்ளா ராதலின் குறித்த அந்நான்கு உறுதிப் பொருள்களையும் தருவதே எல்லா நூல்களுக்கும் பயனாயிருத்தல்வேண்டும். அவ்வுண்மை

பெரியபுராணத்திற்கும் பொருந்தும் வகையை, மேலே இது ஒரு பெருங்காப்பிய மாகும் வகையிலே வைத்து விரித்துள்ளேன். இந்நூற் பயனுள்ளேயும் மேற்பயனுள்ள வீட்டினும் பார்க்க மிக்கதொரு நிலையுண்டாயின் அதனையும் இப்புராணம் தரவல்ல தென்பதனையும் மேலே எடுத்துக் காட்டியுள்ளேன்.

உலகத்திலே அறிவு என்றதும், (Knowledge to Know) ஞானம் என்றதும் ஒரே பகுதியிற் பெற்றன என்பது மொழி நூல்வல்லார் துணிபு. பொருள்களெல்லாவற்றினும் அறிவே உயர்ந்தது. ஏனைப் பொருள்கள் எல்லாம் இதனிற் றாழ்ந்தவையே. அறிவினாலே தான் மனிதன் பிறவற்றை, அதாவது உயிர் உள்ளவற்றையும் உயிரில்லாதவற்றையும் ஆட்சி செய்கின்றான். இவ்வித அறிவானது வரம்பின்றிப் பலபடப் பரந்து நிற்கின்றது. ஆயினும் அதற்கும் எல்லையுண்டு. இன்ன இடத்துக்கு மேலே அது செல்லாது என்ற நியதி உண்டு. அறிவிற்குப் பாகுபாடுகளும் உண்டு. "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்று (அறிவினால்) அறிவுடையோரால் உணர்தற்கு அருமையான பொருளைத் தலைப்பிலேயே உணர்த்தினார் ஆசிரியர் சேக்கிழார். இவ்வாறு மேம்பட்ட பொருளாகிய (ஞானத்தை) அறிவை இதற்குமே லில்லை என்ற படியிலே ஆக உயர்ந்த நிலையில் அடைந்த பெரியோர் பலர் பற்பல காலத்தில் இறைவன் அருளால் உலகத்திற் றோன்றி மற்றச் சாமானிய உயிர்களுக்கு அறிவை உதவியுள்ளார்கள். அறிவால் முயன்று அடையக்கூடிய எல்லா ஞானத்தையும் திரட்டி முடிபு கட்டியும் காட்டி

யிருக்கிறார்கள். அதற்குத்தான் அறிவின் முடிபுகள் அல்லது சித்தாந்தம் என்று பெயர். இவற்றைப் பற்றிக் கூறும் சாத்திரங்கள் சித்தாந்த சாத்திரங்கள் எனப் பெறும். இப்படி முடிபுகட்டிக் காட்டிய உண்மைகளிலே " எல்லா உலகங்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் தலைவ ராகிய இறைவன் என்ற கருத்தா அல்லது முதல்வன் ஒருவன் உண்டு என்பது ஒரு சிறந்த உண்மை. இத னாலே அந்த இறைவனது ஆணைக்குட்பட்ட உயிர்களும் உலகமும் உள்ளன என்பது தானேபோதரும். இவற்றை அவன் ஆட்சி செய்யும் ஆணையும் இத னாலேயே கிடைக்கும். நோயில்லாதவன் மருத்துவ னைத் தேடவேண்டியதில்லை. குற்றமில்லாதவன் அரச னது ஆணைக்குட்பட வேண்டியதில்லை. அதுபோலவே உலகம் உயிர்களையும் உயிர்கள் உலகத்தையும் கட் டிப் பிடித்துக்கொண்டு, எவ்வாறு பெரு வெள்ளத் திற் புரள்வோர் இருவர், ஒருவரை யொருவர் கட் டிப் பிடித்துக்கொண்டால் உய்யும் வகையின்றி இரு வரும் மாய்வார்களோ, அவ்வாறே, உலகத்திலுள்ள உயிர்கள், பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றார்கள். பிறப்பும், உலகில் இருப்பும், பின் இறப்பும், எல்லாம் துன்பமயம் தான். இன்பம் என்ற பேருடையது ஊன் றிப் பார்த்தால் உலகநிலையில் ஆக உயர்ந்தவர்களாய் எண்ணப்படும் முடிசார்ந்த மன்னரிடத்தும் கூடச் சிறிதும் காண்பது அரிது. துன்பத்தை நீக்கிச் சுகத்தை அடைவதே, அன்றி, அடைய முயல்வதே அறிவின் காரி யம். இதனையே ஒவ்வோர் உயிரும் எப்போதும் எவ் விடத்தும் செய்ய முயல்கின்றன. ஆயின் இன்பமல்லா

தவை எல்லாம் இன்பமென மயங்கி யறிந்து துன்பத்துக்கே காரணத்தை விளைத்துக் கொண்டு அலைகின்றன. இவற்றை யெல்லாம் அறிந்து எல்லா உயிர்களுக்குள்ளேயும் அங்கங்கே நிற்பவனாகிய இறைவன் அருளினாலே அவை யவைகட்கு உள்ளிருந்தும் புறத்திலே குருவாகி வந்தும் நன்மை தீமைகளையும், உண்மையான இன்ப துன்பங்களையும், துன்பங்களைப் போக்கி நிலைத்த இன்பங்களை அடையும் வழிகளையும், உணர்த்தி உபகரிக்கின்றான். அவ் வழிகளிலே நின்றால் உயிர்கள் பையப் பையத் தாந் தாம் உலகத்திலே கட்டியழுது கொண்டிருந்த கட்டுகளை எல்லாம் ஒவ்வொன்றாக அறுத்து விடுதலை யடையும். நோய் நீங்கியபின சுகமும் பெறும். நோயும் நீங்கிச் சுகமும் பெற்ற பின் மீளவும் நோய் அணுகாமலிருக்கும் வழிகளையும் தேடிக் கொடுத்துள்ளான் இறைவன்.'' என்ற இவைகளும் இவற்றைச் சார்ந்த பிறவுமே மேலே கூறிய அறிவின் எல்லையாகிய முடிந்த முடிபுகளாம். இவற்றை அறிந்து, அனுபவித்து, அடைதலே மனிதன் அடையும் உறுதிப் பொருளாம். உலகிலே மனிதன் செய்யும் பிற எல்லா முயற்சிகளும் செயல்களும் இவற்றிற்கு அனுகூலமான போதே பயன் பெற்றனவாம். அவ்வித மில்லாத போது பயனற்றும் கேடு சூழ்ந்தும் கழிவனவாம்.

இவ்வுண்மைகளைக் கையாண்டு உலகில் வாழ்ந்து வழி காட்டிய பெரியோர்களது வாழ்க்கையை எடுத்துக் கூறுவது பெரிய புராணமாகும். மனித வாழ்க்கைக்கு இஃது ஒன்றே உரிய உயரிய இலக்கிய மாகும். இது

குறிக்கோளுமாகும். இவ்வாறு உணர்ந்து ஒழுகினலன்றிப்,

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளு மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளுங் குறிக்கோளி லாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே."
—திருநேரிசை: திருக்கொண்டீச்சரம் - 9.

என்று அப்பர் சுவாமிகள் அருளியவாறு மனிதன் துக்கித்து இறக்க வேண்டியவனே யாவான் என்ற முடிபை இப்புராணம் உணர்த்தி உபகரிக்கின்றது.

மேலே கூறிய அறிவின் எல்லையாகிய ஞான முடிபுகளைச் சைவப் பெரியார்கள் 12 உண்மைகளாக வகுத்துச் சைவ சித்தாந்த சாத்திரங்களிலே சிவஞான போதத்திற் கண்டவாறு, இலக்கியமாக் கண்டு விளக்கிய பேரிலக்கியம் இப்பெரிய புராணம் என்றே சொல்லலாம். நின்மலமாய்ச் சீவன்முத்தி பெற்ற உயிர்களுக்கும் ஒவ்வோர் காரணம் பற்றி ஒவ்வோர் எண்ணங்கள் மனத்தே நிகழ அவ்வெண்ணங்களே வித்தாகிப் பிறவியைக் கொடுக்கும் என்பது சுந்தரமூர்த்திகள் கைலையில் அநிந்திதை கமலினி என்ற இரு சேடிமார்களின் காட்சி காரணமாக நாம் உய்யும் வகையைத் திருத்தொண்டத் தொகையின் மூலம் காட்டியருளுதல் பொருட்டாய் இந்நிலவுலகிலே அவதரிக்க நேரிட்ட சம்பவத்தினாலே நமக்கு நன்கு புலனாகின்றது. மனத்தில் நிகழும் ஒவ்வோர் எண்ணங்களே பிறவிக்குக் காரணமானால், மனிதன் உலகில் எவ்வித தீய எண்ணங்கள் கூட மனத்திலும் நிகழா வண்ணம் தன்னைப் பாது

காத்துக்கொண்டு சர்வ சாக்கிரதையாக உலகில் வாழ வேண்டுமென்பது இதனால் உயிர்களுக்குத் தேற்றப்படுகின்றது. ஒவ்வொரு எண்ணத்திற்கும் ஒவ்வொரு பிறவியும் அந்தந்தப் பிறவிகளில் நிகழும் ஒவ்வோர் எண்ணங்களையும் அனுபவிக்கத் தொடர்பாய் ஒவ்வோர் பிறவிகளும் வருமானால் மனிதன் எத்தனை முறை செத்துச் செத்துப் பிறந்து உழல வேண்டுமென்பதற்கு ஏதாவது கணக்கும் இருக்குமா? ஆகையால் சுந்தரமூர்த்திகள் கைலையிலிருந்து நீங்கி ஆணையின் வழி இவ்வுலகிற்கு வரும்போது சிவபெருமானிடத்துக் கேட்டுக்கொண்டது போல ஒவ்வொரு உயிரும் இறைவனை நோக்கி 'ஏ! பெருமானே! நான் ஏதோ சில வினைகளை அனுபவிக்க இந்த உலகிலே பிறவி எடுத்துள்ளேன். இந்த வினைகளை மட்டும் அனுபவித்துக் கழித்துவிட்டு உன்னிடம் வரும்படி அருள் செய்யவேண்டும். இவற்றை அனுபவிக்கும்போது மேலும் மேலும் நான் புதுப்புது வினைகளைத் தேடிக் கொள்ள முயல்வேனானால் தேவரீர் வந்து என்னைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்து கொண்டால் அந்தந்த உயிர்கள் தத்தம் முன் வினைகளை மட்டும் அனுபவித்துக்கொண்டு மேலும் வினை தேடிப் பிறவிகளுக்குக் காரணம் உண்டாக்கிக் கொள்ளாமல் பிறவியை ஒழித்துப் பிறவா நெறி படையும். இவ்வரிய உண்மைகள் யாவும் பெரிய புராணத்தால் தேற்றம் பெற அறிவிக்கப் பெறுகின்றன. செய்தவர் யாவராயினும் கருமம் அனுபவித்தன்றிக் கழியாது. அவரவர் செய்த வினையை அவரவர் யாவரே யாயினும் அனுபவித்தே தீர

வேண்டும் ; என்ற உண்மை சுந்தரமூர்த்திகள் திருவொற்றியூர் நிகழ்ச்சிகளிலே சுவாமிகள் தாம் செய்த சபதத்தை மீறித் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டிய உடனே கண் மறைந்தமையி லிருந்தும், அதற்குப் பின் நிகழ்ந்தவற்றிலிருந்தும் தெளிவாக விளங்க வைப்பதும் இப்புராணம். அன்பர்களது அன்பு பற்றிய சிவபுண்ணியச் செயல்கள் யாவையே யாயினும் அவையே நற்செய்கை. அவையே இறைவன் அங்கீகரித்துப் பரிசுதரும் செய்கையாம். அப்படிக்கு அல்லாதார் செய்யும் எச்செய்கையும் தீயவையேயாகித் தீமை பயக்கும். புத்த சமணர்கள் கொள்வது போலவும், எனைப் பலரும் இந்நாளிற் பொதுவாய் நினைத்துக்கொண்டிருப்பதுபோலவும், தனியாக எக்காலத்தும் நல்லன தீயன என்ற செயல்கள் கிடையா. தள்ளி ஒதுக்கப்பட்ட கொலையும் புலையுங்கூட நற்செயல்களாகும். இந்த உண்மையைக் கூர்ந்து நோக்கி அறிஞர் ஆராய்ந்தறிவர். இதனைச் சண்டேசுர நாயனார் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம், தண்டியடிகள் நாயனார் புராணம் முதலிய சரிதங்களில் வைத்து, இப்புராணம் உதாரண முகத்தால் விளங்க வைக்கிறது. திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய திருப்பாசுரத்தின் வியாக்கியானத்தினாலே சைவ சித்தாந்தத்தின் முடிந்த உண்மைகள் தாபனம் செய்யப்பெற்றன. இதற்கு மேற்பட்ட சித்தாந்தங்களை வேறெந்தச் சமயமும் இதுவரை செய்ததுமில்லை. இனிச் செய்யப்போவது மில்லை. ஆளுடைய பிள்ளையார் புத்தர்களை வாதில் வென்ற சம்பவத்தினாலும், சமணர்களைச் சுரம், அனல், புனல் வாதங்

களில் வென்ற சம்பவத்தினுலும், சைவத்தாபன உண்மையும், புறமத கண்டனமும் பேசப்பெற்றன. இறைவனது பத்தியும் வழிபாடும் அடியவர் பத்தியும் வழிபாடும் ஆகிய இவையே மனிதர்கள் உய்தற்கு உரிய சாதனங்களாய்க் கையாளவேண்டியன என்பது ஆளுடைய பிள்ளையார் புராணத்திலே திருமயிலையிலே எலும்பு பெண்ணுக்கிய வரலாற்றினுல் இப்புராணம் நமக்கு அறிவுறுத்துகின்றது.

மண்ணினிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி லுலகர்முன் வருகென வுரைப்பார்.

—திருஞான சம்பந்தர் - 1087.

இவ்வுண்மை இச் சரிதத்தாலன்றி அங்கங்கே எல்லாச் சரிதங்களிலும் உள்ளுறையாக இப்புராணம் வற்புறுத்தி விளக்கும்.

சிந்தை செய்வது சிவன்கழ லல்லதொன் றில்லார்
அந்தி வண்ணர்தம் மடியவர்க் கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினுல் வரும்பயன் கொள்வார்.

—அமர்நீதி நாயனுர் புராணம் - 3.

ஏரின் மல்கு வளத்தி னுல்வரு மெல்லை யில்லதொர் செல்வமும்
நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந்ததோர்
சீரின் மல்கிய வன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன்கொள்வார்.

—இளையான்குடிமாற நாயனுர் புராணம் - 2.

இன்னன பலவுங் காண்க.

பணத்தையும் பிற உலக அனுபவப் பொருள்களை யும் ஈட்டி ஈட்டிப் பார்த்துக்கொண் டிருப்பதே பொரு ளாக்கொண்டு 'இந்திரியவயமயங்கி இறப்பதற்கே காரண மாய் அந்தரமே திரிந்துபோ'கும் உலகமாக்களை இரங்கி நோக்கிச் சேக்கிழார் சுவாமிகள் இவ்வாறு இப்புராணத் திலே பேரரசர், சிற்றரசர், அந்தணர், வணிகர், உழவர், குடிமக்கள், தனிகர், ஏழைகள், ஆண்,பெண் என்பன வாதி எவ்வித வேறுபாடுமின்றி எல்லாரிடத்தும் வைத் துக்காட்டி இடித்துஇடித்து உண்மையை ஊட்டுகின்றார். சாதியும் குலமும் உயர்வும் தாழ்வும் பிறப்பும் முதலிய உலக வேற்றுமைகள் யாவும் இதில் விதந்து காட்டப் பெறுகின்ற அன்பு நிலையின் முன்னே ஒடுங்கி ஒழிந்து போகின்றன. உலகத்திலே இப்போது காண்கின்றன வும், மக்களை எஞ்ஞான்றும் எவ்விடத்தும் பற்பல பேரால் பற்பல வேற்றுமைகட்கும் அவை காரண மாகப் பற்பல பூசல்களுக்கும் இடையறாது பிறந்தது முதல் சாகின்றவரை ஆளாக்கி விடுவனவுமான வேற் றுமைகள் எல்லாம் அன்புநிலை ஒன்று காரணமாகத்தான் ஒழியும். அது உண்டாகி வளர்ந்து பயன் தருவதற்கு இந்தப் புராணம் ஒன்றே ஏற்ற சாதனமாக உதவுகின் றது. இந்தியா ஒற்றுமைப்பட்டு இப்போது எங்கும் பேசுகின்றபடி சுயராச்சியம் பெற வேண்டுமானால் எல் லாரும் பெரியபுராணம் படித்து அச்சரிதங்களைக் கை யாண்டு அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கூட்ச் சுவையாக யாழ்ப்பாண வழக்கறிஞராகிய நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னது எனக்கு நினை

வுக்கு வருகின்றது. அழிந்து போகக்கூடியதான இந் நில வுலக சுயராச்சிய மட்டுமல்ல,

"வானவூர் கொள்வோம் நாம் அல்லற்படை வாராமே"

என்று ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னவாறு அழியாததாகிய அவ்வுலகத்திலே நித்திய சுயராச்சியத்தையும் நாம்கைக்கொண்டு ஆண்டு என்றைக்கும் சுகத்திலிருக்க வைப்பதும் இப்புராணத்தின் பயனாகும்.

அன்பு என்பது இறைவனது அருளுருவம்.

அன்பும் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே.

என்று திருமூலர் ஆணையிட்டார். ஆதலின் அன்பு நிறைந்த பெரியோர்களிடத்துக் கடவுளும் நிறைந்திருக்கின்றார். அதனால் எதையும் கடவுள் செயலாகவே அன்பர்களும் செய்ய வல்லவர்கள் ஆகின்றார்கள். இதனாலே தான் இப்புராணத்திலே பேசப்பெற்ற அன்புடையார்கள் செயற்கரிய செய்வார் என்னும் பெரியோர்க ளாயினார்கள். அத்தன்மையை இப்பெரிய புராணம் தன்னைப் பயில்பவர்களுக்கெல்லாம் ஊட்டி இறைவன் தன்மையை அளிக்கின்றது என்று சொன்னால் அது முற்றிலும் உண்மையேயன்றி வேறாகாது. இதைவிடப் பெரும் பயன் வேறெந்த நூலும் தர இயலாது. இதனைப் பயின்று யாவரும் மேன்மையும் உறுதியும் அடைவார்க ளாக.

அன்பர்களே! சென்ற மூன்று நாள்களாகப் பெரிய புராணத்தைப் பற்றியும் அதன் ஆசிரியராகிய சேக்கிழார் சுவாமிகளைப்பற்றியும் உங்கள் முன்னால் பேசும் பெரும்பேற்றை எனக்குஅளித்து உபகரித்த சென்னைச் சர்வகலா சங்கத்தார்களுக்கு என் மனமார்ந்த நன்றியையும் வந்தனத்தையும் செலுத்துகின்றேன். முதல்வன் அருளிய முதலாகிய அருண்மொழியைப் புராண முதலிலும் இடையிலும் முடிவிலும் வைத்து முடித்துக் காட்டிய அருண்மொழித்தேவர் அருளிய அம்மூன்று திருப்பாட்டுகளையுமே சொல்லி எனது சொற்பொழிவை நிறைவு செய்கின்றேன்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீதுதாழ்ந்து வெண்ணீற் ஹொளி போற்றிநின்(று)
ஆதியார் அருள் ஆதலின் ஐந்தெழுத்(து)
ஓதி யேறினர் உய்ய உலகெலாம்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்றுளார் அடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.

## பொருளட்டவணையும் குறிப்புகளும்

பொருள் பக்கம்

அகப்பொருள் : இன்பநிலை ... 104
அசைவில்செழுந் தமிழ்வழக்கு ... 174
அடிப்பேராரூரன்=சுந்தர மூர்த்திகளுக்கு
ஆரூரன் என்று பேர் வந்த காரணம் ... 86
அணி ... 121
அதிகமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி ... 111
அதிகன்=குடக் கொங்கு நாட்டில் மலைபரணத்தில்
அரசு செய்த ஒரு வலிய சிற்றரசன் ... 111
அதியமான் நெடுமான் அஞ்சி ... 112
அபயன் : குலோத்துங்கன் : அநபாயன் பெயர்கள் ... 12
அயிரூர்=(அயிலூர்) கருவூர்க்குப் பக்கத்தில் உள்ள
ஒரு ஊர் ... 113
அரச அங்கம் ... 46
அரசியல் ... 41
அரண்தரு காப்பு=Safe Custody ... 70
அருண்மொழித் தேவர் : சேக்கிழாருக்குத் தாய் தந்தை
யர்கள் இட்ட பிள்ளைத் திருநாமம் ... 2
அழகுக் கலைகள் - Fine arts ... 97
அறப் பயன் ... 160
அறிவின் எல்லை 225
அறிவின் முடிபுகள்=சித்தாந்தம் : சித்தாந்த சாத்திரங்
களும் அவற்றின் கருத்துக்களும் 30
‘ அன்பே சிவம்=அன்பு நிலையின் இலக்கணமும்
பயனும்=உலக மேன்மையும் சிவத்தன்மையும்
பெறுவிப்பது அன்பு ஒன்றே : 232—233

| பொருள் | பக்கம் |
|---|---|
| ஆட்சி: ஆவணம்: அயலார் காட்சி=வழக்குத் தீர்ப்பதற்கு முற்காலத் தமிழர் கொண்ட மூவகைச் சாட்சியம் ... | 66 |
| ஆட்சி வழக்கு=வழக்கு வகைகளில் ஒன்று ... | 67 |
| ஆண்பனை பெண்பனையாகப்பாடியது=[திருவோத்தூரில் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம்] ... | 115 |
| ஆதி பூமி : மணமகனும் மணமகளுமாக வீற்றிருந்து மணம் நிகழுமிடம் ... | 78 |
| ஆமாத்தியர்=ஒருவகைப் பிராமண மரபு ... | 62 |
| ஆயுதங்களால் உண்டாகும் புண்கள் ... | 104 |
| ஆயுதச் சட்டம் ... | 50 |
| ஆராமங்கள்=அதாவது சோலைகளில் உல்லாசமாய்க் காலங் கழித்தல் ... | 95 |
| ஆராய்ச்சி மணி=ஆராய்ச்சியைக் கிளப்பும் மணி ... | 65 |
| இசைவு : ஒப்பந்தம் ... | 67 |
| இசைவு வழக்கு : வழக்குவகைகளில் ஒன்று ... | 67 |
| இடைச் செருகல்களின் வரலாறு | 206—224 |
| இரவு ... | 167 |
| இராஜ ராஜர்=இவர் அமைத்தது தஞ்சாவூர் பெரிய கோவில் என வழங்கப்பெறும் தஞ்சை இராஜ ராசேச்சரம் : திருவிசைப்பா பெற்றது ... | 16 |
| இராச விசுவாசம் | 179—183 |
| இலக்கண விளக்கம் : 35 அணிகள் ... | 124 |
| இல்லிகவாப் பருவம்=பெண்கள் பக்குவமடைந்த பின் வீட்டை விட்டுப் புறத்துப் போகாதபடி காத்தற்குரிய பருவம் ... | 75 |
| இழிவு தொடக்குதல் | 93—94 |
| இன்பப் பயன் ... | 161 |
| உடன் உணவு கொள்ளுதல் : Interdining | 88 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| உடன் கட்டை யேறி உயிர் நீத்தல் : சத்தி - Sati : இத்தகைய வீரப் பெண்களின் பொருட்டு நடுகல் நட்டு வணங்கும் வழக்கம் முன் காலத்தில் உண்டு. இவைகள் மாசத்திக்கல் என்ற பெயரால் வழங்குவன. பல இடங்களில் இவைகளைக் காணலாம். | ... 79 |
| உண்ணு விரதம் | ... 54 |
| உத்தமச் சோழ பல்லவர்=(அமைச்சராக்கும்போது) சேக்கிழாருக்கு அரசர் இட்ட பட்டப்பெயர் | ... 2 |
| உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண வரலாற்றிற் பாராட்டியது | 199—201 |
| உமாபதியார் | ... 33 |
| உருத்திர கணிகையர் | ... 89 |
| உருவகம் | ... 125 |
| உருவகம் : சிலேடை | ... 139 |
| "உரைப்பார் உரை" | ... 116 |
| உவமை | 135 ; 136 ; 137 |
| உவமையியல் - தொல்காப்பியம் | ... 124 |
| "உளோம் போகீர்" : திருவெண்பாக்கத்திலே சுந்தர மூர்த்திகளுக்குப் பெருமான் அருளிய மறுமொழி | ... 116 |
| "எங்கள் பாக்கியப் பயன்"=சிவஞான முனிவர் சேக்கிழாரைப் பாராட்டிச் சொல்லியது | ... 205 |
| "எரியுமிழ் பேழ்வாய்த் தோணி இரும்பு ஈர்ப்பார்" | ... 166 |
| எலும்பு பெண்ணாகப் பாடியது - (திரு மயிலாப்பூரில் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம்) | ... 115 |
| எல்லாப் பொருள்கோளும் முற்றல் | ... 174 |
| எழுத்துநேர் ஒப்புநோக்கல்=Comparison of hand-writing | ... 67 |
| எற்பாடு | ... 166 |
| ஏழு வேகம் | ... 120 |

| பொருள் | பக்கம் |
| --- | --- |
| ஐயடிகள் காட்வர் கோன் நாயனர் அருளிய க்ஷேத்திர வெண்பா | ... 114 |
| ஐயர் | ... 92 |
| கங்கை கொண்ட சோழன் ; கங்கை கொண்ட சோளேச்சரம்= கங்கை கொண்ட சோழர் அமைத்த ஆலயம் ; திருவிசைப்பா பெற்றது. | ... 16 |
| கச்சிக் கோட்டம் | ... 110 |
| கட்டண விதி (Court-fees) | ... 65 |
| கண்டராதித்தர்=திருவிசைப்பா ஆசிரியர்களில் ஒருவர் | ... 16 |
| கம்பர் சேக்கிழாரைப் பாராட்டியது | 201—204 |
| " கயல் அளப்பன பரத்தியர் கருநெடுங் கண்கள் " | ... 134 |
| கரகநீர் வார்த்துக் கொடுத்தல் : தாரை வார்த்தல் | ... 78 |
| கரணத்தான் - குமாஸ்தா (Clerk) | ... 68 |
| கரிகாற் சோழன் | ... 107 |
| கலிங்கத்துப்பரணி | ... 14 |
| கலை ஞானங்கள் 64 | ... 38 |
| கவி | ... 120 |
| கழல், அம்மானை, ஊசல், பந்து=மகளிர் விளையாட்டு | ... 96 |
| கழறிற்றறிவார் | ... 55 |
| கனவில் நினைப்பிக்கப் பாடியது=[திருவாலங்காட்டில் திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம்] | ... 115 |
| காட்சி, ஐயம் முதலியன: அகப்பொருள் : துறைகள் | ... 104 |
| காப்பு நாண் | ... 77 |
| காமக்கோட்டம் : காஞ்சிபுரத்தில் காமாட்சி யம்மையார் ஆலயம் | ... 110 |
| " காரிமேவு செண்டு அணை வெளி ": காஞ்சிபுரத்தில் சாத்தனார் கோட்டம் | ... 110 |
| " கார்கள் கூகை முல்லை " | ... 118 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| கீதம் = The Art of Music | ... 97 |
| குடபுல் மன்னர் | ... 111 |
| குணபரன் : மகேந்திரவர்ம அரசனுடைய பெயர் | ... 107 |
| குணபர ஈச்சுரம் : மகேந்திரவர்மன் சைவனான பின் பாடலி புத்திரத்திலிருந்த சமண் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் கட்டிய சிவாலயம் | ... 107 |
| குல மணம் : ஒத்த குலத்தில் நிகழும் மணம் | ... 87 |
| "குழலினிது, யாழினிது"—குறள் | ... 98 |
| குறிஞ்சி—மலை | ... 163 |
| "குன்றை நகர்க் குலக்கவியே வல்லன்" [சிவஞான முனிவர் சேக்கிழாரைப் பாராட்டிச் சொல்லியது]. | 179 |
| கூடச் சதுக்கம் : ஒருவகை மிறைக்கவி | ... 121 |
| கூத்து : The dance | ... 99 |
| கூன் பாண்டியன் | ... 107 |
| கைக்கிளை | ... 105 |
| கைமை நோன்புகொண்டு உயிர் தாங்குதல் | ... 79 |
| கோல்லிக் கூற்றம் = கொல்லிமலைச் சாரல் | ... 112 |
| சபாபதி நாவலர் | ... 204 |
| சாத்வீகப் போர் | ... 63 |
| சிலேடை | ... 139 |
| சிவஞான முனிவர் பாராட்டியது | ... 205 |
| "சிறுசோற்றுப் பெருஞ் சிறப்பு" | ... 95 |
| சிறு பொழுது | ... 166 |
| சிற்றில் இழைத்தல் ; சிறு சோறு அடுதல் : மகளிர் விளையாட்டு | ... 96 |
| சூரிய, சந்திர வம்சச் சோழர் குடிவழி | ... 15 |
| சூரியனுதயம்—காலை | 168—169 |
| சேம்பாகமான உரைநடைப் பாட்டு | ... 144 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| " சேக்கிழார் பாலறுவாயர் களப்பாளர் "- | ... 19 |
| சேதி நாடு | ... 113 |
| சேதி வேந்தர் | ... 114 |
| சைவத்தாபனம் : திருமுகப் பாசுரத்தின் வியாக்கியானம் அல்லது பேருரை | ... 230 |
| சொல்லணிகள் | 121—123 |
| சொல்லும் பொருளும் ஒத்தியலுதல் | ... 147 |
| சொற் சிலேடை | ... 139 |
| " ஞாயிறு துணைப்புணர் ஓரையுட் சேர்ந்து " | ... 165 |
| ஞானம் : அறிவு Knowledge : to know : பகுதி : | ... 225 |
| தகரே | ... 112 |
| தகர்ப்பாய்ச்சல் | ... 94 |
| தக்கயாகப்பரணி | ... 8 |
| தண்டி யலங்காரம் | ... 124 |
| தமிழ் | 172 ; 173 ; 174 |
| தன்மை அணி : தன்மை நவிற்சி அணி : இயற்கை வருணனை : Natural description | ... 125 |
| தாய்நாட்டின்சேவை Patriotism: The poct's service to motherland | ... 179 |
| திரு இயமகம் | ... 121 |
| திரு ஏகபாதம் | ... 121 |
| திரு கோமூத்திரி | ... 121 |
| திருக்குறள் : சேக்கிழாரும் திருக்குறளும் | 185—192 |
| திருக்கை வழக்கம் | ... 204 |
| " திருக்கோத்திட்டையும் கோவலும் " | ... 118 |
| திருக்கோவலூர் | ... 113 |
| திருத்தொண்டர் புராணம் | ... 157 |
| திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் | ... 98 |

**பொருள்** **பக்கம்**

திருநீற்றுச் சோழன் நல்லூர்=குலோத்துங்க சோழன் திருத்தொண்டத்தொகை நல்லூர்=அபயாய்நல்லூர்: கல்வெட்டுகளிற் கண்டவாறு அபயாயர் தானம் செய்த 3 ஊர்களின் பேர்கள் ... 20
திருப்பழையாறை வடதளி—சமணர் மறைத்திருந்து அப்பர் சுவாமிகள் வெளிப்படுத்திய சிவாலயம் ... 116
திருமாலை மாற்று : ஒருவகை மிறைக்கவி ... 121
திருமுகப் பாசுரத்தின் உட்கிடைப் பொருள்= ... 146
திருவாசகமும் சேக்கிழாரும் 193—196
திருவீழி மிழலையில் திருஞான சம்பந்த மூர்த்திகள் பதிகம்—காசுவாசி தீரப் பாடியது ... 115
தீட்டு—Pollution=இழிவு தொடக்குண்ணல் ... 94
தீண்டாமை ... 91
தீந்தமிழ் ... 174
தெள்ளேணம், தோணோக்கம், பூவல்லி, உந்தி : மகளிர் விளையாட்டுகள் (திருவாசகம்) ... 97
தென்னவன் பிரமராயன்—மாணிக்கவாசகருக்கு அரசர் இட்ட பட்டப் பெயர் ... 2
தேவார ஆட்சியும் சேக்கிழாரும் 196—198
தேவாரங்களுக்குப்பேருரையும், சிற்றுரையும், கருத்துரையும் காணுதல் 198—199
தோகை, வகை, விரி நூல்கள் ... 158
"தொண்டர்க்கு ஆணி": நமி நந்தியடிகள் நாயனார் ... 117
"தொண்டர் சீர் பரவுவார்" புராணம் அரங்கேற்றிய பின் ஞானமுடி சூட்டிச் சேக்கிழாருக்கு அரசர் இட்டு பெயர் வணங்கிய 6=206
"தொண்டை மண்டலம் நின்றுகாத்த பெருமான்" சேக்கிழார் தம்பியாராகிய பாலறாவாயர் தமது ஊரி விருந்தே அமைச்சுரிமைசெலுத்தியதால் அமைந்த வந்தகாரணப் பெயர் ... 6

| பொருள் | பக்கம் |
|---|---|
| "தொண்டைமான்"—சேக்கிழார் தம்பியாரை அமைச்சராக்கியபோது அரசன் இட்ட பட்டப் பெயர் ... | 6 |
| நண்பகல் ... | 169 |
| நாடுகளின் அமைப்புகளும் வழிகள் முதலிய நிலைகளும்... | 116 |
| நாடுகளும், ஆறுகளும், மலைகளும், வழிகளும் | 175—177 |
| நிலா முளைத்தல் ... | 167 |
| நிலைச் செண்டு | 94—95 |
| நீதி மன்றம் · Courts of Justice ... | 70 |
| நீதிமுறை | 64—73 |
| நீராடல் - மகளிர் விளையாட்டு ... | 97 |
| நெய்தல் - கடல் ... | 165 |
| பகலோன் எழுதல் - திசைகள் அுன் தல் : ஐம்பூதங்கள் விளங்குதல்=திருஞான சம்பந்த மூர்த்திகள் திருமண வெழுச்சி காண்ச ... | 170 |
| "பத்திச்சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவன்" ... | 268 |
| பத்திரப் பதிவு=Registration of documents ... | 60 |
| பரிச் செண்டு | 94—95 |
| "பருவக் கொண்மூப் படியென" - திருமுகப் பாசுரம் ... | 118 |
| பற்பல நாடுகள் | 175—177 |
| பாடல் : ஆடல் : இன்னியங்கள் பயிலுதல் ... | 95 |
| பார்வை மிருகம் ... | 128 |
| பாம்பின் விடம் ... | 101 |
| பாலறுவாயர்=சேக்கிழாரது தம்பியார் பிள்ளைத் திருநாமம் | 6 |
| பாலறுவாயர் குளம்=குன்றத்தூரில் சேக்கிழார் தம்பியார் உண்டாக்கியது ... | 6 |
| பாலறுவாயர் கேணி= ,, ... | 6 |
| பின்வரு நிலை (சொல்லணி) ... | 123 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| புகழியூர்=புகலூர் (S. I. Ry.) | ... 113 |
| புலிப் பொறி=இமய மலையிற் கரிகாற் சோழர் பொறித்த புலிமுத்திரை | ... 109 |
| புலப்பாடி (தன்மையணி) | ... 129 |
| புறப் பொருள் | .... 59 |
| புறமதகண்டனம் : புத்தவாதம் : சமணவாதம் : | 230—231 |
| புனித வதியார்=காரைக்காலம்மையார் பேர் | ... 86 |
| பெண்ணையாறு | ... 114 |
| பெண்மணிகளின் விளையாட்டு | ... 95 |
| பெருங்காப்பியத் தன்மை | ... 152 |
| பெருஞ்சுரம் | ... 100 |
| பெருஞ்சேரல் இரும்பொறை | ... 113 |
| பெரும் பொழுது | ... 165 |
| பேரம்பலம் | ... 21 |
| "பேரூரிற் கண்ட நிலை சிறப்பித்தார்" | ... 116 |
| பொருட் சிலேடை | ... 140 |
| பொருட்பயன் | ... 161 |
| பொருளணிகள் | 123—124 |
| பொருள் நூல் | ... 173 |
| போர் | ... 149 |
| மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை | ... 206 |
| மகேந்திரவர்மன்=அப்பர் சுவாமிகள் காலத்தில் பாடலி புத்திரத்தில் அரசு செய்து சமணத்திலிருந்து சைவனை அரசன் | ... 106 |
| மடக்கு=இயமகம் (வடமொழி) | ... 121 |
| மணவெழுச்சி=மணமகன் மணஞ்செய்துகொள்ளத் தன் ஊரை விட்டுப் புறப்பட்டு மணப்பெண் வீட்டுக்கு நகர் வலமாக வருதல் | ... 76 |
| மணவோலை=கல்யாணம் நிச்சயித்து எழுதும் ஓலை | ... 76 |

பொருள் பக்கம்

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்" ஆண்டவன் வழிபாடும் அடியார் பத்தியும் என்ற இரண்டுமே ... 231
மந்திரம்=தியானம்=பாவக நிலை=முட்டி ... 103
மருதம்=நாடு ... 163
மருந்து=The Art of Medicine ... 100
மலாடர் கோமான்=மலையமான் நாட்டு அரசன் ... 113
மலையமான் நாடு என்பது மலாடு ... 114
மலையரணம் ... 111
மலையிற் பெரிது; பூமியிற் பெரிது; கடலிற் பெரிது; இவை யாவை? என அரசன் கேட்ட கேள்விகளுக்குச் சேக்கிழார் 3 திருக்குறள்களால் விடைசொல்லியது ... 10
"மனைக்கடனுடைய வெண்காட்டு நங்கை" ... 83
மனைவி : இல்லாள் ; ... 84
மாமாத்திரர் குலம் : சிறுத் தொண்ட நாயனார் மரபு : ஒருவகை மருத்துவர் மரபு என்பர். "ஆயுள்வேதக் கலையும் அலகில்வட நூற்கலையும், தூயபடைக்கலத் தொழிலும் துறைநிரம்பப் பயின்றுள்ளார்" என்ற பெரிய புராணம் காண்க. ... 62
மாலை ... 167
மிறைக்கவி ... 121
முதல் நூல் : வழி நூல் : சார்பு நூல் : ... 157
முல்லை - காடு ... 164
முளை தெளித்தல் ... 77
முன்பனி ... 164
மூல இலக்கியம் ... 176
மூலவோலை=(Original)=படி ஓலை (Copy) ... 69
மூவேந்தர் தமிழ் வழங்கு நாடு ... 178
மேலெழுத்திடுவோர்=பத்திர சாட்சிகள் (Attestors) ... 67

| பொருள் | பக்கம் |
|---|---|
| யாழ் = குழல் = (Violin and Flute) | ... 97 |
| வண்டமிழ் செய்தவம் | ... 174 |
| "வண்டல் பயில்வன" : மகளிர் விளையாட்டு | ... 117 |
| விலைஞர் சேரி : தன்மையணி | ... 131 |
| "விலை வளத்து உணவு" | ... 131 |
| வாரணப் போர் | ... 94 |
| வாழ்த்து : வணக்கம் : வருபொருளுணர்த்தல் | 153—156 |
| விஜய தரன் = கலிங்கத்துப் பரணியின் நாயகன் | ... 14 |
| வீட்டுப்பயன் | ... 161 |
| வேடர் சேரி = தன்மையணி | ... 127 |
| வேட்டை | ... 149 |
| வேனில் | ... 165 |
| வைகறை | ... 168 |

# பிழைதிருத்தமும் சேர்க்கையும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 24 | முன்னூறு | முந்நூறு |
| 20 | 12 | உத்திரவிட் | உத்தரவி |
| 44 | 10 | முவேந்தர் | மூவேந்த |
| 68 | 14 | கின்றது | கின்றன |
| 81 | 11 | காரண்ப் | காரணப் |
| 110 | 5 | எமுதி | எழுதி |
| 116 | 14 | தரிசிக்கும் | தரிசிக்கு |
| 137 | தலைப்பு | பாலியாது | பாலியா |
| 142 | 25 | பகவிட்டார் | புகவிடார் |
| 147 | 5 | நனமை | நன்மை |
| 174 | 5 | எனிவும் | எனவும் |
| 185 | 26 | வோலவே | போலவே |
| 205 | 4 | யோற்றி | போற்றி |
| 227 | 12 | நீங்கியபின | நீங்கியபி |
| 140 | 3 | இருபொருட் | பொருட் |

பக்கம் சேர்க்கை

108—1—1-வது வரியின் மேல்

“கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியிற்
சூட்டிய வளர்புலிச் சோழர்” —தி 1.

116 - ம் பக்கத்தினடிக்குறிப்பு (Foot Note)

“உளோம் போகீர் புரம்” என்று அத்தலத்திற் ர்
வழங்கினமை கல்வெட்டுகளால் அறிகின்றோம்.